# முன்நோக்கிப் பயணம்

இலங்கை துறைமுக அதிகாரசபை

ஆண்டறிக்கை - 2016

# முன்நோக்கிப் பயணம்

நிறுவனத்தின் உற்பத்தி, வளர்ச்சி மற்றும் இலாபமீட்டுதல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டு அவற்றை முழுமையாக அடைந்து கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை கடந்த பல ஆண்டுகளாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இங்கு தொடர்ந்து வரும் பக்கங்களில் காண்பிக்கப்பட்டு விபரிக்கப்படும் பெறுமானங்கள் சேர்க்கப்படும் செயற்பாடுகளின் மூலம் எதிர்கால ஆண்டுகளில் அதன் இலக்கை அடைந்து கொள்ள முடியுமென்பது எமது நம்பிக்கையாகும்.

அநேகமான பிரதான செயலாற்றுகைகளின் சுட்டெண்களில் ஆண்டு தோறும் ஏற்பட்டு வரும் வளர்ச்சிகள் காண்பிக்கப்படுள்ளவாறு இலங்கை துறைமுக அதிகாரசபை குறித்த ஆண்டில் மிகவும் வெற்றிகரமான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதோடு இது துறைமுக அதிகாரசபை ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் செயலாற்றுகையின் விளைவில் ஏற்பட்டதொன்றாகும். இதன் மூலம் நாம் எமது குறிக்கோளை படிப்படியாக அடைந்து கொண்டு வருவதோடு இதன் மூலம் வலயத்தின் சிறந்த மற்றும் மிகவும் பரபரப்பான துறைமுகமொன்றாக மாறுவதற்கான திறனையும் பெற்றுள்ளது. எதிர்கால திட்டங்களுள் புதிய தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களுக்கான முதலீடுகளை மேற்கொள்வது உள்ளடங்கலாக கொள்கலன்களின் எண்ணிக்கையை இலக்காக கொண்டுள்ள துறைமுக இயக்க செயற்பாடுகளின் ஊடாக வளர்ச்சியடைவதும் இதனுள் அடங்கும்.

வழமையாக செயற்படுவது போன்று எதிர்கால நிலை நிற்றலுக்குரிய நிலைபேறான அபிவிருத்திகளுக்கான மூலோபாயங்களையும் கையாளல்களையும் மேலும் விருத்தி மற்றும் விரிவாக்கம் செய்து இலங்கை துறைமுக அதிகாரசபை அதன் சவால்களுக்கு முகம் கொடுத்து அவற்றை வெற்றிகரமாக தீர்த்துக் கொள்வதற்கு முடிந்துள்ளது. எமது நீண்டகால திட்டங்களோடு எதிர்கால வெற்றிக்காக முன்னோக்கி பயணிக்க முடியுமென்பது எமது நம்பிக்கையாகும்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று | 3 |
| நோக்கங்கள் | 4 |
| நிறுவனத்தினூடான நோக்கங்கள் | 5 |
| இலங்கை துறைமுக அதிகாரசபை என்பது | 7 |
| இயக்க முக்கிய விடயங்கள் | 9 |
| நிதிசார் முக்கிய விடயங்கள் | 12 |
| தலைவரின் மீளாய்வு | 13 |
| எங்கள் அமைச்சர்கள் | 18 |
| பணிப்பாளர் சபை | 19 |
| முகாமைக்குழுவும் கணக்காய்வுக் குழுவும் | 25 |
| வர்த்தக அபிவிருத்தி | 27 |
| முக்கிய நிகழ்வுகள் | 30 |
| இயக்க மீளாய்வு | 36 |
| நிதி மீளாய்வு | 80 |
| மனித மூலதனம் | 84 |
| ஒன்றிணைந்த சமூக பொறுப்புக்கள் | 86 |
| ஒன்றிணைந்த நிர்வாக அறிக்கை | 87 |
| துறைமுக புள்ளி விபரங்கள் | 92 |
| நிதி அறிக்கைகள் | 97 |
| பணிப்பாளர் சபையின் அறிக்கை | 98 |
| நிதி அறிக்கை வெளியிடல் தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை | 101 |
| கணக்காய்வுக் **குழுவின்** அறிக்கை | 102 |
| சட்டபூர்வ இணக்கப்பாட்டு அறிக்கை | 103 |
| இயக்க முக்கிய விடயங்கள் | 104 |
| நிதி நிலைமை தொடர்பான அறிக்கை | 105 |
| விபரமான வருமான அறிக்கை | 106 |
| திணிவு மாற்றம் மீதான அறிக்கை | 107 |
| காசுப் பாய்ச்சல் அறிக்கை | 108 |
| பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள் | 109 |
| நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் | 123 |
| வரைபட மீளாய்வு | 142 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 145 |
| அமைப்பு விதி தொடர்பான தகவல்கள் | 167 |

# தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று

## தொலைநோக்கு

### "பட்டுப்பாதையின் கடல்சார் சேவை வழங்கலின் தலைசிறந்தவர் எனும் நிலையினை பெறுதல்"

இலங்கை துறைமுகங்களின் எதிர்காலம் தொடர்பில் கவனம் செலுத்தி சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்களைவிரிவுபடுத்தும் சர்வதேச வர்த்தக உருவாக்கத்தை எதிர்பார்த்து இலங்கை துறைமுக அதிகாரசபை அதன் உன்னத கொள்கலன் கேந்திரத்தளம் எனும் கருத்திலிருந்து விசேட உலக சேவை வழங்கலின் கேந்திரத் தளமாக நகர்த்திச் செல்கின்றது. இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்படுதலிலான தேசிய மற்றும் சர்வதேச சிறந்த அனைத்து துறைகளினது செயற்பாடுகளை மேலும் முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு சகல தகவலும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளும் சிக்கலான வழங்கல் சேவையை வலுப்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

## பணிக்கூற்று

### "நிலைபேறான சூழலினுள் சர்வதேச மட்டத்திலான கடல்சார் சேவைகளை வழங்குதல்"

இலங்கையில் உலக வினியோக கேந்திரத் துறைமுகம் உருவாக்கும் நோக்கில் விசேட கடலக பிரவேசம் கொண்ட ஆழமான கடல் துறைமுகமொன்றை ஏற்படுத்தி வழங்கல் சேவைகளை ஒன்றிணைக்கும் பல்பரிமாண வழங்கல் தொகுதியொன்றினையும் ஏற்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

துறைமுகம் மற்றும் வலயம் எனும் இரு பகுதியினதும் சர்வதேச மட்டத்திலான அபிவிருத்தியினை எதிர்பார்த்து எதிர்கால வளர்ச்சிக்கான சாத்தியத் தன்மை மற்றும் பரப்பெல்லை கொண்ட நகர மட்டுப்படுத்தல்களிலிருந்து விடுபட்ட புதியதொருதுறைமுகமொன்றாக துறைமுகம், கப்பலோட்டம், கைத்தொழில் மற்றும் சேவைகள் வழங்கல் போன்ற துறைகளின் முன்னணியிலிருப்போருக்கு சேவைகள் வழங்குவதற்கானதளம் அமைப்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசத்துக்கு உன்னத சொத்தாக துறைமுகங்கள் மற்றும் முனையங்களின் வசதிகளில் நிறைவானதும் பொருளாதார ரீதியில் செயற்திறனாகவும் சுற்றாடல் நேய துறைமுகமொன்றாக கையாளப்படுவதன் மூலம் எம்மால் சேவைகள் வழங்கப்படும் ஆயிரக்கணக்கான பங்காளர்களுக்கு உன்னத நிலையிலானசேவைகள் வழங்கப்பெறுதலின் ஊடாக துறைமுக அதிசாரசபையினால் தான் பிரகடனம் செய்திருக்கும் தரத்தை அமைப்பதை தொடர்ந்தும் பேணிச் செல்லப்படும்.

## 2020 ல் அடையும் நோக்கு

- தலைசிறந்த கடல்சார் சேவைகள் வழங்கும் மத்திய நிலையம்.
- 200 மில்லியன் தொன் கப்பற்சரக்குகளைக் கையாளும் இலக்கு.
- அமெரிக்க டொலர் 01 பில்லியன் வருமானம் பெறுதல்.
- துறைமுகங்களினுள் அமெரிக்க டொலர் 10 பில்லியனுக்கான முதலீடுகளுக்கு வழி வகுத்தல்.
- தேசிய வருமானத்தின் பிரதான பங்காளியாகுதல்.
- பசுமை மிகு சூழல்நேய துறைமுக இயக்குனராகுதல்.

## அடைந்து கொள்ளலிலான மூலோபாயங்கள்

- கொழும்பு துறைமுகத்தின் உட்கட்டமைப்பு மற்றும் சிறப்பு அமைப்புகளினது வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- கடல்சார் சிறப்பு மத்திய நிலையமெனும் கொழும்பு துறைமுகத்தின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்துதல்.
- துறைமுகம் சார்ந்த துறைகளுக்கான விசேட சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
- மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தை சர்வதேச நிலையிலான சேவைகள், வழங்கும் நிலையமாகவும் கைத்தொழில் மற்றும் கொள்கலன் கையாளல் துறைமுகமாகவும் அபிவிருத்தி செய்தல்.
- கப்பற்சரக்குகள் போன்று துறைமுக பாவனையாளர்களினதும் ஆபத்தற்ற தன்மையும் பாதுகாப்பையும் மேம்படுத்துதல்.
- முக்கிய மூலோபாய அமைவிடமாக உலகில் இலங்கை துறைமுக அதிகாரசபையினை பிரபல்யம் பெறும்வாறு அடையாளப்படுத்துதல்.
- திட்டமிடப்பட்ட மீளமைப்பு மற்றும் நிருவாக நடைமுறைகளை மீள் திட்டமிடுதல்.
- உயர் நிலையிலான நிதி முகாமைத் தொகுதிகளை நடைமுறைப்படுத்துதல்.
- காபன் சூழலிற்கு விடுவிக்கப்படும் பரிமாணத்தை குறைத்தல்
- கொண்டுள்ள வளம் மற்றும் போட்டி மிகுந்த பயன்தகு நிலைமைகளுக்கேற்ப ஏனைய பிராந்திய துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்.
- வர்த்தக நடவடிக்கைகளை பன்முகப்படுத்துதல்.
- எண்ணெய் மற்றும் வாயு வசதிகளுக்கான ஏற்பாடு மேற்கொள்ளல்.
- கப்பலோட்டத்தை நோக்கமாகக் கொண்ட செயற்திறன்மிகு சேவைகளை வழங்குதல்.
- கூட்டிணைந்த சமூகப் பொறுப்புக்கள் (CSR) தொடர்பில் கூடிய கவனம் செலுத்துதல்.

## நிறுவனத்தினூடான நோக்கங்கள்

- இலங்கையின் வர்த்தக துறைமுகங்களில் மிகவும் புதிய இயக்க வசதிகளை அபிவிருத்தி செய்தலும், இடைவிடாது முன்னெடுத்துச் செல்லும்.

- பயனான வகையிலும் வினைத்திறனுடனும் துறைமுக சேவைகளை முன்னெடுத்துச் செல்லுதல்.

- ஆகுசெலவு பயனளிக்கக் கூடிய வினைத்திறனுடனும் மற்றும் நம்பிக்கை மிகு சேவைகள் வழங்குவதன் மூலம் போட்டித்தன்மையூடாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்களுக்கு மிகவும் சிறந்த நற்பயன்களை பெற்றுக்கொடுத்தல்.

- கப்பல்கள், கப்பல் சரக்குகள், துறைமுக பாவனையாளர்கள் மற்றும் துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

- துறைமுக வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அனைவருக்கும் உற்சாகமூட்டும் சிறந்த சேவை சூழலை உருவாக்குதல்.

- அரசாங்கத்தின் நடைமுறை மற்றும் மூலதன செலவினங்களுக்கு பொது திறைசேரியின் ஒன்றிணைந்த நிதியத்துக்கு பங்களிப்பு வழங்குதல்.

- கப்பல்களை தாமதப்படுத்தாது நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொண்டு, உயர் வினைத்திறன் பேணல்.

- அதிகளவிலான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு கடல்சார் நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைச் சேவைகளை மேம்படுத்துதல்

- துறைமுக பாவனையாளர்களுக்கு உயர் சேவைகளை வழங்கி, வர்த்தக துறைமுகங்களில் இலாபகரமான இயக்கச் செயற்பாட்டு முறையை முன்னெடுத்துச் செல்லுதல் இதனூடாக நம்பிக்கைமிகு வினைத்திறனுடன் கூடிய இயக்குனர் என்ற நற்பெயரை வளர்த்துக் கொள்தல்.

- துறைமுக வர்த்தகம் மற்றும் சுங்கப் பிணை நடவடிக்கைகள், கப்பல்களுக்கு தேவையான சாதனங்கள் உட்பட மீள் ஏற்றுமதி சந்தர்ப்பங்களை மேலும் அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு கொள்கலன் கையாளுதலுடன் தொடர்புபடும் போட்டிமிகு உயர் சேவைகளை வழங்குதல்.

- கடலை அண்மித்த பிரதேசங்களின் அபிவிருத்திக்கு உந்து சக்தியாக தேவைப்படும் துறைமுக வசதிகளை ஏற்படுத்துவதன் ஊடாக இலங்கையின் பிராந்திய அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

- மனித வலு தேவைப்பாடுகள் மற்றும் ஆளணி மதிப்பிடுதல் உட்பட இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிர்வாக மற்றும் அமைப்பு ரீதியான விடயங்களை விரிவுபடுத்துதல், வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொடுக்கப்படும் பங்களிப்பை கவனத்திற் கொண்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணியாளர்கள் சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாட்டு வேலைகளுக்கு செல்வதற்கு மேலும் ஊக்குவித்தல் இலங்கை துறைமுக

# நிறுவனத்தினூடான நோக்கங்கள்

அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிலையம் ஊடாகவும் ஆட்சேர்ப்பு செயற்பாட்டின் தேவைப்பாடுகளுக்கு தரங்களுக்கு ஏற்பவாறும் ஊழியர்களை பயிற்றுவித்தல்.

- நீரில் மேற்கொள்ளப்படும் சேவைகள், எண்ணெய் பாய்ச்சும் நடவடிக்கைகள், நன்னீர் வழங்குதல் மற்றும் கொள்கலன்கள் புதுப்பித்தல் போன்ற துறைமுக செயற்பாடுகளுடன் தொடர்புடைய பணிகளை வழங்குவதன் ஊடாக பன்முகப்படுத்துதல்.

- வினைத்திறன் மிகு வரி மீதான திருத்தங்கள், மிகவும் சிறந்த முதலீட்டு முகாமைத்துவம், மிகவும் உறுதியான ஆகு செலவு கட்டுப்பாடு.

# இலங்கை துறைமுக அதிகாரசபை என்பது

இலங்கை துறைமுக அதிகாரசபை, 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளின் மீது 1979.08.01 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டு, பின்னர் 1984 இன் இல. 07 மற்றும் 35 ஆம் சட்டங்களின் ஊடாக திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 6 (1) பிரிவில் அதன் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

- கப்பல் சுமை நடவடிக்கைகள், கப்பல்களில் ஏற்றல் இறக்கல் மற்றும் மீள் ஏற்றல் பணிகள், தரையிறக்கல், குதங்களிடுதல், வாப்பு நடவடிக்கைகள், கலங்களுக்குத் தேவையான நீர், எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்கல், பெற்றோலியம், பெற்றோலிய எண்ணெய் உற்பத்திகள், உராய்வு நீக்கிகள், கலங்களுக்கும் கலங்களில் இருந்து வத்தைகளுக்கும், களஞ்சியங்களுக்கும் இடையில் போக்குவரத்து செய்தல், கலங்களின் வழிகாட்டிப் பணிகள், நங்கூரமிடப்படுதல், நீர் மூழ்குதல் மற்றும் நீருக்கடியிலான கப்பல் பழுதுபார்த்தல் தொடர்பில் திறன்மிகு தொடர்ச்சியான சேவை மற்றும் அதற்கான துணை சேவைகளை வழங்கல்.

- திறன்மிகு நிலையான ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவை வழங்கல்.

- துறைமுக எல்லைகளினுள்ளும் துறைமுகங்களினது உட்புகு வழிகளிலும் கப்பலோட்டம் ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாகம்.

- துறைமுக நிறுவுதல்களைப் பராமரித்தல் மற்றும் அவைகளின் பாவனையின் மேம்படுத்தல்கள் குறிப்பிட்ட துறைமுகங்களினுள் மேம்படுத்தலும் விருத்தி செய்தலும்.

- ஏதாவது விசேட துறைமுகங்களினுள் சுங்க திணைக்களப் பணிகள் தவிர்ந்த ஏனைய சகல நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் முறைப்படுத்தலும்.

- விசேட துறைமுகங்களினுள்ளும் அதன் வெளியேயும் கப்பலோட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலங்களுக்கு வழிகாட்டலும் பாதுகாப்புக்குத் தேவையான வெளிச்சங்கள் மற்றும் வேறு தேவைப்பாடுகள் இலங்கை கடற்கரையில் மற்றும் அதற்கப்பால் நிறுவுதலும் பராமரித்தலும்.

- துறைமுக அதிகாரசபை சட்டத்தின் மீது ஒப்படைக்கப்படும் வேறேதாவது அலுவல்களை நிறைவேற்றுதல்.

- சொத்துக்கள் மீள் முதலீடு செய்யப்படுவதற்கும், புதிய முதலீடுகள் ஏற்படுத்தப்படுவதற்கும் போதுமான பொது சேமிப்பு நிதியமொன்றை ஏற்படுத்தி பராமரித்து செல்லப்படுவதற்காகவும் அதிகாரசபையின் வருமானத்திற்கு கொடுக்கப்படுவதற்கான தகுந்த கட்டணம் செலுத்தப்படுவதற்கும் போதுமான வருமானத்துக்கு குறையாத வருமானம் அதிகாரசபைக்கு கிடைக்கும் வண்ணம் அதிகாரசபையின் பணிகளை நடாத்திச் செல்லல், மேற்கூறப்பட்டுள்ளவாறு அதிகாரசபையினால் வழங்கப்படும் சேவை தொடர்பிலான, கட்டணங்கள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்கேற்றவாறு அறவிட்டுக்கொள்ளுதல்.

- சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக விசேட துறைமுகங்கள் மற்றும் ஒவ்வொரு துறைமுகமும் நிதி அடிப்படையில் தன்நிறைவான திட்டமொன்றை முகாமைத்துவம் செய்வதற்கு முயற்சித்தல்.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 5 (1) பிரிவின் பிரகாரம் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படும் 9 பணிப்பாளர்கள் துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் உள்ளடங்கப்பட்டிருப்பர்.

தலைவர், பிரதான நிறைவேற்றுனராக இருப்பதுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முழு நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருப்பார்.

**கப்பல்களின் வருகை (சகல துறைமுகங்களினதும்)**

| விபரம் | 2015 | 2016 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொழும்பு துறைமுகம் | 4,197 | 4,405 | 5.0 |
| திருகோணமலை துறைமுகம் | 164 | 216 | 31.7 |
| காலி துறைமுகம் | 72 | 96 | 33.3 |
| காங்கேசன் துறை, மயிலிட்டி , பருத்தித்துறை, காரைநகர் | 32 | 25 | -21.9 |
| மாகம்ருஹூணுபுர மஹிந்தராஜபக்ஸ துறைமுகம் | 295 | 281 | -4.7 |
| **மொத்தம்** | **4,760** | **5,023** | **5.5** |

**கொள்கலன் கையாளல் (இருபது சமஅலகுகள்) கொழும்பு துறைமுகம்**

| விபரம் | 2015 | 2016 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA)** | | | |
| இறக்குமதி | 261,188 | 255,557 | -2.2 |
| ஏற்றுமதி | 279,964 | 227,552 | -18.7 |
| மாற்றியேற்றல் | 1,691,267 | 1,607,792 | -4.9 |
| மீள்அடுக்குதல் | 19,904 | 9,216 | -53.7 |
| **மொத்தம்** | **2,252,323** | **2,100,117** | **-6.8** |
| **சவுத் ஏசியா கேட்வே டர்மினல்ஸ் (SAGT)** | | | |
| இறக்குமதி | 172,957 | 152,194 | -12.0 |
| ஏற்றுமதி | 154,793 | 165,513 | 6.9 |
| மாற்றியேற்றல் | 1,028,538 | 1,294,631 | 25.9 |
| மீள்அடுக்குதல் | 14,957 | 19,869 | 32.8 |
| **மொத்தம்** | **1,371,245** | **1,632,207** | **19.0** |
| **கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT)** | | | |
| இறக்குமதி | 174,055 | 244,217 | 40.3 |
| ஏற்றுமதி | 175,014 | 254,817 | 45.6 |
| மாற்றியேற்றல் | 1,168,516 | 1,452,838 | 24.3 |
| மீள்அடுக்குதல் | 44,314 | 50,727 | 14.5 |
| **மொத்தம்** | **1,561,899** | **2,002,599** | **28.2** |
| **கொழும்புதுறைமுகம்** | | | |
| இறக்குமதி | 608,200 | 651,968 | 7.2 |
| ஏற்றுமதி | 609,771 | 647,882 | 6.3 |
| மாற்றியேற்றல் | 3,888,321 | 4,355,261 | 12.0 |
| மீள்அடுக்குதல் | 79,175 | 79,812 | 0.8 |
| **மொத்தம்** | **5,185,467** | **5,734,923** | **10.6** |

**கப்பற்சரக்குகள் கையாளல் (சகல துறைமுகங்களினதும்)**

| விபரம் | 2015 | 2016 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| மொத்த கப்பற் சரக்குகள் கையாளல் பரிமாணம் (மெ.தொ.மி) | 77.6 | 86.5 | 11.5 |

**கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்பட்ட கப்பற் சரக்குகள்** இலங்கை துறைமுக அதிகாரசபை (**ஆயிரம் தொன்களில்**)

| விபரம் | 2015 | 2016 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **கொள்கலனிலிடப்பட்டவை** | 14,913 | 14,516 | -2.7 |
| **பிரித்த மொத்தம்** | 1,105 | 863 | -21.9 |
| **உலர் மொத்தம்** | 2,344 | 2,572 | 9.7 |
| **திரவ மொத்தம்** | 4,333 | 4,654 | 7.4 |
| **மொத்தம்** | **22,695** | **22,605** | **-0.4** |

**கொழும்பு துறைமுகத்தில் ஏற்றப்பட்ட கப்பற்சரக்குகள்** இலங்கை துறைமுக அதிகாரசபை (**ஆயிரம் தொன்களில்**)

| விபரம் | 2015 | 2016 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **கொள்கலனிலிடப்பட்டவை** | 13,719 | 12,459 | -9.2 |
| **பிரித்த மொத்தம்** | 8 | 16 | 100.0 |
| **உலர் மொத்தம்** | 0 | 0 | - |
| **திரவ மொத்தம்** | 246 | 92 | -62.6 |
| **மொத்தம்** | **13,973** | **12,567** | **-10.1** |

**கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற்சரக்குகள்** இலங்கை துறைமுக அதிகாரசபை (**ஆயிரம் தொன்களில்**)

| விபரம் | 2015 | 2016 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **கொள்கலனிலிடப்பட்டவை** | 28,632 | 26,975 | -5.8 |
| **பிரித்த மொத்தம்** | 1,113 | 879 | -21.0 |
| **உலர் மொத்தம்** | 2,344 | 2,572 | 9.7 |
| **திரவ மொத்தம்** | 4,579 | 4,746 | 3.6 |
| **மொத்தம்** | **36,668** | **35,172** | **-4.1** |

திருகோணமலை துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2015 | 2016 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 2,649 | 2,825 | 6.6 |
| ஏற்றப்பட்டது | 379 | 689 | 81.8 |
| **மொத்தம்** | **3,028** | **3,514** | **16.1** |

காலி துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2015 | 2016 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 540 | 771 | 42.8 |
| ஏற்றப்பட்டது | 2 | 0 | -100.0 |
| **மொத்தம்** | **542** | **771** | **42.3** |

காங்கேசன்துறை, மயிலிட்டி, பருத்தித்துறை மற்றும் காரைநகர் துறைமுகங்களில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம்தொன்களில்)

| விபரம் | 2015 | 2016 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 32 | 27 | -15.6 |
| ஏற்றப்பட்டது | 0 | 0 | - |
| **மொத்தம்** | **32** | **27** | **-15.6** |

மாகம்ருஹூணுபுர மஹிந்தராஜபக்ஸ துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2015 | 2016 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 195 | 220 | 12.8 |
| ஏற்றப்பட்டது | 98 | 135 | 37.8 |
| **மொத்தம்** | **293** | **355** | **21.2** |

மொத்த ஊழியர் தொகை

| விபரம் | 2015 | 2016 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொழும்பு துறைமுகம் | 8,692 | 8,892 | 2.3 |
| திருகோணமலை துறைமுகம் | 417 | 402 | -3.6 |
| காலி துறைமுகம் | 355 | 348 | -2.0 |
| **மொத்தம்** | **9,464** | **9,642** | **1.9** |

## சகல துறைமுகங்களும்

(ரூபா மில்லியன்)

| விபரம் | 2015 | 2016 | விகிதம் (%) |
|---|---|---|---|
| **வருமானம் மற்றும் செலவினம்** | | | |
| மொத்த வருமானம் | 40,805.1 | 44,080.2 | 8.0 |
| மொத்த செலவினம் | (31,018.2) | (28,704.3) | 7.5 |
| **வெளிநாட்டு கடன்மீதான வட்டி மற்றும் அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்கள்/ (நட்டம்) முன்னரான (இலாப /(நட்டம்)** | **9,786.9** | **15,375.9** | **57.1** |
| வெளிநாட்டுக் கடன்மீதான வட்டி | (3,761.8) | (4,301.9) | (14.4) |
| அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்கள்/(நட்டம்) | (20,193.6) | (10,038.3) | 50.3 |
| **வரிக்கு முன்னரான இலாப/ (நட்டம்) மற்றும் அந்நிய செலாவணிக்குப் பின்னரான கிடைக்கப்பெறுதல்கள் / (நட்டம்)** | **(14,168.6)** | **1,035.7** | **107.3** |
| **வரிகள்** | | | |
| வருமானவரி | - | - | - |
| கருதும் பங்கிலாப வரி | - | - | - |
| மாறுபடும் வரி | - | - | - |
| சமூக பொறுப்பு சார்ந்தவரி | - | - | - |
| **வரிகளின் ஏற்பாடுகளின் பின்னரான தூய இலாபம் (நட்டம்)** | **(14,168.6)** | **1,035.7** | **107.3** |
| **ஐந்தொகை** | | | |
| நடைமுறைசாராத சொத்துக்கள் | 298,412.8 | 314,052.3 | 5.2 |
| நடைமுறை சொத்துக்கள் | 36,999.0 | 35,762.1 | (3.3) |
| நடைமுறை பொறுப்புக்கள் | 24,349.2 | 28,068.9 | (15.3) |
| திணிவு மற்றும் ஏனைய மூலதனம் | 7,591.4 | 7,591.4 | (0.0) |
| ஒதுக்கீடுகளும் ஏற்பாடுகளும் | 67,246.0 | 70,428.2 | 4.7 |
| நடைமுறைசாராத பொறுப்புக்கள் | 236,225.2 | 243,725.8 | (3.2) |
| **விகிதம்** | | | |
| வருமானத்திற்கான இயக்க இலாபம் | 22.5 | 32.5 | |
| வருடாந்த வருமான வளர்ச்சி | 8.8 | 8.0 | |
| மூலதனமிடலின் மீதான இலாபம் | (12.3) | 18.4 | |

நற்போக்கிலான பெறுபேறுகள் பலவற்றை அடையப்பெற்ற 2016 ஆண்டின் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆண்டறிக்கையினை மிகவும் மகிழ்ச்சியுடன் முன்வைக்க விரும்புகின்றேன். அல்பா லைனர் தரப்படுத்தலுக்கு அமைய 2016 ஆண்டில் கொழும்பு துறைமுகம் உலகில் முதலாம் நிலையின் கொள்கலன் கையாளும் 30 துறைமுகங்களினுள் 26 ஆம் இடத்திலிருந்து 23 ஆம் இடத்துக்கு முன்நோக்கி வந்துள்ளமை இங்கு விசேடமாக குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

சிங்கப்பூர், ஹொங்கொங், சென்ஷஹேன், டுபாய், புசான், டன்ஜூன், பெலெபாஸ் மற்றும் பிறமர்ஹெவன் போன்ற உலகின் பிரதான நிலையிலான கொள்கலன் துறைமுகங்களில் மறை வளர்ச்சி காண்பிக்கப்பட்ட சமயத்தில் 2016 ஆண்டில் கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் கையாளல் பரிமாணத்தில் அடையப்பெற்ற 10.6% வளர்ச்சியானது அதாவது கொழும்பு துறைமுகத்தில் உலகின் இரண்டாம் உயர் வளர்ச்சி வேகம் காண்பிக்கப்படுகின்றமை நாம் அடையப்பெற்ற விசேட வெற்றியாகும்.

அடுத்த 03 ஆண்டுகளினுள் உலகில் உயர் நிலையிலான கொள்கலன் கையாளும் துறைமுகங்களினுள் 20 ஆம் இடத்துக்கு தரப்படுத்துவதற்கு கொழும்பு துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது எமது நோக்காகும். எமது குழுவின் சகலரினதும் ஒத்துழைப்புடன் எதிர்காலத்தில் குறித்த பணிகளுக்கான சகல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

**துறைமுக கையாளல்**

தேசிய பொருளாதாரத்தின் இயக்குனராகவும் தெற்காசிய வலயத்தின் கேந்திர இயக்குனருமாக இலங்கை துறைமுக அதிகாரசபை உள்ளது. இதை நோக்கும் போது வலயத்தில் அதிகாரத்தை ஓங்கவைப்பதில் கண்ணும் கருத்துமாக இயங்கும் ஏனைய கேந்திரத் துறைமுகங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு உண்மையிலேயே சர்வதேச மட்டத்தில் செயற்படுகின்ற ஒரேயொரு அரச நிறுவனமும் இலங்கை துறைமுக அதிகாரசபையே ஆகும்.

2016 ஆண்டில் கொழும்பு துறைமுகம் 5,734,923 இருபது சம அலகுகளை கையாண்டுள்ளதுடன். 2015 ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 10.6% வளர்ச்சியாகும். 2015 ஆண்டில் 3,643 கொள்கலன் கப்பல்களின் வருகையானது 2016 ஆண்டில் 3,804 வரை அதிகரித்து 4.4% வளர்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. ஜய கொள்கலன் முனையம் (JCT) மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையம் (UCT) போன்றவை இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருமானத்தில் சுமார் 40% பங்களிப்பை வழங்கி குறிப்பிடத்தக்க முறையில் பணியாற்றியுள்ளன. சவுத் ஏஷியா கேட்வே டேர்மினல்ஸ் (SAGT) உரிய இறைமைக் கட்டணத்தை வழங்கி இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருமானத்துக்கு உதவி புரிந்துள்ளதுடன் பரிமாணம் கையாளப்படுதலின் மூலம் சமமான வளர்ச்சிக்காக விசேட பங்களிப்பையும் செய்துள்ளது. கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT) 2.0 மில்லியன் இருபது சம அலகுகளின் பரிமாணத்தையும் அடைந்து கொண்டது.

2015 ஆண்டிலிருந்து கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட உள்நாட்டு பரிமாணம் 6.7% இனால் வளர்ச்சியடைந்துள்ளதுடன் மீள்ஏற்றுமதி பரிமாணம் 11.8% இனால் வளர்ச்சியடைந்திருக்கின்றன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஜய கொள்கலன் முனைய பாரம்தூக்களின் செயற்திறனின் சராசரி மணித்தியாலமொன்றுக்கு 26 கையாளல்கள் வரை 2016 ஆண்டின் இறுதிக்குள் அதிகரித்தது.

பயன்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி மூலோபாயங்கள் காரணமாக இலங்கை துறைமுக அதிகாரசபை 2016 ஆண்டில் கப்பல் கம்பனிகளுடன் (TSA) 06 உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்ளமுடிந்தது. அதனூடாக இலங்கை அதிகாரசபைக்குரியதும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கையாளப்படுகின்றதுமான ஜய கொள்கலன் முனையம் நோக்கி 03 பிரதான கப்பல் சேவைகளையும் 04 ஊட்டக் கப்பல் சேவைகளையும் கவரமுடிந்தது.

குறிப்பாக கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் கையாளல் பணிகள் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக 2015 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆண்டில் மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்துக்கு வருகை தந்த மொத்த கப்பல்களின் எண்ணிக்கையில் 4.7% வீழ்ச்சிகாணப்பட்ட போதிலும் கப்பற்சரக்கு கையாளலில் 21.2% வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. உள்நாட்டு பரிமாணம் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக ரோ ரோ கப்பல்களின் கையாளல்களில் -2.0% வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும் 2016 ஆண்டின் மீள் ஏற்றுமதி பரிமாணம் 2015 ஆண்டுடன் ஒப்பிடும் போது 29.1% வளர்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

2015 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆண்டில் திருகோணமலை துறைமுகத்துக்கு வருகை தந்த கப்பல்களினது வருகையிலும் கப்பற்சரக்கு கையாளலின் தொன் அளவிலும் முறையே 31.7% மற்றும் 16.1% என ஏற்பட்டுள்ள வளர்ச்சி பாராட்டத்தக்க வேண்டிய விடயம் ஒன்றாகும்.

2015 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆண்டில் காலி துறைமுகத்தில் கப்பல்களினது வருகை 33.3% அதிகரிப்பு பதிவானதுடன் கப்பற்சரக்கு கையாளலிலும் 42.4% வளர்ச்சி பதிவு செய்யப்பட்டது.

குறிப்பாக அஸ்ரப் துறைமேடை ஊடாக இடம்பெறும் வர்த்தக பரிமாணங்களின் வளர்ச்சியினால் பல வருடங்களாக நட்டம் அடைந்து கொண்டு வந்த திருகோணமலை துறைமுகம் 2016 ஆண்டில் இலாபமீட்டியுள்ளது.

**எதிர்கால அபிவிருத்திகள்**

சேவைகள் வழங்கும் துறையில் முன்மாதிரியான நிறுவனமொன்றாக வருமானம் ஈட்டும் முகமாக நிலைபேறான இலாபமீட்டும் நிலையமாக மாற்றப்படும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து துறைமுகங்களிலும் செய்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் ஏராளமானவை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தினுள் துரித வேலைத்திட்டமொன்றின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளையும் துணை அமைவுகளையும் (கட்டடங்களை) அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கிழக்கு கொள்கலன் முனையத்தை முழுமையாக நிர்மாணித்தல், ஜய கொள்கலன் முனையத்தினை கட்டம் V கீழ் மேலும் அபிவிருத்தி செய்வதும் மற்றும் விரிவாக்குவதும், ஜய கொள்கலன் முனையத்தின் கையாளல் உபகரணங்களை மேம்படுத்துதல், பன்னாட்டு கப்பற்சரக்குகளை ஒன்று திரட்டுதல் மற்றும் குறை கொள்கலன் கையாளல்களுக்கான புதிய சேவைகள் வழங்கும் நிலையமொன்றினை ஸ்தாபித்து அபிவிருத்தி செய்தல் போன்றவை பிரதானமாக மேற்கொள்ளப்படும் செய்திட்டங்களுள் அடங்கும். மரபுரீதியான கப்பற்சரக்குகளை கையாள்வதற்கு ஐக்கிய கொள்கலன் முனையம், விஜய குமார துறைமேடை, வழிகாட்டிப் பாலம் மற்றும் பண்டாரநாயக்க துறைமேடை அபிவிருத்தி, பயணிகள் முனைய அபிவிருத்தி, சேவைகள்

வழங்குவதற்கான (கட்டடம்) இடமொன்றினை ஸ்தாபித்தல் மற்றும் கடல்சார்ந்த நடவடிக்கைகளுக்கான மத்திய நிலையமொன்றுக்கான கட்டடம் ஒன்றை அமைத்தல் போன்றவை இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்படும்.

காலி, திருகோணமலை, ஒலுவில் மற்றும் காங்கேசன்துறை துறைமுகங்கள் துரித அபிவிருத்திக்கு உட்படுத்தப்படும்.

துறைமுக இயக்குனராக மாத்திரமின்றி விரிவான அடிப்படையில் நோக்கும் போது இலங்கையின் அனைத்து துறைமுகங்களினதும் அபிவிருத்தியாளர், உரிமையாளர், வழிகாட்டி மற்றும் இயக்குனராக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கு இந்த வெற்றிகளையும் காரணிகளாகக் கொள்வது மிகவும் முக்கிமானதாகும்.

**எதிர்கால மூலோபாய வழிகள்**

உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கும் துறைமுக பாவனையாளர்களுக்கு தொடர்ச்சியான சேவைகளை வழங்குவதற்குமான இலத்திரனியல் செயற்பாட்டுத் திட்டங்கள் பலவற்றை இலங்கை துறைமுக அதிகாரசபை ஆரம்பித்துள்ளது.

இருக்கும் முனைய முகாமைத்துவ தொகுதி புதிய தொழில்நுட்பத்துடன் ஒன்றிணைக்கப்பட்டு உயர் நிலைக்கு கொண்டு வரும் பணியினை இலங்கை துறைமுக அதிகாரசபை தற்போது ஆரம்பித்துள்ளதோடு இது பிரதான தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகளின் ஒன்றாகும். தகவல் தொகுதியினை உயர் நிலைக்கு கொண்டு வருவதன் மூலம் கொடுப்பனவு நடவடிக்கைகளை இலத்திரனியல் செயற்பாடு ஊடாக மேற்கொள்ளல், EDI வசதிகளை விரிவாக்குதல், B2C மற்றும் B2B கொடுக்கல் வாங்கல்கள், இலத்திரனியல் சிட்டைகளை இடுதல், இலத்திரனியல் ஆவண பரிமாற்றங்கள் போன்றவை இலங்கை துறைமுக அதிகாரசபையினால் வழங்க முடியும் என்பதுடன் அதன் மூலம் அனைத்து துறைமுக பாவனையாளர்களுக்கும் வழங்கப்படும் சகல சேவைகளையும் மிகவும் சிறப்பாக அபிவிருத்தி செய்து இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் பங்காளர்களுக்கிடையில் சிறந்த தொடர்புகள் ஏற்படுவதனை உறுதி செய்கின்றது.

ORACLE நிதி மற்றும் கொள்வனவு முகாமைத்துவ தொகுதியின் இலத்திரனியல் வர்த்தகத் தொகுதியின் மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல் 2016 வருடம் ஆரம்பிக்கப்பட்ட மற்றுமொரு முக்கிய செய்திட்டமொன்றாகும். இதனூடாக நிதி நடவடிக்கைகளுக்கு பூச்சியம் அடிப்படையிலான வரவு செலவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்செயற்பாடு கொழும்பு துறைமுகத்திற்கு மேலதிகமாக காலி, திருகோணமலை துறைமுகங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கூடிய வாடிக்கையாளர்கள் மிகவும் சிறந்த வகையில் தொடர்பாடலை மேற்கொள்ளவும் மற்றும் செயற்திறனை ஏற்படுத்தும் நோக்கிலும் 2016 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிறுவனரீதியான இணையத்தள வெளியீட்டு அமைப்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இணையத் தளத்தில் புதிய விருத்திகளோடு பல்வேறு முக்கிய பணிகளுக்கான தொலைபேசி ஈடுபடுத்துகையொன்றும் வெகு விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

அனைத்து துறைமுகங்களின் நடவடிக்கைகளிலும் காப்பினையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் பொருட்டு துறைமுக நடவடிக்கைகளை விரிவாக

கண்காணிக்கப்படும்வாறு அனைத்து துறைமுகங்களிலும் CCTV கண்காணிப்பு தொகுதி ஸ்தாபிக்கப்பட உள்ளது.

துறைமுகத்துக்குள் நுழைதல் மற்றும் வாகனங்கள் வெளியேறுதலின் செயற்திறனை மேம்படுத்தி புதிய தொழில்நுட்பம் அதாவது RFID தொழில்நுட்பத்தின் பயன்பாட்டில் தற்போதுள்ள பாதுகாப்பு மற்றும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் தொகுதியும் விருத்தி செய்யப்படும்.

நிறுவனத்திலுள்ள அனைத்து களஞ்சியசாலைகளும் தானியங்கி முறையில் செயற்படுவதற்கு புதிய களஞ்சியசாலை முகாமைத்துவத் தொகுதியுடன் கோட்டுக் குறியீடுகள் மற்றும் தூரத்திலிருந்து கையினால் இயக்கக் கூடிய கட்டுப்பாட்டுத் தொகுதியை (RHDS) அறிமுகப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பாவனையாளர்களுக்கு பணம் செலுத்துதல்கள், சரக்கு அகற்றல்கள், அங்கீகாரம் பெறுதல்கள், அனுமதி வழங்கப்படுதல்கள் மற்றும் மேலும் பல மேம்படுத்தப்பட்ட தன்மைகளுடன் இலத்திரனியல் முறைகள் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

**மனிதவள அபிவிருத்தி**

நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதில் மனிதவளம் மிக உயர் நிலைக்கு கொண்டு வரப்பட வேண்டுமென்பதை முகாமைத்துவம் இனம் கண்டு கொள்வதுடன் அனைத்து ஊழியர் பிரிவுகளுக்குமான மனிதவள தகவல் தொகுதியொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மாணவர்களுக்கு விரிவாக கடலகத் துறையில் பிரவேசிப்பதற்கும் குறித்த துறையில் அவர்களின் தேர்ச்சிகளை விரிவுபடுத்துவதில் உதவும் முகமாகவும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிலையம் “மஹபொல துறைமுகம் மற்றும் கடல்சார் கலாசாலை” என மீள பெயரிடப்பட்டுள்ளது. துறைமுக துறையின் முன்னேற்றத்துக்கு அளப்பரிய சேவையாற்றிய காலஞ்சென்ற கௌரவ லலித் அத்துலத்முதலி அவர்களின் ஞாபகார்த்தமாக அதன் பிரதான கேட்போர் கூடமானது “லலித் அத்துலத்முதலி கேட்போர் கூடம்” என மீள பெயரிடப்பட்டுள்ளது.

அதேபோன்று எமது தற்போதுள்ள மனிதவள முகாமைத்துவத் தொகுதியை மேம்படுத்தும் செயற்பாடும் நடைபெற்று வருகின்றது. அனைத்து துறைமுக ஊழியர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்கு புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும். இவ்வாறான ஆரம்பமொன்றின் ஊடாக அண்மையில் செயற்படுத்தப்பட்ட வருகையை பதிவுசெய்தல் விடுமுறைகள், கையொப்பமிடுதல்கள், பயிற்றுவிப்புகள் மற்றும் ஆவணங்கள் இலத்திரனியல் முறையில் தயாரிக்கப்படுவதனையும் மேற்கொண்டும் வேறு புதிய அம்சங்களை அறிமுகப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி தொடர்பான உண்மையான நிலைமையையும் அதிகாரசபைக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும். எதிர்கால சவால்களையும் தெளிவுபடுத்துவதற்கான அறிவூட்டல் மற்றும் புத்தூக்க நிகழ்ச்சித்திட்டங்கள் மஹபொல பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்பட்டன.

நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கு ஊழியர்களுக்கு புத்தூக்கம் ஏற்படுத்துவதனையும் பிரதான நோக்கமாக கொண்டு குறித்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடார்த்தப்பட்டன.

**நிதிசார் செயலாற்றுகை**

2015 ஆண்டில் வெளிநாட்டு செலாவணி ஏற்றத்தாழ்வுக்கு முன்னரான இலாபமாக 06 பில்லியன் ரூபா (வரிகளுக்கு முன்னர்) இந்த நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆண்டில் வெளிநாட்டு செலாவணி ஏற்றத்தாழ்வுக்கு முன்னரான இலாபம் 11 பில்லியன் ரூபாவாகும்.

இலங்கை துறைமுக அதிகாரசபை 2016 ஆண்டில் 44 பில்லியன் ரூபா வருமானமாக பெற்றுள்ளது. இது 2015 ஆண்டுடன் ஒப்பிடும் போது 8% வளர்ச்சியாகும். ஆயினும் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பாரிய முதலீடுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செய்திட்டங்கள் காரணமாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு வெளிநாட்டு செலாவணி நட்டம் அடங்கலான மேலதிக கடன் தொகை மீள செலுத்த வேண்டியேற்பட்டது.

2016 ஆம் ஆண்டில் திருகோணமலை மற்றும் காலி துறைமுகங்களில் இலாபமீட்டல்கள் பதிவாகி இருந்தன.

இலங்கையின் துறைமுகங்களில் மிகவும் உன்னத சேவைகள் மற்றும் சர்வதேச தரத்திலான வசதிகள் வழங்கப்படுதலின் ஊடாக வீழ்ச்சியடையும் போக்கு தவிர்க்கப்படுவதற்கும் இலாபமீட்டல்கள் அதிகரிக்கப்படுவதற்கும் வாடிக்கையாளர்களை அதிகரிப்பதற்கும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**முடிவு**

இலங்கை துறைமுக அதிகாரசபையினை தேசத்தின் பெருமைக்குட்படுத்தி நிறுவனத்தின் எதிர்காலத்தை நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி கொண்டுசெல்வதற்கு வழிவகுத்து அதிகாரசபை பயனுள்ள பெறுபேறுகளை அடைந்து கொள்ளும் என்பது எனது நம்பிக்கையாகும்.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர், கௌரவ துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை பிரதியமைச்சர், அமைச்சின் செயலாளர், முகாமைத்துவம், பணிப்பாளர் சபை, இலங்கை துறைமுக அதிகாரசபை சவுத் எஷியா கேட்வே டேர்மினல்ஸ், கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் ஆகியவற்றின் பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் போன்று உள்நாட்டு, ஏற்றுமதி இறக்குமதி மற்றும் சர்வதேச கடல்சார் தொழிலின் அனைத்து பங்காளர்கள் மூலம் பயனுள்ள முறையிலும், எல்லோரும் ஒன்றிணைந்து எமக்கு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல்களுக்கு எனது நன்றியைத் தெரிவிப்பதற்கு இதனை சந்தர்ப்பமாக்கி கொள்ளும் அதேவேளை வலயத்தின் கடல்சார் வர்த்தகத்தினுள் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி இலங்கையின் வர்த்தக கப்பற்றுறையை நகர்த்துவதற்கு எம்மீது நம்பிக்கை வைத்து எம்முடன் கைகோர்த்தமைக்காக நன்றியையும் தெரிவித்துக் கொள்வதற்கும் இதனை ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொள்கின்றேன்.



**பராக்ரம திசாநாயக்க**
**தலைவர்**

**அர்ஜூன ரணதுங்க**
**கௌரவ துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்**

**நிஷாந்த முத்துஹெட்டிகம**
**கௌரவ துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை**
**பிரதிஅமைச்சர்**

**திரு. தம்மிக்க ரணதுங்க**
**தலைவர்**

திரு. தம்மிக ரணதுங்க அவர்கள் 1981 ஆண்டில் பயிலுநர் கணனி நிகழ்ச்சி நிரலாளராக (Trainee Computer Programmer) தனது தொழில் ரீதியான பணியை ஆரம்பித்த இவர் நிகழ்ச்சி நிரலாளராகவும் (Programmer) முறைமைப் பகுப்பாய்வாளராகவும் (Systems Analyst) ஸ்டாபர்ட் கொம்பியூட்டர் சிஸ்டம் நிறுவனத்தில் பதவியுயர்வு பெற்றார். பின்னர் இவர் தனது தொழில்துறையை மாற்றி கனிஷ்ட முகாமையாளராக சிங்கர் ஸ்ரீ லங்கா நிறுவனத்தில் இணைந்து பின்னர் மத்திய முகாமைத்துவ பதவி நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

இவரின் பரந்த அனுபவம் காரணமாக இலங்கையின் கிரிக்கட் கட்டுப்பாட்டு சபையின் முதலாவது பிரதான நிறைவேற்று அதிகாரியாக 1996 இருந்து 2001 ஆண்டு வரை பணியாற்றினார். இவரின் காலப் பகுதியினுள் இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையை பயனுள்ள முன்னணி நிறுவனமாக்கும் நோக்கில் அமைந்த கூட்டு மூலோபாயத் திட்டம் (Corporate Strategic Plan) மேம்படுத்தப்படுதலில் இவர் பிரதான பங்காற்றினார்.

இவர் 1996 இருந்து 1997 ஆண்டு வரை சர்வதேச கிரிக்கட் பேரவையின் அங்கத்தவராக இருந்தார். 1996 இருந்து 2001 ஆண்டு வரை சர்வதேச கிரிக்கட் பேரவையின் முகாமைத்துவ கிரிக்கட் குழுவின் அங்கத்தவராகவும் 1997 இருந்து 2001 ஆம் ஆண்டு வரை ஆசிய கிரிக்கட் பேரவையின் விசேட குழுவின் அங்கத்தவராகவும் செயற்பட்டுள்ளார்.

ஐக்கிய அமெரிக்காவில் இருந்த காலப்பகுதியில் திரு. ரணதுங்க இணையத்தள விற்பனை ஆலோசகராகவும் (Internet Sales Cousultant ) இலத்திரனியல் வர்த்தக பணிப்பாளராகவும் (E - Commerce Director) விற்பனை மற்றும் இலத்திரனியல் வர்த்தக பணிப்பாளராகவும் (Sales & E Commece Director) 2001 இருந்து 2013 ஆண்டு வரை பல்வேறு தனியார் கம்பனிகளில் முறையே கடமையாற்றியுள்ளார்.

திரு. ரணதுங்க கிரிக்கட் மற்றும் மெய்வல்லுனர் ஆகியவற்றில் சிறந்த சகலதுறை விளையாட்டு வீரராவார் டெஸ்ட் தொடர் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் இவர் இலங்கை தேசிய அணியை பிரதிநிதிப்படுத்தியுள்ளார்.

கொழும்பு துறைமுகம் ஆசியாவில் கேந்திரத்தள துறைமுகமொன்றாக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்குத் தேவையான செயற்திறன் மற்றும் உன்னத நிலையை அடையப்பெறுதலில் அனைத்து துறைமுக இயக்க தேவைப்பாடுகளையும் அபிவிருத்தி செய்து மேம்படுத்தும் செயற்பாட்டிற்கு தலைமை தாங்கி செயற்பட்டிருக்கிறார்..

**பேராசிரியர் டப்ளியூ லலித் பிரசன்ன பெரேரா**
**உப தலைவர்**

பேராதெனிய பல்கலைக்கழகத்தில் பொருளியல் தொடர்பான கலைமாணி (மேல்தர - முதலாம் வகுப்பு) பட்டமொன்றைப் பெற்றுள்ள திரு பிரசன்ன பெரேரா அவர்கள் பொருளியல் தொடர்பில் முதுமாணி மற்றும் பொருளியல் கலாநிதி ஆகிய பட்டங்களையும் பெற்றுள்ளார். பேராதெனிய பல்கலைக்கழகத்தில் சுமார் 20 வருடங்கள் கற்பித்தலில் அனுபவமுள்ள அவர் தற்பொழுது பொருளியல் தொடர்பான பேராசிரியராக கடமை புரிகின்றார். சர்வதேச நிதி, நிதி சார்ந்த பொருளியல், அரசியல் பொருளாதாரம் பாரிய பொருளாதாரம் மற்றும் எதிர்வு கூறல் போன்றவை இவரின் ஆய்வுத் துறைக்குள்

அடங்குகின்றன. சர்வதேச நிதி வர்த்தகம் மற்றும் அதனோடு சார்ந்த சிக்கல்கள் தொடர்பான இன்சைட், ஈ வியுவ்ஸ், மினிடெப் மற்றும் ஆர் - ஸ்டூடியோ தொகுப்பு ஆகியவற்றை பயன்படுத்தி விரிவான ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் நூல்கள் இவரினால் வெளியிடப்பட்டுள்ளன.

பிரசித்தி பெற்ற பொருளியல் துறை நிபுணரான பேராசிரியர் திரு. பிரசன்ன பேரேரா அவர்கள் கலாநிதி பட்டம் வழங்குவதற்கான பொதுநலவாய நாடுகள் புலமைப்பரிசில், கொடிகார விருது, கேட் முதலியார் ஏ.ஜி திகலகரத்ன ஆராய்ச்சி சர்வதேச புலமைப்பரிசில் மற்றும் இமாய் ஞாபகார்த்த புலமைப்பரிசில் உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார். இவர் தேசிய கல்வி நிறுவகத்தின் பொருளியல் தொடர்பான கல்விச் சபையின் அங்கத்தவராவார். அவர் இலங்கையில் சிறு தேயிலை தொழில் உரிமையாளர்கள், கிராமப் பிரதேசங்களில் நிலவுகின்ற பிரச்சினைகள் மற்றும் சவால்கள், யுத்தத்தின் பின் இலங்கையில் அரசியல் பொருளாதாரம் , இலங்கையில் நேரடி வெளிநாட்டு முதலீடு (FDI) தொடர்பான எதிர்வு கூறல்கள் , சார்க் நாடுகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு மாதிரி மற்றும் எதிர்வு கூறுகை, இலங்கையில் சுற்றலாத்துறைப் பொருளாதாரம் தொடர்பான பொருளாதார ரீதியான பகுப்பாய்வுகள் மற்றும் இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு பகுப்பாய்வு வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் "Indexed Journals" இல் இலங்கையில் பொருளாதார வளர்ச்சி போன்ற பரந்த துறைகளிலான தலைப்புகளின் கீழ் அண்மையில் ஆய்வு கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

அவர் சர்வதேச பொருளாதாரம் தொடர்பான விரிவான பிரசுரங்களை வெளியிட்டுள்ளார். "Overview of Sri Lanka's Trade Initiatives; Theory and Practice, Background to South Asian Countries, Challenges and Opportunities in the Economy of Sri Lanka and South Asia in the Regional Economic Co-operation" ஆகியன இவரினால் வெளியிடப்பட்டுள்ள சில நூல்களாகும்.

தற்போது பேராசிரியர் பிரசன்ன பெரேரா அவர்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையில் உப தலைவராகக் கடமை புரிகின்றார். அவர் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஏனைய கூட்டுக் கம்பனிகளின் சபைகள் மற்றும் சிவில் விமான சேவை அதிகார சபையில் கடமை புரிகின்றார். அவர் 2015 ஒக்டோபர் மாதம் இலங்கை துறைமுக அதிகார சபையின் உப தலைவராக பதவியேற்பதற்கு முன்னர் சிவில் விமான சேவை உப தலைவராகவும் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் சேவையாற்றி உள்ளார்.

**திரு. எச். டீ. ஏ. எஸ். ப்ரேமச்சந்ர**
**முகாமைத்துவப் பணிப்பாளர்**

திரு.எச்.டீ.ஏ.எஸ். ப்ரேமச்சந்ர அவர்கள் வர்த்தக நிர்வாகம் தொடர்பான பட்டதாரியாவார். இவர் பெல்ஜியத்தின் அன்ட்வப் (Antwerp) பல்கலைக்கழகத்தில் துறைமுக முகாமைத்துவம் மற்றும் துறைமுக நிர்வாகம் தொடர்பில் முதல் தர வகுப்பு சித்தியுடன் முதுமாணிப் பட்டத்தையுப் பெற்றுள்ளார். இவர் 1978 ஆண்டில் முகாமைத்துவ பயிலுனராக இலங்கை துறைமுக அதிகாரசபையில் இணைந்து பதவியுயர்வுகள் பெற்று 2001 ஆண்டில் மேலதிக முகாமைப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 25 வருட சேவைக்காலத்தின் பின்னர் 2004 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சேவையிலிருந்து நீங்கும் வரை இவர் குறித்த பதவியை வகித்தார்.

இவர் புஜைராஹ் (Fujairah) துறைமுகத்தின் முனைய இணைப்பாளராக 1991 இருந்து 1992 ஆண்டு வரை கடமையாற்றியுள்ளதோடு மலேசியாவின் வெஸ்ட்போட் (West Port) இல்

தொழில்நுட்ப ஆலோசகராகவும் 1999 இருந்து 2000 ஆண்டு வரை அதன் கொள்கலன் முனைய திணைக்கள பிரதானியாகவும் சேவையாற்றியுள்ளார்.

உலகில் மூன்றாவது பாரிய கப்பல் சேவையான CMA CGM SA இன் ஆசிய வலயத்தின் பிராந்திய முகாமையாளராக (துறைமுகங்கள் மற்றும் முனையங்கள்) சேவையாற்றுவதற்கு இவர் விடுமுறை பெற்றுக் கொண்டார். 2014 ஆகஸ்ட் மாதத்தில் திரு.எச்.டீ.ஏ.எஸ். ப்ரேமச்சந்ர மேற்குறித்த கம்பனியில் தொடர்ந்தும் பணியாற்றுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் சேவையிலிருந்து விலகினார்.

முகாமைப்பணிப்பாளராக 2015 டிசெம்பர் 01 ஆம் திகதி இலங்கை துறைமுக அதிகாரசபையில் மீண்டும் இணைந்து கொள்வதற்கு முன்னர் இவர் கோலாலம்பூரிலும் மும்பாயிலும் அமைந்துள்ள CMA CGM SA TERMINALS LINK மற்றும் CMA TERMINAL ஆகியவற்றில் கடமை புரிந்தார். இக்காலப் பகுதியினுள் முனையங்களின் முதலீடுகளுக்கான பூர்வாங்க தன்னியக்க வசதிகள் அடங்கலான கொள்கலன் முனையங்களின் திட்டமிடல்கள் மற்றும் அபிவிருத்தி போன்று மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா உள்ளடங்கலாக உலகம் பூராகவும் அவர்களின் கப்பல் சேவைகள் தொடர்பாக துறைமுகங்களின் செயலாற்றுகை மேம்படுத்தப்படுவதில் CMA CGMSA நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி பெரும்பாலான துறைமுகங்களில் கடமையாற்றியுள்ளார்.

**திரு. சஞ்ஜீவ விஜேரத்ன**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**

திரு. சஞ்ஜீவ விஜேரத்ன அவர்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையில் நிறைவேற்றுப் பணிப்பாளராவார். இலங்கை, மத்திய கிழக்கு மற்றும் ஆசியாவில் கடமையாற்றியதில் விமான சேவைகள், விமான நிறுவனங்கள், விமான நிலையங்கள் மற்றும் உபகாரச் சேவைகள் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் முகாமைத்துவம் தொடர்பாக 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுவபம் இவருக்கு உள்ளது. இலங்கை துறைமுக அதிகார சபையில் இணைவதற்கு முன்னர் இலங்கையில் வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைநிறுவனத்தில் உப தலைவராகக் கடமையாற்றியுள்ளார்.

அவர் லங்கா கோல் நிறுவனம், வரையறுக்கப்பட்ட ஜய கொள்கலன் நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட மாகம்புர துறைமுக முகாமைத்துவ நிறுவனம் ஆகிய நிறுவனங்களில் பணிப்பாளர் சபை அங்கத்தவராக கடமை புரிகின்றார்.

அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிலையத்திலிருந்து வியாபார முகாமைத்துவம் தொடர்பான முதுமாணிப்பட்டத்தினை பெற்றுள்ளார்.

**திருமதி. மங்கலிகா ரோகினி அதிகாரி**
**பணிப்பாளர்**

திருமதி மங்கலிகா ரோகினி அதிகாரி அவர்கள் இலங்கையில் களனி பல்கலைக்கழகத்தில் பொருளியல் தொடர்பான இரண்டாம் வகுப்பு முதுமாணிப் பட்டமொன்று பெற்றுள்ளார். அபிவிருத்திப் பொருளாதாரம் தொடர்பான பட்டப்பின் படிப்பு பட்டத்தை பெற்றுள்ளதோடு இலங்கையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு

நிறுவனத்தினால் வர்த்தக நிர்வாகம்/ மனிதவள முகாமைத்துவம் தொடர்பான வியாபார நிருவாகப் பட்டமொன்றையும் அவர் பெற்றுள்ளார்

ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் மிச்சிகள் அரச பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி பொருளாதாரம் பற்றியதில் பட்டப்பின்படிப்பு பட்டம் பெற்றுள்ள இவரின் வலு சக்தி தொடர்பான ஆய்வுகளுக்கு “உன்னத சேவை” பாராட்டல் வழங்கப்பட்டுள்ளது.

திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், கட்டுப்பட்டு,நெறியாழ்கை, ஒழுங்கிணைப்பு மற்றும் மனிதவள முகாமைத்துவம் அடங்கலான அனைத்து துறைகளிலும் 30 வருடத்துக்கு மேற்பட்ட அனுபவம் மிக்க அரச சேவையின் பதவி நிலை உத்தியோகத்தராக கடமையாற்றியுள்ளார். இவர் தற்போது மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வருகின்றார்.

**திரு. எச். ஜி. சுமணசிங்க**
**பணிப்பாளர்**

திரு. சுமணசிங்க அவர்கள் கொழும்பு பல்கலைக் கழகத்தில் வர்த்தக துறையில் பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் பொதுசன கொள்கைகள் தொடர்பாக அவுஸ்திரேலியாவில் பிலின்டர்ஸ் (**Flinders**) பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டமும் பெற்றுள்ளார்.

2015 ஆம் ஆண்டு முதல் திரு சுமணசிங்க அவர்கள் திறைசேரியின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார். தற்பொழுது அவர் நிதி அமைச்சின் பணிப்பாளர் நாயகமாகச் செயல்படுகின்றார். 1995 ஆம் ஆண்டில் இலங்கை நிருவாக சேவையில் இணைந்த திரு. சுமணசிங்க வெளிநாட்டு வளங்கள் உதவிப் பணிப்பாளர், செய்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் 1996 ஆம் ஆண்டு முதல் பொது நிதி மேலதிகப் பணிப்பளார் நாயமாகவும் பல்வேறு பதவிகள் வகித்து பொதுத் திறைசேரியில் பல்வேறு திணைக்களங்களில் கடமையாற்றியுள்ளார். 2013 ஆம் ஆண்டு முதல் நிருவாகம் மற்றும் மனிதவள அபிவிருத்திப் பணிப்பாளர் நாயமாகவும் பணியாற்றியுள்ளார். தனியார் துறையில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பணியாற்றிய காரணத்தினால் பரந்த அறிவு மற்றும் அனுபவம் இவரிடமுள்ளது.

**திரு. டப்ளியு. ஏ. ச்சூலானந்த பெரேரா**
**பணிப்பாளர்**

திரு. டப்ளியூ ஏ. ச்சூலானந்த பெரேரா இலங்கை நிர்வாக சேவையில் 26 வருட அனுபவமுடைய இலங்கை நிர்வாக சேவையின் உயர்தர அதிகாரி ஒருவராவார்.

திரு.பெரேரா தனது தொழில்சார் வாழ்க்கையை பசறை ஊவா மாவட்ட பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக ஆரம்பித்து (1990 ஆகஸ்ட் -1992 நவம்பர்) அதன் பின்னர் தேசிய திட்டமிடல் அமைச்சின் உதவி பணிப்பாளராக (1992 நவம்பர் - 1994 டிசெம்பர்) நியமிக்கப்பட்டார்.

1994 டிசெம்பர் மாதம் கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய தெங்கு அபிவிருத்தி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டு 1995 ஏப்ரல் மாதம் வரை இவர் அங்கு கடமையாற்றினார். அதன் பின்னர் இவர் 1995 ஏப்ரல் மாதம் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் உதவி கட்டுப்பாட்டாளராக இணைந்து 1997 ஏப்ரல் மாதம் வரை இரண்டு வருட காலம் அங்கு கடமையாற்றினார். 1997 ஆண்டில் சுகாதார

அமைச்சின் நிர்வாக பணிப்பாளராக நியமிக்கப்பட்ட இவர் அங்கு 2½ வருடங்கள் கடமையாற்றியதுடன் 1999 ம் ஆண்டு நவம்பர் மாதம் சமூக சேவைகள் அமைச்சின் உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் அங்கு அனர்த்தங்களை குறைப்பது தொடர்பில் அநேக புதிய கருத்துக்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களையும் அறிமுகப்படுத்தினார்.

திரு.பெரேரா 2002 ஆகஸ்ட் மாதம் உதவி கட்டுப்பாட்டாளராக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் மீண்டும் இணைந்தார். 08 வருட காலப்பகுதியினுள் இவர் பிரதி கட்டுப்பாட்டாளர், மேலதிக கட்டுப்பாட்டாளராகவும், கட்டுப்பாட்டாளராகவும் பதவியுயர்வுகள் பெற்று 2010 ஆண்டில் இவர் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டு தலைமை அதிபதியாக நியமிக்கப்பட்டார். திரு. பெரேரா ஐந்து வருட காலமாக கட்டுப்பாட்டு தலைமை அதிபதியாக தனது பணியை மேற்கொண்ட காலப்பகுதியினுள் உற்பத்தித்திறன் இலத்திரனியல் நிர்வாகம் (**E - Governance**) மற்றும் நபர்களுக்கென்றே தயாரிக்கப்பட்ட சேவை தொடர்பில் கவனம் செலுத்தி முன்னோடி அரச நிறுவனமாக உயர் நிலைக்கு கொண்டு வரப்பட்டது. இவரின் பதவிக்காலத்தினுள் 2006 ஆண்டில் தேசிய உற்பத்தித் திறன் விருதும், 2013 இல் மனித உரிமைகள் நிறுவன விருதும் 2013 ஆண்டில் இணைந்த விசாரணை முகாமைத்துவத் தொகுதி (**IEMS**) மற்றும் 48 நாடுகளை தோல்வியுறச் செய்து ஆசிய பசுபிக் வலயத்தின் சிறந்த இலத்திரனியல் அரசாங்க செய்திட்டத்திற்குரிய விருதும் திணைக்களத்தின் இலத்திரனியல் போக்குவரத்து அங்கீகாரம் வழங்கும் வீசா தொகுதிக்கான (**Electronic Travel Authorization Visa System** தொடர்பாக **"Future GOV)** போன்ற மகத்தான பல விருதுகளும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு.பெரேரா 2015 ஆண்டில் போக்குவரத்து அமைச்சின் மேலதிக செயலாளராக பதவியுயர்வு பெற்று 2015 ஆகஸ்ட் மாதம் இலங்கை ஜனாதிபதியின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டார். இவர் தற்போது இலங்கையின் சுங்க பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றுகின்றார்.

திரு.பெரேரா அவர்கள் தனது மூன்றாம் நிலைக் கல்வியை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்ததோடு அங்கு தோட்ட முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு தொடர்பிலான விஞ்ஞானமாணி சிறப்பு பட்டத்தினையும் இவர் பெற்றுள்ளார். "ஆண்டின் சிறந்த அரச ஊழியர்களுக்கான" சர்வதேச மெக்கோ விருதையும் 2013 ஆண்டில் லயன்ஸ் கழகத்தினால் வழங்கப்பட்ட அரச சேவையில் தேசிய மட்ட சிறந்த அரச ஊழியருக்குரிய விருதினையும் பெற்றுக்கொண்டதன் மூலம் திரு. பெரேராவின் முன்மாதிரியான அரச சேவை மதிப்பிடலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**அத்துல பண்டார ஹேரத்**
**பணிப்பாளர்**

திரு. ஹேரத் அவர்கள் கொழும்பு பல்கலைக் கழகத்தில் சட்டத்துறையில் பட்டம் பெற்றுள்ளதோடு 1986.10.31 திகதி சட்டத்தரணியாக கடமையில் சேர்ந்து கொண்டார். மீயுயர் நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதிமன்றம், கொழும்பு மாவட்ட நீதி மன்றம் மற்றும் கொழும்புக்கு வெளியே மாவட்ட நீதி மன்றங்கள், நீதிவான் நீதி மன்றங்கள் (நம்பிக்கையின் அடிப்படையிலான பற்றுச்சீட்டு கட்டளைச் சட்டத்தின் அறவிடப்பட்டுக் கொள்ளல் தொடர்பிலான) ஆகியவற்றில் சட்ட ஆலோசகராக 29 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவை ஆற்றியுள்ளார். மக்கள் வங்கி, காணி மீளாய்வு ஆணைக்குழு

மற்றும் பேற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தரணிகள் சபையில் சட்ட ஆலோசகராக கடமை புரிகிறார்.

இவைதவிர, வரையறுக்கப்பட்ட த பினான்ஸ் கம்பனி, செலிங்கோ காப்புறுதி கம்பனி மற்றும் ஹபுகஸ்தென்ன பயிர்ச்செய்கை கம்பனி, கன்ரிச் பினான்ஸ் கம்பனி மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்காகவும் அவர் சட்ட ஆலோசகராக செயல்படுகின்றார்.

அவர் 1995 இல் ஜே.ரீ.எப். விசாரணை தொடர்பிலான ஆணைக் குழுவின் ஆணையாளர் பதவியை வகித்ததோடு 1995 முதல் 2000 வரை நீதிச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட காணி கையேற்றல் மீளாய்வுச் சபையின் அங்கத்தவராகவும் செயல்பட்டார். அவர் 2007 முதல் 2013 வரை கொழும்பு வீட்டு வாடகை சபையின் தலைவராக சேவையாற்றினார். 2015 ஆண்டு முதல் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் சேவையாற்றும் அதேவேளை அவர் கணக்காய்வு குழுவின் அங்கத்தவராகவும் கடமையாற்றுகிறார். இவர் இலங்கை பொலிஸ் பயிற்சிப் பாடசாலையில் வெளித்துறை விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

**திரு. டி ஜே. காமினி சுரேஷ் எதிரிசிங்ஹ**
**பணிப்பாளர்**

திரு எதிரிசிங்ஹ அவர்கள் அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தின் கலிபோனியா பிராந்தியத்தில் சென்டா பாபராவிலுள்ள கலிபோனியா பல்கலைக்கழகத்தில் (**University Of California**) வியாபார முகாமைத்துவம் தொடர்பான பட்டத்தினையும் பெற்றுள்ளார். திரு. எதிரிசிங்ஹ அவர்கள் வரையறுக்கப்பட்ட எதிரிசிங்ஹ சகோதரர்கள் கம்பனி, வரையறுக்கப்பட்ட எதிரிசிங்ஹ போக்குவரத்து சேவைகள் கம்பனி, வரையறுக்கப்பட்ட டி.ஜே.ஜி எதிரிசிங்ஹ அன்ட் சன்ஸ் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட ரிச் அன்ட் லங்கா தனியார் கம்பனி ஆகிய நிறுவனங்களில் பணிப்பாளராக கடமையாற்றுகிறார். அவர் வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியில் பணிப்பாளராகவும் கடமைபுரிகின்றார்.

அவர் சூட்சுமமான பகுப்பாய்வுகளின் பயன்பாட்டு செயலாற்றுகை தொடர்பான முக்கிய அறிக்கை, உண்மையைக் கண்டறியக்கூடிய ஆற்றலையுடைய, நிறுவனத்தின் மேம்பாட்டிற்கு குழுவாகச் செயற்படக்கூடிய மற்றும் தகுந்த நடவடிக்கைகளை செயலுருவில் நடைமுறைப்படுத்தும் செயற்திறனை தன்வசம் கொண்டுள்ள தலைவராவார்.

திரு. எதிரிசிங்ஹ அவர்கள் மூலோபாய திட்டமிடல் மற்றும் நிறுவனத்திலான தலைமைத்துவம், ஒன்றிணைந்த மற்றும் நிதிசார்ந்த முதலீடுகள், குழு உணர்வுகளை வளர்த்தல், செயலாற்றுகைகளின் மேம்பாடு, ஒப்பந்த உடன்படிக்கைகள் ஏற்படுத்தல் மற்றும் மூலோபாய உடன்படிக்கைகள் மற்றும் மேம்படுத்துவதிலான மற்றும் விரிவாக்க மூலோபாயங்கள் தொடர்பான அறிவும் நிபுணத்துவமும் உடையவராவார்.

**திரு.பிரசாத் டப்ளியூ .சிரிமான்ன**
**பணிப்பாளர் சபையின் செயலாளர்**

**சட்ட ஆலோசகர் - இலங்கை துறைமுக அதிகாரசபை**

## முகாமைத்துவக் குழு

திரு. தம்மிக்க ரணதுங்க
**தலைவர்**

பேராசிரியர் டப்ளியூ லலித் ப்ரசன்ன பெரேரா
**உப தலைவர்**

திரு. எச்.டி.ஏ.எஸ். ப்ரேமச்சந்திர
**முகாமைத்துவப் பணிப்பாளர்**

திரு. சஞ்ஜீவ விஜேரத்ன
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**

திரு.ஜே.கே.பீ. குருகுலசூரிய
**மேலதிக முகாமைத்துவப் பணிப்பாளர்**

திருமதி. சிராணி வன்னியாரச்சி
**பணிப்பாளர் (நிதி)**

திரு. ஏ.டி.ரீ. குணசேகர
**பணிப்பாளர் (தொழில்நுட்பம்)**

திரு.டி.யூ.டப்ளியூ.டி.சொய்ஸா
**பணிப்பாளர் (சேவை வழங்கல்)**

திரு. பீ. ஏ. ஏ. ஹேவாகீகன
**பணிப்பாளர் (தென் துறைமுக அபிவிருத்தி)**

திரு. டி.ஏ.ஜே.ஐ.பெரேரா
**பணிப்பாளர் (துறைமுக இயக்கம்)**

கலாநிதி டி.பீ.எஸ்.லொக்குகே
**பணிப்பாளர் (தகவல் முறைமை)**

மேஜர் ஜெனரல் நிஸ்ஸங்க விஜேசிங்ஹ
**பணிப்பாளர் (பாதுகாப்பு)**

திருமதி டி. ஜீ. ஐ. சீ .லொக்குஹேவகே
**பிரதான பொறியியலாளர் (ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு)**

கெப்டன் ஆர். ஏ. ஜயவிக்ரம
**ஹாபர் மாஸ்டர்**

திரு. எல். பிரேமசிறி டி. சில்வா
**பிரதான உள்ளக கணக்காய்வாளர்**

டாக்டர் (திருமதி) டி. ராஜகாந்தன்
**பிரதான மருத்துவ அலுவலர்**

திரு. எல். எச். ஆர். சேபால
**பிரதான பயிற்சி முகாமையாளர்**

**திரு.** ஈ. ஏ. ரீ. எதிரிசூரிய
**பிரதான பொறியியலாளர் (இயந்திர உபகரணம்)**

திரு. ஏ. ஏ. எஸ். ஆர். அபேசிறிவர்தன
**பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)**

திரு. உபுல் ஜயதிஸ்ஸ
**பிரதான முகாமையாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி)**

திரு. ஆர். எம். ஏ. எஸ். ரத்னாயக்க
**பிரதான முகாமையாளர் (நிருவாகம்)**

திரு. எச். ஏ. என். எஸ். பர்னாந்து
**பிரதான பொறியியலாளர் (மின்சாரம் - I)**

திரு. டப்ளியூ. எம். டீ. பி. விஜேகோன்
**பிரதான பொறியியலாளர் (மின்சாரம் - II)**

திரு. எச். எம். யூ. பி. கலகொட
**பிரதான முகாமையாளர் (தகவல் முறைமை)**

திரு. விஜித அபேசுந்தர
**பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்)**

திரு. பி.எம்.எஸ். சோமரத்ன
**பிரதான பொறியியலாளர் (சிவில்)**

திரு.டப்ளியூ.என். ஜயதிஸ்ஸ
**பிரதான முகாமையாளர் (நலன்புரி மற்றும் தொழிலாளர் உறவுகள்)**

**திரு. ஐ.கே.ஞானதிலக்க**
பிரதான முகாமையாளர் (கொள்கலன் இயக்கம்)

திரு. ஜீ.எச்.டி.தர்மரத்ன
**பிரதான பொறியியலாளர் (இயந்திர உபகரண வேலை**

திரு. ஜீ.வி.ரி.நாணாயக்கார
**பிரதான பொறியியலாளர் (கடலகம்)**

திருமதி அபர்னா திலகரத்ன
**பிரதான சட்ட அலுவலர்**

# முகாமைக்குழுவும் கணக்காய்வுக் குழுவும்

எயார் கொமடோர் டி.சீ. பிரேமரத்ன
**பிரதான பாதுகாப்பு முகாமையாளர்**

திரு.எச்.எம் பிரபாத் ஜயந்த
**பதில் பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்)**

**கணக்காய்வுக் குழு**

திரு. எச்.ஜீ.சுமனசிங்ஹ
**தலைவர்**

திரு. டப்ளியூ.ஏ. ச்சூலானந்த பெரேரா
**அங்கத்தவர்**

திரு. அத்துல பண்டார ஹேரத்
**அங்கத்தவர்**

திரு. கே.பீ.ஜீ.ஹேமரத்ன
**அங்கத்தவர்**

திருமதி சிராணி வன்னியாரச்சி
**அங்கத்தவர்**

திரு. ஏ.டி.ரீ. குணசேகர
**அங்கத்தவர்**

திரு. டி.ஏ.ஜே.ஐ.பெரேரா
**அங்கத்தவர்**

திரு. எல். பிரேமசிறி டி சில்வா
**செயலாளர்**

**2016 இல் சிரேஷ்ட முகாமைத்துவத்தில் மாற்றங்கள்**

கலாநிதி டி.பீ.எஸ். லொக்குகே **பணிப்பாளர் (தகவல் முறைமை ஆக) நியமனம் பெறல்**.

மேஜர் ஜேனரல் நிஸ்ஸங்க விஜேசிங்ஹ **பணிப்பாளர் (பாதுகாப்பு) ஆக நியமனம் பெறல்**.

திரு. எச்.எம் பிரபாத் ஜயந்த **பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்) ஆக நியமனம் பெறல்**.

**கண்ணோட்டம்**

உலகில் ஏனைய துறைமுகங்களுடன் ஒப்பிடும் போது இரண்டு இலக்கத்தின் வளர்ச்சி பதிவாகிய 2016 ஆண்டில் கொழும்பு துறைமுகம் அதன் பரிமாணத்தை 10.6% னால் அதிகரித்துள்ளதோடு இது முன்நோக்கிய வளர்ச்சியாகும். கப்பற்றுறையின் அண்மைக் கால முக்கிய வழிகாட்டியான சீனா இத்துறையில் அவர்களினது ஒத்துழைப்பை குறைத்ததன் காரணமாக பல ஸ்திரமற்ற நிலைமைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. ஆயினும் கப்பற்றுறையில் ஏற்படும் கேள்விகளுக்கு ஏற்றவாறு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் சர்வதேச மட்டத்திலான பாரிய வசதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு கொழும்பு துறைமுகம் வலயத்தில் விசாலமான மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளலின் கேந்திர துறைமுகமாக மாறியுள்ளது.

புதிய சந்தைப் பகுதிகளை கவரும் நோக்கில் இலங்கை துறைமுக அதிகாரசபை புதிய சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி மூலோபாயங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சந்தைகளை கவருவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை சித்தகொங் மற்றும் மியன்மார் துறைமுகங்களுக்கு 10% பரிமாண தள்ளுபடிகளை வழங்கியுள்ளது. கிழக்கு ஆபிரிக்க வலயத்திலுள்ள இவ்வாறான சந்தைகளை கவருவதற்கும் இலங்கை துறைமுக அதிகாரசபை மேற்கொண்டும் கவர்ச்சிகர பரிமாண தள்ளுபடி முறைகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றது.

2016 ஆண்டில் ஒரு முனைய சேவை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டதோடு இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் வர்த்தக நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்வதற்கு புதிய முனைய சேவை உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. மூன்று ஊட்டக் கப்பல் சேவைகள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களினால் கவரப்பட்டதன் காரணமாக பார்சிலக் மற்றும் "பா" எனும் கப்பல் சேவைகள் யங்ஹொான் ஊட்டக் கப்பல் சேவையை ஆரம்பித்ததுடன் SCI தங்களினது யங்ஹொாங் சேவையை மீளவும் தொடங்கியது

**இலங்கை கப்பல் முகவர்களின் சங்கத்துடனான (CASA) கூட்டங்கள்**

ஆண்டினுள் இலங்கை கப்பல் முகவர்களின் சங்கம் துறைமுகத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் மற்றும் தமது அங்கத்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவத்துடன் பல கூட்டங்களை நடாத்தியது. துறைமுக சேவைகளை பெற்றுக்கொள்வோர் எதிர்நோக்கும் சிக்கல்களை தீர்ப்பதற்கும் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பை பேணிச் செல்வதற்கும் அதன் ஊடாக துறைமுகத்தின் உற்பத்தித் திறன் மேம்படுத்தப்படுவதற்கும் குறித்த பேச்சுவார்த்தைகள் உதவின.

**இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் முனையங்களில் பின்வரும் பெறுபேறுகள் பதிவாகின**

- மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளல் பரிமாணம் 4.9 % னால் வீழ்ச்சியடைந்தது.
- உள்நாட்டு கொள்கலன் கையாளல் பரிமாணம் 10.6 % னால் வீழ்ச்சியடைந்தது.
- இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் முனையங்களின் பரிமாணம் 6.8 % னால் வீழ்ச்சியடைந்தது.

**இலங்கை துறைமுக அதிகாரசபையின் பரிமாணம் வீழ்ச்சியடைந்ததற்கான காரணங்கள்**

- அதி விசாலமான கொள்கலன் கப்பல்களின் (ULCC) ஆழம், நீள/ அகலம் ஏனைய கப்பல்களை விட விசாலமானதாக இருத்தல்.
- கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்துக்கு பிரதான கப்பல்களின் சேவைகள் கிடைக்கப்பெறாமை - ஊட்டக் கப்பல் சேவைகளின் பரிமாணங்கள் அதிகரித்தல் மற்றும் ஊட்டக் கப்பல் சேவைகளின் பரிமாணம் வீழ்ச்சியடைதல்.
- சவுத் ஏசியா கேட்வே டர்மினலுடன் முனையத்துடன் ஒப்பிடும் போது ஜய கொள்கலன் முனையம் ஆழத்தில் குறைந்த முனையமாக இருத்தல்.
- புதிய கூட்டமைப்புகள் உருவாகுதல்.
- கிழக்கு கொள்கலன் முனையத்தின் வர்த்தக நடவடிக்கைகளை இழந்தமை மற்றும் ஏனைய தனியார் முனைய இயக்குனர்களினால் பெற்றுக்கொடுக்கப்படும் போட்டிமிகு விலைகள்

**கொழும்பு துறைமுகத்தில் பின்வரும் பெறுபேறுகள் பதிவு செய்யப்பட்டன.**

- கொழும்பு துறைமுகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி 10.6% னால் அதிகரித்தது.
- உள்நாட்டு கொள்கலன் கையாளல் 6.7 % னால் அதிகரித்தது.
- மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளல் பரிமாணம் 11.8% னால் அதிகரித்துள்ளது.
- கொழும்பு துறைமுகத்தின் கையாளப்பட்ட ஒட்டுமொத்த தொன் அளவு 11.5 % னால் வளர்ச்சியடைந்துள்ளது.
- கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்த கப்பல்களின் மொத்த எண்ணிக்கை 5.0% னால் அதிகரித்துள்ளது.

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் பின்வரும் பெறுபேறுகள் பதிவாகின.**

- 2015 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆண்டினுள் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்திற்கு வந்த கப்பல்களின் மொத்த எண்ணிக்கை -4.7%. னால் வீழ்ச்சியடைந்துள்ளது. கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் கையாளல்கள் மற்றும் சரக்குக் கப்பல்களின் வருகை இடைநிறுத்தப்பட்டமை இவ்வாறு கப்பல்களின் வருகை குறைவடைந்ததற்கான பிரதான காரணமாக அமைந்தது.
- கையாளப்பட்ட ரோ ரோ கப்பல்களின் மொத்த எண்ணிக்கை 267 ஆகும். இது (2015 - 276 கப்பல்கள்) -3.3 % வீழ்ச்சியாகும்.
- கையாளப்பட்ட வாகனங்களின் மொத்த எண்ணிக்கை 181,662 அலகுகள் ஆகும் இது (2015 -185,452 அலகுகள்) -2.0% வீழ்ச்சியாகும்.

- மொத்த உள்நாட்டு வாகனக் கையாளல் 31,519 அலகுகள் ஆகும் 54.4% னால் (2015 – 69,195 அலகுகள்) வீழ்ச்சியடைந்துள்ளது.
- மொத்த மீள் ஏற்றுமதி வாகனக் கையாளல் 150,143 அலகுகள் ஆகும் 29.1% னால் (2015 – 116,257 அலகுகள்) வளர்ச்சியடைந்துள்ளது.
- சந்தைப்பங்கு - மீள் ஏற்றுமதி 83%
- சந்தைப்பங்கு - உள்நாடு 17%

**திருகோணமலை துறைமுகத்தில் பின்வரும் பெறுபேறுகள் பதிவாகி இருந்தன.**

- வருகை தந்த கப்பல்களின் மொத்த எண்ணிக்கை 31.7% னால் வளர்ச்சியடைந்துள்ளது.
- கையாளப்பட்ட மொத்த தொன் அளவு 16.1% னால் வளர்ச்சியடைந்துள்ளது.

**காலி துறைமுகத்தில் பின்வரும் பெறுபேறுகள் பதிவாகி இருந்தன**

- வருகை தந்த கப்பல்களின் மொத்த எண்ணிக்கை 33.3% னால் வளர்ச்சியடைந்துள்ளது.
- கையாளப்பட்ட மொத்த தொன் அளவு 42.4% னால் வளர்ச்சியடைந்துள்ளது.

1505 போர்த்துக்கேயரினால் கடற்படைத்தளமாக / துறைமுகமாக உபயோகிக்க ஆரம்பிக்கப்பட்டதுடன் மேற்கு உலகிற்கு கொழும்பு பற்றித் தெரிந்து கொள்ளக் கிடைத்தமை.

1875 7 ஆம் எட்வெட் மன்னரினால் டிசெம்பர் 09 ஆந் திகதி தென்மேற்கு அலைதாங்கிக்கான அடிக்கல் நாட்டப்படல்.

1882 கொழும்புத் துறைமுகத்தின் நிர்வாகப் பணிக்காக "ஹாபர் போர்ட்" என்னும் பெயரில் சபையொன்று நிறுவப்படல்.

1885 1285 மீட்டர் நீளமான தென்மேற்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்

1898 335 மீட்டர் நீளமான வடகிழக்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1899 உலர் துறைமேடையின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படல்.

1906 814 மீட்டர் நீளமான "ஜலன்ட்" அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1906 உலர் துறைமேடையின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்படல்

1909 உலர் துறைமேடைக்கான 250 மீட்டர் நீளமான வழிகாட்டிப் பாலத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல். (ஆழமான நீரில் அமைந்த முதல் கரையோர நங்கூரத்தளம் இதுவாகும்.)

1912 தற்போது ஜயகொள்கலன் முனையம் அமைந்திருக்கும் பிரதேசத்தில் நிலக்கரி இறக்கும்18 துறைமேடைகளின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1912 தென்மேற்கு அலைதாங்கியின் பகுதி 550 மீற்றர் வரை நீடிக்கப்படல்.

1913 துறைமுக அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக துறைமுக ஆணைக்குழு அமைக்கப்படல்.

1922 பெற்றோலிய எண்ணெய் வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படல்.

1950 9 முதல் 11 மீட்டர் ஆழத்துடன் கூடிய 15 கரையோர நங்கூரத்தளங்கள், 7.5 மீட்டர் ஆழமான நீரில் 02 நங்கூரத்தளங்கள், 55,800 சதுர மீற்றர் கொண்ட அண்மித்த களஞ்சியங்கள் மூலம் மேலும் குத வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்கான வசதிகள் வழங்கப்படுவதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1954 தென்மேற்கு அலைதாங்கியின் கரையோர நங்கூரத்தளத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 02 ஆம் எலிசபெத் இராணியினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டதனால் அது "எலிசபெத் இராணி இறங்குதுறை" எனப் பெயரிடப்பட்டது. அதில் நங்கூரமிடப்பட்ட முதல் கலம் இங்கிலாந்து அரசுக்குரிய "கோதிக்" எனும் கப்பலாகும்.

1956 17 கரையோர நங்கூரத்தளங்கள் அண்மித்த களஞ்சியங்கள் மற்றும் குதங்கள் நிர்மாணிக்கப்படல்.

1958 கொழும்புத் துறைமுகத்தின் கப்பற் சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்பட்டு துறைமுக (கப்பற் சரக்கு) கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்படல்.

1964 காலி துறைமுகத்தின் கப்பற் சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல்.

1967 துறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைக் கூட்டுத்தாபனம் நிறுவப்படல்.

1967 திருகோணமலைத் துறைமுகத்தின் கப்பற் சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல்.

1979 துறைமுக ஆணைக்குழு, துறைமுக (கப்பற் சரக்கு) கூட்டுத்தாபனம் மற்றும் துறைமுக ஒத்துப்பார்த்தலும் பாதுகாப்புக்குமான சேவைகள் கூட்டுத்தாபனம் போன்றவற்றினை ஒன்றிணைத்து இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவப்படல்.

1980 ஜப்பான் நாட்டின் உதவியுடன் கொழும்புத் துறைமுகத்திற்கான பாரிய திட்டமொன்று தயாரிக்கப்படல்.

1980 எலிசபெத் இராணி இறங்குதுறையின் புதிய முனையம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1982 முதலாவது “கன்ட்றி” பாரம் தூக்கியான “ரன்கோ 80” சேவையில் ஈடுபடுத்தப்படல்.

1982 ஜப்பானின் வ/ப பென்றாஓசன் வக்கச்சிக்கு” ஒன்றிணைந்த வியாபாரத்துடன் புதிய கொள்கலன் முனையமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடல்.

1983 சகல அங்கங்களுடன் கூடிய கொள்கலன் முனையத்தின் 01 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1984 சகல அங்கங்களுடன் கூடிய கொள்கலன் முனையத்தின் 02 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள்வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1984 ஹிற்ராச்சி வகையின் 04 றான்ஸ்பர் பாரம் தூக்கிகள் எலிசபெத் இராணி கொள்கலன் முனையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படல்.

1985 ஜய கொள்கலன் முனையத்தின் 01 ஆம் கட்ட வேலைகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல்.

1987 இலங்கை துறைமுக அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிலையம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படல்.

1987 ஜயகொள்கலன் முனையத்தின் II ஆம் கட்ட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1988 கப்பல்களைக் கட்டிவைப்பதற்கு நீரில் அமைந்துள்ள ஒருமுனை மிதவை நங்கூரத்தளம் அமைத்து சேவையில் ஈடுபடுத்தப்படல்.

1994 புதிய துறைமுக உட்புகு பாதையின் வேலைகள் பூர்த்தி செய்யப்படல்.

1995 ஜய கொள்கலன் முனையத்தின் III ஆம் கட்ட பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1996 ஜய கொள்கலன் முனையத்தின் IV ஆம் கட்ட பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1998 ஐக்கிய கொள்கலன் முனையத்தின் வேலைகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1998 இணைந்த துறைமுகங்கள் (அபிலயேற்றட் போட்ஸ்) சம்மேளனம் நிறுவப்படல்

1999 கிழக்கு கடற்கரையின் ஒலுவில் வெளிச்ச வீட்டை சேவையில் ஈடுபடுத்துதல் அத்தோடு ஒலுவில் கடல்சார் பயிற்சி நிலையமும் திறந்து வைத்தல்.

1999 இராணி இறங்குதுறையில் சவுத் ஏஷியா கேட்வே டேமினல்ஸின் (கியு.சீ.ரீ) அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1999 திருகோணமலைத் துறைமுகத்தில் கரையோர நங்கூரத்தளங்கள் நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படல்.

2000 கொழும்பு தென் துறைமுகத்தின் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படல்.

2000 காலி துறைமுகத்தில் புதிய நங்கூரத்தளம் நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படல்.

2000 பேலியகொடை கொள்கலன் கப்பற் சரக்கு முனையம் ஆரம்பித்து வைக்கப்படல்.

2000 காலி துறைமுகம் பிராந்திய துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படும் குறிப்பிட்ட திட்டத்தின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல்.

2000 வட பாலத்தின் II ஆம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

2000 ஒரே இடத்திலான ஆவணமாக்கல் நிலையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல்.

2001 காலி துறைமுகத்தின் புதிய துறைமேடை திறந்து வைக்கப்படல்.

2003 ஒலுவில் துறைமுக உட்புகு பாதையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

2003 குறைகொள்கலன் (எல்.சி.எல்) மற்றும் பிரித்த மொத்த கப்பற் சரக்குகளுக்கான சேவைகள் வழங்கும் நிலையம் ஆரம்பித்து வைக்கப்படல்

2003 இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடலக நூதனசாலை திறந்து வைக்கப்படல்.

2003 சிவில் நிர்மாணப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் ஐக்கிய கொள்கலன் முனையம் திறந்து வைத்தல்.

2004 ஐக்கிய கொள்கலன் முனையத்தின் கொள்கலன் கையாளும் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல்.

2004 இலங்கை துறைமுக அதிகாரசபையின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது.

2004 பாரிய அளவிலான சேவைப் பிரிவான ஜய கொள்கலன் முனையம் தேசிய உற்பத்தித் திறனுக்கான விருதை பெற்றுக்கொள்ளல்.

2004 கொழும்புத் துறைமுகத்தினால் 02 மில்லியன் கொள்கலன்கள் கையாளப்படுதல்.

2005 ஒலுவில் துறைமுகம் மற்றும் வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

2005 தேசிய உற்பத்தித் திறன் தொடர்பான செயலகத்தினால் மத்திய தர சேவை பிரிவிற்கான திறன் சான்றிதழ், இலங்கை துறைமுக அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிலையத்துக்கு வழங்கப்படல்.

2006 கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் பாதுகாப்பு மற்றும் மெகா போர்ட் உபகரணங்கள் அறிமுகம் செய்து வைக்கப்படல்.

2006 கொழும்பு தென் துறைமுக நிர்மாணம் தொடர்பிலான உத்தேச கொழும்புத் துறைமுக விரிவாக்கல் செய்திட்டத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல்.

2006 ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் (முதலாம் கட்டம்) விபரமான வடிவமைப்பு வேலைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல்.

2007 ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைத்தல் மற்றும் நிதி ஒப்பந்தம் கைச்சாத்திடல்

2008 ஒலுவில் துறைமுக திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல்.

2008 கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல்.

# முக்கிய நிகழ்வுகள்

2008 ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான உடன்பாடு கைச்சாத்திடல்.

2009 ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகள், எண்ணெய்த் தாங்கித் தொகுதி மற்றும் நிர்வாக கட்டிட நிர்மாணப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டுதல்.

2009 ஜய கொள்கலன் முனைய முகாமைத்துவத் தொகுதி "NAVIS" வரை தரமுயர்த்துதல்.

2010 2010.08.15 ஆந் திகதி ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்\துறைமுக நீர்த்தடாகத்துக்கு கடல்நீர் நிரப்பும் வைபவம்.

2010 2010.11.18 ஆந் திகதி ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல்.

2010 ஜய கொள்கலன் முனையத்தில் 02 மில்லியன் கொள்கலன்கள் கையாளப்படுதல்.

2010 கொழும்புத் துறைமுகத்தில் 04 மில்லியன் கொள்கலன்கள் கையாளப்படுதல்.

2011 06 புதிய கென்ட்ரி பாரமுயர்த்திகளும் 30 றான்ஸ்பர் பாரமுயர்த்திகளும் துறைமுகத்துக்கு கிடைக்கப்பெற்றன.

2011 இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொழும்பு எண்ணெய் முனையத்தின் கொள்ளளவு அதிகரிக்கப்படுதல்.

2011 50 முனைய டிரக்டர்கள் துறைமுகத்துக்கு கிடைக்கப்பெறல்.

2011 கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் கீழ் தென் கொள்கலன் முனைய ஒப்பந்தம் கைச்சாத்திடல்.

2011 மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் புதிய வர்த்தகங்கள் ஆரம்பிக்கப்படுவதனைக் குறிக்கும் நிலம் தோண்டும் வைபவம்

2011 தென் கொள்கலன் முனையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதனைக் குறிக்கும் நிலம் தோண்டும் வைபவம்.

2012 மாகம் ருஹுணுபர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் ரோ ரோ கப்பல்களின் கையாளல் ஆரம்பிக்கப்பட்டது.

2012 கொழும்பு துறைமுகத்தின் புளுமெண்டல் எண்ணெய் களஞ்சியத்தின் பழுதடைந்திருந்த எண்ணெய்க் குழாய் வழி மீள் மாற்றம் செய்யப்பட்டது.

**2013** 6.8 கீ. மீட்டர் கொண்ட பாரிய அலை தாங்கி மற்றும் தெற்கு கொள்கலன் முனையத்துடனான கொழும்பு துறைமுகம் விரிவாக்கும் செய்திட்டம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**2013** ஒலுவில் துறைமுகம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**2013** கொள்கலன் முனையத் தொகுதியின் நிறைவான கொள்கலன்களை ஏற்றும் மொடியுல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2013 மாகம் ரூஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தின் நிருவாகக் கட்டடம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2014 மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தின் கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் வசதிகள் மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதி வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல்.

2014 கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செய்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தல்.

2015 கிழக்கு கொள்கலன் முனையம் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல்.

2015 தர முகாமைத்துவ முறைமை தொடர்பிலான ISO 9001 - 2008 தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளல்.

2015 மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுக கட்டம் II இன் நீர்த்தடாகத்துக்கு கடல் நீர் நிரப்பும் வைபவம்.

2015 கொழும்பு துறைமுகத்தில் இருபது சம அலகு கொள்கலன்05 மில்லியன் கையாளல்.

2016 CFS I **கொள்கலன் கப்பற் சரக்கு நிலையம் மீள் நிறுவுதல்.** (10.08.2016)

2016 **இயந்திர உபகரண பொறியியல் பகுதியினால் ஜயகொள்கலன்களின் முனையத்தில் உயரத்தில் குறைந்த புதிய டிரேலர் ஒன்று நிர்மாணித்தல் 2016.08.31**

2016 **பாரிய கொள்கலன் கப்பலான** MSC **மாயா கொழும்பு துறைமுகத்தின் கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்துக்கு வருகை** (16.09.2016)



# இயக்க மீளாய்வு

## ஆண்டறிக்கை 2016

## பகுதிகளினது செயலாற்றுகை

## இயக்கப் பணிகள்

## இயக்கப் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் இயக்கப் பகுதியினால் 2016 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட உற்பத்தித் திறனை மேலும் விருத்தி செய்வதற்காகவும், ஜயகொள்கலன் முனையத்தினால் கையாளப்பட்ட கொள்கலன்களின் அளவினை மேலும் உயர்த்துவதற்கும் கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- சர்வதேச கப்பல் சேவைகள் எதிர்பார்க்கின்றவாறு உயர் சேவையொன்றை பெற்றுக்கொடுப்பதும் மற்றும் போட்டியான வியாபார சூழலொன்றின் வெற்றியை அடைந்து கொள்ளல் எவ்வாறு என்பது தொடர்பாக ஊழியர்களை அறிவுறுத்தும் செய்திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றன. இவ்வேலைத்திட்டங்களினுள் 2016 ஆம் ஆண்டில் மற்றும் எதிர்வரும் வருடங்களுள் ஜய கொள்கலன் முனையம் முகங்கொடுக்கும் சவால்களை வெற்றி கொள்ளல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

- உபகரண இயக்குனர்களின் மாற்றம் முனையம்/ மேடையினுள் மாத்திரம் நடைபெறுவதால், மற்றும் அலுவலர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் கொள்கலன் இயக்கும் உபகரண இயக்குனர்களினால் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கு செயல் முறையொன்று அமுல்படுத்தப்பட்டது.

- இச்செய்முறை தொடர்ந்து கண்காணிக்கப்படுவதோடு, இதுவரை உற்பத்தித்திறன் மற்றும் கொள்கலன் கொள்ளளவினை மேம்படுத்துவதற்கு வழியமைத்துள்ளது.

- நீண்டகால காலமாக நிலவிய சிக்கலான சாரதிகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக ஒப்பந்த அடிப்படையில் சேவை செய்த பிறைமுவர் சாரதிகள் 59 பேர் ஜய கொள்கலன் முனையத்துக்கு நிரந்தர ஊழியர்களாக நியமிக்கப்பட்டனர். இச்சாரதிகள் அவர்களின் NVQ சான்றிதழை பெற்றுக்கொள்வதற்காக மஹபொல பயிற்சி நிலையத்தில் பதிவு செய்யப்பட்டனர். இத்தலையீட்டின் மூலம் ஜய கொள்கலன் முனையத்தின் செயற்திறனில் ஆக்கபூர்வமான மாற்றமொன்று ஏற்பட்டது.

- ஜயகொள்கலன் முனைய ஊழியர்களின் சுகாதார வசதிகள் மற்றும் பொதுநல மேன்பாடுகள் தொடர்பாக பல நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இத்தோடு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களை செயல்படுத்தல் ஒய்வறையை குளிரூட்டுதல் மற்றும் ஒய்வறை திருத்த வேலைகள், வர்ணம் பூசுதல் என்பனவும் இவற்றுள் அடங்குகின்றன.

- 2016 செத்தெம்பர் மாதம் ஆம் திகதி ISO கணக்காய்வு நடத்தியதோடு அதன் மூலம் ஜய கொள்கலன் முனையம் ISO தரத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வந்தமை உறுதியாகியது.

- கொழும்பு துறைமுகத்தின் 3 பிரதான முனையங்களுக்கிடையிலான பரிமாற்றம் (ITT) முறைப்படுத்தல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அலுவலர்களுடன் கலந்துரையாடப்பட்டதோடு, அதன் பெறுபேறாக தினமொன்றுக்கு முனையங்களுக்கிடையிலான பரிமாற்றம் 5000 இலிருந்து 1000 ஆக குறைவடைந்தது.

- இலங்கை துறைமுக அதிகார சபையினால் 2016 ஆம் ஆண்டில் கையாளப்பட்ட மொத்த கொள்கலன் எண்ணிக்கை 2,001,812 ஆகும் (2015 ஆம் ஆண்டில் 2,138,007 ஆகும்.) முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது இது 6.8% குறைவாகும்.

- 2016 ஆம் ஆண்டில் பிரதான கப்பல் சேவைகளின் உற்பத்தித் திறன் 26.31 ஆகும் (2015 ஆம் ஆண்டில் இது 23.96 ஆகும்.) இது வருடாந்தம் 9.8% அதிகரிப்பாகும்.

- ஊட்டக் கப்பற் சேவைகளின் உற்பத்தித் திறன் (2015 வருடத்தில்) மணித்தியாலத்திற்கு கொள்கலன் கையாளல் 19.82 ஆகியதோடு இது 2016 ஆம் வருடத்தில் 22.22 ஆகியது. இது வருடந்தோறும் 12.1% அதிகரிப்பாகும்.
- கையாளல் தொடர்ச்சியாக மற்றும் செயற்திறனாக பேணிச் செல்லும் நோக்கில் கொள்கலன் இயக்குனர்களின் பயிற்சித் திட்டத்தின் பகுதியொன்றாக முனையத்தில் கென்றி பாரம் தூக்கி சமிக்ஞையாளர்களுக்கான அறிவுறுத்தும் பல வேலைத்திட்டங்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நடாத்தப்பட்டது. இவ்வேலைத்திட்டங்கள் நவம்பர் மாத ஆரம்பம் முதல் மஹபொல பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது.

## சேவைகள் வழங்கும் பகுதி

நிறை கொள்கலன் ஏற்றுதல் (FCL), குறை கொள்கலன் ஏற்றல் (LCL), தொகைபிரிப்பு, பொதியிடப்பட்டவை மற்றும் மோட்டார் வாகனங்கள் அடங்கலாக துறைமுகத்துக்கு கொண்டுவரப்படும் அனைத்து கப்பற்சரக்குகளினது வினியோகம், வாடிக்கையாளர்களுக்கு கப்பற்சரக்குகள் சார்ந்த சேவைகளை வழங்குவது சேவைகள் வழங்கும் பகுதியினது பணிகளாகும்.

முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டவாறு 2016 ஆம் ஆண்டிலும் 24 மணித்தியாலங்கள் பூராக சேவைகள் வழங்குதலில் நிறை 38 கொள்கலன் இருபது சம அலகுகளைக் கொண்ட 235,260 கொள்கலன்கள் வாடிக்கையாளர் சேவை நிலையம் ஊடாக வினியோகிக்கப்பட்டு 2,714.5 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை விரிவுபடுத்துவதற்கும் ஆவண நடவடிக்கைக்ககாக செல்லும் காலம் குறைக்கப்படுவதற்கும் கப்பற்சரக்கு முகாமைத்துவத் தொகுதி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் குறை கொள்கலன்கள் 27,318 இருபது சம அலகுகளும் மற்றும் மீள் ஏற்றுமதி 4,735 இருபது சம அலகுகளும் கையாளப்பட்டன. இதில் 8,628 இருபது சம அலகுகள் (பொதுவான/ ஆபத்தான) கப்பற்சரக்குகளாக இருந்ததோடு தரையிறக்கும் பேலியகொட கப்பற்சரக்கு கையாளல் நிலையத்தில் 1,026 இருபது சம அலகுகளின் தனியார் கப்பற்சரக்குள் கையாளப்பட்டதோடு உள்நாட்டு, மீள் ஏற்றுமதி, பன்னாட்டு கப்பற்சரக்குகளின் ஒன்று திரட்டல் (MCC) மற்றும் விசேட கப்பற்சரக்குகளுக்கும் துறைமுகத்தின் களஞ்சியசாலைகளில் இடவசதிகள் வழங்கப்பட்டன. குறை கொள்கலன்கள் ஏற்றல் மற்றும் பன்நாட்டு கப்பற்சரக்குகள் ஒன்று திரட்டல் மூலம் முறையே 180.2 மற்றும் 158.7 மில்லியன் ரூபா வருமானமும் ஈட்டப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக வெற்று கொள்கலன்களுக்கான தாமதக் கட்டணங்கள் மற்றும் கொள்கலன்களின் நிலைமை மாறல்களுக்கான கட்டணமாக 9 மில்லியன் ரூபா வருமானமும் கிடைக்கப்பெற்றுள்ளது.

கொள்கலன் கப்பற்சரக்கு கையாளல் நிலையம் V (CFS.V) புதுப்பிக்கப்பட்டு பிணை வாடகை செலுத்தப்படும் கப்பற்சரக்கு வர்த்தகத்திற்கான களஞ்சியசாலையின் வசதிகள் அதிகரிக்கப்பட்டதன் மூலம் பிணை வாடகை செலுத்தப்படும் துறைமுக கப்பற்சரக்கு வர்த்தகத்திற்கான கேள்வி அதிகரித்து அதன் மூலம் 57.2 மில்லியன் ரூபா மொத்த வருமானமும் பெறப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டினுள் சேவைகள் வழங்கும் பகுதியினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளுடாக பெறப்பட்ட மொத்த வருமானம் 3,432.76 மில்லியன் ரூபா ஆகும். கைவிடப்பட்டிருந்த கப்பற்சரக்குகள் அகற்றப்படுவதற்கான பகிரங்க விலைமனுக்கோரல் மற்றும் ஏலவிற்பனை மூலம் 66.9 மில்லியன் ரூபா வருமானம் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளதுடன் வ/ப இலங்கை துறைமுக முகாமைத்துவ மற்றும் ஆலோசனை சேவைக் கம்பனியினால் கழிவு இரும்பு, அகற்றப்பட்ட எண்ணெய் மற்றும் பயன்படுத்தப்பட்ட டயர்கள் விற்கப்பட்டதனால் 10.6 மில்லியன் ரூபா மேலதிக வருமானமும் ஈட்டப்பட்டுள்ளது.

இந்த ஆண்டினுள் சரக்குகள் அகற்றும் நிறுவனங்களுக்கான புதிய அனுமதிப்பத்திரங்கள் 132 வழங்கப்பட்டுள்ளதுடன். 935 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டு மொத்தமாக 1,067 அனுமதிப்பத்திரங்களுக்கு ரூபா 19.1 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. “ஏ” மற்றும் “பீ”

வகையின் வாப்பு இலிகிதர்களுக்கான வாப்பு அடையாள அட்டைகள் வினியோகித்தல் மற்றும் புதுப்பித்தல் மூலமாக 6.8 மில்லியன் ரூபா வருமானமும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆண்டினுள் வினியோகிக்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட “ஏ” வகை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 2236 என பதிவாகியுள்ளதோடு “பி” வகை அனுமதிப்பத்திரங்கள் 286 ஆகும்.

2016 ஆண்டில் பொறுப்புக்கள் பெற்றுக் கொள்பவர்களினால் நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் கப்பற்றுறை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட களஞ்சிய வாடகை கட்டணங்களை அறவிடுவதில் விடுபடுவதற்கான விண்ணப்பப்பத்திரங்கள் 29 ல் 21 விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டதுடன் 08 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. எஞ்சிய விண்ணப்பங்கள் தொடர்பில் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சினால் தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது.

குறை கொள்கலன்கள் விநியோகிக்கப்படுவதற்கான ஆவணங்கள் இலத்திரனியல் பாவனை மூலம் விநியோகிக்கும் வசதிகளை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டில் கப்பற்சரக்குகள் நேரடியாக விநியோகிகப்பட்டுள்ளன இதனை 2017 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பூரணமாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2016 **ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள்**

- மிகவும் சிறந்த செயற்திறனான சேவைகள் வழங்கப்படும் நோக்கில் பண்டாரநாயக்க துறைமேடையின் I,II,III மற்றும் IV ஆம் களஞ்சியசாலைகள் சேவைகள் வழங்கும் பகுதியோடு ஒன்றிணைக்கப்பட்டன.
- கொள்கலன் கப்பற்சரக்கு நிலையம் 1 இன் (CFS - 1) முதல் பாகத்தின் மீள் நிர்மாணப்பணிகள் முடிவடைந்து 2016 ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி மீண்டும் திறந்து வைக்கப்பட்டது. களஞ்சியசலையின் இரண்டாம் பாகத்தின் மீள் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருவதோடு 2017 சனவரி மாதம் நிறைவடைய உள்ளது.
- கொள்கலன் கப்பற்சரக்கு நிலையம் 11 இன் (CFS II) களஞ்சியசாலையின் பாதை விரிவாக்கப்படுவற்கு அகற்ற வேண்டியுள்ளதால் அதன் கொள்கலன் கையாளல் பணிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.
- மிகவும் ஆகுசெலவு பயன்மிகுந்த செயற்திறனான கொள்கலன் கையாளல்களை மேற்கொள்வதற்கு சமர்ஹில் பிரதேசத்தில் அமைந்துள்ள வாகன முனையம் ஐக்கிய கொள்கலன் முனையத்துக்கு (UCT) கொண்டு செல்லப்பட்டுள்ளது.
- பாவனையாளர்களின் முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கனல் முனையத்தில் பாவனையாளர் சேவை நிலையமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
- தகவல் முறைமை பகுதி மற்றும் எக்சஸ் தனியார் கம்பனியின் குழுவோடு இணைந்து நேவிஸ் குறை கொள்கலன் தொகுதியொன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- கப்பற்சரக்குகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் பண்டாரநாயக்க துறைமேடைக் களஞ்சியசாலையில் (CCTV) கமெரா தொகுதி பொருத்தப்பட்டு வருகின்றது.

## கப்பலோட்டப் பகுதி

### வழிகாட்டிச் சேவை

மீளாய்வாண்டினுள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த எல்லா வகையிலான கப்பல்களுக்கும் 24 மணித்தியாலங்கள் பூராக வழிகாட்டிச் சேவைகள் வழங்கப்பட்டன.

| கப்பல்களின் வகை | கப்பல்களின் எண்ணிக்கை | வருகை தந்த நோக்கம் | கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கொள்கலன் | 3,804 | எண்ணெய் பெறுதல் | 29 |
| மரபு முறையான | 40 | பழுதுபார்த்தல் | 46 |
| உலர் மொத்தம் | 194 | பயணிகள் | 43 |
| திரவ மொத்தம் | 191 | ஏனைய சேவைகள் | 7 |
| றோல் ஒன் றோல் ஒப் | 51 | | |
| ஏனைய கப்பற்சரக்குகள் | 0 | | |
| மொத்தம் | | | **4,405** |

**பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவு (CMT)**

பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவினால் மீளாய்வாண்டினுள் கப்பல்களுக்கு செயற்திறனான தொடர்ச்சியான இழுவைக்கல சேவைகள் வழங்கி சிறப்பான பணியாற்றப்பட்டது. இதற்கு மேலதிகமாக பின்வரும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

- இழுவைக் கலங்களின் தட்டுக்களினது (DECK) புதுப்பிப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளை நிறைவேற்றுதல்.
- கப்பல்களை கட்டி வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு அகற்றப்பட்ட பாரிய கயிறுகளினால் இழுவைக் கலங்களுக்கான கயிறுகளும் விரிப்புகளும் செய்தல், இழுவைக் கலங்களுக்கும் வேறு பிரிவுகளுக்கும் கென்வஸிலான திரைகள் தயாரிக்கும் நடவடிக்கைகள்

கப்பல்களின் நகர்வுகளுக்காக போதுமானளவு இழுவைக் கலங்கள் நாளாந்தம் ஈடுபடுத்தப்பட்டதோடு அவசர சந்தர்ப்பங்களுக்காக ஒரு இழுவைக் கலம் எதிர்பார்ப்பு சேவையில் வைக்கப்பட்டது.

**இழுவைக் கலங்களின் உதவியுடன் கையாளப்பட்ட மொத்த கப்பல்களின் எண்ணிக்கை**

நங்கூரமிடும் இழுவைக் கலங்களினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த கையாயளல் எண்ணிக்கை 20,491 என்பதுடன், அதன் விபரங்கள் பின்வருமாறு

| கலத்தின் பெயர் | கையாளல் எண்ணிக்கை |
|---|---|
| எம்ரீ ராஜா | 1,463 |
| எம்ரீ நந்தமித்ர (55BP) | 2,320 |
| எம்ரீ சுரணிமல (65BP) | 3,919 |
| எம்ரீ கொட்டையிம்பர (65BP) | 3,409 |
| எம்ரீ விஜயபாகு | 2,906 |
| எம்ரீ பரண - II | 2,318 |
| எம்ரீ ஐராவண | 1,897 |
| ஓஸன் என்டர்பிரைஸஸ் கலம் (2016/01/03, திகதியிலிருந்து 2016/.08/28 ஆம் திகதி வரை வாடகை அடிப்படையில் பெறப்பட்டது) | 2,259 |
| **மொத்தம்** | **20,491** |

**திருகோணமலை துறைமுகம்**

- சிங்கபாகு மோட்டார் கலம்
- நீலமஹ மோட்டார் கலம்
- மஹாசேன் மோட்டார் கலம்

**காலி துறைமுகம்**

- கஞ்சதேவ மோட்டார் கலம்

**காங்கேசன்துறை துறைமுகம்**

- தீர மோட்டார் கலம்

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம்**

- வேலுசுமன மோட்டார் கலம்
- பரண மோட்டார் கலம்
- வசப மோட்டார் கலம்

**வருமான விபரம் - இழுவைக் கல சேவைகள் (கொழும்பு துறைமுகம்)**

| ஆண்டு | ரூ.மில் |
|---|---|
| 2015 உண்மையான வருமானம் | 872.15 |
| 2016 திருத்தப்பட்ட வருமானம் | 983.14 |
| 2017 திட்டமிடப்பட்ட வருமானம் | 1,020.41 |

**பிரதான பொறியியல் அலுவலர் பிரிவு**

**ஆளணியினர்**

அனைத்து இழுவைக் கலங்கள், வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்களின் இயக்கம் மற்றும் பழுதுபார்ப்பு தேவைப்பாடுகளை மேறகொள்வதற்கு இப்பிரிவினால் சிறப்பாக பணியாற்ற முடிந்தது.

கலங்களின் நகர்த்தல்களுக்கு வழிகாட்டி மற்றும் இயக்கங்களுக்குத் தேவையான கலங்களின் அன்றாட ஈடுபடுத்தல்களுக்கு மேலதிகமாக இப்பிரிவின் ஆளணியினரால் வழமையான பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

முகாமைத்துவத்தின் சிபாரிசு மீது பிரதான பொறியியல் அலுவலர் பிரிவு மேற்கொண்டும் இழுவைக் கலங்களினது வழமையான பணிகளை இயந்திர சாதனங்களையுடைய வேலைத்தளத்தில் மேற்கொள்வதற்கு தயாரான நிலையில் உள்ளது.

**துறைமுக தீயணைப்பு படைப் பிரிவு (PFB)**

துறைமுக தீயணைப்பு படைப்பிரிவினால் ஆண்டினுள் வினைத்திறனாக திடீர் சேவை தேவைப்பாடுகளின் போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உள்நாட்டு தீகாப்பு நியமங்கள் அனுசரிக்கப்பட்டும் பேணப்பட்டும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் அவசர சந்தர்ப்பங்களின் போது செயற்படும் துறைமுக தீயணைப்பு பிரிவாக செயற்படுவதுடன் எண்ணெய் மூலம் கடல் மாசடைதல் மற்றும் ஆபத்தான பொருட்களுடன் தொடர்புபடும் விபத்துக்களை தடுத்து நிறுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**மீளாய்வுக்குட்படும் ஆண்டினுள் துறைமுக தீயணைப்புப் பிரிவினால் பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டன**

| | |
|---|---|
| தீயணைப்பு தொடர்பான பதிலளிப்பு | 32 |
| கடற்படையின் பரீட்சார்ந்த பயிற்சி ஒத்திகைகள் அழைப்பு | 07 |
| அவசர அழைப்புக்கள் | 159 |
| எண்ணெய் தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 175 |
| வாயு தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 50 |
| கப்பல்களின் வெப்ப வேலைகளுக்கான காத்திருத்தல் சேவை | 705 |
| ஆபத்தான கப்பற்சரக்குகளின் கையாளல்களுக்கான காத்திருத்தல் சேவை | 04 |
| ஆபத்தான கப்பற் சரக்குகளின் பரிட்சிப்பு விஜயங்களுக்கான காத்திருப்பு சேவைகள் | 153 |
| பாலங்கள்/ குதங்கள் போன்றவை கழுவுவதற்கான நீர் வினியோகம் | 31 |
| தண்ணீரை வெளியேற்றுதல் | 03 |
| எண்ணெய் மூலம் மாசடைதலின் கட்டுப்பாட்டுப் பணிகள் | 17 |
| எண்ணெய் தாங்கிகளுக்கான பரீட்சிப்பு விஜயம் | 675 |
| ஒன்றிணைந்த தீயணைப்புகள் | 03 |
| கடமையில் ஈடுபட்டிருக்கின்ற இழுவைக் கலங்களுக்கான நீர் வழங்குதல் (மொத்த பவுசர்களின் எண்ணிக்கை) | 138 |

**தீ காப்பு நடவடிக்கைகள்**

- சகல கட்டடங்கள் / பாரம்தூக்கிகள் / கலங்கள் / பிறைம்மூவர் வண்டிகள் தொடர்பான தீ காப்பு பரிட்சிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.
- கொழும்பு மற்றும் காலி துறைமுகங்களின் தீயணைப்பு உபகரணங்களை வருடத்தில் இரு தடவைகளிலும் ஏனைய துறைமுகங்களின் தீயணைப்பு உபகரணங்களை வருடத்தில் ஒரு தடவையும் பரீட்சித்துப்பார்க்கப்பட்டன.
- ஆண்டினுள் பரீட்சிக்கப்பட்ட தீயணைப்பு உபகரணங்களின் எண்ணிக்கை 3,621 ஆகும்.
- கொழும்பு தீயணைப்பு திணைக்களம் மற்றும் சவுதி ஏஷியாகேட்வே டேர்மினல்ஸ் (SAGT) உடன் இணைந்து தீயணைப்பு ஒத்திகை ஒன்று நடாத்தப்பட்டது.
- எண்ணை வங்கியில் (OIL BANK) ஏற்பட்ட தீயை கொழும்பு தீயணைப்பு படையின் உதவியுடன் கட்டுப்படுத்தப்பட்டது.
- எண்ணெய் கப்பல்கள் நிறுத்தப்படும் மிதப்பியின் (SPBM) ஏற்பட்ட எண்ணெய் கசிவு கடற்சூழல் பாதுகாப்பு அதிகாரசபையினால் (MEPA) எண்ணெய் மூலம் கடல் சூழல் மாசடைவதனை தடுப்பதற்கான தேசிய திட்டத்திற்கு (NOSCOP) ஏற்ப கட்டுப்படுத்தப்பட்டது.

**பயிற்சி தொடர்பான சேவைகள்**

| | |
|---|---|
| ஆளணியினருக்கான பயிற்சி | 31 |
| வெளி நபர்களுக்கான பரீட்சிப்பு விஜயங்கள் | 03 |
| கொக்சன்களுக்கான பயிற்சி பாடநெறிகள் | 04 |
| கப்பல்களின் தட்டுக்கள் எஞ்சின் அறை தரப்படுத்தும் பயிலுனர்களுக்கான தீயணைப்பு பயிற்சி | 01 |

- முகாமைத்துவ பயிலுனர்களுக்கான ஒரு நாள் ஆரம்ப தீயணைக்கும் பயிற்சி 01
- துறைமுக தீயணைப்பு பணியாளர்களுக்கான தீயணைப்பின் மீள் பயிற்சியளித்தல் 08
- தீயணைப்பு பிரிவுக்கு ஆட்சேர்ப்பு செய்த தீயணைப்பாளர்களுக்கான பயிற்சி 01

2016 ஆம் ஆண்டில் துறைமுக தீயணைப்புப் பிரிவினால் ஈட்டப்பட்ட வருமானம் பின்வருமாறு;

| விபரம் | அ.டொலர் |
|---|---|
| தீயணைப்புகளுக்கான அழைப்புகள் | 53,260 |
| எண்ணெய் தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 367,426 |
| வாயு தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 69,360 |
| ஆபத்தான கப்பற்சரக்குகளுக்கான காத்திருத்தல் சேவை | 7,300 |
| பரீட்சிப்பு விஜயங்களுக்கான கட்டணங்கள் | 8,100 |
| வெப்ப வேலைகளுக்கான கட்டணங்கள் | 30,934 |
| எண்ணெய் மாசடைவு கட்டுப்பாட்டிற்கான அறவீடுகள் | 9,084 |
| அவசர சந்தர்ப்பங்கள் | 1,000 |
| மொத்த வருமானம் | **546,464** |

**துறைமுக காப்பு பிரிவு**

துறைமுகத்தினுள் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையிலான ஆபத்தான கப்பற்சரக்குகள் கையாளப்படுகையிலான பாதுகாப்பு அணுகு முறைகளை சகல நேரங்களிலும் அவதானித்து உரிய முறையில் பேணி உறுதிப்படுத்துவது துறைமுக காப்பு பிரிவாகும்.

துறைமுக தீயணைப்புப் படையின் உதவியோடு சில இரசாயன பொருட்களின் சிதறல்கள் மற்றும் தீ விபத்துக்கள் கட்டுப்படுத்தப்பட்டன. அதேபோன்று ஆபத்தான சரக்குக் குதங்கள் மற்றும் கொள்கலன் அடங்கலான குதங்களின் பரீட்சிப்புகள் அடிக்கடி காலங்களில் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

வெப்ப வேலைகளுக்கான அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட தளங்களில் பரீட்சிப்புகள் நடாத்தப்பட்டு அனுமதி வழங்கப்படாத வெப்ப வேலைகள் தடுத்து நிறுத்தப்பட்டன.கடல் மாசடைதல் தொடர்பிலான பரீட்சிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

- 2016 ஆண்டில் கொழும்பு துறைமுகத்தினால் 351,974.557 மெட்ரிக் தொன் ஆபத்தான கப்பற்சரக்குகள் கையாளப்பட்டன.
- ஆபத்தான கப்பற்சரக்குகளைக் கொண்ட 28,602 கொள்கலன்களின் மாற்றியேற்றல்கள் மேற்கொள்ளப்பட்டன.
- இயக்கப் பகுதியின் ஊழியர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி அமர்வுகளின் மூலம் துறைமுகத்தினுள் ஆபத்தான கப்பல் சரக்குகளைக் கையாளல், களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து செய்தல் ஆகியவற்றுடன் அதனுடன் தொடர்புபட்ட பாதுகாப்பு முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

- எளிதில் வெடிக்கக்கூடிய (GPIE) 76,800 மெட்ரிக் தொன் பொருட்களும், வெடிக்கக் கூடிய தன்மையிலான (GPI/AE/IIE) 11,053.119 மெட்ரிக் தொன் பொருட்களும் கையாளப்பட்டன.

- ஜய கொள்கலன் மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்களின் ஊழியர்களினதும் கப்பலோட்டப் பகுதியின் நங்கூரமிடல் குழுவினரினதும் தனிநபர் பாதுகாப்பின் விஷேடமாக உபகரணப் பாவனை தொடர்பிலும் உதவி துறைமுக காப்பு பரீட்சகர்களின் உதவியோடு மேற்பார்வை செய்யப்பட்டு தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களின் பாவனை தொடர்பிலான அறிவும் விருத்தி செய்யப்பட்டது.

கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்த பல்வேறுபட்ட 316 எண்ணெய் கப்பல்கள் பின்வருமாறு கப்பற் சரக்கு இறக்கப்பட்டன.

| கப்பற் சரக்கு வகை | அளவு (மெ.தொ) |
|---|---|
| திரவ பெற்றோலிய வாயு | 371,026.969 |
| வாயு எண்ணெய்/ ஜெட்A1/ கெஸொலைன் / மண்ணெண்ணெய் | 2,708,140.404 |
| மசகு எண்ணெய் | 1,226,676.431 |
| எரிபொருள் | 510,865.546 |
| உராய்வு நீக்கி எண்ணெய் | 22,803.865 |

**கரையோர வெளிச்ச வீட்டு பிரிவு**

சர்வதேச கப்பல் வழிகளை நோக்கிய மேற்கு மற்றும் தெற்கு கரையோரங்களில் அமைந்துள்ள வெளிச்சவீடுகள் முறையாக பராமரிக்கப்பட்டன.

**கால்வாய்களில் அமைந்துள்ள வெளிச்ச மிதப்பிகள்**

வெளிச்ச மிதப்பிகள் அடிக்கடி பரீட்சிக்கப்பட்டு பராமரிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

**வருமானம் வெளிச்சவீட்டுக் கட்டணங்கள் 2015/2016 (அனைத்து துறைமுகங்களினதும்)**

| | 2014 **உண்மையான வருமானம் ரூ.மில்லியன்** | 2015 **உண்மையான வருமானம் ரூ.மில்லியன்** | 2016 **திட்டமிடப்பட்ட (திருத்திய) ரூ.மில்லியன்** |
|---|---|---|---|
| வருமனம்/ வெளிச்சவீட்டுக் கட்டணங்கள் | 681.32 | 849.25 | 976.61 |

**துறைமுக கலப் பிரிவு**

பிரதானமாக கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தரும் கப்பல்களை பாதுகாப்பாக கட்டி வைத்தல்/ விடுவித்தல் போன்றவற்றுக்கு உதவுவதற்காக வழிகாட்டிக் கலங்களுக்கு கப்பல்களைக் கட்டி வைக்கும் பணியில் குழுக்களை ஈடுபடுத்துதல், தீவு மற்றும் தென் மேற்கு அலைதாங்கிகளுக்கு பல்வேறு வேலைக் குழுக்களை போக்குவரத்து செய்தல், துறைமுக நீர்ப் பகுதியை சுத்தமாக வைத்திருத்தல், ஜிராப் மிதவை பாரமுயர்த்திகளினால் அதிக பாரம்தூக்குவதும் துறைமுக கலப் பிரிவின் முக்கிய பணியாகும். வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்களின் அன்றாட பராமரிப்புகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

**நீரியல் அளவைப் பிரிவு**

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் சகல துறைமுகங்களினதும் நீரியல் ஆய்வுகள் போன்று துறைமுகத்தின் சம்பந்தப்பட்ட பகுதிகளினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கமைய அனைத்து காணிகளின் அளவீட்டுப் பணிகளும் நில அளவையாளர்களினால் பின்வருமாறு செய்து முடிக்கப்பட்டன.

- உட்புகு கால்வாயின் ஆழம் அளவீடு செய்தல்
- தெற்கு துறைமுகத்தின் ஆழம் அளவீடு செய்தல்
- பிரதான நுழைவாயிலின் ஆழம் அளவீடு செய்தல்
- உள்ளக துறைமுகத் தடாகத்தினதும் நங்கூரத்தளங்களினதும் ஆழம் அளவீடு செய்தல்
- உட்புகு கால்வாயின் மிதப்பி அமைவிடங்களை அளவீடு செய்தல்
- கொழும்பு துறைமுக வரை படத்தை மீள் திருத்தம் செய்தல்
- துறைமுக உள்ளக பாதை விரிவாக்கல் திட்டத்தின் அளவீடு மற்றும் மட்ட நோக்குதல்
- குத்தகை உடன்பாடுகளுக்கான அளவீடு மற்றும் திட்டமிடல் பணிகள்
- துறைமுகம் தொடர்பில் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்ட எல்லைகளை கூடிய விளக்கமான முறையில் பழைய நிலப்படத்தின் மீது அமைத்தல்

**காலி துறைமுகம்**

- கடல் அலை ஏற்ற இறக்கம் மற்றும் காலநிலை தரவு நிலையமொன்றை நிறுவுதல்
- "பிம்சவிய" சம்பந்தப்பட்ட பொதுக் கூட்டங்களில் பங்குபற்றல்
- உல்லாசப் படகுத்தள நிலையத்தின் ஆழம் அளவீடு செய்தல்
- குத்தகை உடன்பாடுகளுக்கான அளவீடு மற்றும் திட்டமிடல் பணிகள்

**திருகோணமலை துறைமுகம்**

- குத்தகை திட்டம் தயார் செய்தலுக்கான மதிப்பீட்டுப் பணிகள்
- கடல் அலை ஏற்ற இறக்கம் மற்றும் காலநிலை தரவு நிலையமொன்றை நிறுவுதல்
- டோக்கியோ துறைமேடை மற்றும் உட்பிரவேச கால்வாய் தோண்டும் திட்டம் மற்றும் கடலகம் அளவீடு செய்யும் பணிகள்

**ஹம்பாந்தோட்டை துறைமுகம்**

- பிரவேச மற்றும் கால்வாயின் நீரியல் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளல்

- முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்படுவதிலான அளவீட்டுப் பணிகளை மேற்கொள்ளல்

- கட்டம் 11 இன் கீழ் மீள் குடியேற்றம் செய்தல் - நில அளவைத் திணைக்களத்தின் மேற்பார்வையுடனான அளவீட்டுப் பணிகள்

- திட்ட பொறியியலாளர்களினால் வழங்கப்பட்ட ஏனைய தொடர்புபடும் ஆய்வு நடவடிக்கைகள்

**கடல் மைல் பிரிவு**

லோஞ்ச் இயக்குபவர்கள், கடலக அளவையாளர்கள், சிறிய மற்றும் பாரிய பழுதுபார்ப்பு வேலைத்தளங்கள், எண்ணெய் மற்றும் எண்ணெய் கலந்த நீர், மற்றும் குப்பைகள் அகற்றுவதற்கான சேவைகள் தொடர்பாக வருடாந்தம் பதிவு செய்து கொள்ளல் மற்றும் கப்பல்சேவை வழங்குவதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கலும் இப்பிரிவினால் இணைப்பாக்கம் செய்யப்பட்டன.

| அனுமதிப்பத்திரத்தின் பெயர் | வழங்கப்பட்ட தொகை | வருமானம் (ரூபா) |
| --- | --- | --- |
| கப்பல்களை பழுதுபார்க்கும் அனுமதிப்பத்திரம் | 129 | 14,739,174.18 |
| டொக்யார்ட் அனுமதிப்பத்திரம் | 72 | 2,808,917.77 |
| அளவை அனுமதிப்பத்திரம் | 39 | 2,725,984.17 |
| கப்பல்களுக்கான சேவைகள் வழங்குவதற்கான அனுமதிப்பத்திரம் | 90 | 7,541,958.42 |
| படகு அனுமதிப்பத்திரம் | 47 | 4,452,909.21 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ மற்றும் ஏனைய அனுமதிப்பத்திரம் | 11 | 450,065,.67 |
| **மொத்தம்** | | **32,719,009.42** |

## அபிவிருத்தி செய்திட்டங்கள்

## திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பகுதி

**கிழக்கு கொள்கலன் முனையம் (ECT) – கட்டம் 1 கொழும்பு துறைமுகம் விரிவாக்கும் செய்திட்டம்**

**செய்திட்ட தகவல்களும் அதன் முன்னேற்றமும்**

அத்திவாரத்தளத்தை தயார் செய்வதற்காக கடல் தளத்தை ஆழமாக்குவதற்கும் காணியை நிரப்புவதற்குமான தோண்டும் பணிகள் முடிவடைந்துள்ளன. 30 மீட்டர் இடைவெளி கொண்ட இரண்டு ஓடு பீலியுடனான பாதை , 20 மீட்டர் அகலமான பின்நோக்கிச் செல்லக் கூடிய பிரதேசம், இரண்டு நிரல்களைக் கொண்ட பாதை, தடுப்புச் சுவர் மற்றும் மூடு சுவரைக் கொண்ட வெற்று இடப் பிரதேசத்தையுடைய 440 மீட்டர் நீளமான நங்கூரமிடக்கூடிய வசதிகளைக் கொண்ட 600 மீட்டர் நீளமான மேடைச் சுவரின் நிர்மாண பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. நிலம் நோக்கியுள்ள பாரம்தூக்கியின் பீலியும் தண்டும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அடுக்கும் 12 உலர் வழிகள், குளிரூட்டப்பட்ட கொள்கலன்களை நிலைநிறுத்தும் வழி, 30 மீட்டர் அகலமான முனையத்தை சுற்றி அமைந்துள்ள பாதைகள், முனைய ட்ரக்டர் நிறுத்தும் பிரதேசத்தை கொண்ட நிரப்பப்பட்ட நிலப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட கொள்கலன் முனையத்தின் பணிகள் நிறைவடைந்துள்ளன. சுற்றியுள்ள தடுப்புச் சுவர், வசதிகள் மற்றும் பயன்பாட்டுச் சேவைகளின் நிர்மாணப் பணிகளும் முடிவடைந்துள்ளன.

2016 யூன் 06 ஆம் திகதி ஆர்வ வெளிப்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பகிரங்க அறிவித்தலுடன் செய்திட்டத்தின் பூர்வாங்க தகுதிகாண் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. 2016 செப்டெம்பர் 20 ஆம் திகதி இதன் பணிகள் முடிவடைந்தன. ஆர்வ வெளிப்பாட்டு விண்ணப்பங்களின் மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) உதவியுடன் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் குழுவினாலும் (CANC) பெறுகைக்கான குழுவினாலும் (PC) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் தயாரிக்கப்பட்ட சலுகைக்கான உடன்படிக்கையின் முதலாவது நகல் பிரதி இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் உரிய திருத்தங்கள் மேற்கொள்வதற்கான இலங்கை துறைமுக அதிகாரசபையின் கருத்துக்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**காலி துறைமுக அபிவிருத்தி செய்திட்டம் – கட்டம் -1**

**செய்திட்டத்தின் தகவல்களும் அதன் முன்னேற்றமும்**

வடிவமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு வ/ப ஒரியன்டல் கன்ஸல்டன்ட் கம்பனியுடன் (OCC) புதிய உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. தற்போதிருக்கும் JICA நிதியைப் பயன்படுத்தி அலைதாங்கியொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு வருவதுடன் இரண்டாம் கட்டத்தில் அரச, தனியார் கூட்டுரிமையை அடிப்படையாக கொண்டு பல்வித பணி நங்கூரத்தளமொன்றை அபிவிருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. செய்திட்டத்துக்கான அனுமதிக்கப்பட்ட கடன் தொகை 14,495 ஜப்பான் யென் மில்லியன் ஆகும்.

JICA கடன் 2017 மே வரை மேலதிக ஒரு வருட காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

**திருகோணமலை துறைமுக அபிவிருத்தி செய்திட்டம்**

குறுகிய மற்றும் நீண்டகால செய்திட்டப் பிரேரணைகளின் மீது திருகோணமலை துறைமுக எண்ணக்கருவிற்கான உருத்தோற்ற பிரதான திட்டம் தயாரிக்கப்பட்டது. ஓஸன் பீக் மற்றும் டிமோ ஆகிய நிறுவனங்களின் முதலீட்டுத் திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு பிரேரணைகள் கோரல் (RFP) மூலம் அவை பரிந்துரைக்கப்பட்டன. அவை பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை குழுவிடம் (CCEM) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மீன் வளர்ப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு செயலாளர்களின் குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

**தற்போதைய முன்னேற்றம்**

முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய செய்திட்டமொன்றாக நிலக்கரி மற்றும் கிலிங்கர் திருகோணமலை துறைமுகத்திலிருந்து புகையிரதம் ஊடாக போக்குவரத்து செய்யப்படுவதற்கான திட்டம் அறியப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபை, திருகோணமலையின் அரச பிரதிநிதி மற்றும் புகையிரத திணைக்களத்துடன் இணைந்து புகையிரத பாதை மீள பதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புகையிரத திணைக்களம் அளவீட்டுப் பணிகளை மேற்கொண்டு வருவதோடு இது நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் எதிர்கால பிரவேச பாதை மற்றும் மீள் குடியேற்ற திட்டங்கள் அதிகாரசபையினால் தயாரிக்கப்படும். பிரேரணை கோரலில் ஒரு முதலீட்டாளர் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு கைச்சாத்திடப்படவிருக்கும் உடன்படிக்கையின் பணிகள் நிறைவு பெற்று வருகின்றன.

## தென் துறைமுக அபிவிருத்தி பகுதி

2016 ஆம் ஆண்டில் தென் துறைமுக அபிவிருத்தி பகுதி செய்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழான பிரதான சிவில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டது. ஹம்பாந்தோட்டை துறைமுக கைத்தொழில் வலயத்தில் கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் வசதிகளை கையாள்வதும் வர்த்தக துறைமுகத்துக்கு தகுதியான இயக்குனர்களை கவர்ந்து கொள்வதற்குமான பிரேரணைகள் கோரல் பணிகள் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன. துறைமுக அபிவிருத்திக்கு தேவையான காணிகளை கைப்பற்றிக் கொள்ளும் செயற்பாடும் குறித்த செய்திட்டத்தோடு மேற்கொள்ளப்பட்டன.

**ஒவ்வொரு செய்திட்டத்தின் விபரங்களும் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன;**

**ஹம்பாந்தோட்டை துறைமுகம் அபிவிருத்தி செய்தல் - கட்டம் II**

இந்த செய்திட்டத்தின் பிரதான சிவில் நிர்மாண வேலைகள் 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன அதன்படி குறித்த கட்டத்தின் பணிகள் முடிவடையும் திகதி 2017 ஏப்ரல் 15 வரை நீடிக்கப்பட்டது. இயக்க உபகரணங்கள் பெற்றுக்கொள்ளப்படும் செயற்பாடு நடைபெற்று வருவதோடு 2018 ஆம் ஆண்டின் இரண்டாவது தவணை வரை இது நடைபெறும்.

தற்போது இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் வ/ப சைனா மேர்சன்ட் போட் ஹோல்டிங்ஸ் தனியார் கம்பனிக்குமிடையில் கூட்டுரிமை வியாபாரம் நடைபெறும் வகையில் இலங்கை மற்றும் சீன அரசாங்கங்களின் அவ்வாறான அரச தனியார் கூட்டுரிமையில் ஹம்பாந்தோட்டை

துறைமுகத்தை கையாள்வதற்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தேவையான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

**கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதி மற்றும் எண்ணெய்த் தாங்கித் திட்டம்**

**கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகளுக்கான - பிரேரணைகள் கோரல்**

கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் வசதிகளை கையாள்வதற்கும் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வியாபாரத்தை விரிவாக்குவதற்கும் 03 விமான எரிபொருள் தாங்கிகளுடன் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகளை தகுதியான இயக்குனரொருவருக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் வசதிகளைக் கையாள்வதற்கான பிரேரணைகள் கோரப்பட்டதுடன், சாத்தியவள முதலீட்டாளர்களிடமிருந்து 04 பிரேரணைகள் கிடைக்கப்பெற்றன. பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை குழு வழங்கியுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் பிரேரணைகளின் மதிப்பீட்டுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

**திரவ பெற்றோலிய வாயு வசதிகள் தொடர்பிலான வ/ப லிட்றோ கேஸ் லங்கா தனியார் கம்பனியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள குத்தகை வாடகை உடன்படிக்கை**

ஹம்பாந்தோட்டை தாங்கித்தொகுதியின் திரவ பெற்றோலிய வாயு வசதிகள் ஊடாக லிட்றோ கேஸ் கம்பனியின் செயற்பாட்டை அதிகரிப்பதற்கும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் வ/ப லிட்றோ கம்பனிக்கும் அதிக வருமானம் ஈட்டப்படும் வகையில் திரவ பெற்றோலிய வாயுவை சிலின்டர்களில் நிரப்பும் இயந்திரசாலையொன்றை நிர்மாணிப்பதற்கு வ/ப லிட்றோ கேஸ் கம்பனி வேண்டுகோள் விடுத்துள்ளது. மேலதிக உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்படுவதற்கு உட்பட்டதாக இலங்கை துறைமுக அதிகாரசபை மேற்குறிப்பிடப்பட்டுள்ள இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

**பிரேரணைகள் கோரல் - 2016 (ஏப்ரல்)**

ஹம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்தின் வியாபார நடவடிக்கைகளை கவரப்படுவதற்கான பிரேரணைகள் கோரப்பட்டு குறித்த விலைகள் 2016.08.24 ஆம் திகதி திறக்கப்பட்டன. 06 விலைகள் கிடைக்கப்பெற்ற போதிலும் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழுவின் ஆலோசனைகளின் மீது மதிப்பீட்டுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

திரவ பெற்றோலிய வாயு முனைய செய்திட்டம் ஸ்தாபிக்கப்படுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் வ/ப லாப் டேர்மினல்ஸ் கம்பனியுடனான தொடர்பு மேற்கொண்டும் பேணிச் செல்லப்படுகின்றது.

**காணிகளைக் கைப்பற்றுதல் / கொள்வனவு செய்தல் (கட்டம் – II)**

தேவையான காணிகள் மற்றும் மீள் குடியேற்றுவதற்கான மேலதிக காணிகள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் மதிப்பிடுதல் மற்றும் அளவீட்டுப் பணிகள் முடிவடைந்துள்ளன. உள்ளன. அமைச்சரவையின் அங்கீகாரமும் இதற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இதற்கான மொத்தத் தொகை சுமார் 2000 மில்லியன் ரூபா ஆகும். தேவையான நிதியை பொது திறைசேரி ஊடாக பெற்றுக்கொள்ளுமாறு அமைச்சரவை வழங்கியுள்ள அங்கீகாரத்தின் பிரகாரம் பொது திறைசேரியினால் 992 மில்லியன் ரூபா (2016 ஆம் ஆண்டு இறுதி வரை பயனாளிகளுக்கு வழங்குவதற்கு) ஹம்பாந்தோட்டை செயலாளருக்கு தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது.

## ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படும் சிவில் பொறியியல் செய்திட்டங்களின் முகாமைத்துவம் செய்வதும் துறைமுகத்துடன் தொடர்புபட்ட அமைவுகளின் திட்டங்களைத் தயாரித்தலும் ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு பகுதியின் (C&D) பிரதான பணியாகும். இலங்கை துறைமுக அதிகாரசபையின் இவ்வாறான செய்திட்டங்களான பிரதான வர்த்தக நடவடிக்கைகளுக்கு வசதிகளை வழங்கும் நங்கூரத்தளங்கள், மேடைகள், கட்டட அமைவுகள், சிவில்

நிர்மாணிப்புக்கள் கட்டடங்கள் மற்றும் பாதைகள் போன்ற துறைமுக உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக திட்டமிடுதலும் இவற்றுள் அடங்கும். மேலும் அனைத்து பிராந்திய துறைமுகங்கள் உள்ளிட்டதாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல பகுதிகளினதும் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திகளுக்குத் தேவையான அனைத்து திட்டமிடல் நடவடிக்கைக்காகும். ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு பகுதியினால் நிறைவேற்றப்படுகின்றன. இச்செய்திட்டங்கள் தொடர்பாக விலைகோரல் செயற்பாடு, ஆலோசனைச் சேவைகள், நிர்மாணங்களின் மேற்பார்வை, தரக் கட்டுப்பாடுகள் மற்றும் உடன்படிக்கைகளின் முகாமைத்துவம் செய்திட்ட முகாமைத்துவத்துக்கு உள்ளடங்குகின்றது.

மேற்குறிப்பிடப்பட்டவற்றிற்கு மேலதிகமாக முன்வார்ப்பு பிரிவின் ஊழியர்களின் சேவையை நேரடியான பங்களிப்பாக பெற்றுக்கொண்டு கொழும்பு துறைமுகத்தின் சிறிய அளவிலான பல நிர்மாண வேலைகள் இப்பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2016 ஆண்டில் இப்பகுதியினால் செயற்படுத்தப்பட்ட நிர்மாணிப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளில் பின்வருவன உள்ளடங்குகின்றன.

**கொழும்பு துறைமுகத்தில் உள்ளகப் பாதைகளை விஸ்தரிக்கும் செயற்திட்டம்**

துறைமுக தெற்கு அபிவிருத்திப் பணிகள் முடிவடைந்தவுடன் துறைமுகத்துக்குள் ஏற்படும் பாதைகளின் எதிர்பார்க்கப்படும் நெரிசல்களுக்கு முகங் கொடுக்கும் வகையில் இங்குருக்கடை சந்தியில் இருந்து வாயில் இல - 01 வரை தற்போது 04 நிரல்களைக் கொண்ட பாதையை 06 நிரல்களைக் கொண்ட பாதையாக விஸ்தரிப்பது அவசியமென அறியப்பட்டுள்ளது. கோட்டைப் பிரதேசத்தில் தற்போது இருக்கும் 02 பாலங்களையும் மற்றும் புளுமெண்டல் பாதைக்கு மேலால் துறைமுக நுளைவாயிலில் உள்ள பாலத்தையும் விஸ்தீரணம் செய்யப்பட்டது.

பாதையை 06 நிரல்களாக விஸ்தரிப்பதற்காக தற்போது இருக்கின்ற கட்டிடங்கள், அலுவலகங்கள் வேலைத்தளங்கள் மற்றும் வசதிகள் ஆகியவற்றை உடைத்தகற்றி புதிதாக நிர்மாணிக்கப்பட வேண்டியுள்ளது. கட்டிடங்கள் உடைத்தகற்றப்படும் வேலைகள் முடிவடைந்த பிரதேசங்களில் பாதையின் நிர்மாண வேலைகள் கட்டம் கட்டமாக நடை பெற்று வருகின்றது.

**செய்திட்டத்தின் முன்னேற்றம்**

2016 வருடத்தினுள் உள்ளக பாதையை விஸ்தரிக்கும் நடவடிக்கை கட்டங்களாக நிறைவேற்றியதோடு, ரூபா 34.13 மில்லியனுக்கான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2016 திசெம்பர் மாதம் வரை செய்திட்டத்தின் மொத்த நிதிப் பெறுமானம் (ஹர்தால் பாலம் விஸ்தீரணம் உள்ளடங்கலாக) ரூபா 701.21 மில்லியன் ஆகும். அஸ்போல்ட் இடுதல், ஆரம்ப தார் படலம் இடுதல், ஆரம்ப அத்திவாரத்தை சரிசெய்தல், சேவைக் குழாய் மற்றும் இருக்கும் குழாய்களை வேறு பக்கத்துக்கு மாற்றுதல் என்ப உள்ளடங்கும்.

2016 ஆம் ஆண்டினுள் சேவைக் குழாய் அஸ்போல்ட் படலம் இடுதல் பாதைக் குறி இடுதல் உள்ளடங்கலாக பாதையை 1.4 கி.மீ இனால் நீட்டுவதற்கும், 1.2 கி.மி நீட்டம் கொண்ட பாதையின் முதலாவது தட்டு வரை அஸ்போல்ட் படலம் பதித்தல் முற்றாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. பாதையின் 1.2 கி.மி அளவிற்கான பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

**துறைமுக பிரவேசப் பாதையை விஸ்தரித்தல்**
**புளுமெண்டல் பாதைக்கு மேலால் அமைந்த தற்போதுள்ள பாலத்தை விஸ்தரித்தல்**

உள்ளக துறைமுக பதை விஸ்தீரணப்படுத்தும் செய்திட்டத்தின் ஒரு பகுதியாக புளுமெண்டல் பாதைக்கு மேலுள்ள பாலத்தை விஸ்தரிக்க வேண்டியுள்ளது.

நில மட்டத்தின் மேல் மற்றும் நில மட்டத்தின் கீழ் நிர்மாண வேலைகள் 50 மில்லியன் ரூபா மொத்த ஆகுசெலவிற்கு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு, செய்திட்டம் முடிவடைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் 8.05 மில்லியன் ரூபா ஆகுசெலவிற்கு பணிகளின் ஒரு பகுதி முடிக்கப்பட்டுள்ளது. 2016 திசெம்பர் மாதம் வரை செய்திட்டத்தின் மொத்த செலவு 32.37 மில்லியன் ரூபா ஆகும்.

**கொழும்பு துறைமுக முனையம்/ பாலங்கள் புனர் நிர்மாணம்**
**வழிகாட்டி மேடை மற்றும் பண்டாரநாயக்க துறைமேடைக்கு கல்பதித்து தாரிடுதல் பணி**

வழிகாட்டி மேடை மற்றும் பண்டாரநாயக்க துறைமேடை முழுவதும் விசாலமான குழிகள் காரணமாக கீழிறங்குவதனால் அது துறைமேடைகளில் இயக்க நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதோடு தற்போதுள்ள வழிகாட்டி மேடை மற்றும் பண்டாநாயக்க துறைமேடை மேற்பகுதியை தயாரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு அவசிமென்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

**ஜயகொள்கலன் நிலையத்தில் 3 ஆம் முனையம் புனரமைப்பு - R மற்றும் S பாதை நிரல்கள்**

கொள்கலன்களை அடுக்கி வைக்கும் பிரதேசங்கள் மற்றும் பாதைகளில் ஒரு சில இடங்கள் கீழிறங்கியிருப்பதனால் தற்போது கொள்கலன்கள் அடுக்கும் முனையம் உட்பட ஜய கொள்கலன் முனையம் 03 இல் உள்ள பாதையை புணர்நிர்மாணம் செய்யும் தேவை அறியப்பட்டுள்ளது. முனையத்தில் அன்றாடம் நடைபெறுகின்ற கொள்கலன் இயக்கச் செயற்பாட்டிற்கு தடங்கல் ஏற்படாத வகையில் புனர்நிர்மாண நடவடிக்கைகள் கட்டங்களாக நடைபெறுகின்றது.

**செயற்திட்ட முன்னேற்றம் தொடர்பான சுருக்கம்**

| வகை | **பணி/ விபரம்** | **முன்னேற்றம் செலவினம்** |
|---|---|---|
| 🗗 | வழிகாட்டி மேடையில் கல்பதித்து தார் இடும் வேலை | ரூபா 49.6 மில்லியன் மொத்த ஆகுசெலவிற்கு செய்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| 🗗 | பண்டாரநாயக்க துறை மேடையில் கல் பதித்து தார் இடுதல்- கட்டம் - I | ரூபா 24,73 மில்லியன் மொத்த ஆகுசெலவுக்கு செய்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| 🗗 | பண்டாரநாயக்க துறை மேடையில் கல் பதித்து தார் இடுதல் - கட்டம் -II | ஒப்பந்தம் வெற்றிகரமாக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டு செய்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 🗗 | ஜய கொள்கலன் முனையத்தில் R மற்றும் S பாதை நிரல்கள் புணர்நிர்மாணிப்பு | செய்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 38.04 மில்லியன் ஆகும். |
| 🗗 | ஜய கொள்கலன் முனையத்தின் M மற்றும் N பாதை நிரல்களில் புணர்நிர்மாண வேலைகள் | செய்திட்டம் பிற்போடப்பட்டுள்ளது. |
| 🗗 | விஜய குமார பாலத்தில் கல்பதித்தல் - கட்டம் I | ஒப்பந்தம் வெற்றிகரமாக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ளது. |

**ஒலுவில் கரையோரத்தின் மண் அரிப்பு தொடர்பிலான விரிவான ஆய்வுகள்**

ஒலுவில் துறைமுகத்திற்கு அப்பால் அமைந்துள்ள வடக்கு எல்லையில் தற்போது ஏற்பட்டு வரும் கரையோர பாதிப்புக்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. தெற்கு எல்லையில் தெற்கு அலைதாங்கி நெடுகே பாரியளவில் மணல் குவிதல், உட்பிரவேச கால்வாயினுள்ளும், சுற்றுப்புறங்களிலும் சேற்றுப்படிவு சேர்வது[ இதில் உள்ளடங்குகின்றது. இப்பணிகளின் ஆரம்பமாக ஒலுவில் கரையோரத்தின் மண் துணிக்கைகளின் நகர்வின் போக்கு மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய மாற்றங்களைத் தீர்மானிப்பதற்கும் இதற்கான தீர்வாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளைத் தயாரிப்பதற்கும் விரிவான பொறியியல் அய்வு மேற்கொள்ளப்படுவதற்காக முன்மொழியப்பட்டுள்ளது.

ஒலுவில் துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்திற்கு நிதியுதவி வழங்கும் முகவர் நிறுவனமான டென்மார்க் வெளிவிவகார அமைச்சு (DANIDA) மூலம் குறித்த ஆய்வுக்கு நிவாரண அடிப்படையில் நிதி உதவியை வழங்குவதற்கு உடன்பட்டுள்ளது.

வெற்றிகர ஆலோசகரான டென்மார்க்கின் வரையறுக்கப்பட்ட டெனிஷ் ஹய்ட்ரொலிக் நிறுவனத்துக்கு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாளரினால் ஒப்புதல் பத்திரம் (Letter Of Accetance) வழங்கியுள்ளதோடு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணிப்பாய்வு நடவடிக்கை, வேலைத்தப் பரிசீலனை மற்றும் மதிப்பீட்டு கூட்டமொன்று டெனிஸ் ஹய்ட்ரொலிக் நிறுவனம் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் நடாத்தி முடிவடைந்துள்ளது. இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**கொள்கலன் கப்பற்சரக்கு கையாளல் நிலையம் (CFS – I) களஞ்சியம் மீள நிர்மாணித்தல்**

2013 ஆம் ஆண்டு மே மாதம் தீப்பற்றியதன் காரணமாக அழிவேற்பட்ட CFS - I களஞ்சியம் மீளமைத்தல் நடவடிக்கைகள் 2016 சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

மொத்த செய்திட்டத்திற்குமான செயற்பாட்டு வரைவு மற்றும் கால அட்டவணை தயாரிக்கப்பட்டு குறப்பிட்ட பகுதிக்கான பணிகள் ஒப்படைக்கப்பட்டதுடன் 2016.08.01 ஆம் திகதிக்குள் களஞ்சியத்தின் ஆரம்பப் பகுதி நிர்மாணப் பணிகள் முடிவுற்று 2016.08.10 ஆம் திகதி சேவைகள் வழங்கல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. களஞ்சியத்தின் 2 ஆவது கட்ட பணிகள் 2017 சனவரி மாதத்தில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**தற்போதைய முன்னேற்றம் கீழ்வருமாறு**

- கட்டம் 1 இற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் கொண்ட 45X52.5 மீட்டர் அளவு கொண்ட களஞ்சியத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. 600 சதுர மீட்டர் அளவுடைய இரண்டு மாடி காரியாலய கட்டிடத் தொகுதியொன்றும் மற்றும் இருபக்கத்தினாலும் 2.5 மீட்டர் மேடையுடன் கொண்ட 1800 சதுர மீட்டர் அளவு கொண்ட களஞ்சியம் மற்றும சேவைகள் வழங்கல் பணிகளுக்காக மின்மாற்றிகளுடன் கூடியது சேவைகள் வழங்கும் பணி நடைபெறுகின்றது. பிரதான உருக்கு சட்டகம், கூரை மற்றும் களஞ்சியத்திற்குள்ளே உள்ள தகட்டினை திருத்துதல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- 90% வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**ஒலுவில் துறைமுக கரையோரப் பாதுகாப்பு பணி**

**கட்டம் -1 - 150 மீட்டர் தூரத்துக்கு பாதுகாப்பு மதில் அமைத்தல் (விடுமுறை விடுதி அமைந்துள்ள பிரதேசம்)**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் விடுமுறை விடுதி அமைந்துள்ள பிரதேசத்துக்கு தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக் கால எல்லையில் அரிப்பு மூலம் பாரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதோடு, நீர்த்தொட்டி, தடுப்புச் சுவர், கழிவுத்தொட்டி கழிவகற்றும் தொகுதி ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதோடு விடுதிக்கருகாமையில் அரிப்பேற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள்

- பாரிய கற்கள் மற்றும் சிறு கற் துண்டுகள் வழங்குதல்
- பூகோள பாதுகாப்பு கவசம் (Geo - textiles.) வழங்குதலும் பதித்தல்
- தடுப்புச் சுவர் அமைப்பதற்காக சிறு கல் துண்டுகள் மற்றும் பாரிய கற்கள் பதித்தல்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சொத்துக்களை பாதுகாப்பதற்காக துரிதமாக புணர்நிர்மாண பணிகள் மேற்கொள்வது அவசியம். அதற்கேற்ப ரூபா 4.3 மில்லியன் மொத்த ஆகுசெலவிற்கு 150 மீட்டர் தூரத்திற்கான தடுப்புச் சுவர் அமைத்தல் - கட்டம் -1 நிறைவு செய்யப்பட்டுள்ளது.

கட்டம் 11 - 150 மீட்டர் தூரத்துக்கு தடுப்புச் சுவர் அமைத்தல் (விடுமுறை விடுதியிலிருந்து அலுவலர்களின் விடுதி வரை)

செய்திட்டத்தின் கட்டம் 11 இல் 150 மீட்டருக்கு தடுப்புச் சுவர் அமைத்தல் 2016 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு 90% நிர்மாணப் பணிகள் முடிவடைந்துள்ளது.

விலைகோரல் ஆவணங்கள் மற்றும் பொருள் கணிப்பீட்டுப் பத்திரம் முடிவடைந்துள்ளது.

- உள்ளக துறைமுக பாதைகளை விஸ்தீரணம் செய்யும் செய்திட்டம்
- கொழும்பு துறைமுகத்தின் ஜய கொள்கலன் முனையம் (M மற்றும் N வழி நிரல்கள்) புணர் நிர்மாணம் செய்தல்
- கொழும்பு துறைமுகத்தின் CFS - 01 களஞ்சியத்தில் அத்திவாரத்தளத்தை மீளமைத்தல்/ வேலை
- கொழும்பு துறைமுகத்தில் பண்டாரநாயக்க துறை மேடையில் (கட்டம் 11) மற்றும் விஜய குமார துறைமேடை கட்டம் (1) புணர் நிர்மாணம் செய்தல்

**வடிவமைப்பு செயற்பாடுகள்**

கீழ்வரும் வடிவமைப்புகள் 2016 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- கொழும்பு துறைமுக உள்ளகப் பாதைகள் CH 1+260 முதல் CH 1+700 வரை விரிவாக்கம் செய்தல்
- உத்தேச விஜய குமார வழிகாட்டிப் பாலத்தில் கல்பதித்து தார் இடுதல்
- உத்தேச பண்டாரநாயக்க மேடையில் கல்பதித்து தார் இடுதல்.
- ஜய கொள்கலன் முனையத்தில் 111 வது முனையத்தில் M மற்றும் N பாதை நிரல்களுக்கு உத்தேசித்த புணர் நிர்மான வேலைகள்
- காரியாலய கட்டிடத்தொகுதி, தீயை தடுக்கும் மதில் (Fire Wall) மற்றும் மின்மாற்றி அறை மற்றும் அனைத்து சேவைகளும் அடங்கிய CFS 1 களஞ்சியம்
- CFS 1 இற்கு மேலால் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கி
- காலி துறைமுகத்துக்கு பாலத் தராசு (Weigh Bridge) ஒன்று அமைத்தல்
- நிதி அமைச்சின் மழை நீர் அகற்றும் தொகுதியை மீள் பரிசீலனை செய்தல்
- பண்டாரநாயக்க துறைமேடையில் உத்தேசிக்கப்பட்ட ஆபத்தான கப்பற் சரக்கு மீள் மீள் ஏற்றுமதிக்கான கட்டமைப்பு ரீதியான வரைபு திட்டத்தை தயாரித்தல்.
- ஜோன்கீல்ஸ் நிறுவனத்தின் பேகர் கால்வாய் தொடர்பாக உத்தேசிக்கப்பட்ட பல நோக்கிலான ஒன்றிணைந்த திட்டத்தின் மீள் பரிசீலனை முறையின் கூற்றுக்கள்
- CFS 1 களஞ்சியத்தின் மேடையை விஸ்தரித்தல் மற்றும் படிக்கட்டு ஒழுங்குபடுத்தல்
- தியத்மக கட்டிடத்தின் சரக்குக் கப்பல் திருத்தும் பிரிவின் கூரையை திருத்துவதற்கு கேள்விகோரல் அறிக்கையை தயாரித்தல்
- இலங்கை துறைமுக அதிகாரசபையின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக ஒலுவில் கரையோரப் பிரதேசத்தில் துரிதமான கரையோரப் பாதுகாப்புப் பணிகளுக்காக கட்டமைப்பு வரைவு தயாரித்தல்
- ஆலோசனைப் பணிகளை நடாத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பு ஒலுவில் கரையோரத்தில் மண் பரிசீலனை தொடர்பாக பரந்த ஆய்வொன்றுக்கு சர்வதேச ஆலோசகர்கள்.

## பொறியியல்

## மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழுள்ள சகல துறைமுகங்களினதும் மின்சாரம் மற்றும் தொடர்பாடல் பொறியியல் போன்ற துறைகளின் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்துதல் மற்றும் சகல பொறியியல் செய்திட்டங்களின் திட்டமிடுதல் முகாமைத்துவம், நடைமுறைப்படுத்தல் மற்றும் அனைத்து செய்திட்ட வசதிகளை பராமரித்தல் ஆகியன மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பகுதியின் பொறுப்பாகவுள்ளது

உலகில் ஏனைய சர்வதேச கேந்திர நிலையிலான துறைமுகங்களுக்கு சமனான முறையில் துறைமுக நடவடிக்கைகள் மற்றும் தொடர்புபடும் சேவைகளில் 95% நிறைவேற்றும் பணியில் மின்சாரம் மற்றும் தொடர்பாடல் துறைகளின் அனைத்து முக்கிய சேவைளையும் பேணிச் செல்வதில் பிரதான பொறியியலாளர் இருவர் மற்றும் பிரதி பிரதான பொறியியலாளர்கள் இருவரின் கீழ் தகைமைபெற்ற தொழில்சார் மின்சார /தொடர்பாடல் பொறியியலாளர்களைக் கொண்ட குழு 24 மணித்தியாலம் பூராகவும் சேவையில் ஈடுபட்டுள்ளது.

உத்தேசித்த கிழக்கு கொள்கலன் முனையத்தின் திட்டமிடுதல் மற்றும் நிர்மாணங்களுக்கு மின் பொறியியலாளர்கள் அவர்களின் அறிவு மற்றும் அனுபவம் ஆகியவற்றில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

**மின்வலு பொறியியல் துறையில் பின்வரும் நடத்தை உள்ளடங்கும்**

- இலங்கை மின்சார சபையிலிருந்து பெறப்படும் 11 கி.வோட் மின்சாரத்தை வினியோகித்தல், நிறுவப்பட்டுள்ள மொத்த கொள்ளளவு 18 மெகா வொட் ஆகும்.
- 11 கி.வொட் கொள்ளளவு கொண்ட உப நிலையங்களை நிறுவுதல், பணிகளை ஆரம்பித்தல், பராமரித்தல், தரத்தை உயர்த்துதல்.
- குறை விசை கொண்ட அனைத்து மின்சார நிறுவுதல்களின் மின்சார உதிரிகளினது பாதுகாப்பு மற்றும் பராமரிப்புகள்.
- சேறுவாரி மற்றும் இழுவைக் கலங்களினதும் ஏனைய மிதக்கும் கலங்களினதும் மின்சார உபகரணங்களின் பராமரிப்புகள்
- கொள்கலன் கையாளல் பாரம்தூக்கிகளினது (கப்பலிலிருந்து கரையில் பொருத்தப்பட்டுள்ள முனைய பாரம் தூக்கிகள்) மின்சார உபகரணங்களைப் பராமரித்தல்
- மொத்தத் தொகை கப்பற்சரக்குகளை கையாளும் பாரம்தூக்கிகளைப் பராமரித்தல்
- கொள்கலன் பாரம்தூக்கிகளினது மின்சார மோட்டார்கள் (AC மற்றும் DC) மற்றும் ஏனைய உபகரணங்களை திருத்துதல்.
- மொத்தக் கொள்ளளவு கி.வொட்.15.5 மின் உற்பத்தி உபகரணத்தை பராமரித்தல்
- 11 கி.வொட் கொண்ட நிலத்திற்குக் கீழான மின்சாரக் கம்பி வலையமைப்பை நிறுவுதல், பராமரிப்பு மற்றும் அதன் பிழைகளை சீர் செய்தல்.
- குளிரூட்டல் தொகுதியின் திட்டமிடுதல், நிறுவுதல், பராமரித்தல்

**இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல் துறையில் பின்வரும் நடவடிக்கைகள் உள்ளடங்கும்.**

- VHF வானொலி அலைவரிசை வலையமைப்பின் திட்டமிடல் மற்றும் பராமரிப்புகள் (கடல் அலைவரிசை)
- கொள்கலன் முனையத்தில் 2.4 கிகா வோட் WI-FI தரவு தொடர்பாடல் வலையமைப்பின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்
- கொள்கலன் முனையத்தில் வானொலி அலைவரிசைகளை அடையாளம் காணும் தொகுதியை (RFID) பராமரித்தல்.
- ஒளி நார் (optical fibre) வலையமைப்பு மற்றும் தரவு வலையமைப்பு செயற்பாட்டு நிலையத்தின் திட்டமிடல் மற்றும் பராமரிப்புகள்
- 2000 தொலைபேசி வழிகளைக் கொண்ட துறைமுக தொலைபேசி PBK தொகுதியின் திட்டமிடல் மற்றும் பராமரிப்புகள்
- ராடார், எதிரொலி மாணி (Echo Sounder) ,செய்மதியூடான தொடர்பாடல் சாதனம், இடம் காணும் திசை காட்டும் முறைமை (DGPS) அடிப்படையிலான அளவீட்டுத் தொகுதி உள்ளடங்கலான கப்பலோட்டத் தொகுதிகளின் பராமரிப்புகள்
- CCTV தொகுதிகளின் திட்டமிடல் மற்றும் பராமரிப்புகள்
- நடைமுறையில் இருக்கும் ஒளியியல் பைபர் வலையமைப்பை விரிவாக்கல்.
- அதியுயர் அலைவரிசை (VHF) கொண்ட டுப்லெக்ஸ் (Duplex) கண்காணிப்பு காணொளிக்கு இடமளிக்கப்படுவதற்காக குரல் தொடர்பாடல் வசதிகளை (Voice Communication) அதிகரித்தல்.

## கடலக பொறியியல் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து மிதக்கும் கலங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள், கடலக பொறியியல் பகுதியின் பிரதான பணிகளாக இருப்பதோடு இயக்கம் மற்றும் சிவில் பொறியியல், பராமரிப்பு கடலக மற்றும் பாதுகாப்பு பகுதிகளின் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு போதுமானளவு இழுவைக் கலங்கள் உள்ளதனை உறுதிப்படுத்துவதும் ஏனைய பொறுப்புக்களில் அடங்கும். வெளியில் பொருத்தப்படும் மோட்டர் இயந்திரங்களினது பராமரிப்பும் இதன் பொறுப்பாகும்.

கப்பற்சரக்கு கையாளல்களை மேற்கொள்வதற்கு இயக்கப் பகுதிக்கு உதவுவதும் இப்பிரிவின் போறுப்பாகும். இலங்கை துறைமுக அதிகாரசபையின் சமையலறையின் கேஸ் அடுப்புக்கள், சோறு சமைக்கும் அடுப்புக்கள், அலுமினிய சமையற் பாத்திரங்களையும் ஏனைய உபகரணங்களையும் பராமரித்தலும் இப்பிரிவின் பணிகளாகும்.
இலங்கை துறைமுக அதிகாரசபையின் சறுக்கு வழிகளின் பராமரிப்பு பணிகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. உருக்கு அமைவுகளினது பழுதுபார்ப்புப் பிரிவில் தேர்ச்சி பெற்ற ஊழியர்களின் குறைபாடு காரணமாக கடலகப் பகுதியினால் தமது அமைப்பு மற்றும் தண்டுப் பாகங்களின் பழுதுபார்ப்புப் பணிகளும் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

கடலகப் பகுதி இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் 2016 ஆண்டினுள் இப்பிரிவுகளினால் அடையப்பெற்ற வெற்றிகள் பின்வருமாறு

**கடலகப் பிரிவு I**
**மீளமைக்கும் பொறியியல் பிரிவு**

துறைமுகத்தின் அனைத்து நங்கூரமிடல் பணிகளிலான இழுவைக் கலங்கள், "மேக" தீயணைப்புக் கலத்தினதும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல சேறுவாரி கலங்களினதும் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு கடலக 01 பிரிவின் கீழுள்ள மீளமைக்கும் பொறியியல் பிரிவு பொறுப்பாகவுள்ளது. கொழும்பு துறைமுகத்தின் 05 நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள், திருகோணமலை துறைமுகத்தின் 02 நங்கூரமிடலின் கலங்கள், காலி, காங்கேசன்துறை ஹம்பாந்தோட்டை துறைமுகங்களில் தலா 01 நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள் சம்பந்தப்பட்ட இயக்கங்களுக்கான தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு இந்த மிதவைக் கலங்களுக்கான லொயிட் பதிவேடு வகையீட்டுச் சோதனை தேவைப்பாடுகளுக்கேற்ப இயந்திர உபகரணங்களின் பழுதுபார்ப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாண்டினுள் நீரின் கீழ் தோண்டும் "ஹங்ஸகாவா" மற்றும் க்ரெப் சேறு உறிஞ்சும் "தியகொவுலா" எனும் கலங்கள் இப்பிரிவினால் சிறந்த கையாளல் நிலையில் பேணிச் செல்லப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் பாதுகாப்பு, கடலகம் மற்றும் சிவில் பொறியியல் பகுதிகளினால் பயன்படுத்தப்படும் என்ஜின் வெளியே பொருத்தப்பட்ட அனைத்து படகுகளினதும் பழுதுபார்ப்பு மற்றும் அன்றாட பராமரிப்புப் பணிகளும் இப்பிரிவினால் நிறைவேற்றப்பட்டன.

வகைப்படுத்தும் குழுவின் உதவியோடு தடாக ஆய்வுக்குப் பதிலாக நீர் ஆய்வுகள் மற்றும் இழுவைக் கலங்கள் உலர் தடாகத்திற்கு எடுக்கப்படுவது உள்ளடங்கலான பிரதான பழுதுபார்ப்புப் பணிகளும் மற்றும் அவர்களின் இயந்திரங்களுக்கு தேவையான அனைத்து பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. "மேக" தீயணைக்கும் கலம் மிகவும் வெற்றிகரமாக பராமரிக்கப்பட்டு துறைமுகத்தினுள் மற்றும் வெளியில் ஏற்படக் கூடிய எந்தவொரு தீப்பிடிப்பு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்துவதற்கு 24 மணித்தியாலம் பூராகவும் தயார் நிலையில் வைக்கப்பட்டது.

**பொறியியல் துறைமுக கலம் பிரிவு**

வழிகாட்டி கலங்கள், நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள் மற்றும் ஏனைய பொதுவான தேவைப்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும் கலங்கள் போன்றவற்றின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புகள் இப்பிரிவின் பிரதான பொறுப்பாகும். இதுவரையிலான வகையீட்டுக் குழு குழுவின் தேவைப்பாடுகளை கடலகப் பிரிவினால் நிறைவேற்றக் கூடியதாகவும் இருந்தன.

**கடலகப் பிரிவு II**
**கப்பல் நிர்மாணப் பிரிவு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் மிதவைக் கலங்களினது சகல மரத்திலான மற்றும் பைபர் கிலாஸிலான பழுதுபார்த்தல்களுக்கு பிரதானமாக இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது. மேலும், இலங்கை துறைமுக அதிகாரபையின் நங்கூரத்தளங்கள் மற்றும் நீர்மூழ்கி படகுகளினது மரத்தினாலான மோதல் தடுப்புகளினதும் தண்டுப் பாகங்களினதும் பழுதுபார்ப்புகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. GRP படகுகளினது மரத்திலான தண்டுப்பகுதி கொண்ட சறுக்கு வழிக் கலங்ளிகனதும் பழுதுபார்ப்பு பணிகளையும் இப்பிரிவு மேற்கொண்டது. கடலகப் பகுதியினால் பயன்படுத்தப்படும் நங்கூரக் கலங்களின் மரத்திலான தளபாடங்களின் பழுதுபார்ப்புகள், அடைப்புப் பலகை (Paneling) வேலைகள், மோதல் தடுப்புகளின் பழுதுபார்ப்புப் பணிகளும் இப்பிரிவினால் நிறைவேற்றப்பட்டன.

ஆண்டினுள் 600 தொன் பாரத்தை தாங்கக் கூடிய சறுக்கு வழி மற்றும் ஏனைய வழிகளுக்கு எடுப்பதையும் சறுக்கு வழியில் இருந்து கலங்களை மீண்டும் கடலுக்கு விடுவிக்கும் பணிகளுக்கும் மேற்கொள்ளப்பட்டன. நங்கூரமிடல் கலங்கள் மற்றும் இழுவைக் கலங்களினது பிரதான பழுதுபார்ப்புப் பணிகள் ஆண்டு பூராகவும் மேற்கொள்ளப்பட்டன.

**கப்பற்சரக்கு கலம் பிரிவு**

இயக்க பகுதியினால் பயன்படுத்தப்படும் இழுத்துச் செல்லப்படும் கலங்கள், நங்கூரமிடலின் கலங்கள், தண்ணீர் வத்தைகள், தட்டு வத்தைகளினது பராமரிப்பு மற்றும் உருக்கு பழுதுபார்ப்புகள் மற்றும் அக்கலங்களின் துருப்படிவு நீக்கி துப்புரவு செய்து மை பூசுவதும் கப்பற்சரக்கு கலப்பிரிவின் பொறுப்பாகும். 2016 ஆம் ஆண்டின் கொள்கலன் கப்பல் சரக்கு கையாளல் நிலையத்தில் (CFS 01) பிரதானமாக மேற்கொள்ளப்பட்ட உருக்கு அமைவுகளினதும் துருப்படிவு நீக்கி மை பூசும் பணிகளுக்கு மேலதிகமாக மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் கலங்களின் கையாளல் தேவைப்பாடுகளை இப்பிரிவினால் பூர்த்தி செய்ய முடிந்துள்ளது.

இவ்வாண்டினுள் காலி, திருகோணமலை துறைமுகங்கள் மற்றும் ஏனைய வெளி தரப்பினர்களுக்கு மற்றும் இயக்கம், கப்பலோட்டம். பாதுகாப்பு, பொறியியல் பகுதிகளுக்கு தேவைப்படும் உருக்குக் கயிறு சிலிங்கைகள் (Steel Wire Rope Slings) சிலிங்கைகள், பல்வேறு அளவிலான திரைச்சீலைகள் , கென்வஸ் மூடு சீலைகள், டென்ட் சீலைகள் 150 பல்வேறு வகையிலானவை இப்பிரிவினால் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

இப்பிரிவினால் கொழும்பு துறைமுகத்தின் 06 சறுக்கு வழிகளின் பராமரிப்பு மற்றும் கலங்களின் பழுதுபார்ப்புப் பணிகள் (இலங்கை துறைமுக அதிகாரபையின் 07 கலங்கள் மற்றும் தனியார் துறையின் 03 கலங்கள்) மேற்கொள்ளப்பட்டன. போது 10 சறுக்கு வழிகளின் கையாளல்களும் மேற்கொள்ளப்பட்டன.

அரச சார்பற்ற வெளித்தரப்பினர்கள்/ வாடிக்கையாளர்களுக்கு சறுக்கு வழிகளை வாடகைக்கு வழங்கியும் உருக்கு கம்பிகளை பெற்றுக்கொடுத்ததன் மூலமும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு இப்பகுதியினால் 03 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டிக்கொடுக்கக்கூடியதாக இருந்தது.

**பேரே முனையம்**

இயக்கப் பகுதியினால் பயன்படுத்தப்படும் உருக்கு கப்பற்சரக்குகள் வத்தைகளின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புகள் இப்பிரிவின் பிரதான பொறுப்பாகும். துறைமுகத்தினுள் மேற்கொள்ளப்பட முடியாத ஏனைய அமைவுகளினது பழுதுபார்த்தல்களும் மண்ணை வழித்து நீக்கும் நடவடிக்கைகளை கையாள்வதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் காலி மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகங்களின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு புதிய நங்கூரமிடும் கலங்கள், வழிகாட்டிக் கலங்கள்,

பெறப்படும் செயற்பாடு நடைபெற்று வருகின்றது. ஏனைய அனைத்து பகுதினாலும் வேண்டப்பட்ட சேவைகள் கடலக பொறியியல் பகுதியினால் வெற்றிகரமாக பெற்றுக்கொடுக்கப்பட்டன. இப்பகுதியிலுள்ள வளங்கள் வரையறுக்கப்பட்டிருந்தாலும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மிதவைக் கலங்களின் தேவைப்பாடுகளை நிறைவேற்ற முடிந்ததோடு பகுதியின் அனைத்து பணியாளர்களினது மிகுந்த அர்ப்பணிப்பு வெற்றிகர ஆண்டாக மாற்றியதென நாம் நம்புகின்றோம்.

## இயந்திர உபகரண பொறியில் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கப்பற்சரக்குகளின் கையாளல்களுக்கு உபகரணங்களை முறையாக பராமரிப்பதும் அது தொடர்பாக திட்டமிடுவதும், கொள்கலன்களினதும் மரபுரீதியான கப்பற்சரக்குகளினதும் கையாளல்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் இந்த உபகரணங்களை பெற்றுக்கொடுப்பது இயந்திர உபகரணப் பொறியியல் பகுதியின் பிரதான பொறுப்பாகும்.

2016 ஆண்டில் உபகரணங்களின் திடீர் அல்லது எதிர்பாராத தடங்கல்களுக்கு ஈடுகொடுப்பதற்கான அவசர தீர்வு வழங்கும் திட்டமிடப்பட்ட சீர்செய்யும் பராமரிப்பு வேலைத்திட்டம் இப்பகுதியினால் நடைமுறைப்படுத்தப்பட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் கையாளல் உபகரணங்கள் வெற்றிகரமாக பேணிச்செல்லப்பட்டன. கப்பலிலிருந்து கரை வரையிலான கொள்கலன் பாரம்தூக்கிகள் (STS), பீலியின் மீது நகரும் கென்ட்ரி பாரம்தூக்கிகள் (RMG), இறப்பர் டயர் பொருத்தப்பட்ட பாரம்தூக்கிகள் (RTG) ,பிறைம்மூவர் வண்டிகள், முனைய ட்ரக் வண்டிகள், ஜய கொள்கலன் / ஐக்கிய கொள்கலன் முனையங்களின் சகல கொள்கலன் உபகரணங்களில் 90% மேற்பட்ட தொகை வழங்கப்படுவதற்காக பராமரித்துச் செல்லப்பட்டதனால் 2016 ஆம் ஆண்டில் கொள்கலன் கையாளல் செயற்பாட்டில் உயர் செயலாற்றுகை பெறப்பட்டுள்ளது.

இயக்கம் மற்றும் சேவைகள் வழங்கல் பகுதிகளில் கொள்கலன் உயரத்துக்கு உயர்த்தும் இயந்திரம் (Top Lifters), போர்க் லிப்ட் ட்ரக் வண்டிகள், டிரேலர் வண்டிகள் மற்றும் நடமாடும் பாரம் தூக்கி உட்பட அனைத்து உபகரணங்களும், சிவில் பொறியியல் பகுதியின் அனைத்து நிர்மான உபகரணங்களும் இயந்திரப் பொறியியல் பகுதியினால் வெற்றிகரமாக பாரமரித்து செல்லப்பட்டன. இயந்திரப் பகுதியின் பொறுப்புக்களினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வாகனத் தொகுதியின் (பேரூந்து, லொறி, வேன், டபள் கெப், மோட்டார் கார், முச்சக்கர வண்டிகள், மற்றும் மோட்டார் சைக்கிள்கள்) மற்றும் ஷங்டின் லொகேக் மோட்டிவ் என்ஜின்களைப் பராமரித்தலும் அடங்கும்.

இரண்டு இயக்குனர்களினால் குத்தகை தவணை அடிப்படையில் பாரமரித்து, கையாளல் மேற்கொள்ளப்படுகின்ற “சமர்ஹில்” பகுதியில் அமைந்துள்ள எண்ணெய்க் களஞ்சியத்தொகுதியும் இயந்திரப் உபகரண மேற்பார்வையில் வெற்றிகரமாக பராமரித்துச் செல்லப்பட்டது. 2016 ஆண்டினுள் உயரத்தில் குறைந்த டரேலர் வண்டியொன்று (Low bad trailer) இப்பகுதியினால் உருவாக்கப்பட்டதோடு , இதன் மூலம் சுமார் 03 மில்லியன் ரூபா இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு மீதப்படுத்த முடிந்தது.

## இயந்திர உபகரண வேலை பொறியியல் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து உருக்குப் பாகங்களின் பொருத்தும் பணிகளுக்கு இயந்திர உபகரண வேலை பொறியியல் பகுதி பொறுப்பாகவுள்ளது. ஜய கொள்கலன் மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்களில் கொள்கலன்களைக் கையாளும் பாரம்தூக்கிகள், கொள்கலன்களைக் கொண்டு செல்லும் சிறிய ட்ரேலர்களுக்குரிய சகல அடிச்சட்டப் பாகங்களினதும் பழுதுபார்ப்புகள், நங்கூர பணிகளிலான கலங்கள், வழிகாட்டி, சேறுவாரி மற்றும் இழுவைக் கலங்களுக்குரிய அனைத்து உருக்கு சார்ந்த பழுதுபார்ப்புப் பணிகள், இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஏனைய உருக்கு அமைவுகளினதும் பழுதுபார்ப்பு பணிகளின் முக்கிய செயற்பாட்டுப் பகுதியாக இது விளங்குகின்றது. கடலகக் கலங்கள் மற்றும் கப்பல் சரக்குகளைக் கையாளும் உபகரணங்களுக்கு தேவையான புதிய உதிரிப்பாகங்களை இயந்திர ரீதியாக உற்பத்தி செய்வதிலும் சீர்படுத்தும் பணியிலும் இப்பகுதி ஈடுபட்டுள்ளது. மேலும் சங்கிலிகள் மற்றும் கொழுக்கிகளின் பரீட்சிப்புகள், கையாளல் தேவைப்பாடுகளுக்காக க்ரெப் போன்ற உபகரணங்களினது பராமரிப்புகள் தொடர்பிலும் இப்பகுதி பொறுப்பாக இருக்கின்றது. கொழும்பு எண்ணெய்க் களஞ்சியத் தொகுதியின் அபிவிருத்தித் திட்டமும் இப்பிரிவின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**இவ்வாண்டினுள் இப்பகுதியினால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டன.**

- கிழக்கு கொள்கலன் முனையத்தின் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களுக்கான மின்சார வினியோகத்திற்கென நிர்மாணிக்கப்பட்ட உருக்கு அமைவுகளின் பணிகளில் (90% முடிவடைந்துள்ளன.) உட்புகு மற்றும் வெளியேறும் வாயில்கள் (25% முடிவடைந்துள்ளது.) எண்ணெய் நிரப்பும் நிலையம், எண்ணெய் தாங்கிகள் பொருத்துதல், குழாய் மார்க்கங்கள் (40% முடிவடைந்துள்ளது.)
- CFS I களஞ்சியத்தின் முதல் பகுதி உருக்கு கட்டமைப்பு, கூரை மற்றும் பக்க மறைப்பு (Cladding) முடிவுறுத்தல் மற்றும் இரண்டாவது பாதியின் மேல் குறிப்பிடப்பட்ட பணியின் 90% முடிவடைந்துள்ளது.
- மஹசென், மேக, ஐராவண ஆகிய இழுவைக் கலங்களில் ஹங்சகாவா சேறு தோண்டும் கலத்தின் தண்டுப் பகுதி மற்றும் அமைப்பு ரீதியான திருத்தும் பணிகள் மேற்கொள்ளல்.
- J-17 மற்றும் J-18, கென்ட்றி பாரம் தூக்கியின் ட்றொலி பீலிப் பாதைக்கும் பதிலாக வேறு பீலிப் பதை பொருத்துதல், திருத்தும் வேலைகள் 5 தினங்களுக்குள் மேற்கொள்ளப்பட்டன.
- ஜய கொள்கலன் முனையத்தில் J-03, J-06, மற்றும் J-10 கென்ட்றி பாரம்தூக்கிகளில் உருக்கிலான பகுதிகளை திருத்துதல்
- J-02, J-04, J-11, J-10 மற்றும் J-13. கென்ட்றி பாரம் தூக்கிகளில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு மேலதிகமாக பிரதான உருக்கிலான பாகங்களின் 30 க்கு மேற்பட்ட பழுதுபார்ப்புகள், இயந்திரங்களினால் உற்பத்தி செய்யப்படும் 06 க்கு மேற்பட்ட வேலைகள், 100 க்கு மேற்பட்ட பிரதான பொருத்தும் பணிகள், பல்வேறு வகையிலான உபகரணங்களுடன் தொடர்புபட்ட 2000 க்கும் மேற்பட்ட இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளுக்கான பணிகள் இயந்திர உபகரண வேலை பகுதியின் 07 வேலைத்தளங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

## மனிதவள அபிவிருத்தி

## மனிதவள பகுதி

நிறுவனம் காண்பித்திருக்கும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேர்ச்சிகள் நிறைந்த தகுதிகளைக் கொண்டுள்ள நபர்களை இனம் காணும் பதவிகளுக்கு கவர்ந்து ஆட்சேர்த்துக் கொள்வதில் மனிதவள பகுதி மிகவும் முக்கிய பணியை ஆற்றுகின்றது. பொருத்தமான பதவிகளுக்கு பொருத்தமான நபர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் அவர்களை நிறுவனத்தில் தக்க வைத்துக்கொள்வதற்கு மனிதவள நடவடிக்கைகளை மிகவும் சிறப்பான நிலையில் பேணிச் செல்வது மிகவும் முக்கியமானதாகும்.

2016 ஆண்டு ஆரம்பத்தில் நிறைவேற்று, நிறைவேற்று அல்லாத, தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத தரங்கள் உள்ளடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையில் இருந்த மொத்த ஆளணித் தொகை 9550 ஆகும். 2016.12.31 வரை மொத்த ஊழியர்களின் தொகை 9,642 ஆகும். இதில் கொழும்பு துறைமுகத்தின் மொத்த ஊழியர்த் தொகை 8,892 ஆகும். காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களின் ஊழியர்களின் எண்ணிக்கை முறையே 348 மற்றும் 402 ஆகும்.

**2016 ஆண்டின் வெளிவாரி ஆட்சேர்ப்பு மற்றும் உள்ளக பதவியுயர்வுகள் தொடர்பான விபரங்கள்**

மனிதவள திட்டத்துக்கு ஏற்ப மற்றும் அங்கீகார ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க மீது அநேகமான வெற்றிடங்கள் நிறுவனத்தினுள் தகைமைகளைக் கொண்ட அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு நிரப்பப்பட்டன. ஆயினும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் நிறுவனத்தினுள் இல்லாத சந்தர்ப்பங்களில் வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

2016 ஆண்டினுள் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 521 ஊழியர்கள் வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். பின்வரும் அட்டவணையில் இது விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

| ஊழியர் வகுதி | நிரந்தர | ஒப்பந்தம் | மொத்தம் |
|---|---|---|---|
| நிறைவேற்று | 16 | 5 | 21 |
| நிறைவேற்று அல்லாத | 254 | 0 | 254 |
| தொழில்நுட்பம் அல்லாத | 246 | 0 | 246 |
| மொத்தம் | **516** | **5** | **521** |

மேலும் தொழில்நுட்பம் அல்லாத தரத்தின் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் வழிகாட்டல்களுக்கேற்ப ஊழியர்களின் செயலாற்றுகை, வரவு மற்றும் நடத்தை ஆகியவை அடிப்படையாகக் கொள்ளப்பட்டு அவர்களின் அடுத்த சம்பளத் திட்டத்தில் வைக்கப்பட்டனர்.

**சேவையிலிருந்து வெளியேறல்**

2016 ஆண்டில் சேவையை விட்டு வெளியேறிய 430 பேரின் விபரம் பின்வருமாறு

| வெளியேறியமைக்கான காரணம் | ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஓய்வு பெறுதல் | 331 |
| மரணம் | 29 |
| சேவையிலிருந்து நீக்குதல் | 03 |
| கேட்டு விலகல் | 09 |
| சேவையை விட்டு செல்லல் | 14 |
| வைத்திய காரணங்கள் மீதான ஓய்வு பெறுதல் | 01 |
| சேவையை முடிவுறுத்தல் | 16 |
| ஒப்பந்த அடிப்படையிலிருந்து நிரந்தர நியமனம் பெறும் வரை | 27 |
| **மொத்தம்** | **430** |

**திடீர் விபத்துக்கள் மற்றும் நட்டஈடு வழங்கல்**

மீளாய்வாண்டினுள் ஏற்பட்ட திடீர் விபத்துக்களின் மொத்த எண்ணிக்கை 67 ஆகும். இதில் இரண்டு (02) ஊழியர்கள் மரணமடைந்துள்ளனர். 2016 ஆண்டில் கோர திடீர் விபத்துக்களுக்காக செலுத்தப்பட வேண்டியிருந்த ஊழியர் நட்டஈட்டுத் தொகை ரூபா 1,100,000/= ஆகும்.

**பணிக்கொடை வழங்கல்**

இயற்கை காரணங்கள் மீது மரணித்த ஊழியர்களின் தங்கி வாழ்வோர்களுக்கான கொடுப்பனவாக ரூபா. 491,006/= செலுத்தப்பட்டுள்ளதோடு 2016 ஆம் ஆண்டிற்காக மேலும் ரூபா. 131,000/= செலுத்தப்படவுள்ளது.

**அறிவுறுத்துல் மற்றும் ஊக்கப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் எதிர்கால சவால்கள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கான அறிவுறுத்தல் மற்றும் ஊக்கப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் 11 மஹபொல பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டன. நிறுவனத்தின் நோக்கங்கள் அடையப்படுதலில்

ஊழியர்களினது ஊக்கம் மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிக்கச் செய்வது குறித்த நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படை நோக்கமாகும்.

**தங்கக் காசுகள் வழங்குதல்**

மீளாய்வாண்டினுள் 281 ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு அவர்களின் சேவைக் காலங்களை அடிப்படையாகக் கொண்டு தங்கக் காசுகள் வழங்கப்பட்டன.

| நிறை | காசுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 01 பவுன் | 91 |
| 01 ¼ பவுன் | 161 |
| 01 ½ பவுன் | 29 |

**ஏனைய பகுதிகளுக்கு இடமாற்றம் செய்தலும் ஏனைய மனக்குறைகளும்**

2016 ஆண்டினுள் இடமாற்றம் மற்றும் மனக்குறைகள் பற்றியதான குழு மூன்று தடவைகள் ஒன்றுகூடி ஊழியர்களின் வேண்டுகோள் மற்றும் விபரங்கள் அடிப்படையில் இடமாற்றங்கள் செய்யப்படுவதற்கும் மனக்குறைகள் தீர்க்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**ஒழுக்காற்று நடவடிக்கைகள்**

ஒழுக்கம் மிகுந்த ஊழியர்களை பேணிச் செல்லும் நோக்கில் 2016 ஆண்டினுள் மனிதவள பகுதியால் 131 ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்டுள்ளன.

## நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கு சிறந்த வாழ்க்கை தரத்தை பெற்றுக்கொடுப்பதற்காக தேவைப்படும் வசதிகள் மற்றும் சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்தில் நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுப் பகுதி செயல்படுகின்றது.

**பகுதியின் நிர்வாகம்**

நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுப் பகுதி இரு பிரிவுகளாக செயல்படுகின்றது.

- பிரதான அலுவலகம்
- மத்திய சமையலறைப் பரிவு

நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுப் பகுதியினால் செயற்படுத்தப்படும் நலன்புரி திட்டங்கள் பின்வருமாறு

**பணியாளர்களுக்கான இலவச உணவு வழங்கல்**

துறைமுக அதிகாரசபையில் முறைமாற்று அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு பகல்/ இரவு உணவு, வழங்கல் போன்று தேனீர் மற்றும் தீன் பண்டங்களும் வழங்கப்படுவதுடன் அலுவலக தரத்திலான ஊழியர்களுக்கு பகல் உணவும் வழங்கப்படுகின்றன. இதற்காக 2016 ஆம் ஆண்டில் 607,070,683/= ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. உணவு பெற்றுக்கொள்ளாத ஊழியர்களுக்கு அதற்காக ஒரு உணவு வேளைக்கு ரூபா 100/= வழங்கப்படுகின்றது.

**ஊழியர்களுக்கான சுகாதார காப்புறுதித் திட்டம்**

இது தொடர்பாக காப்புறுதி வருடத்தின் செல்லுபடியாகும் கால எல்லை ஒவ்வொரு வருடத்திலும் செப்டம்பர் 01 ஆந் திகதி முதல் அடுத்த வருடத்தில் ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலாகும். இக்காப்புறுதி திட்டம் 2016 ஆம் ஆண்டு முதல் MBSL நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்டது. 2015/2016 ஆண்டின் காப்புறுதி கால எல்லை 2016 ஆகஸ்ட் மாதம் முடிவடைந்ததுடன் 2016/2017 ஆண்டிற்கான காப்புறுதி திட்டமும் MBSL நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படுகின்றது.

**புலமைப் பரிசில் திட்டம்**

துறைமுக அதிகாரசபை ஊழியர்களின் பிள்ளைகளுக்கு க.பொ.த (உ/த) மற்றும் பல்கலைக்கழக கல்வியை தொடர்வதற்கான இரண்டு புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இதன்படி க.பொ.த (உ/தரம்) கற்பதற்காக மாதமொன்றுக்கு தலா ரூபா 750/= வீதம் 24 மாதங்களுக்கு வழங்கப்படுகின்றது. இத்தொகை இலங்கை துறைமுக அதிகாரசபையினால் வருடமொன்றிற்கு ரூபா 9000/= வீதம் இரண்டு (02) வருட காலத்துக்குப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இதன்படி 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் டிசம்பர் மாதம் நடாத்தப்பட்ட கா.பொ.த சாதரண தர பெறுபேறுகளின் அடிப்டையில் மாணவ / மாணவிகள் 518 பேருக்கு வழங்கப்பட்ட தொகை ரூபா 4,662,000/= ஆகும்.

பல்கலைகழக கல்வியை தொடரும் இலங்கை துறைமுக அதிகாரசபைகள் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு மஹபொல புலமைப்பரிசில் அல்லது பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் பெறாமையின் அடிப்படையில் இப்புலமைப்பரிசில் உரித்துடையதாகும். வருடத்திற்கு 10 மாதங்கள் என்ற அடிப்படையில் மூன்று வருடம் தொடக்கம் ஐந்து வருடம் வரையான காலத்துக்கு புலமைப் பரிசில் வழங்குவதோடு அது கற்கும் பாடநெறியின் கால எல்லைக்கு ஏற்ப வழங்கும் காலம் தீர்மானிக்கப்படும். 3 வருட பட்டதாரி பாட நெறியொன்றுக்கு வருடாந்தம் 25000/=ரூபா வழங்குவதோடு, அதேபோன்று 4 -5 வருட கால எல்லையில் முழுநேர பட்டதாரி பாடநெறியொன்றிற்கு வருடத்திற்கு 25,000/= வழங்கப்படும் அதற்கேற்ப 3 வருட பட்டதாரி பாடநெறியொன்றிற்கு 75,000/= உம் 4 வருட பாடநெறியொன்றுக்கு, 100,000/= உம் 5 வருட மருத்துவ பட்ட பாடநெறிக்கு 125,000/= ரூபாவும் வருடாந்தம் 25,000/= ரூபா வீதம் வழங்கப்படும்.

அதற்கேற்ப, 2010/11, 2011/12, 2012/13, 2013/14 கல்வி ஆண்டுகளுக்காக 271 மாணவர்களுக்கு நிதயுதவி வழங்கப்பட்டுள்ளது. 2014/2015 கல்வியாண்டிற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 84 விண்ணப்பதாரிகளுக்கு புலமைப்பரிசில் உரித்தாகும்.

**ஆயுள்வேத மருத்துவ நிலையம்**

ஆயுள்வேத மருத்துவ நிலையம் 2016 சனவரி 08 ஆம் திகதி மீளஸ்தாபிக்கப்பட்டது இம் மருத்துவ நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை 1,142 ஆகும். ஆயுள்வேத மருத்துவ சிகிச்சைக்கு மேலதிகமாக அகுபன்சர் ஊசிமுறை சிகிச்சையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம். 2016 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவாக 40 இலட்சம் ரூபா வும் , மீண்டுவரும் செலவினமாக 2,351,313/= ரூபாவும் ஆயுள்வேத மருத்துவ நிலையத்துக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

**நலன்புரி வீட்டுக் கடன் திட்டம்**

துறைமுக அதிகாரசபையின் நிரந்தர ஊழியர்களுக்கு வீடொன்றை அமைப்பதற்கு, புதிதாக ஒரு பகுதியை சேர்ப்பதற்கு அல்லது வீடொன்றை அமைப்பதற்காக காணியொன்றை கொள்வனவு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக துறைமுக அதிகாரசபையின் நிரந்தர ஊழியர்களுக்கு ஆகக் கூடிய தொகையாக ஐந்து இலட்சம் ரூபா வரையிலான கடன் பெற்றுக்கொள்ளும் திட்டம் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் ஒத்துழைப்போடு செயற்படுத்தப்படுகின்றது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்காக வருடாந்தம் 50. மில்லியன் ரூபா ஒதுக்கப்படுகின்றது. இதற்காக 6% சலுகை வட்டி விகிதம் அறவிடப்படும் 2016 ஆண்டு இதற்காக 06 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதோடு ரூபா 3,000,000/= நிதி இந்த வேலைத்திட்டத்திற்காக வங்கிக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

**நலன்புரி சேவைகள்தொடர்பாக பஸ் வண்டியை பெற்றுக்கொடுத்தல்**

அதிகாரசபையின் ஊழியர்களுக்கும் அவர்களினது குடும்ப உறவினர்களுக்கும் மரணச் சடங்குகள், மதவழிபாட்டு யாத்திரை, சுற்றுலா பயணங்களுக்கு சலுகை கட்டணத்தில் ஆறு பஸ் வண்டிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. உள்ளக போக்குவரத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை 03 ஆகும். கடந்த வருடத்தில் பஸ் வண்டிகளை ஈடுபடுத்திய பிரயாணங்களின் எண்ணிக்கை 980 ஆகும்.

**பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையம்**

வயது 2 ½ வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையிலான பிள்ளைகள் இதன் மூலம் பராமரிக்கப்படுகின்றார்கள் பிள்ளைகள் சேர்த்துக் கொள்ளப்படுவது சனவரி முதல் செப்டெம்பர் 30 வரை இடம் பெறும். அதற்காக ஒரு பிள்ளைக்கு ரூபா 1300/= கட்டணமொன்று அறவிடப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டு சனவரி முதல் திசெம்பர் வரை மாதாந்தக் கட்டணமாக பெறப்பட்டுள்ள தொகை ரூபா, 767,000/= ஆகும்.

**நூலக வசதிகளை வழங்குதல்**

துறைமுக அதிகாரசபையினது ஊழியர்களின் வாசிப்பு பழக்கத்தினை அதிகரிப்பது மற்றும் அதன் மூலம் அறிவை விருத்தி செய்தல் மற்றும் ஆற்றலை அதிகரிக்கும் நோக்குடனும் ஊழியர்களினால் நடாத்தப்படுகின்ற நூலகங்களுக்கு நிதி ஒதுக்கீடு பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில் இதற்காக 200,000/= ரூபா தொகை அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அது செயற்பாட்டிலுள்ள 17 நூலகங்களுக்கு அங்கத்தவர்களின் பெறுமானத்திற்கேற்ப பிரித்து வழங்கப்பட்டது.

**விசேட விடுமுறை உரித்துக்களுக்கான கொடுப்பனவை செலுத்தல்**

சுகயீன நிலைமை அல்லது திடீர் விபத்து நிலைமையில் தமக்குரிய அனைத்து விடுமுறைகளும் முடிவடைந்துள்ள சந்தர்ப்பத்தில் மீண்டும் சேவைக்கு தகுதியான நிலைமைக்கு வரும் வரை மருத்துவ ஆலோசனையின் பேரில் ஆகக் கூடியதாக 180 நாட்கள் வரை சம்பளத்துடனான விடுமுறை அனுமதிக்கப்படுகின்றது. பிரதான வைத்திய அதிகாரியின் சிபாரிசுக்கமைய சம்பளத்துடன் கூடிய அல்லது சம்பளமற்ற இந்த விடுமுறை பெற்றுக்கொடுப்பது நிவாரணம் ஒன்றாக இடம்பெறுகின்றது. 2016 ஆண்டில் சனவரி முதல் டிசம்பர் வரை 103 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதோடு, அதில் சம்பளமற்ற விடுமுறை 57 தினங்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை 4,227 தினங்களுக்கும் அனுமதியை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கடலக நூதனசாலை**

கடலக நூதனசாலை வார நாட்கள் ஞாயிறு மற்றும் போயா தினங்களில் மு.ப 8.00 மணிக்கு / பி.ப 5 மணி வரை திறந்திருக்கும். 2016 ஆம் ஆண்டில் நூதனசாலையை பார்வையிடுவதற்காக வந்தவர்களின் எண்ணிக்கை 55,876 ஆகும்.

துறைமுகம் மற்றும் கப்பல் துறையின் வரலாற்றுக் காலங்களை சித்தரிக்கும் உருவ காட்சிப் பலகைகள் போன்று பழைய துறைமுக சூழலினுள் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கடலக துறை தொடர்பான சரித்திர முக்கியத்துவமிக்க பலவிதமான மற்றும் துறைமுகத்தில் பாவிக்கப்பட்ட புரதான உபகரணங்களை இங்கு பார்வையிட முடியும்.

இந்நூதனசாலையில் கல்விசார் பெறுமதி மிக்கது என்பதனால் சில நேரங்களில் நீண்ட தூர இடங்களிலிருந்தும் பாடசாலை மாணவ மாணவிகள் இதனை பார்வையிடுவதற்கு வருகை தருகின்றனர். சிறுவர்கள் மற்றும் முதியோர் இல்லங்களிலிருந்து முதியோரும் இதனை பார்வையிட வருகின்றனர்.

**ஊழியர்களுக்கான வெகுமதி வழங்கல்**

30 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த அனைத்து ஊழியர்களுக்கும் பெறுமதி மிக்க வெகுமதிகள் வழங்கப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டிலிருந்து வெகுமதிகள் வழங்கும் முறை முற்றாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் அதன்படி 30 வருடங்கள் சேவைக் காலத்தை நிறைவு செய்த ஊழியர்களுக்காக வெகுமதி நினைவுச் சின்னம் பெற்றுக் கொடுப்பது

மனித வளப் பகுதியினால் வழங்கப்படுகின்ற தகவல்களுக்கு ஏற்ப தொடர்பாக நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதியின் பொறுப்பாகும். அதற்கேற்ப 2016 ஆண்டில் வெகுமதி வழங்குவது தொடர்பாக ஊழியர்கள் 656 பேர் தகுதி பெற்றனர்.

**நலன்புரி உணவகங்கள்**

அதிகாரசபையின் வளவினுள் அதிகாரசபையின் ஊழியர்கள் மற்றும் பல்வேறு சேவைகளை பெறுவதற்காக துறைமுகத்திற்கு வருகை தருவோரின் வசதி கருதி 14 உணவகங்கள் நடாத்திச் செல்லப்படுவதோடு, வருடாந்த விலைகோரல்கள் மேற்கொள்ளப்பட்டு குத்தகையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் மூலம் உணவகங்கள் நடாத்திச் செல்லப்படுகின்றன. 2016 ஆண்டில் நலன்புரி உணவகங்களினால் 6,751,986.26/= ரூபா வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

## மருத்துவப் பகுதி

மருத்துவப் பகுதி வாரத்தில் 07 நாட்களிலும் 24 மணித்தியாலங்கள் பூராகவும் சேவைகளை வழங்குகின்றது.

மருத்துவர்கள் 06 பேர் , பல் வைத்தியரொருவர் மற்றும் துணை மருத்துவ பணியாளர் குழுவொன்றினால் வெளிநோயாளர் பிரிவு சேவைகளுக்கு உதவி வழங்குவதோடு, வெளிநோயாளர் சிகிச்சை, பல் சிகிச்சை நிலையம், எக்ஸ் கதிர் மற்றும ஈ.சீ.ஜீ வசதிகள், பரிசோதனை கூடம் மற்றும் 24 மணித்தியாலங்கள் பூராகவும் செயல்படும் (ஒசுசல) மருந்தகம், டிஸ்பென்ஷரி மற்றும் நோயாளர் காவு வண்டி சேவையொன்றும் மருத்துவப் பகுதி வசம் உள்ளன. திடீர் விபத்துக்களுக்கான சேவைகளும் துரிதமாக வழங்கப்படுகின்றது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் பகுதி வரியாக டெங்கு ஒழிப்பு குழுவின் அங்கத்தவரொருவர் மற்றும் பகுதித் தலைவர்களின் கண்காணிப்பின் கீழ் ஒவ்வொரு பகுதிக்கும் தொடர்புடைய டெங்கு கட்டுப்பாட்டுக் குழுவினால் வாரம்தோரும் துறைமுக வளவுக்குள் டெங்கு நுழம்பு பரவும் பிரதேசங்களை பரீட்சிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பகுதியினாலும் மாதாந்த அறிக்கையொன்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரின் செயலாளருக்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவரூடாக அனுப்பப்படுகின்றது.

ஏற்படுகின்ற சிக்கல்கள் பற்றி கலந்துரையாடுவதற்கு மற்றும் அதற்காக சரியான செயற்பாடுகளை எடுப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை டெங்கு ஒழுப்பு குழு மாதாந்த கூட்டங்களை நடாத்துகிறது.

வாழ்க்கை (பாங்கு) முறை காரணமாக ஏற்படும் நோயின் தன்மைகள் விசேடமாக நீரிழிவு நோய் தடுப்பு தொடர்பில் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள், பகுதிகள் மற்றும் பிரிவுகள் மட்டத்தில் நடாத்தப்பட்டன.

வைத்திய பகுதியின் வழங்கள் பாவனை மிகவும் உயர் நிலையில் இடம்பெற்றுது.

## மஹபொல பயிற்சி நிலையம்

மஹபொல பயிற்சி நிலையம் துறைமுக ஊழியர்கள், துறைமுக பாவனையாளர்கள், கடலகத் துறையுடன் தொடர்புபட்டுள்ளவர்களுக்கு பயிற்சிகளுக்கான சந்தர்ப்பங்கள் வழங்குவதனை அதன் நோக்காகக் கொண்டு செயற்படுகின்றது. குறித்த ஊழியர் குழுக்களினது அறிவு, தேர்ச்சி மற்றும்

உளப்பாங்கு விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட விரிவுரைகள், மாநாடுகள், பயிற்சிப் பட்டறைகள், செயன்முறை நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட்டு வருடாந்த பயிற்றுவிப்பு நாட்காட்டிற்கேற்ப நிகழ்ச்சித் திட்டங்கள் இந்த நிலையத்தினால் நடாத்தப்பட்டன. துறைமுக ஊழியர்களின் உற்பத்தித்திறன் வளர்ச்சி, குழு உணர்வு மேம்பாடு, தொழில்நுட்ப தேர்ச்சிகளை விருத்தி செய்தல், வாடிக்கையாளர்களின் சேவை மற்றும் தர மேம்பாடு போன்றவற்றை நோக்கமாக கொண்ட பல பயிற்சி கருத்தரங்குகளும் 2016 ஆண்டில் நடாத்தப்பட்டன.

பாவனையாளர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளப்படுகின்ற சான்றிதழ் பாடநெறிகள் ஊடாக துறைமுக ஊழியர்களுக்கு அவர்களின் திறன் மட்டங்களை உயர்த்துவதற்கும் துறைமுக இயக்கங்களுக்குரிய அவர்களின் தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கும் மஹபொல பயிற்சி நிலையம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் மஹபொல பயிற்சி நிலையத்தினால் 566,084 மனித மணித்தியாலங்கள் பயன்படுத்தப்படுதலின் ஊடாக சுமார் 5,205 பேர் (தொழிலில் ஈடுபட்டிருக்காத) பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இதற்குப் புறம்பாக பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வோர், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஏனைய தொழில் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த 156 பேருக்கும் மஹபொல பயிற்சி நிலையத்தினால் (தொழிலில் ஈடுபட்டிருக்கையில்) பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

**2016 ஆண்டின் மொத்த பயிற்சியளிப்பு எண்ணிக்கை**

| துறைகள் | பயிற்றுவிக்கப்பட்டோரின் எண்ணிக்கை | மொத்த மனித மணித்தியாலங்கள் |
|---|---:|---:|
| உபகரணங்களை கையாளுதல் | 1,191 | 13,591 |
| கப்பற் சரக்குகளை கையாளுதல் | 48 | 1,152 |
| முகாமைத்துவம் | 2,271 | 378,114 |
| தகவல் முறைமை | 487 | 52,430 |
| தொழில்நுட்பம் (மின்சாரம்/கைத்தொழில் வேலைத்தளங்கள்) | 491 | 35,213 |
| தீயணைப்பு, பாதுகாப்பு மற்றும் தொழில்சார் சுகாதாரம் | 717 | 30,956 |
| கடலகம் மற்றும் மாலுமி | 1,006 | 54,628 |
| தேசிய கைத்தொழில் பயிற்சி, அதிகாரசபையின் பயிலுனர்கள், தொழிற் பயிற்சி அதிகாரசபை மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகள் | 104 | 174,580 |
| பல்கலைக்கழக பட்டப் படிப்பு மேற்கொள்பவர்கள் | 52 | 88,900 |
| மொத்தம் (சேவை நிலைய பயிற்சி அற்ற) | **5,205** | **566,084** |
| மொத்தம் (சேவை நிலைய பயிற்சியுடன்) | **7,128** | **829,564** |

**புதிய நடைமுறையின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பதவியுயர்வுகளுக்கான தகைமைகளை பெற்றுக் கொடுத்தல்**

உரிய கல்வித் தகைமைகள் இல்லாதிருப்பதன் காரணமாக அநேகமான துறைமுக ஊழியர்கள் பதவியுயர்வுகள் பெற முடியாமல் ஒரே பதவியில் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமையை தவிர்த்து இலங்கை துறைமுக அதிகாரசபைக்கேற்றவாறு குறித்த தகைமைகளை

பூர்த்தி செய்து கொள்வதற்கு மஹபொல பயிற்சி நிலையத்தினால் அமைவு ரீதியான பயிற்சி நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று நிறைவேற்று அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 2016 ஆம் ஆண்டில் துறைமுக இயக்க முகாமைத்துவம், துறைமுக பாதுகாப்பு முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம் தொடர்பிலான டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடலக சுழியோடிகளினது தேர்ச்சிகளை மேம்படுத்துவதற்கான புதிய நிகழ்ச்சித் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

**ஒட்டுமொத்த துறைமுக உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்**

ஒட்டுமொத்த உற்பத்தித் திறனை மேம்படுத்துவது தொடர்பில் துறைமுக நடவடிக்கைகள் பற்றியதிலான பல்வேறு துறைகளிலான திறன்களை விருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள் மஹபொல பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்படுகின்றன.

- துறைமுக நிதி சார்ந்த விடயங்கள்/ கணக்குகள்
- கணக்காய்வு
- கொள்வனவு மற்றும் களஞ்சிய முகாமைத்துவம்
- இலிகிதர் திறன் விருத்தி மற்றும் நிர்வாகம்
- மனிதவள முகாமைத்துவம்
- நன்நோக்கிலான எண்ணப்பாடுகள்
- சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வழிகள்
- மூலோபாய துறைமுக முகாமைத்துவம்
- தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான பொறியியல் பட வரைதல்
- மோட்டார் கட்டுப்பாட்டு சுற்று
- மின்சாரவியலாளருக்கான இலத்திரனியல்
- ஒட்டும் பயிற்சி
- கணனிப் பயிற்சி
- உபகரணங்கள் சார்ந்த பயிற்சிகள்

2016 ஆண்டினுள் 5,205 பேர் பங்குபற்றிய இவ்வாறான 179 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும் கொள்கலன் முனையங்களில் மனித உயிர்களினதும் உபகரணங்களினதும் பாதுகாப்பு மேம்பாடு தொடர்பில் 981 தனியார் லொறி வண்டி சாரதிகளுக்கு பாதுகாப்பு பற்றியதிலான அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டன. வண்டிகள் திருப்பியனுப்பப்படும் காலம் குறைக்கப்படுதலிலும் முனைய செயற்பாடுகளின் பாதுகாப்பிலும் தெளிவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**உள்நாட்டு மற்றும் சர்வதேச கப்பலோட்டத் துறைக்கான ஒத்துழைப்பு வழங்குதல்**

கப்பலோட்டத்துறை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதலின் மூலம் மஹபொல பயிற்சி நிலையத்தினால் உலக கப்பலோட்டத் துறைக்கு ஒத்துழைப்பு பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. தொழில் இல்லாது செல்வாக்கற்றிருக்கும் ஆயிரக்கணக்கான இலங்கை இளைஞர்கள் இந்த வேலைத்திட்டம் ஊடாக சர்வதேச கப்பல் சேவைகளில் தொழில்களை பெற்றுக் கொள்கின்றனர் 2016 ஆண்டினுள் 1,128 விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறான 47 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன

**ISO 9001: 2008 சான்றிதழ்**

கப்பலோட்டிகளுக்கான சர்வதேச கடல்சார் அமைப்பு (IMO) / கப்பலொன்றில் வேலை செய்வதற்கு தேவைப்படும் பயிற்சிச் சான்றிதழ் - Standard Training Certificate for Watch Keeping (STCW) 64 பொன்ற பயிற்சிப் பாடநெறி நடாத்துவதிலான முக்கிய தரக்கட்டுப்பாட்டிற்கான ISO 9001-2008 சான்றிதழ் இலங்கையின் பிரதான கல்வி நிறுவனமான மஹபொல பயிற்சி நிறுவனத்திற்கு

வழங்கப்பட்டுள்ளது. 2016 ஆண்டினுள் மூன்று முகாமைத்துவ மீளாய்வுகளும் நான்கு உள்ளக கணக்காய்வுகளும் நடாத்தப்பட்டுள்ளன.

**நவீன தொழில்நுட்பம் பயன்படுத்துதல்**

மஹபொல பயிற்சி நிறுவனம் அதன் செயற்பாடுகளின் போது நவீன தொழில்நட்பம் அறிமுகப்படுத்தலின் மூலம் அதன் பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்தியுள்ளது. நிறுவப்பட்டுள்ள மெகாரொனிக் விஞ்ஞானகூடத்தின் பயன்பாட்டில் 37 அபேட்சகர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். துறைமுகத்தில் கென்ட்ரி மற்றும் ட்ரான்பர் பாரம்தூக்கி இயக்குபவர்கள் 47 பேர் பயிற்றுவிக்கப்படுவதற்கு கொள்கலன் தாங்கியின் பயிற்சி மாதிரி பயன்படுத்தப்படுகின்றது. கென்ட்ரி பாரம்தூக்கி பயிலுனர் இயக்குபவர்களாக 12 பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

**பயன்படுத்தப்படக்கூடிய ஊழியர் படையணி**

எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் புதிதாக அபிவிருத்தி செய்யப்படும் துறைமுகங்களின் 65 வேலைகளுக்கு திறன் கொண்ட ஆளணி குழாமொன்றை பேணிச் செல்லும் செயற்பாட்டிலும் மஹபொல பயிற்சி நிலையம் ஈடுபட்டுள்ளது. இந்த நோக்கில் 2016 ஆண்டினுள் துறைமுக இயந்திர இயக்குபவர்கள் 210 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர்.

**மொழிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்திறன் மேம்படுத்துதல்**

உலகளாவிய வர்த்தகங்களின் போது வாடிக்கையாளர்கள் திருப்திப்படுத்துவது முக்கிய விடயமென்பதால் பாவனையாளர்கள் மிகவும் திருப்தி கொள்வதற்கு ஊழியர்களின் மொழித்தேர்ச்சி அதிகரிக்கப்படுவதற்கும் அவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவாற்றலை வழங்குவது தொடர்பிலும் இலங்கை துறைமுக அதிகாரசபை கவனம் செலுத்துகின்றது. மஹபொல பயிற்சி நிலையம் இப்பொறுப்பை ஏற்றுள்ளதோடு அதற்கான 2016 ஆண்டில் பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களில் 487 ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் தெரிவு செய்யப்பட்ட 151 அபேட்சகர்களுக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.

**கைத்தொழில் ஒத்துழைப்பு வழங்கல்**

அரச பல்கலைக்கழகங்கள், கைத்தொழில் கல்லூரிகள் மற்றும் தொழில்சார் பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்கை பாடநெறிகளை பூர்த்தி செய்து கைத்தொழில் பயிற்சி பெற்றுக்கொடுக்கப்படுவதிலான ஒத்துழைப்பு வழங்கும் செயற்பாட்டில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஈடுபட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டினுள் பல்வேறு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை மேற்கொண்ட 52 பேருக்கும் 104 டிப்ளோமாதாரர்களுக்கும் 100 துறைசார்ந்த வல்லுனர்களுக்கும் அவர்களின் பயிற்சிகளை நிறைவு செய்து கொள்வதற்கான சந்தரப்பங்களையும் இலங்கை துறைமுக அதிகாரசபை வழங்கியுள்ளது.

**ஈட்டப்பட்ட வருமானம்**

வெளிநபர்களுக்கான நிதி அறவிடப்படும் பாடநெறிகளினால் 2016 ஆண்டு சனவரியிலிருந்து டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் மஹபொல பயிற்சி நிலையம் ரூபா 19,255,113 /= வருமானத்தை ஈட்டியுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஊழியர்களினது துறைமுக கையாளல் செயற்திறனை அதிகரிப்பதற்கு தமது ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சித் திட்டங்களினால் இலங்கை துறைமுக அதிகாரசபை ஈட்டியுள்ள வருமானம் ரூபா 23,391,887/=. ஆகும் எனவே 2016 ஆண்டில் மஹபொல பயிற்சி நிலையத்தினால் ஈட்டப்பட்டுள்ள மொத்த வருமானம் ரூபா 42,647,000./=.ஆகும்.

2016 ஆண்டில் மஹபொல பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்பட்ட பாடநெறிகள் தொடர்பான முழு செலவினம் ரூபா 9,036,586 /= ஆகும்.

**வெளிநாட்டு பயிற்சி மற்றும் புலமைப் பரிசில் சந்தர்ப்பங்கள்**

மீளாய்வாண்டினுள் அதிகாரசபையின் சிரேஷ்ட மற்றும் மத்திய முகாமைத்துவ பதவி வகிக்கும் 45 அதிகாரிகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டு அவர்கள் பயிற்சிப் பாடநெறிகளை பின்பற்றுவதற்கும் இலங்கைக்கு வெளியே சர்வதேச அமைப்புக்களினால் நடாத்தப்பட்ட மாநாடுகள் மற்றும் விரிவுரைகளில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக விளையாட்டுப் போட்டிகளை பிரதிநிதிப்படுத்தும் வகையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் 16 ஊழியர்கள் வெளிநாடுகளுக்கு சென்றனர்.

## துணைச் சேவைகள்

## தகவல் முறைமை பகுதி

கடல்சார் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நிறுவனமொன்றின் முன்னேற்றத்துக்கான பிரதான சக்தியாகவும் தூண்டுகையாகவும் தகவல் முறைமைப் பகுதி விளங்குகின்றது. எனவே துறைமுகத்தின் கையாளல்களை மேம்படுத்துவதற்கு தகுதியான தகவல் முறைமை தொகுதியும் இலங்கையின் பூகோள அமைவிடமும் ஒன்றுசேர்வதன் மூலம் வலயத்தின் ஏனைய துறைமுகங்களை விட முன்னோக்கி இருப்பதற்கான ஆற்றலை கொழும்பு துறைமுகம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

புத்தாக்கங்களுக்கான இலத்திரனியல் நுட்பங்களையும் மூலோபாய தகவல் முறைமைகளையும் ஈடுபடுத்துவதன் மூலம் உற்பத்தித்திறனை உயர்த்துவதிலும் பாவனையாளர்களுக்கு தொடர்ச்சியான சேவைகளை வழங்குவதிலும் தகவல் முறைமைப் பகுதி அவர்களது பலத்தையும் போட்டித்தன்மையையும் பயன்படுத்தியுள்ளது. 2016 ஆண்டில் தகவல் முறைமைப் பகுதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பிரதான செய்திட்டங்கள் பின்வருமாறு.

**கப்பற்சரக்கு முகாமைத்துவ தொகுதி**

கப்பற்சரக்கு முகாமைத்துவத் தொகுதியூடாக பிரதானமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கான சேவைக் கட்டளைகளை தயாரித்தல், கப்பற்சரக்கு பட்டியல்களை ஆவணப்படுத்துதல், இலத்திரனியல் ஊடாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பாவனையாளர்களுக்கு செயற்திறனான சேவைகள் வழங்கப்படுகின்றன. SAGT மற்றும் CICT முனையங்களின் நிறை கொள்கலன் (FCT) இறக்குமதியாளர்களுக்கு சேவைக் கட்டளைகளை தயார் செய்வதில் உதவுவதும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் வசதிகளை இலத்திரனியல் தொகுதியின் மூலம் வழங்குவதும் இடம்பெறுகின்றன.

இதற்கு மேலதிகமாக 2017 ஆண்டில் துறைமுக களஞ்சியங்களின் குறை கொள்கலன்களை வினியோகிக்கும் சேவைகள் கப்பற்சரக்கு முகாமைத்துவ தொகுதியின் மூலம் விரிவுபடுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கோட்டுக் குறியீடுகள் மற்றும் கையில் கொண்டு செல்லக் கூடிய தொலையியக்கி மூலம் நவீன களஞ்சிய முகாமைத்துவ தொகுதியுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து களஞ்சியசாலைகளையும் தன்னியக்க முறையில் செயற்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனூடாக பாவனையாளர்களுக்கு இலத்திரனியல் கொடுப்பனவுகள், இலத்திரனியல் சரக்கு அகற்றுதல்கள், அங்கீகாரங்கள் மற்றும் அனுமதிகள் போன்று ஏனைய முன்னேற்றகரமான இலத்திரனியல் பாகங்களை உபயோகிக்க கூடியதாக இருக்கும்.

இந்நடவடிக்கைகள் 2016 ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆண்டின் முதல் காலாண்டில் செயற்படுத்தப்பட உள்ளது.

**பணிகளின் ஆகு செலவுகளை கணிக்கும் தொகுதி**

பொறியியல் வேலைத்தளங்களில் நடைபெறும் ஒவ்வொரு வேலைக்கும் செலவாகும் நிதித் தொகையை அடையாளம் கண்டு மேர்பார்வை செய்து பேணிச் செல்வதற்கு குறித்த தொகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் தொகுதியை பயன்படுத்துவோரின் தேவைப்பாடுகளுக்கேற்றவாறு வெற்றிகரமாக தயார் செய்யப்பட்ட வழிகாட்டல்களோடு பயன்படுத்துவோர் பயிற்றுவிக்கப்பட்டு நிறைவும் செய்யப்பட்டது. பயன்படுத்துவோரின் விருப்பு வெறுப்புக்கள் மற்றும் பொறியியல் வேலைத்தளங்களின் தேவைப்பாடுகளுக்கேற்ப அறிக்கைகள் தயாரித்தல்களும் நடைபெற்று வருகின்றன.

**சமையலறை மொத்தக்கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவ தொகுதி**

சமையலறைகளுக்கான மொத்தக கட்டுப்பாடு முகாமைத்துவ தொகுதி திட்டமிடப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தற்போது இது பரீட்சிப்பு மட்டத்தில் உள்ளது. குறித்த தொகுதி அன்றாட மொத்த இருப்பு மீதிகளை மேற்பார்வை செய்வதற்கும், மொத்தத் தொகைப் பொருட்களுக்கு மீண்டும் கட்டளைகளை இடுவதற்கும், சமையலறையின் பணிகளுக்கு தேவையான அனைத்து தவல்களை பெற்றுக்கொள்வதற்கும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

**“ஒரக்கல்” ஈ வணிகத் தொகுதி**

கொழும்பு துறைமுகத்தில் நிதி மற்றும் பட்டியலிடப்பட்டுள்ள பொருட்களின் கட்டுப்பாட்டு முகாமைத்துவ தொகுதியை இலங்கை துறைமுக அதிகார சபை நடைமுறைப்படுத்தப்படுத்தியுள்ளது. 2016 ஆண்டில் நிதிப்பகுதியினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கமைய குறித்த தொகுதி காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்ளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வலையமைப்பு வசதிகளை வழங்குவதற்கு காலி, திருகோணமலை துறைமுகங்களுக்கு 02 BTN இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

2016 ஆண்டில் ஆரம்பமான மற்றுமொரு முக்கிய செய்திட்டம் ஒரக்கல் நிதி மற்றும் பொறுகைக்கான முகாமைத்துவ தொகுதியின் மேம்படுத்தல்களாகும் 2016 ஆண்டு வரை தொகுதியில் பிழைகளேதும் அற்றதாக இருந்ததோடு தொகுதியில் இருந்து உச்ச பயன்களை பெற்றுக்கொள்வதற்கு நவீன வன் பொருள் கொண்ட புதிய தொகுதிக்கு குறித்த தொகுதி மாற்ற வேண்டி ஏற்பட்டது.

குறித்த செய்திட்டத்தில் ஒரக்கல் சேர்வர் வன் பொருள் மேம்படுத்துவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதோடு இந்த தொகுதி மேம்படுத்தல்களுக்கான விலை மனுக்களும் கோரப்பட்டன.

**பாதுகாப்பு வலயம் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் தொகுதி**

தற்போதிருக்கும் பாதுகாப்பு கட்டுப்பாடு மற்றும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் தொகுதி 15 வருடங்களுக்கு முன்னர் செயற்படுத்தப்பட்டதொன்றாகும். 2016 ஆம் ஆண்டில் வானொலி அலைகளை அடையாளம் காணுதல் (RFID) போன்ற புதிய அபிவிருத்தி தொழில்நுட்பத்துடன் தொகுதியை முறைப்படுத்துவதற்கு தகவல் முறைமைப் பகுதி தீர்மானித்தது. விபரமான ஆய்வின் பின்னர் இருக்கும் தொகுதியின் வரையறைகள் மற்றும் புதிய வானொலி அலைகளை அடையாளம் காணும் அடிப்படையில் மேம்படுத்துவதில் தொகுதிக்கு உதவ வேண்டியவை இனம் காணப்பட்டன. மேலும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பாவனையாளர்களுக்கு மேலும் வசதிகளை வழங்குவதற்கு இணையத்தளத்தோடு தொடர்புபடக் கூடிய மென் பொருளொன்றின் தேவைப்பாடும் உணரப்பட்டது. 2016 ஆண்டில் இதற்கான பிரேரணையொன்று விலைகோரல் சபையின் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்பட்டது. துறைமுகத்திற்குள் வருகை தரும் வாகனங்கள் தொடர்பில் மேற்பார்வை செய்வதற்கு வானொலி அலைகளை அடையாளம் காணும் பாவனை அடங்கலாக மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களோடு இருக்கும் பாதுகாப்பு மற்றும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் தொகுதி மேம்படுத்தப்படும்.

**கொள்கலன் முனைய முகாமைத்துவ தொகுதி (CTMS) - ஜய கொள்கலன் முனையம்/ ஐக்கிய கொள்கலன் முனையம்**

இலங்கை துறைமுக அதிகாரசபை 2016 ஆண்டில் ஆரம்பித்த பிரதான தகவல் தொழில்நுட்ப செயற்பாடானது இருக்கும் கொள்கலன் முகாமைத்துவ தொகுதியை மிகவும் நவீனமான தொழில்நுட்பத்துடன் மேம்படுத்துவதாகும். இலத்திரனியல் செலுத்துதல்கள், விருத்தி செய்யப்பட்ட இலத்திரனியல் தரவுகளுக்கிடையிலான பரிமாற்ற வசதிகள், வர்த்தக வாடிக்கையாளர்கள், வர்த்தகங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள், இலத்திரனியல் சிட்டைகள் செலுத்துதல்கள், இலத்திரனியல் ஆவண நடவடிக்கைகள் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் அதன் பங்காளர்களுக்கிடையில் தொடர்ச்சியான தொடர்பினை இதன் மூலம் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து சேவைகளும் இதன் மூலம் விருத்தியடையும்

மேம்படுத்தும் செயற்பாட்டு முறையை ஆரம்பம் செய்வதற்கு நடைமுறையில் இருக்கும் தொகுதிக்கும் உத்தேச தொகுதிக்கும் இடையில் உள்ள வித்தியாசங்களை அடையாளம் காண்பதற்கான ஒழுங்குமுறை மற்றும் பகுப்பாய்வு அறிக்கை (Orientation & Analysis Report) இலங்கை துறைமுக அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**இடர்நேர் மீளடைவு தொகுதி (Disaster Recovery Site)**

ஐக்கிய கொள்கலன் முனையத்திலிருக்கும் இடர்நேர் மீளடைவு தொகுதி உருவாக்க சூழலுடன் பொருந்துவதற்கு புதிய இரண்டு (02) சேர்வர் சேர்க்கப்பட்டு பின்னர் விருத்தி செய்யப்பட்டது. உயர் செயலாற்றுகை மற்றும் தொடர்ச்சியான இயக்கங்களைப் பெற்றுத் தருவதற்காக தரவு களஞ்சியத்தினதும் சேர்வர்களினது (Processor) மற்றும் மெமரி (Momeoy) மேம்படுத்தப்பட்டன. 2016 ஆம் ஆண்டு வரை முனைய முகாமைத்துவ தொகுதி மாத்திரம் இடர்நேர் மீளடைவு தொகுதி மூலம் இயக்கப்பட்டது. மேம்படுத்தப்பட்டன. பின்னர் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு மிகவும் முக்கிய தொகுதியொன்றான கப்பற்சரக்கு முகாமைத்துவ தொகுதியும் உள்ளடக்கப்படும்வாறு விரிவாக்கம் செய்யப்பட்டது.

**இலத்திரனியல் தரவுகளுக்கிடையிலான பரிமாற்றத் தொகுதி (EDI)**

**SOLAS VGM செயற்படுத்துதல்**

ஏற்றுமதிக்கு நிரப்பப்பட்ட கொள்கலனொன்று கப்பலொன்றில் ஏற்றப்படும் போது உறுதிப்படுத்தப்பட்ட நிறையை கொண்டிருக்கின்றதென்பதற்கான நிபந்தனையாக சரக்கு ஏற்றும் நபர்/ நிறுவனம் நிரப்பப்பட்டுள்ள கொள்கலனின் நிறை தொடர்பில் சான்றுறுதிப்படுத்துதல் வேண்டும். இது 2016 யூலை 01 ஆம் திகதியிலிருந்து சட்டரீதியாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. கடலில் உயிருக்கான பாதுகாப்பு சம்பந்தப்பட்ட உறுப்புரையை (SOLAS) சர்வதேச கடல்சார் அமைப்பு திருத்தம் செய்துள்ளது.

மேம்படுத்தப்பட்ட முனைய முகாமைத்துவத் தொகுதிக்கு இணையாக இலத்திரனியல் தரவுப் பரிமாற்ற மொடியூலானது கடலில் உயிர் பாதுகாப்பு பற்றியதான உறுப்புரைக்கு ஏற்ப தயார் செய்யப்பட்டு முகவர்களுக்கு புதிய மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட திணிவு பாகத்துடன் உரிய சேவைகளைக் கையாளும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை தறைமுக அதிகாரசபையின் VGM செயற்படுத்தப்பட்டதன் பின்னர் முகவரிடம் CODECO/ COARRI தகவல் அனுப்பும் வேகம் 2 இருந்து 5 வரை உயர்ந்துள்ளது.

**சேர்வர் வன்பொருள் செயற்படுத்துதல்**

அதியுயர் சேவையை வழங்குவதற்கும் இடர்நேர் மீளடைவு சேவையுடன் பாதுகாப்பை மேற்கொண்டும் மேம்படுத்துவதற்கு, இலங்கை துறைமுக அதிகாரசபையின் தொகுதிகளினது வன்பொருள் சூழலொன்றை நடைமுறைப்படுத்துவதில் தகவல் முறைமை பகுதி ஈடுபட்டு வருகின்றது.

குறித்த முன்மொழிவுடன் தகவல் முறைமை பகுதி பின்வருவனவற்றையும் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

- உயர் கொள்ளளவுகளைக் கொண்ட இரண்டு சேர்வர்கள் மற்றும் வெவ்வேறான இரண்டு களஞ்சியங்களுடன் சேர்வர்கள் அல்லது மேற்பட்ட எண்ணிக்கையிலான வன் பொருள் சூழலொன்றை செயற்படுத்துதல்.
- வெவ்வேறான களஞ்சியங்களை மற்றும் உயர் கொள்ளளவுகளைக் கொண்ட இடர்நேர் மீளடைவு தன்னியக்க முறையை செயற்படுத்துதல்.
- ஒவ்வொரு பகுதிக்கும் மூன்றாம் தரப்பின் தரவுக் களஞ்சியமும் தீர்வும் பொருத்துதல்

மேற்குறித்த தொகுதிக்கான இயந்திர சாதனங்களின் விபரங்கள் தயார் செய்யப்பட்டு அதற்கான விலைகோரல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இது 2017 ஆம் ஆண்டின் இரண்டாவது கட்டத்தில் பூரணப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**இலங்கை துறைமுக அதிகாரசபையின் இணையத்தளம்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்கு 2016 ஆண்டில் புதிய தோற்றம் பெற்றுக்கொடுக்கப்பட்டு இந்த இணையத்தளம் பல வசதிகளை கொண்டுள்ளது. புதிய இணையத்தளத்துடன் நடைமுறை ஈடுபடுத்துகையொன்றும் (Mobile Application) அறிமுகப்படுத்தப்படும்.

www.slpa.lk எனும் புதிய இணையத்தளம் இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு செயற்படுத்தப்பட்டுள்ளதோடு சமூக வலைத்தளங்கள் ஒன்றிணைந்ததாக நடைமுறை தளமும் (version) அடங்கலாக தயாரிக்கப்பட்டுள்ளது. தேடும் இயந்திரத்தினால் தேடுதல்களை மேற்கொண்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் இணயத்தளத்துக்கு உயர் பிரதிபலிப்புக்கள் கிடைக்கப்பெறும்வாறு உயர்வடையும் முறையொன்றும் இதனுள் சேர்க்கப்பட்டுள்ளது. நாளாந்தம், மாதாந்தம் மற்றும் ஆண்டுதோறும் நடைபெறும் கொள்கலன் கையாளல்கள், பாரம்தூக்கிகளின் சுமாரான உற்பத்தித்திறன் மற்றும் நங்கூரமிடலின் செயற்திறன் போன்ற அனைத்து கையாளல் தரவுகளையும் இணைந்த உபகரணப் பலகை தொகுதி மூலம் (Intergrated Dashboard System) கிடைக்கப்பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இணையத்தள தொகுதியை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளதால் தீர்மானம் மேற்கொள்ளப்படுதலிலும் இது உதவும்.

**CCTV அவதானிப்பு தொகுதி**

துறைமுகத்தின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் இவற்றை செயற்திறனாகவும் துல்லியமாகவும் அவதானிக்கும் பொருட்டு 2016 ஆண்டில் கமெரா தொகுதியொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது. துறைமுகத்தின் பாதுகாப்பையும் காப்புப் பிரிவுகளின் உறுதிப்பாட்டையும் துறைமுக நடவடிக்கைகளை மிகவும் நன்றாக கவனிப்பதற்கும் CCTV அவதானிப்பு தொகுதியொன்று பொருத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

துறைமுகத்தினுள் பூர்வாங்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டு முதல் கட்டத்தில் கொழும்பு துறைமுகத்திலிருக்கும் அனைத்து வாசல்களும் அவதானிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொகுதி தேவைப்பாட்டின் இயந்திர வகைகளின் தீர்மானம் நிறைவு செய்யப்பட்டு விலைகோரல் ஆவணத்தை தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**ஆவண முகாமைத்துவ தொகுதி**

செயற்திறனாகவும் சரியானதாகவும் ஆவணங்கள் பரிமாறிக்கொள்ளப்படும் நோக்கில் ஆவண முகாமைத்துவ தொகுதி 2016 டிசெம்பர் மாதம் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கான இலத்திரனியல் ஆவண முகாமைத்துவ தொகுதியின் மீது பணிகளின் முகாமைத்துவ தொகுதியொன்று ஆரம்பிக்கப்படுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. ஓ.சீ.ஆர் (OCR) உடனான இலத்திரனியல் ஆவண முகாமைத்துவ தொகுதி ஊடாக ஆவணங்களின்

இரகசியத்தன்மை, பாதுகாப்பு, பரிமாற்றம் போன்று அறிவை பகிர்ந்து கொள்ளும் நிறுவனமொன்றினை உருவாக்குவதற்கும் இது துணை புரியும்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளில் இது தொடர்பான ஆரம்பிக்கப்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது சந்தையிலிருக்கும் ஆவண முகாமைத்துவ உருவாக்கங்களை ஆய்வு செய்ததன் பின்னர் 2016 டிசெம்பர் நடுப்பகுதியில் விலை மனுக்களுக்கான பிரேரணைகள் தயாரிக்கப்பட்டன.

**மனிதவள முகாமைத்துவ தொகுதி**

இலங்கை துறைமுக அதகாரசபையின் தற்போதைய மனிதவள முகாமைத்துவ தொகுதி அதி நவீன தொழில்நுட்பத்துடன் தரமுயர்த்தப்பட்டு துறைமுக ஊழியர்களுக்கு விருத்தி செய்யப்பட்ட சேவைகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. வருகை விடுமுறை கையொப்பமிடுதல் பயிற்சி ஆவணப்படுத்தல் போன்றவற்றை இலத்திரனியல் முறையில் மேற்கொள்வதற்கும் மற்றும் ஏனைய புதிய அம்சங்கள் திட்டமிடப்பட்டுள்ளதோடு திட்டத்துடன் புதிய மனிதவள திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

**இருக்கும் தொகுதிகளை பராமரித்தல்**

ஈடுபடுத்தும் தொகுதிகள் செயற்படுத்தப்பட்டதன் பின்னர் அதன் மென்பொருள் மற்றும் துணை வன் பொருள்களை பராமரித்து செல்வது தகவல் முறைமை பகுதியின் பிரதான பொறுப்பாகும். எந்தவொரு தகவல் தொகுதியும் நிறுவப்படும் முழு முயற்சியில் சுமார் 60% தொகுதிகளின் பராமரிப்புடன் சம்பந்தப்பட்டிருக்கின்றது. இது தொகுதிகளின் அபிவிருத்தி சுற்றின் நீண்ட செயற்பாட்டுக் கட்டமாக கருதப்படுகின்றது. தொகுதிகளை ஆரம்பிப்பதும் பேணிச் செல்வதும் தகவல் முறைமை பகுதியின் பொறுப்பாக இருப்பதனால் தகவல் முறைமை பகுதிக்கு பொறுப்பளிக்கப்படும் பராமரிப்பு நடவடிக்கைகளின் அளவும் விசேட கவனத்துக்கு உட்படுத்தப்பட வேண்டிய விடயமொன்றாகும்.

மென் பொருள் மற்றும் வன்பொருள் உரிய காலத்தில் பராமரித்து செல்வதில் தகவல் முறைமை பகுதி மேற்கொள்ளும் துரித செயற்பாடுகள் தகவல் தொகுதி இடையூறுகளின்றி தொடர்ச்சியாக செயற்படுவதனை உறுதிப்படுத்த இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு துணை புரிகின்றது. மீளாய்வு ஆண்டில் சேர்வர் வன்பொருள் உள்ளடங்கலாக இருக்கும் தோகுதிகளின் அனைத்து பராமரிப்பு பணிகளையும் இப்பகுதியானது பொறுப்பேற்றது.

## சட்டப் பகுதி

1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள விசேட துறைமுகங்களான கொழும்பு, காலி, திருகோணமலை, மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம் மற்றும் காங்கேசன்துறை/ பருத்தித்துறை ஆகிய துறைமுகங்களுக்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் சட்ட அலுவலர்கள், சட்ட ஆலோசகர்களுக்கு அதேபோல் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை, பணிப்பாளர்கள்,பகுதித் தலைவர்கள் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளுக்கும் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்

**ஆலோசனைகள்**

2016 ஆம் ஆண்டினுள் முகாமைத்துவத்திற்கும் மற்றும் பகுதித் தலைவர்களுக்கும் 300க்கு மேற்பட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக இலங்கை துறைமுக அதிகாரசபையினைத் தரப்பாகக் கொண்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், பிணை முறிகள், உறுதிகள், உரிமை கைமாற்றல்கள், குத்தகை, பிரகடனங்கள், அடகு வைத்தல்கள் போன்றவை) தொடர்பில் நகல் அறிக்கைகளை தயாரித்தல், உடன்படிக்கைகளை ஏற்படுத்தல் போன்ற ஏனைய பணிகளிலும் சட்டப் பகுதி ஈடுபட்டது.

**ஒப்பந்தங்கள் , உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறி, உறுதிகள்**

2016 ஆண்டில் 18 குத்தகை உடன்படிக்கைகள், குறை நிரப்பு உடன்படிக்கை 01 ஒப்பந்தங்கள் 10 சட்டப் பகுதி மூலம் அமுல்படுத்தப்பட்டன.

இந்த சட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக பின்வரும் உடன்படிக்கைகள் மற்றும் பிணை முறிகளுக்குரிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

- வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கான ஊழியர்களின் சம்பளமற்ற விடுமுறை தொடர்பிலான பிணை/ ஒப்பந்த உடன்பாடுகள் - 08
- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பயிற்சி மற்றும் கல்வி தொடர்பிலான பிணை/ ஒப்பந்த உடன்பாடுகள் - 08
- பாதுகாப்பு டிப்ளோமா / மனிதவள டிப்ளோமா பயிலும் ஊழியர்களுக்கான 35 பிணை/ ஒப்பந்த உடன்பாடுகள் கைச்சாத்திடப்பட்டன.
- முகாமைத்துவ உதவியாளர்களுக்கான 11 பிணை - ஒப்பந்த உடன்பாடுகள் கைச்சாத்திடப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபையினை தரப்பாகக் கொண்ட அனைத்து நீதிமன்ற விடயங்கள் தொடர்பிலும் சட்டமா அதிபர் மற்றும் வெளி சட்டத்தரணிகளின் உதவியோடு சட்டப் பகுதியின் நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

**வழக்குத் தாக்கல்**

2016 ஆண்டினுள் புதிதாக வழக்கு தொடர்பான, 62 முறைப்பாடுகள், விண்ணப்பங்கள் வெளிதரப்பினர்களினால் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராகவும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஏனைய தரப்பினர்களுக்கு எதிராகவும் (மீயுயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், தொழில் நியாய சபைகள், நீதிவான் நீதிமன்றம், மனித உரிமை தொழில் ஆணையாளர், ஆணைக்குழு, தொழில் திணைக்களம், தீர்ப்பளித்தல் மற்றும் தொழிலாளர் நட்டஈட்டு விசாரணை சபை மற்றும் சுங்க விசாரணை போன்றவற்றில்) சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. .மொத்தமான 405 வழக்குகளில் 35 வழக்குகளின் பணிகள் 2016 ஆண்டில் முடிவடைந்துள்ளன.

2016 டிசெம்பர் 31 வரையில் வழக்குப் பணிகள் / முறைப்பாடுகள் / விண்ணப்பங்கள்/ 370 மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் முடிவுறாத நிலையில் இருந்தன.

**மீயுயர் நீதிமன்ற வழக்குகள்**

2016 ஆண்டில் புதிதாக 16 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு இருந்தன. மொத்தமாக இருந்த 35 வழக்குகளில் 02 வழக்குகள் நிராகரிக்கப்பட்டு 03 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டும் ஒரு (01) வழக்கு முறைப்பாட்டாளருக்கு சார்பாகவும் தீர்க்கப்பட்டன. 2016.12.31 வரை 29 வழக்குகளின் பணிகள் மீயுயர் நீதிமன்றத்தில் முடிவுறாத நிலையில் இருந்தன.

**மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்**

2016.12.31 வரை 16 வழக்குகள் தீர்ப்பளிக்கப்படாதிருந்தன. 2016 ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக புதிதாக 07 வழக்குகள் தொடரப்பட்டன. மொத்த 23 வழக்குகளில் 03 வழக்குகள் முடிவடைந்தன. இதில் இரண்டு (02) வழக்குகளில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் ஒரு (01) வழக்கு முறைப்பாட்டாளருக்கும் சார்பாக தீர்க்கப்பட்டன. 2016.12.31 வரை 20 வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

**உயர் நீதிமன்ற வழக்குகள்**

2016 ஆண்டினுள் புதிதாக ஐந்து (05) வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. மொத்தம் இருபது (20) வழக்குகளில் முடிவடைந்த எட்டு (08) வழக்குகளில் நான்கு (04) வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டும் மூன்று (03) வழக்குகள் முறைப்பாட்டாளருக்கு சார்பாகவும் தீர்ப்பளிக்கப்பட்டன ஒரு (01) வழக்கு வாபஸ் பெறப்பட்டது. 2016.12.31 வரை உயர் நீதிமன்றில் பன்னிரெண்டு (12) வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

**மாவட்ட நீதிமன்ற வழக்குகள்**

2016 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் புதிதாக ஒரு (01) வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பதினொரு (11) வழக்குகளில் ஒரு (01) வழக்கு இணக்கம் செய்யப்பட்டது. 2016.12.31 வரை மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு (10) வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

**நீதவான் நீதிமன்ற வழக்குகள்**

2016 ஆம் ஆண்டில் புதிதாக 04 வழக்குகள் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. பதினாறு (16) வழக்குகளில் ஒரு (1) வழக்கு இணக்கப்பாட்டுக்குட்படுத்தப்பட்டது. 2016.12.31 வரையில் நீதவான் நீதிமன்றங்களில் பதினைந்து (15) வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

**தொழில் நியாய சபை வழக்குகள்**

2016 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக புதிதாக 03 வழக்குகள் தாக்கல் செய்யபட்டதோடு தொழிலாளர் நியாய சபையின் பதினெட்டு (18) வழக்குகளில் பத்து (10) வழக்குகள் முடிவடைந்தன. இதில் ஏழு (07) வழக்குகளில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் ஒரு (01) வழக்கில் முறைப்பாட்டாளருக்கு சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டும் இரண்டு (02) வழக்குகள் இணக்கப்பாட்டுக்கும் ஒரு (01) வழக்கி வாபஸ் பெறுதலும் இடம்பெற்றது. 2016.12.31 வரை தொழிலாளர் தொழில் நியாய சபையில் 08 வழக்குகள் விசாரிக்கப்பட்டு வந்தன.

**மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள், தொழிலாளர் பிணக்குகள் (இணக்கம் தொடர்பிலான வழக்குகள்) பற்றியதில் தொழில் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் பாராளுமன்ற ஆலாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் ஊழியர் நட்டஈடு ஆணையாளரிடமும் சமர்ப்பிக்கப்பட்டவை விண்ணப்பங்களாக கருதப்படும்**

2016 ஆண்டினுள் புதிதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் 06 விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதோடு புதிதாக இணக்கப்பாட்டுக்காக 15 முறைப்பாடுகளும் தொழில் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஒரு (01) முறைப்பாடு ஆலாட்சி அதிகாரியிடமும் முன்வைக்கப்பட்டது.

மனித உரிமை ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்ட 01 விண்ணப்பப்படிவத்தினதும் இணக்கப்பாட்டுக்காக முன்வைக்கப்பட்ட 03 முறைப்பாடுகளினதும் ஆலாட்சி அதிகாரியிடம் முன்வைக்கப்பட்ட 01 முறைப்பாட்டினதும் பணிகள் 2016 ஆண்டில் முடிவுறுத்தப்பட்டன.

அதன்படி 2016.12.31 வரை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 163 விண்ணப்பங்களினதும், இணக்கம் காணல் தொடர்பான 84 முறைப்பாடுகளினதும் ஆலாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 18 முறைப்பாடுகளினதும் மற்றும் ஊழியர் நட்டஈடு ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒரு (01) முறைப்பாட்டினதும் பணிகள் முடிவுறாத நிலையில் இருந்தன.

**நடுவர் தீப்பாய வழக்குகள்**

2016 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக 01 வணிகப் பிணக்கினதும் (சர்வதேசம்) 01 கைத்தொழில் பிணக்கினதும் தீர்வு காணல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன கைத்தொழில் பிணக்கு முடிவடைந்தது. இதன்படி 2016.12.31 வரை 05 கைத்தொழில் பிணக்குகள் மற்றும் 03 வர்த்தக தீர்வு காணல் வழக்குகள் தொடர்பான பணிகள் முடிவுறாதிருந்தன. (நடுவர் தீப்பாய சபை வழங்கிய தொகைக்கெதிராக இலங்கை துறைமுக அதிகாரசபை மேன்முறையீட்டினை முன்வைத்துள்ளதால் முடிவடைந்துள்ள 02 வர்த்தக பிணக்குகளும் முடிவுறாத வழக்குகளாக கருதப்படுகின்றன.)

**சுங்க விசாரணைகள்**

2016 ஆம் ஆண்டில் இலங்கை சுங்கத்தினால் 02 விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2016.12.31 வரை அவை முடிவடையாத நிலையிலிருந்தன.

## வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பகுதி

இலங்கையின் அனைத்து துறைமுகங்களினதும் கையாளல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை துறைமுக அதிகார சபைக்குத் தேவைப்படும் எரிபொருள், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் இயந்திர உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் கொள்வனவு செய்வது (உள்நாடு மற்றும் வெளிநாடு), இப்பகுதிக்குரிய பணிகளில் அடங்கும்.

**மீளாய்வாண்டினுள் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள விலைமனுக் கோரல்களின் எண்ணிக்கை**

| விபரம் | விலைகோரல் சபை கூட்டங்களின் எண்ணிக்கை | விலைகோரல் சபை அங்கீகாரங்களினது எண்ணிக்கை |
|---|---|---|
| திணைக்கள பெறுகைக்கான குழு (20 -100 மில் .ரூபா வரை | 03 | 45 |
| பெறுகைக்கான குழு - A (ரூபா 250,000/= இருந்து 20 மில்லியன் வரை | 50 | 1,459 |
| **பெறுகைக்கான குழு - B (அங்கீகார எல்லை ரூபா 250,000/= க்கு குறைந்தது** | 49 | 3,547 |

**வெளிநாட்டுக் கொள்வனவுகளின் (ஆகுசெலவு மற்றும் கப்பற் கட்டணப் பெறுமதி) 2016 ஆம் ஆண்டினுள் மொத்த செலவினம்**

| | |
|---|---|
| மூலதனமற்ற பொருட்கள் | ரூபா. 301,006,990/= |
| மூலதன பொருட்கள் | ரூபா 99,243,192/= |
| திறக்கப்பட்ட கடன் கடிதங்களின் எண்ணிக்கை (D/A மற்றும் (D/P அடங்கலாக) | **82** |
| திறக்கப்பட்ட மின்னஞ்சல் நிதிப் பரிமாற்றக் கட்டளைகளின் எண்ணிக்கை | 49 |

**2016 ஆம் ஆண்டினுள் வாப்புப் பிரிவினால் அகற்றிச் செல்லப்பட்ட பொருட்கள் பற்றியதான விபரங்கள்**

| | |
|---|---|
| கப்பற் சரக்குகள் | 64 |
| விமான சரக்குகள் | 61 |
| தபால் பொதி | 04 |

**31.12.2016 ஆம் திகதி வரை இருப்புப் பெறுமதி ரூபா. 2,429,396,227/=**

**பிரதான களஞ்சியங்களும் மொத்த இருப்புக் கட்டுப்பாடும்**

| | |
|---|---|
| 2016 ஆம் ஆண்டினுள் களஞ்சியசாலைகளுக்கு கிடைக்கப்பெற்ற பொருட்களின் பெறுமதி (மூலதனமற்ற) | ரூபா. 2,446,562,713/= |
| 2016 ஆண்டினுள் களஞ்சியசாலைகளுக்கு கிடைக்கப்பெற்ற பொருட்களின் பெறுமதி (மூலதனம்) | ரூபா. 321,536,257/= |
| பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படும் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட பொருட்களின் பெறுமதி (மூலதன மற்றும் மூலதனமற்ற) | ரூபா. 2,669,339,491/= |

## பாதுகாப்பு பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் சகல வர்த்தகத் துறைமுகங்களுக்குரிய சொத்துக்கள், நபர்களின் பாதுகாப்பு தொடர்பான பொறுப்புக்கள் பாதுகாப்புப் பகுதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, அதனை நிறைவேற்றும் பொருட்டு 24 மணி நேரம் பூராகவும் தொடர்ச்சியான திறனான சேவையை நடாத்திச் செல்கின்றது.

2016 ஆம் ஆண்டில் பாதுகாப்பு பகுதியினால் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள் கீழ்வருமாறு.

**துறைமுக பாவனையாளர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் (அனைத்து வரிகளும் அடங்கலாக) கிடைக்கப்பெற்ற வருமானம்.**

| | |
|---|---|
| ஆட்கள் மற்றும் வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கியதன் மூலம் பெறப்பட்டுள்ள வருமானம் | ரூபா 398,552,586 |
| தொலைந்த அனுமதிப்பத்திரங்களுக்கு புதிதாக அனுமதிப்பத்திரங்கள் பெறுதலின் தண்டப் பணமாக ஈட்டப்பட்ட வருமானம் | ரூபா 70,816 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ, வ/ப கொழும்பு டொக்யாட் மற்றும் சீ.ஐ.சீ.ரீ கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதனால் பெறப்பட்ட வருமானம் | ரூபா 40,761,228 |
| வருடாந்த அனுமதிப்பத்திரங்களுடன் ரவைகளின் உறைகள் மற்றும் தோள்பட்டிகள் வழங்குதலில் கிடைக்கப்பெற்ற வருமானம் | ரூபா 26,100 |
| துறைமுகத்தினுள் மீன் பிடித்தல் தொடர்பிலான தனிநபர் மற்றும் வாகனங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குதலில் கிடைக்கப்பெற்ற வருமானம் | ரூபா 70,408 |
| 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் தனி நபருக்கு வழங்கப்பட்ட வருடாந்த அனுமதிப்பத்திரங்களுக்கு செலுத்தப்படாத நிலுவை வவுச்சர் மூலம் செலுத்துவதனூடாக ஈட்டப்பட்ட வருமானம் | ரூபா 96,508 |

| | |
|---|---|
| புதிதாக வாங்கிய வாகனம் மற்றும் அமைச்சின் அனுமதியுடன் அந்த வாகனங்களுக்குப் பதிலாக வாங்கிய வாகனங்களுக்காக அனுமதிப்பதிரம் வழங்குவதன் மூலம் ஈட்டிய வருமானம். | ரூபா 110,325,000 |
| **மொத்தம்** | ரூபா **549,902,648** |

இவ்வாறு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானத்திற்குப் புறம்பாக சேவை வழங்கல் என்ற வகையில் தற்காலிக அனுமதிப்பத்திர அலுவலகத்தினால் 2016 ஆண்டினுள் அறவீடின்றி வழங்கப்பட்ட வாகனங்கள் மற்றும் தனி நபர்களுக்கான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை முறையே 21,889 மற்றும் 3,695 ஆகும்.

**வாகனப்போக்குவரத்து கட்டுப்பாடு**

2016 ஆண்டில் போக்குவரத்துச் சட்டங்கள் மீறப்பட்டதன் காரணமாக அதிகாரசபையினால் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 130 என்பதுடன் .இதன் மூலம் தண்டப்பணமாக பெறப்பட்டுள்ள தொகை ரூபா 212,000 ஆகும்.

2016 ஆண்டினுள் பதியப்பட்ட விபத்துக்கள் 97 ஆகும். அதன் மூலம் துறைமுக அதிகாரசபைக்கு ஏற்படுத்தப்பட்ட நட்டங்களுக்காக அறவிடப்பட்டுள்ள தொகை ரூபா 3,623,014 ஆகும்.

அனைத்து துறைமுகங்களும் உள்ளடக்கம் பெறும் வகையில் எல்லா பாதுகாப்பு அலுவலர்களையும் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி பயிற்றுவிப்புகளை உயர் மட்டத்தில் வழங்குவதற்கு பாதுகாப்புப் பகுதிக்கு முடிந்துள்ளதுடன் உரிய பதவியணியினருக்காக வருடாந்தம் வழங்கப்படும் பொருட்கள் உரிய காலத்தில் முறையாக வழங்கி உயர் நிலையான பாதுகாப்புச் சேவைகளை பேணிச் செல்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

## தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி

முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கிடையிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமைப்புகளோடும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தோற்றப்பாட்டினை உயர்த்துவதற்கான மிகவும் சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்தும் நோக்குடன் 2004 ஆண்டில் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி ஏற்படுத்தப்பட்டது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் துறைமுக செய்திட்டங்களுக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக விரிவான பிரச்சாரம் செய்யப்படுவதற்கான சகல நடவடிக்கைகளையும் இப்பகுதி மேற்கொண்டுள்ளது.

முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கிடையிலான தொடர்பாடலை விருத்தி செய்யும் பிரதான நோக்கத்தினை நிறைவேற்றுவதில் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி மாதாந்தம் “தீர்த்த” பத்திரிகையை பிரசுரித்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கிடையே இலவசமாக வினியோகிக்கும் செயற்பாட்டை வெற்றிகரமாக மேற்கொள்கின்றது. விளையாட்டு, நுண்கலை மற்றும் கருத்தாடல் போன்ற சமூக முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு துறைகளில் திறன்களைக் கொண்ட ஊழியர்களை இதன் மூலம் இனம் கண்டுகொள்ள முடியும். செயற்திறன் மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை விருத்தி செய்வதில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சட்ட விதிமுறைகள் மற்றும் காலத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஊழியர்கள் அறிந்துகொள்வதற்கான தளமாகவும் இது அமைகின்றது.

நிறுவனத்தின் தேவைப்பாடுகளுக்கு பதிப்பு மற்றும் இலத்திரனியல் தரவு அறிக்கைளைக் கொண்ட ஆவண காப்பகமொன்றும் நூலக வசதிகளும் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் பராமரித்து செல்லப்படுகின்றன. இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் தொடர்புபடும் உள்நாட்டு பத்திரிகைகள் மற்றும் ஏனைய அநேகமான சிங்களம், தமிழ், ஆங்கில சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்படும் பிரசுரிக்கப்பட்ட அனைத்து கணனித் தரவுகளையும் பதிப்பு பிரதிகளையும் இப்பகுதி ஒன்றுசேர்த்து வைத்துள்ளது. எதிர்கால தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து காலத்துக்குக் காலம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு தேவைப்படும் காணொளி விபரணத் திரைப்படம் தயாரிப்பதற்கு துறைமுக அதிகாரசபையின் கடந்த மற்றும் நிகழ்கால

முக்கிய சந்தர்ப்பங்கள் இலத்திரனியல் கூடத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. புகைப்படங்களினது கைநூலைக் கொண்ட கணனிமயப்படுத்தப்பட்டுள்ள நூலகமும் இப்பிரிவில் உள்ளது.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் செப்டெம்பர் 21 -23 வரை நடைபெற்ற சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி, 2016 திக்ஓவிட்ட மீன்பிடித் துறைமுகத்தில் அக்டோபர் 13 -15 நடைபெற்ற படகு கண்காட்சியும் (Boat show) அடங்கலாக 2016 ஆண்டில் நடைபெற்ற கண்காட்சிகளிலும் இலங்கையின் கடல்சார் துறையை விருத்தி செய்து கொள்வதில் நடைபெற்ற பல கண்காட்சிகளிலும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு பல சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்களுடன் தொடர்புடைய தொடர்பாடல்களுக்கு இப்பகுதி பொறுப்பு வகிப்பதால் ஹம்பாந்தோட்டை துறைமுகம் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு வழங்கும் பங்களிப்பு தொடர்பில் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கான விசேட கட்டுரைகள், விவரணத் திரைப்படம், நேர்காணல்கள், கருத்துத் தெரிவித்தல்களுக்கான தேசிய மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ரூபவாஹினி, வானொலி, பத்திரிகை நிறுவனங்களினது அனுசரணைப் பணிகளை இப்பகுதி இணைப்பாக்கம் செய்தது. இவ்வாறான பாரிய செய்திட்டங்கள் தொடர்பில் பிராந்திய ஊடகவியலாளர்கள் அறிவுறுத்தப்படும் நோக்கில் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் பல நிகழ்ச்சித் திட்டங்களும் ஒழுங்கமைக்கப்பட்டன.

சென்ற ஆண்டில் ஒன்றிணைந்த சமூக பொறுப்புக்கான தலைவரோடு இணைந்து பொறுப்பு வாய்ந்த சில செய்திட்டங்களை தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி மேற்கொண்டது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் 37 ஆவது ஆண்டு நிறைவு விழா, ப்ரீதிபுர சிறுவர் இல்லத்தில் சிறார்களின் சந்திப்பு, வெள்ள நிலைமைக்கான அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சி மற்றும் துறைமுக ஊழியர்களின் பிள்ளைகளுக்கான உலக சிறுவர் தின வேலைத்திட்ட நிகழ்ச்சி போன்றவை இதனுள் அடங்கும்.

மஹபொல பயிற்சி நிலையத்தின் ஆலோசனைகளுக்கேற்ப பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சி சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுப்பதற்கு தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி ஒத்துழைப்பை வழங்கியுள்ளதோடு இலங்கை துறைமுக அதிகாரசபை சார்பில் தேசிய பத்திரிகைகளில் விளம்பரங்களை பிரசுரிப்பதிலும், ரூபவாஹினி திரைப்பட தொகுப்புகள் தயாரிப்பதிலும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களை நேரடியாக ஒலிபரப்பு செய்வதிலும் ஈடுபட்டது.

## உள்ளக கணக்காய்வு மற்றும் நிதிப் பகுதி

**நிர்வாகம் (துறைமுக கணக்காய்வு)**

வருடாந்த கணக்காய்வு வேலைத்திட்டம் ஊடாக உள்ளக கணக்காய்வு பகுதியின் பணிகள் வரிசைப்படுத்தப்பட்டு கணக்காய்வுக் குழு கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழு பணிப்பாளர் சபைக்கு அவர்களின் நம்பிக்கையான பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் ஒத்துழைப்பை வழங்குகின்றது. கணக்காய்வுக் குழு ஊடாக இலங்கை துறைமுக அதிகாரசபையினுள் பயனான மற்றும் விபரமான உள்ளக கட்டுபாட்டு தொகுதியொன்று நடைமுறைப்படுத்துவதை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தி உள்ளது. முக்கிய பூர்வாங்க உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாட்டு முறையாக உள்ளக திட்டம் மற்றும் தற்போதுள்ள கணக்காய்வு வேலைத்திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு அதிகாரசபையின் நிர்வாகத்தை இன்னும் மேம்படுத்தும் நோக்கில் மேலும் சில முக்கிய நடவடிக்கைகளை குழு நடைமுறைப்படுத்தியுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையினது வருமானம்/ செலவின துறைகளின் உள்ளக பரீட்சிப்புகள் மற்றும் பொதுவான கணக்காய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

**உள்ளக பரிசோதனைகள்**
**வருகை**

தொழிலாளர் மற்றும் தொழிலாளரல்லாத ஊழியர்கள் சேவை நிலையத்தில் பிரசன்னமாகி இருப்பது தொடர்பில் திடீர் பரிசோதனைகள், அவசர சுற்றிவளைப்புக் குழுவினால் இரவு / பகல் வேலைமுறைகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. கடமை நேரத்தில் அனுமதியின்றி சேவை நிலையத்தை விட்டுச் சென்ற ஊழியர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதன் விளைவாக ஊழியர்கள் தமது சேவை நிலையங்களில் தங்கியிருத்தலானது இதன் சிறப்பான முறைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

**நிதி**

பணம் மற்றும் சிறுபண இருப்பு தொடர்பில் அடிக்கடி திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு குறைபாடுகள் தொடர்பில் அறிக்கையிடப்பட்டன.

**வருமான கணக்காய்வு**

விசேடபணியாக துறைமுகத்தின் வருமானம் கிடைக்கப்பெறுதல்கள் தொடர்பான கணக்காய்வுகள், கணக்காய்வு வேலைத்திட்டத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட்டு அதனூடாக துறைமுக கட்டணங்கள் குறைவாக செலுத்தப்பட்டவையும் கண்டறியப்பட்டன.

கடன்பட்டோர் கணக்குகள், பிணக்கிற்குரிய சிட்டைகள் மற்றும் நிராகரிக்கப்பட்ட காசோலைகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதோடு அவைகளின் வித்தியாசங்கள் அறிக்கையிடப்பட்டன. தரையிறக்கல் மற்றும் விநியோகப் பிரிவுகள் அன்றாடம் பரீட்சிக்கப்பட்டன

**செலவினக் கணக்காய்வு**

மூலதன மற்றும் மீண்டு வரும் செலவினங்களும் களஞ்சிய கொடுப்பனவு வவுச்சர்கள் தொடர்பிலும் அடிக்கடி பரீட்சிப்புக்கள் மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய முறைகேடுகளும் வெளிப்படுத்தப்பட்டன. வாகன ஓட்டக் குறிப்புப் படிவங்களும் வாகன அனுமதி வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களும் பரீட்சிக்கப்பட்டு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் தயாரித்தல் தொடர்பில் தொடர்ச்சியாக கவனிக்கப்பட்டு கண்டறியப்பட்ட வித்தியாசங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

**களஞ்சியங்கள் தொடர்பான பௌதீக உறுதிப்பாடுகளைப் பரீட்சித்தல்**

கொழும்பு துறைமுகத்தின் களஞ்சியங்களில் பௌதீகரீதியான உறுதிப்பாடுகளின் பரீட்சித்தல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதோடு ஏனைய துறைமுகங்களினது வருடாந்த இருப்பு பரீட்சித்தல்களின் போது ஒத்தாசைகளும் வழங்கப்பட்டன.

பிரதான களஞ்சியங்களின் தொடர்ச்சியான உறுதிப்பாடுகள் பரீட்சிக்கப்படுகையில் களஞ்சியங்களில் இருக்கும் நிரந்தரமாக தேவைப்படாத பொருட்களின் இருப்பு அடையாளம் காணப்பட்டதுடன் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக வழங்கல் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**விசாரணைகள்**

தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க ஆண்டினுள் விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

**இறுதிக் கணக்குகள்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாட்டினை கவனத்திற் கொண்டு அதிகாரசபையின் இறுதிக் கணக்குகளை பரீட்சிப்பதும் இப்பகுதியின் பொறுப்பாகும்.

**முன் கணக்காய்வு**

மீளாய்வாண்டினுள் வைப்புக்களை மீள்செலுத்துதல் மற்றும் துறைமுக கட்டணங்களை கைவிடுதல் தொடர்பில் முன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம், காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்கள்**

மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம், காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களின் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான கணக்காய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதோடு அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன.

## ஏனைய துறைமுகங்கள்

## திருகோணமலை துறைமுகம்

**கப்பல்**

**கப்பலில்லிருந்து கப்பலுக்கு** (Ship To Ship) **கையாளல்கள்**

திருகோணமலை துறைமுகத்தில் கப்பலிலிருந்து கப்பலுக்காக (Ship To Ship) கையாளல்கள் 2015 ஏப்ரல் மாதத்தில் இருந்து செயற்படுத்தப்பட்டன

**கலங்கள்**

**திருகோணமலை துறைமுகத்திலுள்ள கலங்கள் பின்வருமாறு**

| | | | |
|---|---|---|---|
| ▫ | இழுவைக் கலங்கள் 02. | - | TTA துறைமேடையில் நங்கூரமிடப்பட்டிருக்கும் இயக்கங்களில் ஈடுபடும் |
| ▫ | சறுக்கு வழி கலங்கள் 04. | - | இயக்கங்களில் ஈடுபடும் - 02<br>இயக்கங்களில் ஈடுபடாத - 02 |
| ▫ | டனக் இழுவைக் கலம் -01 | - | இயக்கங்களில் ஈடுபடும் TTA துறைமேடையில் நங்கூரமிடப்பட்டிருக்கும் |

**பாதுகாப்புப் பிரிவு**

சர்வதேச கப்பல்கள் மற்றும் துறைமுக வசதிகள் தொடர்பான பாதுகாப்பு கோவைக்கான குறியீடு (ISPS)

இலங்கை கடற்படை சுட்டிக்காட்டியதற்கு ஏற்ப ISPS குறியீட்டை செயற்படுத்துவதில் பல குறைபாடுகள் இருந்தன. அவற்றில் அநேகமானவை தற்போது தீர்க்கப்பட்டுள்ளதோடு எஞ்சியுள்ள குறைபாடுகளுக்கான தீர்வு காணும் பணி இடம்பெற்று வருகின்றது.

**இலங்கை துறைமுக அதிகாரசபையின் சொத்துக்கள்**

திருகோணமலை வதிவிட முகாமையாளரின் ஆலோசனையின்படி இலங்கை துறைமுக அதிகாரசபையின் சொத்துக்கள் நாளாந்தம் பாதுகாப்பு அதிகாரியொருவரினாலும் பாதுகாப்புக் காவலொருவரினாலும் பரீட்சிக்கப்படுகின்றது.

## காலி துறைமுகம்

| கப்பல் வகை | கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|
| கிளின்கர் | 77 |
| சிமேந்து மொத்தம் | 02 |
| ஜிப்சம் | 04 |
| ஏனையவை | 79 |
| நங்கூரமிடுதல் | 97 |
| துறைமுக எல்லைகளுக்கு அப்பாலான கப்பல்கள் | 8,075 |
| உல்லாசப் படகுகள் | 46 |



# நிதி மீளாய்வு

# ஆண்டறிக்கை 2016

**வருமானம் (சகல துறைமுகங்களினதும்)**

| | | | வருமானம் | | |
|---|---|---|---|---|---|
| | (துறைமுக நடவடிக்கைகள் வெவ்வேறாக) | | (ரூபா. மில்லியன்) | | |
| **விபரம்** | **2016** | **2015** | **விபரம்** | **2016** | **2015** |
| துறைமுக செயற்பாடுகளிலிருந்து வருமானம் | 36,799 | 35,128 | கப்பலோட்டம் | 7,963 | 6,789 |
| ஏனைய வருமானம் | 7,281 | 5,677 | கப்பற் சரக்கு ஏற்றுதல்/ இறக்குதல் | 18,520 | 18,431 |
| | | | வாப்பு கையாளல் | 5,066 | 4,553 |
| | | | துறைமுக வசதிகள் | 4,021 | 4,165 |
| | | | ஏனைய சேவை இயக்கங்கள் | 1,230 | 1,190 |
| **மொத்த வருமானம்** | **44,080** | **40,805** | **உப மொத்தம்** | **36,799** | **35,128** |

**இயக்க மற்றும் ஏனைய செலவினங்கள் (சகல துறைமுகங்களினதும்)**

ரூபா மில்லியன்

| **விபரம்** | **2016** செலவினம் | **2015** செலவினம் | (அதிகரித்தல்)/ குறைதல் | % |
|---|---|---|---|---|
| சொத்துக்களை பராமரித்தல் | 1,424 | 1,131 | (293) | (26) |
| எரிபொருள், மின்சாரம் மற்றும் நீர் | 2,076 | 1,985 | (91) | (5) |
| வெளிநாட்டு கடன் மீதான வட்டி | 4,302 | 3,762 | (540) | (14) |
| மேலதிக நேரம் | 3,772 | 3,810 | 37 | 1 |
| தேய்மானம் | 5,940 | 8,614 | 2,674 | 31 |
| சம்பளங்கள் வேதனங்கள் மற்றும் கொடுப்பனவுகள் | 11,952 | 12,302 | 349 | 3 |
| ஏனையவை | 3,539 | 3,176 | (364) | (11) |
| **செலவினம்** | **33,006** | **34,780** | **1,774** | **5** |
| வெளிநாட்டு நாணய மாற்று / (நட்டம்)/ இலாபம் | 10,038 | 20,194 | 10,156 | 50 |
| **வெளிநாட்டு நாணய மாற்று இழப்பு அடங்கலான மொத்தச் செலவினம்** | **43,044** | **54,974** | **11,930** | **22** |

## கொழும்பு துறைமுகம்

2016 ஆண்டில் கொழும்பு துறைமுகம் ரூபா 11,247 மில்லியன் இலாபம் வரி அறவிடப்படுவதற்கு முன்னர் மற்றும் நாணயமாற்று இலாபம்/ நட்டம் சரிசெய்வதற்கு முன்னர் பதிவாகி இருந்தது. 2015 ஆண்டின் மொத்த வருமானமான ரூபா 37,214 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2016 ஆண்டின் வருமானம் ரூபா 39,913 மில்லியன் ஆகும். இது ரூபா 2,699 மில்லியன் அதிகரிப்பாகும். 2016 ஆண்டின் வரி அறவிடப்படுவதற்கு முன்னர் முழு செலவினம் ரூபா 28,866 மில்லியனாக (வெளிநாட்டு செலாவணி நட்டம் ரூபா 3,533 மில்லியன் உள்ளடங்கலாக) இருந்ததோடு 2015 ஆண்டில் அது ரூபா 32,543 மில்லியன் (வெளிநாட்டு செலாவணி நட்டம் ரூபா 6,316 மில்லியன் உள்ளடங்கலாக) ஆகும். இது 11% குறைவடைதலாகும்.




## காலி துறைமுகம்

2016 ஆண்டில் காலி துறைமுகத்தில் வரி அறவிடப்படுவதற்கு முன்னர் இலாபமாக ரூபா 497 மில்லியன் பதிவாகி இருந்தது. 2015 ஆண்டில் கிடைக்கப்பெற்ற மொத்த வருமானமான ரூபா 915 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2016 ஆண்டில் ஈட்டப்பட்ட மொத்த வருமானமான ரூபா 1,239 மில்லியனானது ரூபா 324 மில்லியன் அதிகரிப்பை காண்பிக்கின்றது. 2016 ஆண்டில் வரி அறவிடப்படுவதற்கு முன்னர் மொத்த செலவினம் ரூபா 742 மில்லியன் (வெளிநாட்டு செலாவணி நட்டம் ரூபா 44 மில்லியன் உள்ளடங்கலாக) ஆகும். இது 2015 ஆண்டில் ரூபா 752 மில்லியன் (வெளிநாட்டு செலாவணி நட்டம் ரூபா 44 மில்லயன் உள்ளடங்கலாக) ஆகும் இது 1% வீழ்ச்சியாகும்.



## திருகோணமலை துறைமுகம்

2016 ஆண்டில் திருகோணமலை துறைமுகத்தில் வரி அறவிடப்படுவதற்கு முன்னரான இலாபமாக ரூபா 152 மில்லியன் பதிவாகி இருந்தது. 2015 ஆண்டில் கிடைக்கப்பெற்ற மொத்த வருமானமான ரூபா 530 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2016 ஆண்டில் பதிவாகியிருந்த ரூபா 886 மில்லியன் மொத்த வருமானம் ரூபா 355 மில்லியன் அதிகரிப்பாக காண்பிக்கப்படுகின்றது. 2016 ஆண்டின் வரி அறவிடப்படுவதற்கு முன்னரான மொத்த செலவினம் ரூபா 734 மில்லியன் ஆகவும் இது 2015 ஆண்டில் ரூபா 750 மில்லியன் ஆகவும் இருந்தது. இது 2% வீழ்ச்சியாகும்.




## மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம்

2016 ஆண்டில் மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் வரி அறவிடப்படுவதற்கு முன்னரான நஷ்டமாக ரூபா 10,860 மில்லியன் பதிவாகி இருந்தது. 2015 ஆண்டின் மொத்த வருமானமான ரூபா 2,145 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2016 ஆண்டின் வருமானமான ரூபா 2,042 மில்லியன் இது ரூபா 103 மில்லியன் குறைவாக காண்பிக்கப்படுகின்றது. 2016 ஆண்டில் வரி அறவிடப்படுவதற்கு முன்னர் மொத்த செலவினம் ரூபா 12,902 (வெளிநாட்டு செலாவணி நட்டம் ரூபா 6,462 மில்லியன் உள்ளடங்கலாக) ஆகவும் 2015 ஆண்டில் இது ரூபா 20,928 மில்லியன் (வெளிநாட்டு செலாவனி நட்டம் ரூபா 13,834 மில்லியன் உள்ளடங்கலாக) ஆகவும் இருந்தது. இது 38% வீழ்ச்சியாகும்.



ஊழியர்கள் நிறுவனமொன்றின் சக்தியாக விளங்குவதோடு இந்த நபர்கள் அதன் வெற்றிக்கும் உற்பத்தித் திறனுக்கும் பங்களிப்பு செய்கின்றனர். அவரின்/ அவளின் உத்தியோகபூர்வமாக பதவி வகிக்கும் காலப்பகுதியினுள் ஒவ்வொரு ஊழியரும் அனுபவம் மற்றும் பயிற்சிகள் ஊடாக தேர்ச்சிகளைப் பெற்றுக்கொள்வதோடு இவை நிறுவனத்தின் உற்பத்தித் திறன் மேம்படுத்தப்படுவதில் துணைபுரிகின்றன. மனிதவள முகாமைத்துவத்தின் தலையாய பணியானது நிறுவனமொன்றுக்கு தகுந்த நபர்களை தகுதியான பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வது ஆகும்.. இதை கருத்தில் கொண்டு தகுதியான மற்றும் சம்பந்தப்பட்ட பதவிகளுக்கான தகைமைகளைக் கொண்டுள்ள தொழில்சார் வல்லுநர்கள் சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படும் வகையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆட்'சேர்ப்பு விதிமுறைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மனித மூலதனம் உயர்த்தப்படுவதற்கு அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களும் சேவை நிலையத்தினூடான பயிற்சிகளும் அவசியமாகின்றன. குறித்த தேவைப்பாடு இலங்கை துறைமுக அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிலையம் மூலமாக நிறைவேற்றப்படுவதோடு ஊழியர்களின் அறிவை வளர்க்கும் நடைமுறைகள், செயற்பாடுகள், சட்ட விதிமுறைகள் தொடர்பில் அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டங்களும் அங்கு நடாத்தப்படுகின்ன.

மஹபொல பயிற்சி நிலையம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் அறிவின் கேந்திர நிலையமாகும். கடந்த ஆண்டுகளில் நடைபெற்றுள்ளவாறு ஊழியர்களின் அறிவு, திறன்கள் மற்றும் எண்ணப்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பில் ஆண்டினுள் விரிவுரைகள், மாநாடுகள், பயிற்சி பட்டறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மஹபொல பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்பட்டன. துறைமுக இயக்க முகாமைத்துவம் டிப்ளோமா, துறைமுக பாதுகாப்பு முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறிகளும் 2016 ஆண்டில் நடாத்தப்பட்டன

ஊழியர்களின் அறிவு, நிபுணத்துவம் மற்றும் எண்ணப்பாடுகளை விருத்தி செய்வதற்கு பகுதிகளினால் பராமரித்து செல்லப்படும் நூலகங்களுக்கான புத்தகங்களின் கொள்வனவுகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டன.

ஊழியர்களினது செயலாற்றுகையை மதிப்பீடு செய்வது மனிதவள பகுதியின் மற்றுமொரு முக்கியமான பணியாகும். இது மனித மூலதனம் விருத்தி செய்யப்படுவதில் பேருதவி புரிகின்றது. நிறுவனத்தில் சிறந்த உற்பத்தித்திறனை ஏற்படுத்துவதற்குத் தேவையான மிகவும் பயனான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஊழியர்கள் ஊக்கமளிக்கப்படும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபை 06 மாதங்களுக்கொரு முறை ஊழியர்களின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்கின்றது.

தொழில்சார் தகைமைகளைக் கொண்ட நிறைவேற்று அலுவலர்களுக்கு மாதாந்தம் தொழில்சார் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. குறித்த தொழில்சார் வல்லுனர்களினால் சம்பந்தப்பட்ட தொழில்சார் நிறுவனங்களுக்கு செலுத்தப்படும் அங்கத்துவ பணத்தொகை இவர்கள் குறித்த நிறுவனத்தில் அங்கத்துவம் வகிக்கும் காலப்பகுதி வரை அதிகாரசபையினால் ஈடுசெய்யப்படும்.

கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டவாறு, இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கான திட்டமிடப்பட்ட நலன்புரி வசதிகள் 2016 ஆண்டிலும் நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதியினால் வழங்கப்பட்டன. இலவசமாக உணவு வழங்கல், வீடமைப்புக் கடன் வசதிகள் , கல்விக்கான புலமைப் பரிசில் வழங்குதல், நலன்புரி நடவடிக்கைகளுக்கான போக்குவரத்து வசதிகள் வழங்கல், காப்புறுதித் திட்டம் போன்றவை உள்ளடங்கலான இலங்கை துறைமுக அதிகாரசபையின் நலன்புரி நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்டன.

ஊழியர்களின் சுகாதார நிலைமைகளை பேணிச் செல்வதற்கான வைத்திய சேவைகளை இலங்கை துறைமுக அதிகாரசபையின் வைத்தியப் பகுதி வழங்குவதோடு இதனூடாக தேகாரோக்கியம் கொண்ட செயற்திறனான ஆளணியினர் பேணப்பட்டும் வருகின்றனர்.

**ஒழுக்க விதிமுறைகளுக்கு எதிரான மேன்முறையீட்டுக் குழுக்கள்**

ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட ஒழுக்க விதிமுறைகளுக்கு எதிராக தலைவர்/ பணிப்பாளர் சபையிடம் இருபது (20) மேன்முறையீடுகள் முன்வைக்கப்பட்டு அவை இலங்கை துறைமுக அதிகாரசபையின் சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப ஸ்தாபிக்கப்பட்ட ஐந்து (05) மேன்முறையீட்டுக் குழுக்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. குறித்த மேன்முறையீடுகளினுள் நான்கு (04) மேன்முறையீடுகளுக்கு அங்கீகாரம் பெறப்பட்டதோடு பதினைந்து (15) மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டன. ஒரு (01) மேன்முறையீடு தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் வழங்கப்படவில்லை.

மீளாய்வுக்குட்படுத்தும் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

- க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளில் மிகவும் சிறந்த முறையில் சித்தி பெற்ற துறைமுக ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள் வழங்குதல்.
- துறைமுக ஊழியர்களது சிறு பிள்ளைகளின் நலன்புரி தொடர்பிலான சகல வசதிகளையும் கொண்ட பகல்நேர பராமரிப்பு நிலையம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.
- சகல வசதிகளையும் கொண்ட துறைமுக தீயணைப்புப் படைப்பிரிவு அதன் பணிகளில் கொழும்பு மாநகர சபைக்கு உதவியுள்ளதுடன் கொழும்பு மற்றும் அண்டிய பிரதேசங்களில் அவசர நிலைமைகளின் போது தீயணைக்கும் நடவடிக்கைகளில் தனது ஒத்துழைப்பையும் நல்கியது.
- முல்லேரியாவிலுள்ள மனநோயாளர் வைத்தியசாலையின் நோயாளர் விடுதியொன்றை பராமரித்தல்.

**சமய நிகழ்வுகள்**

- இலங்கை துறைமுக அதிகாரசபையின் பௌத்த சங்கத்தின் செயலாளரும் போதிராஜ விஹாரையின் பிரதம குருவும், கொழும்பு மாவட்டத்தின் அஸ்கிரிய பீடத்தின் மகாசங்கநாயக்கராக நியமிக்கப்பட்ட வைபவத்துக்கு அனுசரணை வழங்குதல்
- வெசாக் தோரணம், பக்தி கீதம், அன்னதானம் வழங்குதல் ஆகிய பல வித நிகழ்ச்சிகளும் மற்றும் சமய நிகழ்ச்சிகளும் உள்ளடங்கலாக வெசாக் வாரமொன்று 2016 மே 21 முதல் 24 வரை நடாத்தப்பட்டது.

**சமூக சேவைகள்**

- கடந்த வெள்ளப்பெருக்கின் போது பாதிக்கப்பட்ட அடையாளம் காணப்பட்ட ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குதல்
- அங்கவீனமுற்ற பிரீதிபுர சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் சுமார் 100 சிறுவர்களுக்கு துறைமுகத்தைப் பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் அமைத்துக் கொடுத்தல், அவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் மற்றும் இனிப்புப் பண்டங்களும் பகல் போசனமும் வழங்கப்பட்டது.
- இலங்கை துறைமுக அதிகாரசபையின் 37 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, ஜனாதிபதி தேசிய சிறுநீரக நிவாரண நிகழ்ச்சித்திட்டத்துக்கு இணைவாக நடைபவணியொன்று ஒழுங்கு செய்ததோடு, அனைத்து ஊழியர்களிடமிருந்தும் திரட்டிய 25 இலட்சம் ரூபா தொகை அதிமேதகு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.
- உலக சிறுவர் தினத்திற்கு இணைவாக 2016 ஒக்தோபர் 01 ஆந் திகதி துறைமுக ஊழியர்களின் சுமார் 500 பிள்ளைகளுக்கு விஷேட நிகழ்ச்சியொன்றை ஒழுங்கு செய்ததோடு, இனிப்புப் பண்டங்கள் மற்றும் பகல் போசனம் இச்சந்தர்ப்பத்தின் போது வழங்கப்பட்டது.

- **விளையாட்டு நிகழ்வுகள்**

ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை துறைமுக பகுதிகளுக்கிடையில் விளையாட்டுப் போட்டியொன்று நடாத்தப்பட்டது. இதன்போது கைப்பந்து, வலைப்பந்து, கிரிக்கெட், மரதன் மற்றும் சைக்கிள் ஓட்டப்போட்டிகள் உள்ளடங்கின.

- **கலாசார நிகழ்ச்சிகள்**

ஊழியர்களின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை துறைமுக அதிகாரசபையின் வாத்தியக் குழுவை பயிற்றுவித்தல் மற்றும் கலை, கலாசார நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு செய்யப்பட்டது.

வர்த்தகத்துடன் தொடர்புடைய சகல தரப்பினர்களினதும் நலனுக்காக வளங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட நிறுவனத்தை உரிய வழிகாட்டல்களோடு நிர்வகித்து நடாத்திச் செல்லப்படுவதற்காக அந்நிறுவனத்தினால் ஏற்படுத்தப்படும் ஒட்டுமொத்த செயற்பாடு இதுவாகும். நல்லாட்சி பேணப்படுதல் தொடர்பிலான முக்கிய பொறுப்பு அதிகாரசபையின் தலைவர் மற்றும் அதன் பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும். நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை அடையும் பொருட்டு அதன் செயற்பாடுகள், நிர்வாக மற்றும் உரிய முறையில் செயற்படுகின்றமை. தொடர்பில் அவர்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் இதற்கு தொழில்சார் அலுவலர்கள் அவர்களுக்குரிய செயற்பாட்டுத் துறைகளில் பங்களிப்பு வழங்குவதன் மூலம் வசதிகள் செய்தல் வேண்டும். இப்பணியினுள் உள்ளக கணக்காய்வாளர்களுக்கு நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பில் பரீட்சிப்பதற்கும் அங்கீகார நடைமுறைகளிலிருந்து வழுகிச் செல்லும் சந்தர்ப்பங்கள் இருப்பின் அது தொடர்பில் அறிக்கை செய்யப்படுதலின் ஊடாக முக்கிய பணி மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக இயக்க மற்றும் நிதிசார்ந்த விடயங்களில் எதிர்பார்க்கப்படும் செயலாற்றுகையினை அடையப்பெறுவதற்கான பரிந்துரைகள் உள்ளக கணக்காய்வாளர்களினால் வழங்கப்பட்டு அதனூடாக ஒட்டுமொத்த நல்லாட்சிக்கான பங்களிப்பு செய்யப்படுகின்றது.

நிதிசார்ந்த மற்றும் கையாளல் செயற்பாடுகள் அறிக்கை செய்யப்படும் உயர் நிலை மற்றும் தொடர்ச்சியான தன்மை தொடர்பில் தமக்கு வழங்கப்பட்டுள்ள பணிகள் எவ்வகையில் நிறைவேற்றப்படுகின்றதென்பதை முகாமைத்துவம் பணிப்பாளர் சபையுடன் தொடர்பு கொள்ளும் தகவல்களின் உயர் நிலை, வெளிப்படையான நிறுவனமொன்றினை நடாத்திச் செல்வதற்கு அவர்களின் உயர் அர்ப்பணிப்பு இன்றியமையாததாகும். இதற்கு உயர் நிலையிலான ஒன்றிணைந்த நிர்வாகம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதற்கு அதிகாரசபை உறுதிபூண்டுள்ளது.

அதிகாரசபையின் நிர்வாகம் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பு வகிக்கின்றது. சிறந்த நடைமுறைகள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான சட்டதிட்டங்கள், விதிகள், அமைப்பு முறைகள் மற்றும் செயற்பாடுகள் மேம்படுத்தப்படுதலில் குறிப்பிடத்தக்க கவனம் அதிகாரசபையினால் தொடர்ச்சியாக செலுத்தப்படுகின்றது. அதிகாரசபையினால் அதன் நிர்வாகப் பணிகள் தொடர்பான அமைப்பு முறைகள் தொடர்ச்சியான திருத்தங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன.

நிதி ஆண்டினுள் அதிகாரசபையினால் அனுசரித்து செல்லப்பட்டுள்ள சிறந்த ஒன்றிணைந்த நிர்வாக அடிப்படைகள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- பணிப்பாளர் சபை மற்றும் சபையின் உப குழுக்கள்
- உள்ளக கட்டுப்பாடு
- உள்ளக கணக்காய்வு
- ஒழுக்காற்று விதிமுறைகள்
- பொது திறைசேரி, நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சுடனான தொடர்பு
- சாசனம் மற்றும் நீதித் தேவைப்பாடுகளுக்கு இணங்கி செயற்படுதல்
- அரச தொழில் முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்கள்

நிதி அமைச்சின் அரச தொழில் முயற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அரச தொழில் முயற்சி நல்லாட்சிக்கான வழிகாட்டல்களில் இனம் காணப்பட்ட சில சரத்துகளிலிருந்து ஒதுங்குவதற்கு துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சர் ஆகியோரினால் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளுக்கு அனுமதி வழங்குவதற்கு எடுத்த அமைச்சரவையின் தீர்மானம் பின்பற்றப்பட்டு துறையினுள் உயர் போட்டித்தன்மை மற்றும் செயன்முறையின் அரச துறை நிறுவனமொன்றாக மாறுவதற்கு தேவைப்படும் நெகிழ்வுத்தன்மையும், சுதந்திரமும் உறுதிப்படுத்தும் பொருட்டு நிர்வாகம் தொடர்பான யாப்பொன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நகல்படுத்தப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையும் சபையின் உப குழுக்களும்**

பணிப்பாளர் சபை தலைவர், உப தலைவர் மற்றும் 07 பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும். பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உயர் தொழில் மற்றும் தனிப்பட்ட வகையில் நீதி

நெறியுடையவர்களாகவும் அதிகாரசபை ஈடுபட்டிருக்கும் துறையின் அனுபவம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல் கீழ் கண்டவாறு அமையும்.

- துறைமுக அபிவிருத்தி அல்லது துறைமுக இயக்கம் அல்லது சட்டம் அல்லது நிதி விடயங்கள் அல்லது கப்பற்றுறை அல்லது வர்த்தகம் அல்லது பொறியியல் நடவடிக்கைகள் அல்லது, நிர்வாகம், தொழிலாளர் தொடர்பு சம்பந்தமான அனுபவம் மற்றும் ஆற்றலுடையோர் என அமைச்சரினால் கருதப்படுவோரில் தலைவர் உட்பட பணிப்பாளர்கள் 04 பேர் அமைச்சரினால் நியமிக்கப்படுவர்

- சரத்தின் 13:1 பிரிவின் கீழ் முகாமைப் பணிப்பாளர் அமைச்சரினால் நியமிக்கப்படுவார்.

- நிதி விடயங்கள் தொடர்பிலான அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பொதுத் திறைசேரியின் பிரதிநிதியொருவர்.

- சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் மீன்பிடி தொடர்பான விடயங்களில் அமைச்சுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர்.

தலைவர் தவிர்ந்த உப சரத்து (1) (அ) அல்லது (1) (இ) யின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்களிரொருவர் துறைமுக அதிகாரசபையின் உப தலைவராக அமைச்சரினால் நியமிக்கப்பட முடியும்.

தலைவருக்கும், உப தலைவருக்கும், முகாமைப் பணிப்பாளருக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் தெளிவாக வெவ்வேறாக விளக்கப்பட்டுள்ளன. நிறைவேற்று தரத்திலல்லாத சகல பணிப்பாளர்களும் ஆழ்ந்த அறிவு மற்றும் முறையான அனுபவங்களின் மீது அதிகாரசபைக்கு சேவைகளை வழங்குவர். இவ்வறிக்கையின் காலப்பகுதியில் பதவி வகித்த அதிகாரசபையின் பணிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் விபரங்கள் 19-24 ஆம் பக்கங்களில் காட்டப்பட்டுள்ளன.

**பணிப்பாளர் சபையின் பிரதான கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு**

- மூலோபாயமான நோக்கம், கொள்கைகள், குறிக்கோள்கள் போன்றவற்றினை ஸ்தாபிப்பதன் மூலம் கட்டளைகளை வகுத்தல்.

- நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றும் செயற்பாட்டினை மேற்பார்வை செய்தல்.

- போதுமானளவு உள்ளக கட்டுப்பாடு மற்றும் உயர் தரத்திலான நெறியினைப் பேண உத்தரவாதமளித்தல்.

- நோக்கத்தினை அமைத்துக் கொள்வதற்கான வழிகாட்டல், விதிமுறைகளை தயாரித்தல் மற்றும் அதன் செயற்பாட்டிற்கு உத்தரவாதமளித்தல்.

- சகல பிரதான வர்த்தக நடவடிக்கைகளின் இடர்பாடு நிலைமைகளை இனம்கண்டு தகுந்த போதுமான கட்டுப்பாடு பேணல், இடர்பாடு நிலைமைகள் தொடர்பில் காலத்திற்கேற்றவாறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான குறித்த நிலைமை அறிக்கை செய்யப்படும். மேற்பார்வை செயல்முறை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றதென்பதில் உத்தரவாதமளித்தல்.

பணிப்பாளர் சபை தொடர்ச்சியாக கூட்டங்களை நடாத்துவதோடு மீளாய்வுக்குட்படும் வருடத்தில் பணிப்பாளர் சபையானது 17 முறை கூடியது. பணிப்பாளர் சபையின் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்குத் தேவையான விபரங்கள் காலத்திற்கேற்ப பெற்றுக் கொள்ள முடியும்.

பணிப்பாளர் சபையின் செயலாளர் தலைவருடன் கலந்தாலோசித்து நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுவதோடு ஒவ்வொரு பணிப்பாளர் சபையின் கூட்டத்திற்கு முன்னர் எல்லா பணிப்பாளர்களுக்கும் விபரமான அறிக்கை அனுப்பி வைக்கப்படும். பணிப்பாளர் சபையில் கலந்து ஆலோசிப்பதற்குள்ள ஏனைய விடயங்களில் இயக்கம், நிதிச் செயற்பாட்டு சுட்டெண்களை மீளாய்வு செய்தல், பிரதான மூலதன செலவினத் திட்டம் மற்றும் பிரேரணைகள் அதன் வரையறையினுள் அங்கீகரித்தலும் அடங்கிருந்தது.

முன்வைக்கப்பட்ட எல்லா பரிந்துரைகள் சம்பந்தமாக, பணிப்பாளர் சபையின் இறுதி அனுமதி கிடைக்கப்பெறுதலுக்குட்பட்டதாக சில பொறுப்புக்கள் தொடர்பில் செயற்படுவதற்கு கணக்காய்வுக் குழுவிடமும் முகாமைத்துவ குழுவினையொத்த உப குழுக்களிடமும் கையளிக்கப்பட்டன.

**முகாமைத்துவக் குழு**

தலைவர், உப தலைவர் முகாமைப் பணிப்பாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் அடங்கலாக பணிப்பாளர் சபையின் 04 அங்கத்தவர்கள் உட்பட முழு நேர 07 பணிப்பாளர்கள், ஹாபர் மாஸ்டர் ஆகியோர் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களாக செயற்பட்டனர்.

அன்றாட நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கையாளல் நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படுகையில் வெற்றிகரமான வர்த்தக நிறுவனமொன்றாக மனிதவளம் உள்ளிட்ட வளங்களின் உச்ச பயன்பாடு பெறப்படுவதற்கும் துறைமுக நுகர்வோர்களுக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் வழங்கப்படும் சேவைகளின் தன்மை உயர்த்தப்படுவதற்கும் முகாமைத்துவ குழு பல்வேறு பாகங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டது.

அதன் கூட்டங்களின் போது சகல கொள்கை சார்ந்த விடயங்கள் போன்று தீர்மானங்கள் நடைமுறைப்படுத்துதற்கு முன்னர் அவை பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் உடன்பாடு பெறுவதற்கு முன்னரும் துல்லியமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. தீர்மானங்கள் முன் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டன. இச்செயற்பாடுகள் தாமதங்களின்றி வெற்றிகரமாக நிறைவேற்றும் பொருட்டு முகாமைத்துவக் குழுவினால் மாதத்திற்கு இருமுறை கூடி தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். முகாமைத்துவக் குழுவினால் இவ்வருடத்தினுள் ஆறு (06) கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**கணக்காய்வுக் குழு**

பணிப்பாளர் சபையின் அங்கத்தவரான பொது திறைசேரியின் பிரதிநிதி மற்றும் பணிப்பாளர் சபையின் இரண்டு அங்கத்தவர்களையும் இக்குழு கொண்டுள்ளது. 2015.12.04 ஆம் திகதி இக்குழு மீண்டும் நியமிக்கப்பட்டது.

கணக்காய்வுக் குழுவினால் கொள்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடு விதிமுறைகளின் வெற்றிகரமான செயற்பாடு மீளாய்வு செய்யப்பட்டு செயற்திறன் உறுதிப்படுத்தப்படும். உள்ளக கணக்காய்வு அறிக்கை மற்றும் அரசாங்க கணக்காய்வுக் கடிதங்கள் பரிட்சித்துப் பார்க்கப்பட்டு அவைகளின் பரிந்துரைகள் பகுதித் தலைவர்களினால் அனுசரிக்கப்படும்வாறு பணிப்பாளர் சபை ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின் கீழ் அதிகாரசபைக்கு நிதியினாலும் இயக்க செயற்பாடுகளினாலும் நிலவும் இடர்பாடுகள் சிறந்த முறையிலான வரைவிலக்கண செயற்பாடுகளினூடாக அடையாளம் காண்பதற்கும் அவ்வாறான இடர்கள் முகாமைத்துவம் செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் பொறிமுறையொன்றினை அதிகாரசபை கொண்டுள்ளதனை முகாமைத்துவக் குழு உறுதிப்படுத்துகின்றது.

ஊழியர்கள் மற்றும் துறைமுக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்களினது நலன்களின் வினைத்திறன் மேம்படுத்தப்படுவதற்கும் வளங்களினது உற்பத்தித் திறன் உயர்த்தப்படுவதற்குமான நிதி மற்றும் கையாளல் தொடர்பில் நிலவும் விதிகள், முறைமைகள் வலுப்படுத்தப்படுவதற்காக நாள் தோறும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை செய்தல் இக்குழுவின் பொறுப்பாகும்.

**உள்ளக கட்டுப்பாடு**

எந்தவொரு அமைப்பிலும் செயற்திறன் மிக்க முகாமைத்துவத்திற்காக திறனாக இயங்கக் கூடிய உள்ளக கட்டுப்பாடு முறையொன்று இருப்பது அவசியமாகும். அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாடுகளின் மீளாய்வு தொடர்பான சகல பொறுப்பும் பணிப்பாளர் சபையைச் சாரும். பின்பற்றப்பட வேண்டிய கொள்கை முறைகள் பற்றியதில் விரிவான ஒழுங்கு விதிகள் அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை அடிக்கடி மீளாய்வு செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட்டன. வர்த்தக ரீதியான நோக்கங்களை அடைவதற்கு இடையூறாக இருக்கும் இடர்களுக்கு முகம் கொடுப்பதற்காக செயற்பாட்டு முறையொன்று திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய அதிகாரசபையின் சொத்துக்களை அனுமதியின்றி பாவித்தல், கைமாறுதலைத் தவிர்த்தல், முறையான அறிக்கைகளைப் பேணுதல் மற்றும் நிகழும் தகவல்களின் பிழையின்மை தொடர்பாக தேவையான அளவு சான்றுகளையும் இக்குழு வழங்கும்.

அதிகாரசபையின் அமைப்புக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் மூலம் அதன் திறன் நேர்மைத் தன்மை, சீரிய நிலைமை மற்றும் சிறந்த தொடர்பாடல் சூழல் பேணப்படுதலின் அதிகாரசபையின் அர்ப்பணிப்புடனான செயற்பாடு உள்ளக கட்டுப்பாட்டிற்கு உறுதுணையாகும்.

**உள்ளக கணக்காய்வாளர்கள்**

பூரண தகுதி வாய்ந்த பட்டயம் பெற்ற கணக்காளரொருவரினால் கணக்காய்வுப் பகுதியின் தலைமை வகிக்கப்படுகின்றது. இப்பகுதி, பூரண சுதந்திரமாக இயங்குகின்றது. தலைவருக்கும் கணக்காய்வுக் குழுவுக்கும் நேரடியாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

தலைவரினதும் கணக்காய்வுக் குழுவின் அறிவுரைகளுக்கும் இணங்க இப்பகுதிக்குரிய விடய பணிகள் தயாரிக்கப்படுகின்றன. விடய உள்ளடக்கம் சம்பந்தப்பட்ட திருத்தங்களுக்காக தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுகின்றன. பிரதானமாக முழு உள்ளக கட்டுப்பாடு தொகுதி கணக்காய்வுப் பகுதியினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. அதேபோல் கணக்காய்வுக் குழு தேவையான ஒத்துழைப்பை வழங்குகின்றது. உள்ளக கணக்காய்வானது, உள்ளக கட்டுப்பாடு முறைகளின் வினைத்திறன் மற்றும் துரிதத்தன்மை தொடர்பான குறிக்கோள்கள் வெளிக்கொணரப்பட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக செயற்பாட்டுத் திட்டங்கள் மதிப்பிடப்படும்.

**ஒழுக்கச் சட்ட விதிகள்**

ஏற்றுக்கொள்ளக் கூடிய உயர் மட்ட ஒழுக்க நடைமுறை பேணப்படுதலுக்கு வழிகாட்டுவதற்காக ஒழுக்க விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன. சகல பணிப்பாளர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் ஊழியர்களினால் தமது அன்றாட கடமைகள் நிறைவேற்றப்படுகையில், தமது செயற்பாடுகளிலும் அதிகாரசபையின் புகழ் நாமத்திற்கும் தோற்றப்பாட்டிற்கும் பாதிப்பேற்படுத்தும் சந்தர்ப்பங்களில் உயர் நிலையிலான ஒழுக்க நெறியுடன் நேர்மையாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதலை அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

**ஒழுக்கச் சட்ட விதிகளின் அடிப்படைகள்**

- சகல நடவடிக்கைகளின் போது நேர்மை, நியாயம் மற்றும் பக்க சார்பின்மை பேணுதல்
- சட்டம் பற்றி அறிந்திருத்தல் மற்றும் அதற்கு கீழ்ப்படிதல்
- நிறைவேற்றப்படும் சகல நடவடிக்கைகள் தொடர்பிலும் அந்தரங்கத்தன்மை.
- அதிகாரசபைக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் அல்லது தீய விளைவுகள் ஏற்படக்கூடியவாறு செயற்படுவதைத் தவிர்த்தல்.

**அனுகூலமான திட்ட வரம்பு மற்றும் சாசன சட்ட தேவைகளுக்கு உட்படல்**

எல்லா சாசன மற்றும் சட்ட தேவைகளுக்கு ஏற்ப செயற்படுவதானது இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். இந்நோக்கத்தினை முதன்மையாகக் கொண்டு அதிகாரசபையானது எல்லா சாசன மற்றும் சட்ட தேவைகளுக்கும் ஏற்ப செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நிதி மற்றும் உள்ளக கணக்காய்வு பகுதிகள் ஊக்கத்துடன் செயற்படுகின்றன. அதற்கு மேலதிகமாக சட்டப் பகுதி அதிகாரசபையின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஏனைய கருமங்கள் சட்ட நியதிகளுக்கு ஏற்ப இடம்பெற உறுதிப்படுத்தப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றது.

**துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சு மற்றும் நிதியமைச்சின் பொது திறைசேரியுடனான தொடர்பு**

உரிய வழியில் மற்றும் மூலோபாயமான நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு பணிப்பாளர் சபைக்கு வழிகாட்டும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர், அமைச்சின் செயலாளர், மூலோபாய தொழில் முயற்சி முகாமைத்துவ (SEMA) நிறுவனத்துடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொள்கின்றனர். அதற்கு மேலதிகமாக நிதி அமைச்சின் பொது திறைசேரியின் தேவைக்கேற்ப மூன்றாண்டு காலத்திற்கான வர்த்தகத் திட்டம், நிதி மற்றும் ஏனைய இயக்க செயற்பாட்டு அறிக்கை உள்ளடங்கலான முழுமையான அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் அதிகாரசபையினால் முன்வைக்கப்பட்டன.

**குறிப்பிடப்பட்ட பங்குதாரர் தொடர்பான வெளிப்பாடு**

இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் கொடுக்கல் வாங்கல்கள் செய்யும் தரப்பினர் சம்பந்தமாகவும் தனிப்பட்ட அக்கறை அல்லது உறவு தங்களிடத்தில் இல்லையென பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தி அறிவிக்கின்றது.

**பொறுப்பு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி அறிக்கைகள் அதிகாரசபையின் குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் உண்மை மற்றும் நியாயத் தன்மையினைப் பிரதிபலிப்பதெனவும் அவ்வறிக்கையானது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதென்பதும் பணிப்பாளர் சபையின் கருத்தாகும்.

**எதிர்காலம்**

உண்மைப் பெறுமதியுடன் ஒட்டுமொத்த திரட்டிய நிர்வாகம் நிலைத்து நிற்பதற்கு கண்மூடித்தனமான திருப்தியடையக்கூடிய முறைகள் மற்றும் கொள்கைகள் போன்றவற்றில் அன்றி உண்மையான முறையில் அனைத்து பங்காளர்களினதும் நம்பிக்கையினை வெல்லக் கூடிய உயர்ந்த செயல்பாட்டுடன் நியாய முறையில் பேணிச் செல்வதன் மூலம் நிலை நாட்டமுடியும் என்பதை இலங்கை துறைமுக அதிகாரசபை நம்புகின்றது.



# துறைமுக புள்ளிவிபரங்கள்

## ஆண்டறிக்கை 2016

## கொழும்பு துறைமுகம்

**துறைமுக பரிமாணம்**

**துறைமுக பிரதேசம்**

| | |
|---|---|
| துறைமுக தடாக பிரதேசம் | 184.6 ஹெக்டயார் |
| வட மேல் அலைதாங்கியின் நீளம் | 810 மீட்டர் |
| வட கிழக்கு அலைதாங்கியின் நீளம் | 330 மீட்டர் |
| மேற்கு நுழைவாயில் | 230 மீட்டர் X 16 மீட்டர் |
| வடக்கு நுழைவாயில் | 190 மீட்டர் X 13 மீட்டர் |

**சேவைக் காலம்**

வருடத்தின் சகல நாட்களிலும் 24 மணித்தியால சேவை அடிப்படையில் கொழும்பு துறைமுகம் இயங்குகிறது.

**2016 இல் கையாளப்பட்ட கப்பல் சரக்குகளின் அளவு**

| | |
|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 90.0% |
| பிரித்த மொத்தம் | 1.1% |
| உலர் மொத்தம் | 3.1% |
| திரவ மொத்தம் | 5.8% |

## புதிய கொழும்பு தெற்கு துறைமுகம்

**துறைமுகப் பிரதேசம்**

| | |
|---|---|
| துறைமுக தடாக பிரதேசம் | 192.0 ஹெக்டயார் |
| தென்மேற்கு அலைதாங்கியின் நீளம் | 5,140 மீட்டர் |
| வடமேற்கு அலைதாங்கியின் நீளம் | 1,550 மீட்டர் |
| பிரதான நுழைவாயில் | 570 மீட்டர் X 18 மீட்டர் |

## காலி துறைமுகம்

துறைமுக பரிமாணம்

| | |
|---|---|
| நீர் பிரதேசம் | 15.3718 ஹெக்டயார் |
| உட்பிரவேச கால்வாய் | 140 மீட்டர் |
| நிலப் பிரதேசம் | 16.4015 ஹெக்டயார் |
| அங்கீகார மொத்த நீள் அளவு | 130 மீட்டர் |
| அனுமதியேற்கப்பட்ட ஆழம் | 7.3 மீட்டர் |

**வேலை நேரங்கள்**

மே தினம் பகல் நேரத்தில் மாத்திரம் கப்பல் நடவடிக்கைகள் இடம்பெறும் என்பதோடு வருடத்தின் சகல நாட்களிலும் காலி துறைமுக வேலைகள் 24 மணித்தியாலய அடிப்படையில் இடம் பெறும்.

## வழி விலகும் காலம்

கிழக்கு - மேற்கு பிரதான கடல் மார்க்கத்திலிருந்து பயணக் காலம் எதுவுமில்லை.

**நங்கூர வசதிகள்**

### மொத்த கரையோர நங்கூரத்தளங்கள் - 05

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| குளோசன்பேர்க் ஜெட்டி | 420 | 8.9 |
| புதிய பாலம் | 162 | 8.9 |
| புதிய பாலம் / குறுக்காக | 84 | 8.9 |

**களஞ்சியசாலை வசதிகள்**

| பெயர் | சராசரி உயரம் (அடி.) | பிரதேசம் (ச.அ) | கொள்ளளவு (கன. அடி) | கொள்கலன் அடுக்கும் உயரம் (அடி) |
|---|---|---|---|---|
| இல. 01 | 23 | 13,333 | 306,667 | 10 உயரம் |
| இல. 02 | 23 | 40,000 | 920,000 | 10 உயரம் |

## திருகோணமலை துறைமுகம்

**துறைமுக பரிமாணம்**

| | |
|---|---|
| நீர் பிரதேசம் | 1,536 ஹெக்டயார் |
| உட் பிரவேச கால்வாய் (ஆகக் குறைந்த அகலம்) | 500 மீட்டர் |
| நில பிரதேசம் | 2,254 ஹெக்டயார் |

**வேலை நேரங்கள்**

திருகோணமலை துறைமுகத்தில் மே தினத்தில் பகல் நேரத்தில் மாத்திரம் கையாளல் நடவடிக்கைகள் இடம்பெறுவதோடு திருகோணமலை துறைமுகத்தில் தவிர்ந்த வருடத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணித்தியால அடிப்படையில் சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கப்பல் பயணங்கள் பகல் காலங்களில் மட்டுமே இடம்பெறும்.

**நங்கூரத்தள வசதிகள்**

**இலங்கை துறைமுக அதிகார சபையின் நங்கூரத்தளங்கள்**

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| அஷ்ரப் இறங்குதுறை | 250 | 12.5 |
| | சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரிச் செலவினம் | 55,293,926 | 43,750,397 | 55,293,926 | 43,750,397 |
| | முத்திரைக் கட்டணம் | 702,200 | 772,925 | 702,450 | 769,725 |
| | தேச நிர்மாண வரி செலுத்துதல் | 202,515,090 | 200,471,305 | 202,515,090 | 200,471,305 |
| | கணக்காய்வுக் கட்டணங்கள் | 4,135,002 | 2,030,500 | 3,667,022 | 1,535,000 |
| | உள்ளீர்க்கப்படாத சமையலறை செலவினம் | 66,014,018 | 58,805,117 | 66,014,018 | 58,805,117 |
| | ஜே.சீ.ரீ கம்பனிக்கு செலுத்தப்பட்ட நிர்வாக மற்றும் உட்கட்டமைப்பு வசதிக் கட்டணம் | 4,161,803 | 3,464,307 | 208,090,153 | 173,215,330 |
| | பட்டியல்படுத்தப்படாத செலவினக் கணக்கு | - | 482,528 | - | 482,528 |
| | மாகம்புர துறைமுக கம்பனிக்கு செலுத்தப்பட்ட முகாமைக் கட்டணம் | 14,836,099 | 17,378,828 | 800,586,926 | 810,163,243 |
| | இன்வொயிஸ்களின் விலைகள் மாற்றமடைதல் | (0) | (2,393.0) | (0.1) | (2,393) |
| | பணிப்பாளார் கட்டணங்கள் | 4,941,301 | 3,771,656 | - | - |
| | ரோ ரோ செலவினம் | 21,733,618 | 36,581,907 | - | - |
| | கணனிகளின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு | 434,252 | 1,047,285 | - | - |
| | தூய புத்தக பெறுமதி - ஓய்வு பெறுதல் | 98,279 | 27,560 | 98,279 | 27,560 |
| | உற்பத்திக்கான மர மூலப் பொருட்கள் | - | 393,574 | - | 393,574 |
| | செலயக கட்டணங்கள் | 646,000 | 270,000 | - | - |
| | ஓய்வூதிய அனுகூலங்கள் | 2,233,282 | 3,241,603 | - | - |
| | கப்பற் சரக்கு கையாளல் கட்டணம் | 1,472,303 | 12,517,419 | - | - |
| | மொத்தத் தொகை பாதிப்பேற்படுத்தலின் நட்டங்கள் | - | (60,042,675) | - | - |
| | பட்டியலிடப்பட்ட பொருட்கள் மீதான பாதிப்பு | - | 17,949,612 | - | - |
| | வங்கிக் கட்டணங்கள் | 130,450 | 229,426 | - | - |
| | | **8,054,578,405** | **7,901,477,348** | **8,458,510,089** | **8,309,248,286** |
| **34** | **தூய நிதிசார் செலவினம்** | | | | |
| | **வட்டி கிடைக்கப் பெறுதல்கள்** | | | | |
| | திறைசேரி உண்டியல் மற்றும் காப்புறுதி வைப்புக்கள் மீதான வட்டி | 878,177,387 | 310,023,665 | 878,177,387 | 310,023,665 |
| | பாதுகாப்பு வைப்புக்கள் மற்றும் முதலீடுகள் மீதான வட்டி | 50,964,229 | 169,144,179 | 813,000 | 146,375,643 |
| | வெளி தரப்பினர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட கடன் நிதி மீதான வட்டி | 4,971,939 | 243,332 | 4,971,939 | 243,332 |
| | ஊழியர்களின் கடன்கள் மீதான வட்டி | 205,768,542 | 184,907,290 | 202,201,398 | 184,123,773 |
| | | **1,139,882,098** | **664,318,466** | **1,086,163,725** | **640,766,413** |
| | **வட்டி செலவினம்** | | | | |
| | கடன் மீதான வட்டி | (4,421,690,527) | (3,876,336,282) | (4,301,850,044) | (3,761,825,605) |
| | ஏனைய நிதிசார்ந்த அறவிடல்கள் | (44,352,413) | (33,462,000) | (44,352,413) | (33,462,000) |
| | | **(4,466,042,940)** | **(3,909,798,282)** | **(4,346,202,457)** | **(3,795,287,605)** |
| | | **(3,326,160,842)** | **(3,245,479,816)** | **(3,260,038,732)** | **(3,154,521,192)** |

**35 வருமான வரிகளுக்கான செலவினம்**

2006 ஆண்டின் இல:10 ஆம் வருமான வரிச் சட்டத்தின் 13 (YYYY) பிரிவுகளுக்கேற்ப அதிகாரசபையினால் இயக்கம் ஊடாக பெறப்படும் இயக்க இலாபம் அறவீட்டு வரியிலிருந்து விடுபட்ட வருமானமாகக் மதிப்பீட்டு 2011/2012 ஆண்டிலிருந்து கருதப்படுகின்றது . அதன்படி 28% ஆக இருக்கும் வரிப் பெறுமானம் பயன்படுத்தப்பட்டு ஏனைய வருமான வழிகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன . வரி பெற்றுக்கொள்ளக் கூடிய வருமானத்திலிருந்து 10% பெறுமதிக்கு வரி பெறுவதற்கு துணைக் கம்பெனிகளுக்கு உரித்துண்டு.

| வருமான வரியின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு | வகை | | இ.து.அ.ச | |
|---|---|---|---|---|
| | 2016 | 2015 | 2016 | 2015 |
| | | - | | - |
| நிகழ்கால வரி செலவினம் (குறிப்பி 35.1) | 12,447,110 | 5,440,601 | | - |
| பிரிக்கப்படக் கூடிய இலாபம் மீதான வரி | - | - | - | - |
| பங்கி வரி | - | - | | - |
| சென்ற ஆண்டினுள் மீகுதியான ஏற்பாடுகளின் வருமான வரி | - | 1,676,786 | | |
| பின்னுரிமை வரி (குறிப்பு 24.1) | - | - | - | - |
| | **12,447,110** | **7,117,387** | - | - |

அடைப்புக்குள் இருக்கும் கழித்தல்கள் கணிக்கப்படுகின்றன .

| | வகை | | இ.து.அ.ச | |
|---|---|---|---|---|
| 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2016 | 2015 | 2016 | 2015 |
| **35.1 நடைமுறை வரி செலவினம் மற்றும் கணக்கீட்டு இலாப உற்பத்திக்கிடையிலான ஒப்பீடு** | | | | |
| **வரிக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம் - பொறுப்பிலிருந்து விடுதலை** | 594,986,663 | (14,573,344,413) | 1,035,725,890 | (14,168,555,873) |
| வரிக்கான வேறான வருமான பொறுப்புக்கள்- வட்டி வருமானம் | 1,139,882,098 | 438,983,235 | 1,086,163,725 | 438,983,235 |
| மேலதிக வரி விதித்தல் இலாபம் | (424,510,654) | (405,542,156) | - | - |
| **தாபன ரீதியான வருமானம்** | **715,371,444** | **33,441,079** | **1,086,163,725** | **438,983,235** |
| உபயோகிக்கப்பட்ட வரி நஷ்டங்கள் | (156,919,405) | (156,919,405) | 380,157,304 | (153,644,132) |
| **மதிப்பிடக்கூடிய வருமானம் / வரி விதிக்கும் இலாபம்** | **558,452,038** | **(123,478,326)** | **1,466,321,028** | **285,339,103** |
| 28% தாபன மீதான வரி விதித வரி | 12,447,110 | 5,440,601 | | |
| **வருடத்திற்கான விசேட செயற்பாடுகள் மீதான நடைமுறை வரி** | **12,447,110** | **5,440,601** | - | - |
| **வரி நஷ்டங்கள்** | | | | |
| **முன் கொண்டு வந்த நஷ்டங்கள்** | **5,475,031,840** | **5,631,951,245** | **5,478,307,113** | **5,631,951,245** |
| ஏற்பட்ட நஷ்டங்கள் | - | - | - | - |
| உபயோகப்படுத்தப்பட்ட நஷ்டங்கள் | (156,919,405) | (156,919,405) | (153,644,132) | (153,644,132) |
| **முன் கொண்டு வந்த நஷ்டங்கள்** | **5,318,112,434** | **5,475,031,840** | **5,324,662,980** | **5,478,307,113** |

2006 உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் இல : 10.25 (1) பந்திக்குப் கதிலாக குறித்த சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டு கடன் வட்டி குறைப்பதற்கான மேற்கொள்ளப்பட்டுள்ள வேண்டுகோளும் உள்நாட்டு இறை வரிச் சட்டத்தின் 25 (1) பிரிவின் கீழான வெளிநாட்டு கடன் தொடர்புபடும் வெளிநாட்டு செலாவணி நட்டம் குறைக்கப்படுவதற்கான வேண்டுகோளும் புறக்கணிக்கப்பட்டு 2007/2008, 2008/2009,2009/2010 மற்றும் 2010/2011 போன்ற மதிப்பீட்டு ஆண்டுகளுக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகாரசபையில் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் அபிப்பிராயத்திற்கு எதிராக வரி மேன் முறையீட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டது . 2008/2009 மற்றும் 2009/2010 வருடங்களுக்கான வரி மேன்முறைப்பாட்டு ஆண்டுடன் வழக்கு விசாரிக்கப்பட்டு வருவதோடு சட்டரீதியாக சிக்கல்களின் அடிப்படையில் இலங்கை துறைமுக அதிகாரசபை மேன்முறையீட்டு நிர்மாணித்தல் முன்வைத்துள்ளது . 2009/2010 ஆண்டின் வரி மேன் முறையீட்டு ஆண்டுடன் வழக்குத் தீர்ப்பு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக வழங்கப்பட்டுள்ளது . (உதா கையொப்பமிடப்படாதிருந்ததனால் மதிப்பீடு செல்லுபடியற்றது .) இறைவரி திணைக்களத்தினால் வரிமேன் முறையீட்டு ஆண்டுக்குள் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது .

**36** மூலதன மற்றும் ஏனைய பொறுப்புக்கள்

அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதியில் பணிப்பாளர் சபையினால் அங்கிகரிக்கப்பட்டுள்ள திரவ ரீதியான மூலதன செலவினம் அல்லது ஏனைய நிதிசார் பொறுப்புக்கள் எதுலும் இருக்கவில்லை .

**37** **அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் பின்னர் ஏற்பட்ட சம்பவங்கள்**

**மாத்தறை குருளுதுவ பாலம் நிர்மணிப்பு**

மாத்தறை குருளுதுவ பாலம் நிர்மாணிப்பு தொடர்பில் 2017 சனவரி 11 ஆம் திகதிய இல : 16/2687/737/042 ஆம் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2017 பெப்பரவரி மாதத்தில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் செலுத்த வேண்டிய நிலுவையாக ரூபா 17,467,351.85 (15,189,001.64 + VAT 2,278,350.24) செலுத்தப்பட்டுள்ளது .

வழக்கு நடவடிக்கை -லொயிட் டெஸ்டின் நெவிகேசன் எஸ்.பீ.ஏ டீ.சீ.பொ 301944/எம் ஆர்

சம்பவம் கூற்று, சட்டரீதியான பிணக்குகள் போன்று சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தை கவனித்து முழுமையான மற்றும் இறுதியாக நிதி ஈடுசெய்தலாக 500,000 அமெரிக்க டொலர் தொகை செலுத்தப்பட்டு குறித்த பின்னர் தீர்ப்பதற்கு பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டு மேற்கொண்டும் அமைச்சரவையின் அங்காரமும் பெற்றுக் கொள்ளப்பட்டது .

<u>சூரியவெவ கிரிக்கெட் விளையாட்டரங்கு நிர்மாணிப்பதற்கான ஆகுசெலவு</u>

சூரியவெவ கிரிக்கெட் விளையாட்டரங்கு நிர்மாணிப்பதற்கு முன்வந்து நடவடிக்கை மேற்கொண்டதற்காக செலுத்தவேண்டிய நிதித் தொகையை தீர்ப்பதற்கு சைனா ஹாபர் இன்ஜினியரிங் கம்பனிக்கு ரூபா 4,002,420,638.73 செலுத்த வேண்டிய தொகை தொடர்பில் கவனத்திற் கொள்வதற்கு பணிப்பளார் சபை அங்கீகாரம் வழங்கியது. ஆயினும் பிரதான சட்ட அலுவலரின் அபிப்பிராத்திற்கேற்ப உரிய உரித்துத் தொகை ரூபா 5,838,489,259.62 ஆகும். எனவே குறித்த தொகை இலங்கை கிரிக்கட் நிறுவனத்திலிருந்து கிடைக்கப்பெற வேண்டியதும் சைனா ஹாபர் இன்ஜினியரிங் கப்பலுக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன .

**<u>மேன் முறையீட்டு ஆணைக்குழு மற்றும் மேன் முறையீட்டு நீதிமன்றத்திலுள்ள வழக்குகள்</u>**

2006 உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் இல : 10.25 (1) பந்திக்குப் பதிலாக குறித்த சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டு கடன் வட்டி குறைப்பதற்கான மேற்கொள்ளப்பட்டுள்ள வேண்டுகோளும் உள்நாட்டு இறை வரிச் சட்டத்தின் 25 (1) பிரிவின் கீழான வெளிநாட்டு கடன் தொடர்புபடும் வெளிநாட்டு செலாவணி நட்டம் குறைக்கப்படுவதற்கான வேண்டுகோளும் புறக்கணிக்கப்பட்டு 2007/2008, 2008/2009,2009/2010 மற்றும் 2010/2011 போன்ற மதிப்பீட்டு ஆண்டுகளுக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகாரசபையில் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் அபிப்பிராயத்திற்கு எதிராக வரி மேன் முறையீட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டது . 2008/2009 மற்றும் 2009/2010 வருடங்களுக்கான வரி மேன்முறைப்பாட்டு ஆண்டுடன் வழக்கு விசாரிக்கப்பட்டு வருவதோடு சட்டரீதியாக சிக்கல்களின் அடிப்படையில் இலங்கை துறைமுக அதிகாரசபை மேன்முறையீட்டு நிர்மாணித்தல் முன்வைத்துள்ளது . 2009/2010 ஆண்டின் வரி மேன் முறையீட்டு ஆண்டுடன் வழக்குத் தீர்ப்பு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக வழங்கப்பட்டுள்ளது . (உதா கையொப்பமிடப்படாதிருந்ததனால் மதிப்பீடு செல்லுபடியற்றது .) இறைவரி திணைக்களத்தினால் வரிமேன் முறையீட்டு ஆண்டுக்குள் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது .

**38** **எதிர்பாராத பொறுப்புக்கள்**

பொதுவான வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகையில் எழும் சட்டரீதியான உரித்துக்களுக்காக அதிகாரசபை எதிர்பாராத பொறுப்புக்களை சந்திக்க நேரிடும். ஏற்பாடுகளாக (குறிப்பு 29) அடையாளம் காணப்படாது விடின் முகாமைத்துவத்தினால் இந்த உரித்துக்கள் நியாயமற்றதென கருதுவதோடு அவை

திர்க்கப்படுதலுக்காக வளங்கள் வெளியே செல்லாத தன்மை குறைக்கப்படுவதாகக் கருதப்படும். இந்த கணக்கீடுகள் அதிகாரசபையின் சட்டப் பிரிவின் சட்ட ஆலோசனைகளோடு இணைப்பாக்கம் செய்யப்படுகின்றது . இதன்படி பின்வரும் வழக்குகளுக்கான சட்ட உரித்துகளுக்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வில்லை.

| வழக்கு இலக்கம் | முறைப்பாட்டாளர் / | உரிமைகோரும் தொகை (ரூபா) |
|---|---|---|
| SC/FR/ 136/16 | டாக்டர். டப்ளியூ.வீ.தனுஷ்கா தில்ருக்ஷி | 600,000 |
| SC/FR/ 57/16 | கெப்டன் சன்ன அபேகுணவர்தன | 20,000,000 |

**39** **குழுமத்தின் நிதிக் கணக்கீடுகளின் சீசெய்தல் மீளப் பிரகடனப்படுத்துதல்**

2015 ஆண்டிற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் வெ ளியிடப்பட்டதன் பின்னர் உப கம்பனி மற்றும் துணைக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கு கிடைக்கப்பெற்றதன் பின்னர் பொருட்கள் மீளவும் வகைப்படுத்தப்பட்டன .

| | | வகை | |
|---|---|---|---|
| **டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிறுவனம் தொடர்பாக பிரகடனத்தின் மீதான தாக்கங்கள்** | குறிப்பு | 2015 ஆண்டில் கணக்காய்வுக்குட்பட்ட கணனிகள் | 2015 ஆண்டில் கணக்காய்வுக்குட்படாத கணனிகள் |
| சொத்துக்கள், உபகரண வகை மற்றும் உபகரணங்கள் | 3 | 290,321,792,054 | 290,317,250,596 |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள் | 12 | 4,086,326,318 | 4,271,723,172 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 15 | 13,093,375,135 | 13,056,431,004 |
| காசு மற்றும் சம காசு அலகுகள் /காசுப் பாய்ச்சல் அறிக்கை | 16 | 1,389,560,597 | 1,426,507,729 |
| தடுத்து வைக்கப்பட்ட ஈட்டல்கள் (கடன் மீது) | | (15,191,429,584) | (15,191,320,216) |
| ஓய்வு பெறுதலின் அனுகூல பொறுப்புக்கள் | 25 | 3,641,631,561 | 3,641,630,483 |
| **2015 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு விபரமான வருமான கூற்றின் மீதான தாக்கம்** | | | |
| நேரடி செலவினம் | 31 | 23,862,387,565 | 23,862,350,795 |
| நிர்வாக செலவினம் | 33 | 28,404,561,373 | 28,404,309,572 |

**41** **<u>வெ ளிநாட்டு செலாவணி கிடைக்கப்பெறுதல்கள் / நட்டம்</u>**

இலங்கை கணக்கீட்டு நியமம், 1 கேற்ப வெ ளிநாட்டி செலாவணி கிடைக்கப்பெறுதல்கள் / நட்டம் சீர்செய்யப்படுவதற்காக மேலதிக பொருட்கள் உட்சேர்க்கப்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதால் விபரமான வருமான கூற்று அதனுள் சேர்க்கப்பட்டுள்ளமையானது அவ்வாறதொரு முன்வைத்தலானது இலங்கை துறைமுக அதிகாரசபையின் விளக்கத்திற்கு காரணமாகின்றதனாலும் இரு பந்தியின் நிதி செயலாற்றியின் இரண்டு ம்முடிவின் தூய இலாபத்திற்கு இதன் மூலம் கடுமையான தாக்கம் ஏற்படுவதாகும் .

**42** **<u>ஒன்றிணைந்த நிதிக்கூற்று 2016</u>**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் உப கம்பனிகளிலான ஜயகொள்கலன் முனையம் (JCT) மற்றும் மாகம்புர துறைமுக முகாமைத்துவ ஆலோசனைக் கம்பனி (SLPMCS) இதுவரை அவர்களின் நிதிக்கூற்றுக்களை முன்வைக்கவில்லை . எனவே இலங்கை துறைமுக ம.அ கம்பனியின் இலாப்ப் பங்குகள் தொடர்பில் கவனிக்காமலும் ஜய கொள்கலன் முனையத்தினதும் மாகம்புர துறைமுக ம.க சேவைக் கம்பனியினதும் வரைவு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கருத்திலெடுக்கப்பட்டு ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன .

**43** **<u>ஒலுவில் துறைமுகம்</u>**

ஒலுவில் துறைமுக நிர்மாணத்தின் ஆகுசெலவி தொடர்பான கணக்கீடுகள் தொடர்ந்தும் தயாரிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன . மொத்த நிரமாண ஆகுசெலவில் சுமார் 7% இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது . எனவே செய்திட்டத்தின் ஒட்டுமொத்த ஆகு செலவுடன் ஒப்பிடப்படும் போது பொறுப்பேற்கப்படும் ஆகு செலவு நியாயமாக பெறுமதி காட்டாததால் அதை சொத்தொன்றாக பொறுப்பேற்கப்படவில்லை . எனவே இதை அரசாங்க கணக்காய்வு சிக்கல்களுக்கான கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாளர் பொது திறைசேரி பணிப்பாளருக்கு அறிவித்துள்ளது .

**44** **<u>கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்தின் காணிப்பெறுமதி முதலீட்டு</u>**

கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்தின் காணிப்பெறுமதி முதலீட்டுச் சிக்கல்களுக்கு கணக்காய்வாளர் நாயகத்தின் பெறப்படுவதற்கு அனுப்பி வைக்கப்படும் .

2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது

**39 தொடர்புபடும் தரப்பினர்களை வெளிப்படுத்துதல்**

இலங்கை பொது திறைசேரி ,அரசாங்கத்துடன் தொடர்புபடும் நிறுவனங்கள் ,உப கம்பெனிகள் , துணைக் கம்பெனிகள் மற்றும் முகாமை நபர்கள் அதிகாரசபையுடன் தொடர்புபடும் தரப்பினர்கள் போன்றவை உள்ளடங்கும்

**39.1 பூர்வாங்க முகாமைத்துவ நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்**

இலங்கை கணக்கீட்டு (LKAS 24) நியமங்களுக்கேற்ப "சம்பந்தப்பட்ட தரப்பினர்களை வெளிப்படுத்துதல் , திட்டமிடுதல் , மேற்பார்வை மற்றும் ஏதாவதொன்றின் செயற்பாடுகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிர்வகிக்கப்படுவதற்காக பூர்வாங்க முகாமைத்துவ நகர்கள் இதற்கான பொறுப்புக்களை வகிக்கின்றது .

இதன்படி நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களைக் கொண்ட பணிப்பாளர் சபை பூர்வாங்க முகாமைத்துவ நபர்களாக வகையீடு செய்துள்ளது .

| பூர்வாங்க முகாமைத்துவ நபர்களுடனான மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு | 2016 | 2015 |
|---|---|---|
| | | - |
| சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கான குறுகிய கால அனுகூலங்கள் | 28,575,950 | 19,411,405 |
| செலுத்தப்பட வேண்டியுள்ள நிலுவைகள் - கடன் மற்றும் முற்பணம் | 699,940 | 1,366,140 |

**39.2 சம்பந்தப்படும் தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்**

அதிகாரசபையினால் பேணப்பட்டு வரும் விசேட சம்பந்தப்படும் தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு

| நிறுவனத்தின் பெயர் | தொடர்பு | பணிப்பாளர்களின் பெயர்கள் / பிரதிநிதிகள் | கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி | செலுத்த வேணடியுள்ள மீதி | கிடைக்க பெற்றவை |
|---|---|---|---|---|---|---|
| இலங்கையின் பொதுத்திறைசேரி | பிரதான பங்களிப்பு | திரு.எச்.ஜீ.சுமனசிங்ஹ | வழங்கப்பட்ட கடன் | - | | |
| | | | மீள் செலுத்தப்பட்ட கடன் | 5,312,689,562 | | |
| | | | செலுத்தப்பட்ட வட்டி | 1,101,943,813 | | |
| அரசுடன் தொடர்புடைய நிறுவனங்கள் | | | | | | |
| இலங்கை சுங்கம் | தொடர்புபடும் நிறுவனம் | திரு. ச்சூலானந்த பெரேரா | - | - | - | - |
| மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு | தொடர்புபடும் நிறுவனம் | திரு டப்.எம்.எம். ஆர் அதிகாரி | - | - | - | - |
| வ/ப கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் தகவல் | தொடர்புபடும் நிறுவனம் | திரு. தம்மிக்க ரணதுங்க | - | - | - | - |
| ஆராய்ச்சி நிறுவனம் | | பேராசிரியர் பிரசன்ன பெரேரா | - | - | - | - |
| ஏனைய சம்பந்தப்படும் நிறுவனங்கள் | தொடர்புபடும் நிறுவனம் | - | வழங்கப்பட்ட சேவைகள் | 141,385,609.70 | 4,544,403.29 | 293,757,830.73 |
| | | | வழங்கப்பட்ட சேவைகளுக்கான நிதி செலுத்துதல் | 136,841,206.41 | | - |
| | | | துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சலைகள் அமைச்சிற்கான எரிபொருள் வழங்குதல் | 1,111,744 | | |
| இலங்கை துறைமுக மற்றும் ஆலோசணை தனியார் கம்பனி | | திரு. தம்மிக்க ரணதுங்க | காப்பாளர் சேவைக்கான செலுத்துதல் | 35,631,204 | 8,330,122 | - |
| | | பேராசிரியர் பிரசன்ன பெரேரா | சம்பளம் வழங்கல் | 102,036,116 | 16,054,805 | - |
| | | திரு.டிஜே.ஜீ.சுரேஷ் எதிரிசிங்ஹ | கிடைக்கப்பெற்ற சேவைக்கான செலுத்துதல் | 62,148,858 | 19,100,211 | - |
| | | | கிடைக்க வேண்டிய பங்கிலாபம் | 123,104 | - | 123,104 |
| ஜய கொள்கலன் முனையம் | துணைக் கம்பெனி | திரு. தம்மிக்க ரணதுங்க | நிர்வாக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் கட் | 208,090,153 | 24,130,894 | - |
| | | பேராசிரியர் பிரசன்ன பெரேரா | கிடைக்க வேண்டிய பங்கிலாபங்கள் | 3,314,700 | | |
| | | திரு. சஜ்ஜீவ விஜேரத்ன | எரிபொருள் வழங்கல் | 856,309 | | |
| | | | மருந்து வினியோகம் | 61,218 | 80,251.07 | - |
| | | | காப்பாளர் சேவைக்கான கொடுப்பணவுகள் | 2,275,071 | | |
| வ/ப சவுத் ஏஷியா கேட்வே டேர்மினல்ஸ் கம்பனி | தொடர்புபடும் கம்பனி | திரு. தம்மிக்க ரணதுங்க | கிடைக்கப்பெற்ற வாடகை | 427,218,477 | - | 32,340,563 |
| | | பேராசிரியர் பிரசன்ன பெரேரா | கிடைக்கப்பெற்ற இறைமைக் கட்டணம் | 819,509,127 | - | 79,049,988 |
| | | | கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 848,101,812 | - | |
| | | | ஆண்டினுள் எதுவித கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெற வில்லை | | - | |
| இலங்கை நிரக்கரி கம்பனி (தனியார்) | தொடர்புபடும் கம்பனி | திரு. சஜ்ஜீவ விஜேரத்ன | கிடைக்கப்பெற்ற குத்தகை / வாடகை | 1,173,016,350 | | |
| கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைய கம்பெனி (CICT) | தொடர்புபடும் கம்பனி | திரு. தம்மிக்க ரணதுங்க | இறைமைக் கட்டணம் | 1,164,482,785 | - | - |
| | | பேராசிரியர் பிரசன்ன பெரேரா | கிடைக்கப்பெற்ற மாறுபடும் வட்டி | 39,080,786 | - | 69,668,813 |
| | | | ஒரு தடவையில் மாத்திம் பெற்ற லாபம் | 103,534,286 | - | 485,399 |
| | | | CICT யினால் முதல் தடவையாக செலுத்திய பணம் | 1,503,000,000 | - | - |
| | | | *செலுத்த வேண்டிய நிர்வாக கட்டணம் கீழே செலவினம் | | | |
| | | | குறைக்கப்பட்டதன் பின்னர் மேற்குறித்த க/ செ | | | |
| | துணைக் கம்பெனி | திரு. தம்மிக்க ரணதுங்க | சம்பளம் | 2,615,749.55 | | |
| | | பேராசிரியர் பிரசன்ன பெரேரா | வாகனங்களுக்கான எரிபொருள் | 3,934,926.03 | | |
| | | திரு. சஜ்ஜீவ விஜேரத்ன | தொலைபேசிக் கட்டணங்கள் | 14,259.74 | | |
| | | திருமதி . சிராணி வன்னியாராச்சி | கடன் வட்டி | 46,366,696.73 | | |
| | | திரு.டிஏ.ஜே.ஐ.பெரேரா | காப்பறுதி கட்டணம் | 1,619,775.49 | | |
| | | | உபகரணங்கள் வாடகை எலுத்தலுக்கான கட்டணம் | 2,516,833.00 | | |
| | | | பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவினம் | 19,369,503.35 | | |
| | | | சட்ட நடவடிக்கைகளுக்கான கட்டணம் | 500,000.00 | | |

அடைப்புக்குள் இருக்கும் கழித்தல்கள் கணிக்கப்படுகின்றன .

நிதிக் கூற்றுக்களின் பாவனை காரணமாக அதிகாரசபைக்கு பின்வரும் இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியேற்படும்.

1. கடன் இடர்பாடு
2. ஒப்புரவு இடர்பாடு
3. சந்தை இடர்பாடு (நிதி மற்றும் வட்டி விகித இடர்நேர்)

அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்கள் சமனான பங்குகளிலான முதலீடுகள் ( ஆவண மற்றும் ஆவணப்படுத்தப்படாத), கடன் முறிகளின் மீதான முதலீடுகள், காலத்திற்கேற்ற வைப்புக்கள், நிதி மற்றும் நிதிசார் சந்தை முதலீடுகள் போன்றவற்றைக் கொண்டிருக்கும். காலத்திற்கேற்ற வைப்புக்கள், நிதிசார் சந்தைகளிலான முதலீடுகளின் பிரதான நோக்கம் இயக்கங்களுக்கான ஒப்புரவினை அதிகரித்தலும் பேணிச் செல்வதும் ஆகும். சமனான பங்குகளிலான மற்றும் கடன்முறி காப்புறுதிகளிலான முதலீடுகள், மூலோபாய முதலீடுகளாக இருப்பதோடு வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள் போன்ற வேறு நிதிசார் ஆவணங்களும் அதன் வியாபார நடவடிக்கைகளின் போது நேரடியாக எழும் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவையும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வசமுள்ளன.மேலும் துறைமுக விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்தும் நிதி நிறுவனங்களிடமிருந்தும் பெறப்பட்டுள்ள கடன்களுக்கான வட்டிகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

1. **கடன் இடர்பாடு**

கடன் இடர்பாடு என்பது வாடிக்கையாளரொருவர் உடன்படிக்கை மீதான பொறுப்புக்களை செலுத்தத் தவறும் பட்சத்தில் , அதிகாரசபைக்கு ஏற்படக் கூடிய நிதிசார்ந்த நஷ்டம் கடன்இடர்பாடாகும். இலங்கை படைகள், ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு கடன் முறிகள் உள்ளிட்ட வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டியவற்றிலிருந்து பிரதானமாக இது எழுகின்றது.

**வியாபார கிடைக்கப்பெறுதல்கள்**

இலங்கை துறைமுக அதிகாரசபையானது கப்பல் முகவர்கள் மற்றும் அரச நிறுவனங்களோடு பிரதானமாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. சென்ற கால அனுபவமும் கப்பல் முகவர்களினது நிதி சார்ந்த சான்றுறுதி போன்ற ஏனைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு கப்பல் முகவர்களின் கடன் நிலைமையை முகாமைத்துவம் மதிப்பிடுகின்றது. இதற்குப் புறம்பாக முகாமைத்துவ குழுவிலும் பணிப்பாளர் சபை கூட்டத்திலும் இருக்கும் அடிப்படையின் மீது செலுத்துவதற்குள்ள நிலுவைகளும் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

வர்த்தக கிடைக்கப்பெறுதல்கள் தொடர்பில் ஏற்படும் நஷ்ட மதிப்பீடுகளில் காண்பிக்கப்படும் பாதிப்பேற்படுத்துதல்களுக்கான ஏற்பாடுகள் (நிதிசார் கூற்றுக்களின் 2.7 ஆம் குறிப்பு விபரத்தை பார்க்கவும்) இலங்கை துறைமுக அதிகார சபையினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. விசேட வாடிக்கையாளர்களுக்கு வெவ்வேறாக மதிப்பிடப்படுதலில் அவர்களுக்கு தனியாக ஏற்படும் பாதிப்புகளுக்கான நஷ்டங்கள் விசேடமில்லாத வாடிக்கையாளர்களுக்கான ஒட்டு மொத்த பாதிப்புகளின் ஏற்பாடுகள் பிரதான காரணிகளாகும். செலுத்துதல் முறையின் வரலாற்று தரவுகளைக் கொண்டு ஒட்டுமொத்த பாதிப்பு ஏற்பாடுகளின் நஷ்டங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஏற்படுத்தப்பட்ட பாதிப்பேற்படுத்தும் கொள்கைக்கேற்ப பாதிப்பேற்படுத்தும் நஷ்டங்கள் அளவீடு செய்யும் பொருட்டு இலங்கைப் படைகள், ஏனைய அரச நிறுவனங்கள், வழக்கு நடவடிக்கைகளுக்கு உட்பட்டுள்ள கப்பல் முகவர்கள் மற்றும் விசேட கப்பல் முகவர்கள் தொடர்பில் தனிப்பட்ட வகையில் கலந்தாலோசிக்கப்பட்டன. ஏனையவை ஒட்டுமொத்தமாகவும் கலந்தாலோசிக்கப்பட்டன.. வியாபார கிடைக்கப்பெற வேண்டியவை மற்றும் பாதிப்பேற்படுத்தும் நஷ்டங்களுக்கான ஏற்பாடுகளின் விபரங்களுக்கு தயவு செய்து நிதிசார் கூற்றுக்களின் 12 ஆம் குறிப்பைப் பார்க்கவும்.

**ஏனைய நிதிசார் சொத்துக்கள்**

காலத்திற்கேற்ற வைப்பு நிதி, காசு,காசு சம மதிப்புக்கள் மற்றும் கடன் முறிகளின் மூலதன முதலீடுகளினால் அதிகாரசபை எதிர்கொள்ளும் ஏனைய நிதிசார் சொத்துக்களிலிருந்து எழும் கடன்

இடர்பாட்டினுள் இது அடங்கும். இந்த நிதிசார் ஆவணங்களில் முன்கொண்டு வரும் நிதிக்குச் சமனான உச்ச வெளிப்பாட்டுடன் தரப்பினர்களினது உடன்பாடுகளின் புறக்கணித்தல்களின் மீது எழும் கடன் இடர்நேர் நிலைமையினை அதிகாரசபை நிர்வகிக்கின்றது. அரச நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் பிரதானமாக அதில் நிதி ஈடுபடுத்துதலின் மூலம் இந்த நிதிசார் ஆவணங்கள் தொடர்பில் அதிகாரசபை அதன் கடன் இடர்நேர் நிலைமையினை முகாமைத்துவம் செய்கின்றது.

2. **ஒப்புரவு இடர்பாடு**

அதிகாரசபைக்குரிய நிதிசார் பொறுப்புக்களை நிறைவேற்றும் ஆற்றல் இல்லாமல் போகுதல் ஒப்புரவு இடர்பாடு எனப்படும். பொதுவான மற்றும் எதிர்பாராத சந்தர்ப்பங்களில் பொறுப்பேற்க முடியாத நஷ்டம் எதிர்நோக்காமல் அல்லது அதிகாரசபையின் புகழ் நாமத்திற்கு பாதிப்பேற்படுத்தாத முறையில் கவனம் எடுக்க முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் உரிய நேரத்தில் நிதியை செலுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் செலுத்தப்படுவதற்கு போதுமானளவு நிதி வைத்திருத்தல் அதிகாரசபையின் ஒப்புரவு முகாமைத்துவம் செய்யும் முறையாகும்.

வருடந்தோறும் இயக்க காசுப் பாய்ச்சல் மற்றும்( மீண்டு வரும்/ வரவு செலவு) மூலதன வரவு செலவுகளின் முன்மொழிவுகள் தயார் செய்யப்படுகின்றன. இயக்க தேவைப்பாடுகளுக்குப் போதுமான நிதி அதிகாரசபையில் உள்ளதென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு மீண்டு வரும் வரவு செலவு மற்றும் மூலதனம் ஆகிய இரண்டும் ஒப்புரவு தேவைப்பாடுகளும் நிதிப் பகுதியினால் கண்காணிக்கப்படுகின்றன. அறிக்கைகள் தயாரிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் ரூபா (18,325,552,004/= 2015 : ரூபா 13,917,776,846/=) விற்கு அதிகாரசபையினால் காலத்திற்கேற்ற வைப்புக்கள், குறுகிய கால அரசாங்க பிணைமுறிகள் மற்றும் ஏனைய ஒப்புரவு சொத்துக்கள் பேணிச் செல்லப்பட்டன.

உடன்பாடுகளின்படி முதிர்வடையும் திகதியில் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதி நாளின் கால எல்லை அடிப்படையாகக் கொண்ட அதிகாரசபையின் நிதிசார் பொறுப்புக்களினது முதிர்ந்த பகுப்பாய்வுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன. உடன்பாட்டின் மீதான கழிவு கிடைக்கப்பெறாத காசுப் பாய்ச்சல்கள் அட்டவணையின் பெறுமானங்களில் தெரிவிக்கப்படுகின்றன.

| நிதிசார்ந்த பொறுப்புக்கள் | 2016 டிசெம்பர் 31 | | | 2015 டிசெம்பர் 31 மீள்குறிப்பிடப்பட்ட | | |
|---|---|---|---|---|---|---|
| | ஒரு வருடத்திற்கு குறைந்த | ஒரு வருடத்திற்கு கூடிய | மொத்தம் | ஒரு வருடத்திற்கு குறைந்த | ஒரு வருடத்திற்கு கூடிய | மொத்தம் |
| கடன் வாங்குதல் அரசாங்கம் | 10,285,274,220 | 214,555,128,086 | 224,840,402,306 | 11,834,537,774 | 206,425,156,412 | 218,252,694,186 |
| கடன்யளித்தல் நிதி நிறுவனங்கள் | 1,912,413,794 | 10,593,136,572 | 12,505,550,336 | 3,022,817,734 | 11,866,367,402 | 14,889,239,136 |
| வர்த்தக மற்றும் ஏனைய கடனாளிகள் | 1,429,776,503 | - | 1,429,776,503 | 1,044,673,363 | - | 1,044,673,363 |
| **மொத்தம்** | 13,627,464,517 | 225,148,264,658 | 238,775,729,175 | 15,902,082,871 | 218,291,523,814 | 234,193,606,685 |

3. **சந்தை இடர்பாடு**

அதிகாரசபையின் வருமானத்திற்கு அல்லது நிதிசார் ஆவணங்களில் கொண்டு வரப்பட்ட தடுத்து வைக்கப்பட்டுள்ள பெறுமானத்திற்கு தாக்கமேற்படுத்தும் வெளிநாட்டு பரிமாற்ற விகிதங்கள் மற்றும் வட்டி விகிதங்கள் போன்ற சந்தை விலைகள் மாற்றமடையும் நிலை சந்தை இடர்பாடாகும்.

### 3.1 நிதி இடர்பாடு

அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியினுள் இலங்கை மத்திய வங்கியானது அ.டொலருக்கு சார்பாக இலங்கை ரூபாவினை மிதக்க இடமளித்தலின் பின்னர் இலங்கை ரூபாவிற்கு சார்பாக அ.டொலரின் பெறுமதியின் ஏற்றத்தாழ்வினால் அதிகாரசபைக்கு நிதி இடர்நேர் நிலைக்கு முகம்கொடுக்க வேண்டியேற்படும்.கம்பனியின் அநேக கொடுக்கல் வாங்கல்கள் அதில் பயன்படுத்தப்படும் நிதி அலகான இலங்கை ரூபாவினால் நடைபெறுகின்றன. ஆனால் துறைமுக விரிவாக்கல் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சில வங்கிகளினது நிலுவைகள்,கப்பல் முகவர்களிடமிருந்து பெறவேண்டியவை (வ/ப APL இலங்கை தனியார் நிறுவனம்) போன்ற வட்டியுடனான கடன் பெறுதல் வெளிநாட்டு நாணய (யப்பான் யென் மற்றும் அமெரிக்க டொலர்) பயன்பாட்டில் நடைபெறுகிறது.

அமெரிக்க டொலர் மிதப்பதன் பயனாக 2016 ஆண்டின் அறிக்கை செய்யப்படும் காலப் பகுதியில் அமெரிக்க டொலருக்கு சார்பாக இலங்கை ரூபா தேய்வடைந்ததனால் கையாளல்களுக்கான தாக்கம் ரூபா 10,038,302,300/= ஆக இருந்ததோடு இதுவானது வ/ப APL இலங்கை தனியார் கம்பெனிக்கு வழங்கப்பட்ட சேவைகள், இன்வோயிஸ் இடுதல் மற்றும் பெறப்பட்ட கடன் மீள் செலுத்தப்படுதலில் ஈட்டப்பட்டது. ஆனால் ஒரேயோரு நிதி அலகு ஊடாக நடாத்திச் செல்லப்பட்ட நிதி வைப்புக்கள் மூலம் மீள் செலுத்துதலின் பெறப்பட்ட கடன் மீள் செலுத்துதல் மற்றும் நிதியோட்டத்தின் தாக்கம் குறைக்கப்படுவதற்காக அதிகார சபையினால் ஒரேயோரு நிதி அலகு பயன்படுத்தப்படுகின்றது.

வட்டியுடனான கடன் மற்றும் வெளிநாட்டு நாணய மூலம் காட்டப்பட்டுள்ள கடன் பெறுதல் பற்றியதான தகவல்களுக்கு தயவு செய்து நிதி கூற்றின் பக்க இல.21 மற்றும் 22 ஐ பார்க்கவும்.

**வட்டி இடர்நேர்**

அரச முறிகள், வங்கி வைப்புக்கள் நிலையானதும் தொடர் வட்டியுடனான கடன் பெறுதல் தொடர்புபடும் சந்தை வட்டி விகிதத்தின் வித்தியாசங்கள் அதிகார சபையின் வட்டி இடர்நேருக்கு உட்படும்.

ரூபா 54,103,443,683.80/= (2015 : ரூபா 56,678,136,562/=) அதிகார சபையின் வட்டியுடனான கடன் மற்றும் பெறுதல்களின் வட்டிகளினது விகிதங்களுக்கேற்ப கணக்கிடப்படுவதுடன் ஏனைய நிதியான ரூபா 183,242,508,989.33/= (2015 . ரூபா 176,470,796,760/=) இன் வட்டி நிலையான வீகிதத்திற்கேற்ப கணக்கிடப்படும்.

அரச வங்கிகள் மற்றும் அரசுடனான வைப்புக்கள் அடங்கலான நிதி மற்றும் வங்கி மீதிகள் அதிகாரசபைக்கு உண்டு. அதிகாரசபையினால் முனைப்பாக வட்டி விகித நகர்வுகள் மேற்பார்வை செய்யப்படுதலின் ஊடாக வட்டி இடர்பாடு கண்காணிக்கப்படுகின்றது.

**2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது**

கடன் வசதி பெறுதலின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்

| கடன் பெயர் | கடன் வழங்கும் நிறுவனம் | நாணயம் | வட்டி விகிதம் | கடன் தொகை (கடன் நாணயத்தில்) | 2016/12/31 ஆம் திகதிக்கான (நிலுவை) | கடன் பெறுதலின் செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| JBIC SLP-08 | JAICA | ஜ.யென் | 3.25% | 2,578,954,670 | - | |
| JBIC SLP-12 | JAICA | ஜ.யென் | 2.75% | 1,951,977,748 | 62,590,571 | |
| JBIC SLP-23 | JAICA | ஜ.யென் | 2.50% | 5,703,407,055 | 1,279,010,117 | |
| JBIC SLP-27 | JAICA | ஜ.யென் | 2.50% | 10,432,338,189 | 3,007,933,389 | |
| JBIC SLP-30 | JAICA | ஜ.யென் | 2.60% | 19,962,268,331 | 7,034,743,474 | |
| JBIC SLP-33 | JAICA | ஜ.யென் | 2.60% | 6,828,220,432 | 3,062,522,449 | |
| JBIC SLP-41 | JAICA | ஜ.யென் | 2.60% | 4,878,185,478 | 2,500,462,664 | |
| JBIC SLP-46 | JAICA | ஜ.யென் | 2.60% | 2,644,187,565 | 2,287,141,069 | |
| JBIC SLP-67 i | JAICA | ஜ.யென் | 1.80% | 1,354,512,318 | | |
| JBIC SLP-67 ii | JAICA | ஜ.யென் | 0.75% | 217,445,997 | 1,295,478,780 | |
| JBIC SLP-85 | JAICA | ஜ.யென் | 0.30% | 14,495,000,000 | 587,997,712 | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி 2316 | ஆசிய அபிவிருத்தி வங்கி | அமெ.டொ | Libor+0.6% | 300,000,000 | 41,419,214,486 | |
| ஹொங்கொங் சங்ஹாய் வங்கி கூட்டுத்தாபனம் | ஹொங்கொங் சங்ஹாய் வங்கி கூட்டுத்தாபனம் | அமெ.டொ | 6 மாதங்கள் Libor+3.99% | 35,000,000 | - | |
| இலங்கை வங்கி | இலங்கை வங்கி | அமெ.டொ | 6 மாதங்கள் Libor+4% | 62,512,266 | - | |
| Exim வங்கி - மலேசியா | Exim வங்கி - மலேசியா | அமெ.டொ | 1-2 வருடம் 3 Mon. Libor+3.3% & 3-5 வருடம் 3 மாதம். Libor+2% | 4,000,000 | 30,332,000 | |
| கடன்பெறுபவரின் கடன் பணம் | Exim வங்கி - சீனா | அமெ.டொ | 6.30% | 306,726,736 | 33,831,401,272 | |
| செய்திட்டத்தின் பயன்பாட்டு வேலைகள் மற்றும் உபகரணங்களை வழங்குதலுக்கான அரசாங்கத்தின் சலுகைக் கடன் | Exim வங்கி - சீனா | RMB | 2.00% | 960,000,000 | 21,283,197,677 | |
| அரசாங்கத்தின் சலுகைக்கான கட்டம் II | Exim வங்கி - சீனா | RMB | 2.00% | 1,000,000,000 | 5,424,953,819 | 113,793,767 |
| கடன் பெறுபவரின் கடன் பணம் | Exim வங்கி - சீனா | அமெ.டொ | 6.50% | 65,094,508 | 9,872,233,068 | |
| தேர்ந்தெடுத்த வாங்குபவரின் கடன் பணம் | Exim வங்கி - சீனா | அமெ.டொ | 2.00% | 600,000,000 | 90,996,000,000 | 1,751,858,659 |
| மேலதிக கடன் - கப்பல்களுக்கான எண்ணெய் வழங்குதல் மற்றும் எண்ணெய் தாங்கி வசதிகள் | இலங்கை வங்கி | அமெ.டொ | Libor+ 7% | 20,879,037 | 2,229,550,361 | |
| கிழக்கு கொள்கலன் முனையம் | இலங்கை வங்கி | அமெ.டொ | 6 மாதங்கள் Libor+ 4.25% | 80,000,000 | 10,276,000,005 | 131,065,302 |
| | | | **மொத்தம்** | | **236,480,762,913** | **1,996,717,728** |
| | | **சேர்ந்த வட்டி** | | | 1,406,720,797 | |
| | | கொடுக்கல் வாங்கலின் ஆகுசெலவு/ ஹம்பாந்தோட்டை துறைமுக கட்டம் 1 இன் முகாமைத்துவ கட்டணங்கள் | | | (52,441,037) | |
| | | கொடுக்கல் வாங்கலின் ஆகுசெலவு/ ஹம்பாந்தோட்டை துறைமுக கட்டம் 11 இன் முகாமைத்துவ கட்டணங்கள் (யூஆன்) | | | (107,250,000) | |
| | | கொடுக்கல் வாங்கலின் ஆகுசெலவு/ ஹம்பாந்தோட்டை துறைமுக கட்டம் 11 இன் முகாமைத்துவ கட்டணங்கள் (அமெ.டொலர்) | | | (381,840,000) | |
| | | | | | **237,345,952,673** | |
| | | குறிப்பு 21 | கடன் பெறுதல்/ இலங்கை அரசாங்கம் | | 224,840,402,306 | |
| | | குறிப்பு 22 | கடன் பெறுதல் / நிதி நிறுவனங்கள் | | 12,505,550,367 | |
| | | | | | **237,345,952,673** | |


மொத்த வருமானம்
20,000
18,000
16,000
14,000
12,000
10,000
8,000
6,000
4,000
2,000
0
18,520
7,963
5,066
4,021
1,230
18,431
6,789
4,553
4,165
1,190
2016
2015
கப்பலோட்டம்
கப்பல் சுமை
வாப்பு கையாளல்
துறைமுக வசதிகள்
ஏனையவை


சேவைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் -2016
இ.து.அ.ச
3%
11%
22%
14%
50%
கப்பலோட்டம்
கப்பல் சுமை
வாப்பு கையாளல்
துறைமுக வசதிகள்
ஏனையவை


இயக்க மற்றும் ஏனைய செலவினங்கள்
60,000
50,000
40,000
30,000
20,000
10,000
0
-10,000
-20,000
ரூபா மில்லியன்
மேலதிக நேரம்
எரிபொருள்,மின்சாரம்,நீர்
சொத்துக்களின் பராமரிப்பு
ஏனையவை
செலவினம்
2016 செலவினம் ரூபா மில்லியன்
2015 செலவினம் ரூபா மில்லியன்
அதிகரிப்பு/ (குறைவு)
%


கப்பற் சரக்கு பரிமாண பகுப்பாய்வு (மெ/தொன்)
கொழும்பு துறைமுகம் (இ.து.அ.ச,எஸ்.ஏ.ஜீ.ரீ , சீ.ஐ.சீ.ரீ)
தொகை பிரிப்பு , மொத்தத் தொகை மற்றும் திரவம் 18%
மாற்றியேற்றல் கொள்கலன் 66%
உள்நாட்டு கொள்கலன் 16%


இயக்க வருமானம் பற்றிய பகுப்பாய்வு அனைத்து துறைமுகங்களும்
மாற்றியேற்றல் கொள்கலன் 18%
ஏனையவை 45%
உள்நாட்டு கொள்கலன் 28%
தொகை பிரிப்பு , மொத்தத் தொகை மற்றும் திரவம் 9%

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**பீஓஎஸ்/ஏ/எஸ்எல்பீஏ/எப்ஏ** **2017 ஆகஸ்ட் 23**

**தலைவர்,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை**

**இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று,காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் மொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 33 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு 2017 யூலை 24 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமகாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்வற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது

அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்திலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்மாணிப்பதற்காக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3 ) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 துணை மற்றும் இணைக் கம்பனிகள்

இலங்கை துறைமுக அதிகாரபையின் இரண்டு துணைக்கம்பனிகளாக வரையறுக்கப்பட்ட ஜய கொள்கலன் இறங்குதுறை கம்பனியும், வரையறுக்கப்பட்ட மகாம்புர துறைமுக முகாமைத்துவக் சேவை (தனியார்) கம்பனியும் இணைந்த கம்பனிகளாக வரையறுத்த துறைமுக முகாமைத்துவ மற்றும் ஆலோசனைச் சேவைக் கம்பனியும் காணப்படுகின்றன. துணைக்கம்பனிகளின் உரிமையாண்மை 100 சதவீதமாகவும் இணைந்த கம்பனியின் 39.97 சதவீதமாகவும் இருந்ததுடன் இம்மூன்று கம்பனிகளின் கணக்காய்வானது பிரசித்த கணக்காளர் தொழிலில் ஈடுபட்டுள்ள மூன்று கம்பனிகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 1.5. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்தியில் தரப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை துறைமுக அதிகாரசபையினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன. என்பது எனது அபிப்பிராயமாகும்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்- அதிகாரசபை**

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் தரப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன. என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) துறைமுக அதிகாரசபையின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இரண்டு துணைக்கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள்

பயன்படுத்தப்படாதிருந்ததுடன் வரைவு நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் ஒருங்கிணைந்த கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) துறைமுக அதிகாரசபையின் ஒரு துணைக்கம்பனியாகிய மாகம்புற துறைமுக முகாமைத்துவக் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நட்டம் ரூபா 1,960,685,373 ஆக இருந்தது. இதன் காரணமாக அத்திகதியில் உள்ளவாறான கம்பனியின் தேறிய சொத்துக்கள் ரூபா 1,885,685,373 மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததனால் அத்திகதியில் கம்பனி பாரியளவில் மூலதனப் பற்றாக்குறைக்கு முகம் கொடுத்திருந்தது. அதற்கிணங்க 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் 20 நாட்களுக்குள் பங்குதாரர்களின் அதிவிசேட பொதுக் கூட்டத்தைக் கூட்டி மேற்கூறிய விடயம் தொடர்பாக தெரியப்படுத்தப்பட வேண்டிய போதிலும் பணிப்பாளர் சபை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குத் தவறிவிட்டது. எவ்வாறாயினும் கம்பனி தனது நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் சமர்ப்பிக்கும் போதும் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் என்ற கருதுகோளினை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் மேலும் துறைமுக அதிகாரசபையின் நிதிப் பங்களிப்பு அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கும் பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்குமாக வழங்குமாறு ஒரு உறுதிப்படுத்தல் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மாகம்புற துறைமுக முகாமைத்துவக் கம்பனியின் பௌதீக இருப்பு பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட கப்பல் எண்ணெய் இருப்பினைத் தவிர்த்து ஏனைய இருப்பு பெறுமதி தொடர்பான இருப்பு மெய்மையாய்வு அறிக்கையும் பட்டியல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு ஆண்டின் போது இருப்பு சேதங்களுக்கான ஒதுக்கீடு ரூபா 585,496,943 தொகை சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் தீர்மானம் பெற்றுக்கொள்ளாமையால் அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்தி கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஈ) மாகம்புர துறைமுக முகாமைத்துவக் கம்பனியால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,931,386,743 தொகையான கடன் இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நடைமுறை மற்றும் நடைமுறையற்ற பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டு நிதி நிதிமைக்கூற்றில் காட்டுவதற்குப் பதிலாக நடைமுறையற்ற பொறுப்புக்களின் கீழ் மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. நியமத்தின் பிரகாரம் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டிருக்குமாயிருந்தால் கம்பனியின் தேறிய நடைமுறைச் சொத்துக்கள் மறைப் பெறுமதியாக இருந்திருக்கும். மேலும் இக்கடன் மீதிக்காக வங்கியிடமிருந்து மீதிகளை உறுதிப்படுத்தல்களும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - அதிகாரசபை

#### 2.3.1 இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம்

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் **(SLFRS) 07** இன் 14 ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்புக்களுக்காக பிணைவைத்துள்ள நிதிச் சொத்துக்களின் இயலளவுப் பெறுமதி வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 285,437,324 தொகையான வரிக்காக ரூபா 315 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்புக்களுக்குரிய கடப்பாடு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) **இலங்கை கணக்கீட்டு நியமம் - 01**

நியமத்தின் 15 ஆவது பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை நியாயமாகச் சமர்ப்பிப்பதற்காக தேவையான சந்தர்ப்பங்களில் மேலதிக தகவல்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபை மீளாய்வாண்டின் போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு மேற்கொண்ட ரூபா 16,614,911 தொகையான மீள வகைப்படுத்தலுக்கான செம்மையாக்கலுக்குரிய பொருத்தமான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **இலங்கை கணக்கீட்டு நியமம் - 08**

நியமத்தின் 49 ஆவது பிரிவின் பிரகாரம் முன்னைய ஆண்டின் பிழையான தன்மை, ஒவ்வொரு முன்னைய ஆண்டுகளிலும் செம்மையாக்க வேண்டிய அளவு முதலியன வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,277,779,765 தொகையான முன்னைய ஆண்டுகளுக்கான செம்மையாக்கல்களுக்குரிய அத்தேவைப்பாடுகள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) **இலங்கை கணக்கீட்டு நியமம் -16**

(i) நியமத்தின் பிரகாரம் அதிகாரசபையின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு பெறுமானத் தேய்விடலானது அவை பயன்படுத்துவதற்கான நிலைக்கு மாறிய திகதியிலிருந்து ஆரம்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும் முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 101,643,600 தொகையான பெறுமானத் தேய்வானது கணக்கீட்டு நியமம் 08 இன் 42 ஆம் பிரிவின் பிரகாரம் கடந்த காலத்திற்கேற்ப செம்மையாக்குவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு இலாபம் ரூபா 101,643,600 ஆல் குறைத்துக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 51 ஆம் பிரிவின் பிரகாரம் பயனுறுதி ஆயுள் காலம், எச்சப் பெறுமதி என்பன வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் வித்தியாசம் ஏற்படுமாயிருந்தால் அவ்வித்தியாசம் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 ன் பிரகாரம் கணக்குகளில் செம்மையாக்கப்படல் வேண்டும் எவ்வாறாயினும் அதிகாரசபை ரூபா 30,593,407,527 பெறுமதியான முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களை மீளாய்வாண்டின் இறுதியில் பயன்படுத்தியிருந்த போதிலும் அவற்றில் மோட்டார் வாகனம் மற்றும் கணனி துணைக்கருவிகள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது மீளாய்வு செய்யப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வு செய்யப்பட்ட அம்மோட்டார் வாகனங்களுக்கும் கணனிகளுக்குமாக எதிர்காலத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய பேறுமதி சுட்டிக்காட்டப்பட்டவாறு கணக்குகளில் தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) **இலங்கை கணக்கீட்டு நியமம் - 36**

நியமத்தின் 12 (ஈ) (எவ்) மற்றும் (ஜீ) பிரிவுகளின் பிரகாரம் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்படுகையிலும் விளைவற்ற சொத்தாக காணப்படுகையிலும் அவற்றில் பாதிப்புக்கள் ஏற்படலாம். என்பதுவும் வலியுறுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும் துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான ரூபா 6,987,638,384 பெறுமதியான ஹம்பாந்தோட்டை எண்ணெய்த் தாங்கி தொகுதியின் செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டிலிருந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தும் அச்சொத்துக்களுக்குரிய பாதிப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) **இலங்கை கணக்கீட்டு நியமம் - 37**

நியமத்தின் பிரகாரம் கப்பல் எண்ணெய் (Bunkering Oil) இருப்பை கொள்வனவு செய்வதற்காக ஒரு துணைக்கம்பனியினால் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அமெரிக்க ஐக்கிய குடியரசு டொலர்

28 மில்லியன் கடனுக்கான பிணை (Cooperate Guarantee) துறைமுக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) **இலங்கை கணக்கீட்டு நியமம் - 40**

நியமத்தின் 79 (I) (II) ஆம் பிரிவின் பிரகாரம் முதலீட்டு ஆதனங்களின் நியாயமான பெறுமதியை அளவீடு செய்யமுடியாத வேளையில் அவற்றின் பெறுமதியை அளவீடு செய்ய முடியாமைக்கான காரணத்தை காட்டவேண்டிய போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான ரூபா 4,064,444,037 பெறுமதியான முதலீட்டு ஆதனங்கள் கிரய முறைமையின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நியாயமான பெறுமதியில் சமர்ப்பிக்கப்பட்டமைக்கான காரணம் காட்டப்பட்டிருக்கவில்லை.

2.3.3 **கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒலுவில் துறைமுகம் 2013 ஆம் ஆண்டிலிருந்து துறைமுக அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அதற்காக பொதுத் திறைசேரியால் பெற்றுக்கொள்ளப்பட்ட யூரோ 46 மில்லியன் கடனானது கடன் அல்லது மானியமாக துறைமுக அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்படாமயின் காரணமாக அச்சொத்துக்களின் பெறுமதி துறைமுக அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2016 ஆம் ஆண்டில் துறைமுக அதிகாரசபையின் சொத்துக்கள் குறைத்துக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்காக சூரியவெவ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை விரிவாக்குதல் மற்றும் நிர்மாணித்தல் நடவடிக்கைகளைச் செயற்படுத்தல் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிர்மாணம் தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கும் அதிகாரசபைக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் முரண் கட்டளையின் (Variation Order) கீழ் நிர்மாணிக்கப்பட்ட மேற்கூறிய நிர்மானம் தொடர்பாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை துறைமுக அதிகாரசபையினால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,881 மில்லியன் வட்டியுடன் ரூபா 5,838 மில்லியன் மொத்தத் தொகை செலுத்தப்பட வேண்டும். இப்பணம் திறைசேரி அல்லது இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொண்டமைக்கு எதுவித உறுதிப்படுத்தலும் இல்லாதிருந்தும் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டியவையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் இப்பணம் கிடைக்கின்றமை நிச்சயமற்றதாகும்.

(இ) மாகம்புற துறைமுகச் சுற்றாடலில் அமைந்துள்ள ஒரு கட்டிடத்தின் இரண்டு பகுதிகளைப் பெற்றுக்கொண்ட குத்தகைதாரரின் மின்சார பயன்பாட்டிற்காக ஒரு துணைக் கம்பனியினால் இலங்கை மின்சார சபைக்கு ரூபா 4,471,406 செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகைதாரரினால் அப்பணம் அதிகாரசபைக்கு மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளதனால் அப்பெறுமதி அதிகாரசபையினால் துணைக்கம்பனிக்குச் செலுத்த வேண்டியதாக காட்டப்பட வேண்டிய போதிலும் பிழையாக மின்சார வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மாகம்புர துறைமுக வளவில் சலுகைக் காலத்தை மிகைத்து 07 நாட்களிலிருந்து 746 நாட்கள் வரை நிறுத்தி வைக்கப்பட்டு இன்று வரை விடுவிக்கப்படாத 243 வாகனங்கள் சம்பந்தமாக அறவிடப்படவேண்டிய நில வாடகையாகிய ரூபா 197,888,250 தொகையும் கொழும்பு துறைமுக வளவில் 21 நாட்களிலிருந்து 3039 நாட்கள் வரை நிறுத்தி வைக்கப்பட்டு இன்று வரை விடுவிக்கப்படாத 523 கொள்கலன்கள் சம்பந்தமாக அறவிட வேண்டிய நில வாடகையை

அறவிடுவதற்கும் பெற வேண்டியவையாக கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ரூபா 13,392,858 பெறுமதியான இரண்டு பஸ் வண்டிகள் தொடர்பான தகவல்கள் நிலையான சொத்துக்கள் கணக்கிலும் மோட்டார் வாகன அகற்றுதல் (Motor Vehicle Clearing) கணக்கிலும் உள்ளடக்கப்பட்டிருந்தமை காரணமாக அதிகாரசபையின் நிலையான சொத்துக்கள் ரூபா 13,392,858 ஆல் இரட்டைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது அதிகாரசபைக்கு ஒரு இணைந்த கம்பனிகளிடமிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 5,885,801 கணக்குகளில் தவிர்க்கப்பட்டிருந்தது.

(எ) அதிகாரசபைக்குச் சொந்தமான இணைந்த கம்பனியின் 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 12,531,823 தொகையான இலாபத்தின் அடிப்படையில் அதிகாரசபைக்கு கிடைக்கவேண்டிய 39 சதவீதமான பங்கு கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யாமையின் காரணமாக அதிகாரசபையின் இலாபம் ரூபா 4,885,865 ஆல் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசம்

2016 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வெளிநாட்டுக் கொள்வனவு அகற்றல் கணக்கின் மீதி ரூபா 754,995,979 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் அம்மீதி ரூபா 733,955,307 ஆக இருந்ததனால் ரூபா 21,040,672 வித்தியாசமாக இருந்தது.

### 2.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்கு விடயங்கள் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டவில்லை.

| | **கணக்கு விடம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்காத சான்று** |
|---|---|---|---|
| **(அ)** | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் | 98,568,481 | மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| **(ஆ)** | பிற்போடப்பட்ட வரி ஒதுக்கீடுகள் | 12,114,566,119 | பட்டியல்கள் |
| **(இ)** | வெளிநாட்டு கொள்வனவு முற்பணங்கள் | 754,995,979 | காலப்பகுப்பாய்வும் பட்டோலையும் |

### 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** துறைமுகங்கள் அதிகாரசபையின் நிதி நடைமுறைக் கோவையின் 9.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு செய்தல் சம்பந்தமாக நேரடியாக அல்லது தற்காலிகமாக பொறுப்புக் கூறக்கூடிய உத்தியோகத்தர்கள் அவை நிலுவையாக மாற்றுவதற்கு இடமளிக்கவில்லை என்பதனை கவனித்துக் கொள்வதற்காக தேவையான அனைத்து முயற்சிகளும் எடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும் துறைமுகங்கள் அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 10,236 மில்லியன் மொத்தக் கடன் மீதிகளில் கடன் கால எல்லைகளை மிகைத்த மீதிகள் ரூபா 711 மில்லியனாக இருந்ததுடன் அவற்றில் வர்த்தக கப்பல் முகவர் கடன்பட்டோர் மீதிகளின் மொத்தம் ரூபா 385,548,364 தொகையும் வணிகமற்ற கடன்பட்டோர் மீதிகளின் மொத்தம் ரூபா 98,993,092 தொகையும் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.

(ஆ)) உரிய முறைப்படி பணத்தை அறவீடு செய்யாது சேவைகளை வழங்கியதன் காரணமாக கொழும்பு, திருகோணமலை, காலி ஆகிய துறைமுகங்களின் கப்பல் முகவர் கடன்பட்டோரிடமிருந்து கிடைக்கவேண்டிய கடன் ரூபா 409,048,984 தொடர்பாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடனுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறவேண்டிய கடன் மீதிகளில் உள்ளடக்கப்பட்ட கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களின் வணிகமற்ற கடன்பட்டோர்களின் கீழ் காடப்பட்டுள்ள ஆதனம், நலன்புரி மற்றும் போசனசாலைகளைப் பராமரிப்பதற்காக வழங்கப்பட்ட சுற்றாடல்களின் சுற்றாடல் வாடகை, மின்சாரப்பாவனை என்பவற்றிற்காக அதிகாரசபையின் மேற்கொண்ட மின்சாரச் செலவுகளை முறையாக அறவிடுதல் இடம்பெறாமையின் காரணமாக ரூபா 92,920,389 தொகையானது அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடனுக்காக ஏற்பாடு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

**2.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரச் சட்டத்தின் 6 (எ) ஆம் பிரிவு | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்துக்களை மீளப்பெற்றுக்கொள்ளும் வகையிலும் புதிய முதலீடுகள் மேற்கொள்ளும் வகையிலும் போதியளவான பொது ஒதுக்கத்தைத் தோற்றுவிப்பதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பாவனையிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட வேண்டிய தொழிநுட்ப ரீதியாக வழக்கொழிந்துள்ள மற்றும் முழுமையாக பெறுமானத்தேய்விற்காக ஏற்பாடு செய்யப்பட்ட சொத்துக்களை மீள வழங்கும் போது நிதிச் சிக்கல்கள் உருவாகும் ஆபத்தை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதுள்ளது. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதி பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | 2016 ஆம் ஆண்டின் போது நிலையான வைப்புக்கள் மற்றும் குறுங்கால முதலீடுகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,251 மில்லியன் முதலீட்டிற்காக நிதி அமைச்சரின் சம்மதம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 4.2.1, 4.2.2 மற்றும் 4.2.5 ஆம் பிரிவுகள் | சுற்றறிக்கையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கை அதிகாரசபையினால் |

| | | |
|---|---|---|
| | | பணிப்பாளர் சபைக்கு மீளாய்வாண்டின் போது மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 4.2.3 ஆம் பிரிவு | துணைக்கம்பனிகளின் செயலாற்றல்களுக்குரிய காலரீதியான அறிக்கை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 5.1.2 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 23 பரிவுகளுக்குரிய பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (Key Performance Indicators) இனங்காணப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்டவாறு<br><br>உள்ளபடியான செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றல் மதிப்பீட்டிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 7.4.2 ஆம் பிரிவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் முகாமைத்துவ கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் அக்கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பணிப்பாளர் சபையின் மதிப்பீட்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 8.5 ஆம் பிரிவு | மாகம்புற துறைமுக வளவில் அமைந்துள்ள ரூபா 9,744,499,541 பெறுமதியான எண்ணைத் தாங்கிகள் தொகுதியின் பெறுமதியை உள்ளடக்கும் வகையில் சேத ஆபத்துக்களைக் குறைத்துக்கொள்வதற்காக காப்புறுதி பூட்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | 9.3.1 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் வரைபு ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக உரிய தரப்பினர்களிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் ஊழியர்களை தொழிலுக்காக சேர்த்துக்கொள்ளும் முறைமையும் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | 9.3.1 இன் iv மற்றும் vii ஆம் பிரிவு | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக அதிகாரசபை மீளாய்வாண்டின் போது 33 உத்தியோகத்தர்கள் 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக பதிற்கடமை ஆற்றும் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். |

| | |
|---|---|
| (viii) 9.9. ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 3,772,463,462 தொகையான மேலதிகநேர வேலைப்படிகளைச் செலுத்துவதற்குரிய விபரம் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2015 மே 25 ஆந் திகதிய பீசீஎம்டீI/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 மற்றும் 3.1 ஆம் பிரிவுகள் | (i) சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மாதாந்த எரிபொருள் படிகளுக்குத் தகமை பெற்றிருக்காத 92 உத்தியோகத்தர்களுக்கு ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு பெற்றோல் 100 லீற்றர் படியும் 15 உத்தியோகத்தர்களுக்காக ஒரு நபருக்கு டீசல் 125 லீற்றர் படியும் வழங்கப்பட்டிருந்தது.<br><br>(ii) சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அதிகாரசபையின் 60 உத்தியோகத்தர்களுக்காக மாதாந்த எரிபொருள் எல்லை நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் 2016 ஒக்தோபர் மாதத்தின் போது மாத்திரம் எரிபொருள் 2,075 லீற்றர்கள் சுற்றறிக்கைக்கு முரணாக வழங்கப்பட்டிருந்தது. |
| (உ) 2000 இன் 30 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் III(அ) பிரிவு மற்றும் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | உழைக்கும் போதே செலுத்தும் வரி தனிப்பட்ட கம்பனிகளிலிருந்து செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டிற்கான ஊழியர்கள் சார்பாக ரூபா 468 மில்லியன் தொகையான வரி அதிகார சபையின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

### 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தொகுதியின் இலாபம் ரூபா 583 மில்லியனாகவும் அதிகாரசபையின் இலாபம் ரூபா 1,036 மில்லியனாகவும் இருந்தன. முன்னைய ஆண்டிற்கான தொகுதியினதும் அதிகாரசபையினதும் நட்டம் முறையே ரூபா 14,581 மில்லியன் மற்றும் ரூபா 14,169 மில்லியன் ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தொகுதியினதும் அதிகாரபையினதும் நிதி விளைவுகள் முறையே ரூபா 15,164 மில்லியனாலும் ரூபா 15,205 மில்லியனாலும் முன்னேற்றமடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய வெளிநாட்டு நாணயமாற்று செம்மையாக்கல் நட்டம் ரூபா 10,155 மில்லியனால் குறைவடைந்தமை மேற்கூறிய நிதி விளைவுகளின் முன்னேற்றம் தொடர்பாக பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளுக்கான அதிகாரசபையின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2014 ஆம் ஆண்டைத் தவிர்த்து ஏனைய ஆண்டுகளின்போது இலாபம் அடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு உழியர் பணிக்கொடை, அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட வரி, பெறுமானத் தேய்வு என்பவற்றை மீண்டும் செம்மையாக்கும் போது அதிகாரசபையின் பங்களிப்பு தொடர்ச்சியாக சாதகமான மீதியைக் கொண்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 25,226 மில்லியன் தொகையான அது மீளாய்வாண்டின் போது ரூபா 33,091 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான பொருண்மையான விகிதங்களில் சில கீழே தரப்படுகின்றன.

| | | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| (i) | மொத்த இலாப விகிதம் % | 45 | 35 | 39 | 33.39 | 44 |
| (ii) | மொத்த வருமானத்திற்கான செயற்பாட்டு இலாபம்/ (நட்டம்) % | 33.34 | 22.86 | 27.93 | 20.90 | 24.69 |
| (iii) | தேறிய இலாபம்/ (நட்ட) விகிதம்% | 2.35 | (35) | 23.73 | 4.52 | 6.58 |
| (iv) | உரிமை மூலதனத்திற்கான நீண்டகால கடன் | 1:2.89 | 1:2.92 | 1:2.30 | 1:2.30 | 1:2.34 |
| (v) | நடைறை விகிதம் | 1.27:1 | 1.52:1 | 2.16:1 | 2.51:1 | 2.25:1 |
| (vi) | விரைவுச் சொத்து விகிதம் | 1.19:1 | 1.41:1 | 2.05:1 | 2.42:1 | 2.13:1 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆம் ஆண்டில் 1.2:34 ஆகக் காணப்பட்ட அதிகாரசபையின் உரிமை மூலதனத்திற்கான நீண்ட காலக்கடன் விகிதம் 2016 ஆம் ஆண்டளவில் 1.2:89 விகிதம் வரை அதிகரித்தருந்தது. ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணம் மற்றும் கிழக்கு கொள்கலன் இறங்குதுறை நிர்மாணம் என்பவற்றிற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எஞ்சியிருந்த கடன் ரூபா 173,913 மில்லியனிற்கு பிரதான காரணமாக இருந்தது. அதற்கிணங்க நீண்ட காலக்கடன் அதிகரித்தல் அதிகாரசபையின் தொழிற்பாடு மூலதனம் மற்றும் வட்டிக் கிரயம் தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

(ii) மொத்த வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் 24.69 சதவீதமான செயற்பாட்டு இலாபம் 2016 ஆம் ஆண்டளவில் 33.34 சதவீதத்தைக் கொண்டிருந்தது. எனினும் நிதிச் செலவுகளும் வெளிநாட்டு நாணயமாற்று நட்டமும் நிறுவனம் தொடர்பாக பாதகமான தாக்கத்திற்கு காரணமாக இருந்ததனால் 2012 ஆம் ஆண்டின் போது 6.58 சதவீதமாகக் காணப்பட்ட வரிக்குப் பின்னைய தேறிய இலாப விகிதமானது 2015 ஆம் ஆண்டின் போது 35 சதவீத மறைப் பெறுமதியானது 2016 ஆம் ஆண்டளவில் 2.35 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(iii) 2012 ஆம் ஆண்டிற்கான நடைமுறை விகிதமும் விரைவுச் சொத்து விகிதமும் முறையே 2.25 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அது முறையே 1.27 மற்றும் 1.19 வரை படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஆக்கபூர்வமாகவும் தொடர்ச்சியாகவும் துறைமுகங்களின் செயற்பாடுகளை வழங்குதலும் பாதுகாப்புச் சேவைகளை வழங்குதலும், நுழைவு வழிகளில் கப்பல்கள் நுழைவதனை முறைப்படுத்துதலும் கட்டுப்படுத்துதலும், துறைமுகங்களை மேம்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும்,

துறைமுக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தலும் முறைமைப்படுத்தலும் என்பன அதிகாரசபையின் பிரதான குறிக்கோளாகும்.

மேற்கூறிய குறிக்கோள்களை அடைந்து கொள்வது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

4.1.1. கொழும்பு துறைமுகத்தினுள் கொள்கலன்களை ஏற்றி இறக்கக்கூடியதாக இறங்குதுறைகள் காணப்பட்டதுடன் அவற்றில் 02 இறங்கு துறைகள் (ஜயகொள்கலன் இறங்குதுறை மற்றும் சமகி கொள்கலன் இறங்குதுறை) முழுமையாக துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமாக உள்ளதுடன் ஏனைய இறங்குதுறைகள் (கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறை (C.I.C.T) மற்றும் தெற்காசிய நுழைவு இறங்குதுறைகள் (S.A.G.T) என்பன தனியார் நிறுவனங்களுக்கு 85 சதவீத உரிமையின் அடிப்படையில் 35 ஆண்டுகளுக்கு (நிர்மாணித்தல், செயற்படுத்துதல் மற்றும் ஒப்படைத்தல் (Built , Operation Transfer) என்ற அடிப்படையின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் 155 போது கொள்கலன்களை ஏற்றி இறக்கல் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | இ.து.அ (SLPA) | | தொ.ஆ.நு.இ SAGT) | | கொ.ச.கொ.இ (CICT) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு | | அலகு | | அலகு | | அலகு | |
| | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| மீள்கப்பலோற்றல் (Transshipments) | 1,691,267 | 1,607,792 | 1,028,538 | 1,294,631 | 1,168,516 | 1,452,838 | 3,888,321 | 4,355,261 |
| உள்நாட்டு (Domestic) | 541,152 | 483,109 | 327,750 | 317,707 | 349,069 | 499,034 | 1,217.971 | 1,299,850 |
| மீள ஏற்றுதல் (Re – Stowing) | 19,904 | 9,216 | 14,957 | 19,869 | 44,314 | 50,727 | 79,1755 | 79,812 |
| | 2,252,323 | 2,100,117 | 1,371,245 | 1,632,207 | 1,561,899 | 2,002,599 | 5,185,467 | 5,734,923 |

ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொள்கையில் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன்களை ஏற்றி இறக்குதல் 11 சதவீதத்தால் முன்னேற்றமடைந்திருந்தும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொள்கலன் செயற்பாட்டு நடவடிக்கைகள் 7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது இலங்கை துறைமுக அதிகாரசபை கப்பல் முகவர் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட இறங்குதுறைச் சேவை உடன்படிக்கைகளின் (Terminal Service Agreements) பிரகாரம் அதிகாரசபைக்குச் சொந்தமான இறங்குதுறைக்கு வருகை தரவுள்ள கப்பல்கள் பின்வரும் காரணங்களின் அடிப்படையில் இரண்டு தனியார் இறங்குதுறைகளுக்கு இழுத்துச் செல்லப்படுதல் அதற்கான பிரதான காரணமாக இருந்தன.

- அதிகாரசபைக்குச் சொந்தமான இறங்குதுறையின் ஆழம் போதியளவில் இல்லாமை (Exceed The Maximum draft at JCT)
- இறங்குதுறையில் நங்கூரிடுதல் தாமதமாகும் (Delay in Bathing) மற்றும்
- இறங்குதுறைகளில் காணப்படுகின்ற கென்றி கிரேன்களின் (Gantry Crane)அகலம்155 போதியதாக இல்லாமை

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் மேலும் அவதானிக்கப்படுகின்றன.

(அ) (i) நிகழ்காலத்தில் பொருட்களை எடுத்துச் சொல்வதில் கப்பல் முகவர் நிறுவனங்கள் பாரிய கப்பல்களை பயன்படுத்துவதற்கு அதிக விருப்பத்தைக் காட்டி வருகின்றது. அவ்வாறே கொள்கலன் கப்பல் கம்பனிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மத்தியப்படுத்தலின்

அடிப்படையில் ஆசிய ஐரோப்பிய வியாபார வழிகளில் கொள்கலன்களின் கொள்ளளவுகளில் 95 சதவீதமானவை கூட்டுச் சேர்ந்த நான்கு கப்பல் கம்பனிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றது. இது துறைமுக சேவைகளை பெற்றுக்கொள்வதில் அதிக போட்டி ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது. இவ்வாறான நிலைமையின் கீழ் அதிகாரசபை தமது சந்தைப் பங்கினை பாதுகாத்துக் கொள்வதற்கும் அதிகரித்துக் கொள்வதற்குமாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நல்ல எண்ணத்துடன் கையளிக்கக்கூடிய (Foot Loose) எடுத்துச் செல்லல் என்று கருதப்படுகின்ற மீள்கப்பலோற்றலானது கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் செயற்பாட்டில் 70 சதவீதம் அளவில் இருந்ததுடன் அதிகரித்துக் காணப்படும் கொள்கலன் எடுத்துச் செல்லும் அளவை அடைந்து கொள்ளும் போது போட்டித்தன்மையான துறைமுகங்களுக்கு மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம். இந்தியா கொச்சின் நகரத்திலுள்ள துறைமுகமான வல்லார் பாதம் துறைமுகத்தை தனது மீள்கப்பலேற்றல் முக்கிய நிலையமாக வெளிப்படுத்தியுள்ளமை இப்போட்டி மிகவும் தீவிர நிலைமைக்கு மாறியுள்ளது. தென் இந்தியாவில் அமைந்துள்ள விசின்ஜேம் துறைமுகத்தை மீள் கப்பலேற்றல் துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கான ஆயத்தம் செய்யப்பட்டு வருவதுடன் இந்திய அரசாங்கம் தற்பொழுது துறைமுக பொறுப்பாண்மை முறைமையின் கீழுள்ள பின்னணி துறைமுகங்களை இணைத்து ஒரு நிறுவன அலகாக மாற்றம் செய்துள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் கொழும்பு துறைமுகத்திற்கு தென் ஆசியாவிற்கு வெளியேயுள்ள துறைமுகங்களிலிருந்து மாத்திரமின்றி இந்திய உப கண்டத்திலிருந்தும் குறிவைக்கப்படும் போட்டி நிலைமைக்கு முகங்கொடுப்பதற்காக துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான கிழக்கு கொள்கலன் இறங்குதுறையை செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த வேண்டி இருந்த போதிலும் இதுவரை அதன் செயற்பாட்டு நடவடிக்கைக்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கொழும்பு துறைமுகத்தில் தற்பொழுது கொள்கலன்களை ஏற்றி இறக்குவதற்காக செயற்படுத்தப்படும் இறங்குதுறைகளுக்கு மத்தியில் 14.25 மீற்றர்களை விட அதிக ஆழமான (Draft) கப்பல்கள் வருகைதரக்கூடிய ஒரேயொரு இறங்குதுறையாக கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறை (CICT) காணப்பட்டது. அதன் கொள்வனவு ஒரு ஆண்டிற்கு 2.4 மில்லியன் இருபது சம அலகுகளாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது அந்த இறங்கு துறைக்கு 14.25 மீற்றர்களுக்கு மேற்பட்ட ஆழமான 232 கப்பல்கள் வருகை தந்திருந்ததுடன் 2 மில்லியனுக்கு மேற்பட்ட எண்ணிக்கையான கொள்கலன்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

அதற்கிணங்க 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கொள்கலன்களை ஏற்றி இறக்கல் 28 சதவீதத்தால் முன்னேற்றமடைந்திருந்ததுடன் அந்த முன்னேற்றம் 2017 ஆம் ஆண்டின் போது அதே அடிப்படையில் காணப்படுமாக இருந்தால் அதன் உச்சக் கொள்ளளவை அடைவதனை தவிர்க்க முடியாததாக இருந்திருக்கும். என்பது அவதானிக்கப்பட்டது. எனினும் இலங்கை துறைமுக அதிகாரசபைச்குச் சொந்தமான இறங்குதுறைகளின் உச்ச ஆழமும் (Draft) கிரண்டி கிரேன்களின் அகலமும் முறையே 14.25 மீற்றர் மற்றும் 18 மீற்றர்களாக இருந்ததனால் 14.25 மீற்றர்களுக்கு மேற்பட்ட ஆழமான (Draft) கப்பல்கள் வருகை தரக்கூடிய இறங்குதுறை அதிகாரசபைக்குச் சொந்தமாக இருக்கவில்லை.

அதற்கிணங்க மேற்குறிய நிலைமையைக் கருத்திற் கொண்டு பார்க்கும் போது கொள்கலன்களை ஏற்றி இறக்கல் வினைத்திறனின்மை மற்றும் இறங்குதுறைகளில் நவீன வசதிகள் இல்லாமை ஆகிய காரணத்தின் அடிப்படையில் அதிகாரசபைக்கு

மாத்திரமின்றி கொழும்பு துறைமுகத்தை எடுத்துக்கொண்டாலும் தற்போதைய கொள்ளளவை மிகைத்து வருகை தருகின்ற கப்பல்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் செயற்பாட்டு ஆபத்து காணப்படவில்லை. என்பதனை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

4.1.2 அதிகாரசபைக்கு இழுத்துச் செல்லக்கூடிய கொள்கலன்களைக் கொண்ட கப்பல்கள் தனியார் இறங்குதுறைகளுக்கு இழுத்துச் செல்லப்படுவது மற்றும் அவற்றின் இயலளவைப் பயன்படுத்துதல் சிறப்பான மட்டத்தை அடைந்திருப்பதுடன் கொழும்பு துறைமுகத்தில் அதிகரித்துவதும் மீள்கப்பலேற்றும் செயற்பாடு இழக்கப்படுகின்ற ஆபத்து மற்றும் ஏனைய துறைமுகங்களிலிருந்து உருவாகின்ற போட்டின்தன்மைக்கு முகங்கொடுக்க முடியாமை என்பவற்றிற்காக பின்வரும் காரணங்கள் தாக்கமளித்துள்ளன.

(i) கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்தும் செயற்திட்டம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கையின் தேவைப்பாடு மற்றும் 2011 ஆகஸ்ட் மாதத்தில் வரையறுக்கப்பட்ட யூ.ஆர்.எஸ் ஸ்கோட் வில்சன் கம்பனியால் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் முறைமை மீளாய்வு என்பவற்றின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் போது கிழக்கு கொள்கலன் இறங்குதுறையின் முதலாவது கட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவையின் பிரேரணை, இணக்கப்பாடு, கொள்கைத் தீர்மானம் என்பன எடுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் அத்தீர்மானம் மாற்றமடைந்திருந்ததன் காரணமாக இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் சில தீர்மானங்கள் அமல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க 800.000 அலகு கொள்கலன்களின் கொள்ளளவுடனான ரூ 11,168,466,578 மூலதனக் கிரயத்தை செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட கிழக்கு கொள்கலன் இறங்குதுறையின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எனக் குறிப்பிட்டு 2016 ஏப்ரல் மாதத்தில் இறுதி பூர்த்தியாக்கல் சான்றிதழ் (Final Completion Certificate) வழங்கப்பட்டிருந்தும் கப்பற் சரக்குகளைக் கையாளக்கூடிய மட்டத்திற்கு பூர்த்தி செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கொள்கலன்களை கையாளும் நடவடிக்கைகள் ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாம் ரூபா 918 மில்லியன் தொகையான கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது அவற்றை கைவிடுதல் மற்றும் பிற்போடுதல் இடம்பெற்றிருந்தன. எவ்வாறாயினும் நீண்டகாலமாக செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக பெறுமானத் தேய்விற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொழில்நுட்ப ரீதியான வழக்கொழிந்த உபகரணங்களின் வினைத்திறன் வீழ்ச்சியடைதல், அடிக்கடி திருத்தம் செய்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்துதல், தற்பொழுது துறைமுகங்களுக்கு வருகின்ற கப்பல்களின் கொள்ளளவுக்குப் பொருத்தமான உபகரணங்கள் இல்லாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் கொள்கலன்களை கையாள்வதற்கு தடை உருவாகியிருந்தது. அதற்கிணங்க செயற்பாடுகளின் வினைத்திறன் குறைவடைவதற்கும் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுவதற்கும் வாய்ப்பு உள்ளன என்பது கணக்காய்வின் போது கவனம் செலுத்தப்பட்டது.

4.1.3 2012 ஆம் ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்த கப்பல்கள் சம்பந்தமான விபரம் கீழேதரப்படுகின்றன.

| ஆண்டு | 2016 கப்பல்களின் எண்ணிக்கை | 2015 கப்பல்களின் எண்ணிக்கை | 2014 கப்பல்களின் எண்ணிக்கை | 2013 கப்பல்களின் எண்ணிக்கை | 2012 கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| கொள்கலன்களைக் கொண்டவை | 3,804 | 3,643 | 3,239 | 3,142 | 3,0923 |
| பாரம்பரியமானவை | 40 | 45 | 28 | 38 | 52 |
| ஏனையவை | 561 | 509 | 475 | 487 | 726 |
| | **4,405** | **4,197** | **3,742** | **3,667** | **3,870** |

மேற்கூறிய கப்பல்களுள் உள்ளடக்கப்பட்ட கொள்கலன்களைக் கொண்ட கப்பல்கள் தொடர்பாக 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையுமான தகவல்கள்

| ஆண்டு | 2016 கப்பல்களின் எண்ணிக்கை | 2015 கப்பல்களின் எண்ணிக்கை | 2014 கப்பல்களின் எண்ணிக்கை | 2013 கப்பல்களின் எண்ணிக்கை | 2012 கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| துறைமுகம் | | | | | |
| அதிகாரசபை | 1,460 | 1,616 | 1,926 | 2,084 | 1,972 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ | 1,087 | 1,026 | 855 | 1,101 | 1,120 |
| சீ.ஐ.சீ.ரீ | 1,257 | 1,001 | 458 | 47 | = |
| | **3,804** | **3,643** | **3,239** | **3,142** | **3,092** |

மேற்கூறிய தகவல்களின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கொழும்பு துறைமுகத்திற்கு கொள்கலன்களுடனான கப்பல்களின் வருகை முறையே 4 சதவீதத்தாலும் 12 சதவீதத்தாலும் முன்னேற்றமடைந்திருந்தன. எனினும் அதிகாரசபைக்கு வருகை தருகின்ற கொள்கலன்களைக் கொண்ட கப்பல்களின் எண்ணிக்கை மீளாய்வாண்டின் போது 10 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. எனினும் S.A.G.T மற்றும் C.I.C.T இற்கு வருகை தருகின்ற கப்பல்களின் எண்ணிக்கை முறையே 6 சதவீதத்தாலும் 26 சதவீதத்தாலும் முன்னேற்றமடைந்திருந்தன. அதற்கிணங்க கொழும்பு துறைமுகத்திற்கு கொள்கல கப்பல்களின் வருகையானது முன்னேற்றத்தை காட்டியிருந்த போதிலும் அம்முன்னேற்றத்தில் அதிக சந்தைப் பங்குகளை அதிகாரசபைக்கு கிடைக்கச் செய்வதற்கும் முன்னைய ஆண்டில் வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கையை அந்த மட்டத்திலேனும் பேணுவதற்கும் அதிகாரசபைக்கு முடியாதிருந்தது.

4.1.4 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் செயற்பாடுகள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| | 2016 | | 2015 | | 2014 | | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | % | | % | | % | | % | | % |
| | அலகு | | அலகு | | அலகு | | அலகு | | அலகு | |
| **துறைமுக அதிகாரசபை** | | | | | | | | | | |
| உள்நாட்டு | 483,109 | | 541,152 | | 643,317 | | 676,937 | | 665,291 | |
| மீள் ஏற்றுமதி | 1,607,792 | | 1,691,267 | | 1,882,057 | | 1,779,882 | | 1,584,985 | |
| ஏனையவை | 9,216 | | 19,904 | | 33,965 | | 33,965 | | 66,573 | |
| **மொத்தம்** | **2,100,117** | **37** | **2,552,3239** | **43** | **2,559,339** | **52** | **2,501,863** | **58** | **2,316,849** | **55** |

| எஸ்.ஏ.ஜீ.ரீ | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உள்நாட்டு | 317,707 | | 323,750 | | 337,354 | | 341,510 | | 354,964 | |
| மீள் ஏற்றுமதி | 1,294,631 | | 1,028,538 | | 1,298,434 | | 1,385,552 | | 1,479,782 | |
| ஏனைய | 19,869 | | 14,957 | | 26,152 | | 19,740 | | 35,525 | |
| **மொத்தம்** | **1,632,207** | **28** | **1,371,245** | **27** | **1,661,940** | **34** | **1,746,802** | **41** | **1,870,271** | **45** |

| சீ.ஐ.சீ.ரீ | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உள்நாட்டு | 499,034 | | 349,069 | | 146,314 | | 13,530-- | | -- | |
| மீள் ஏற்றுமதி | 1,452,838 | | 1,168,516 | | 519,219 | | 42,683 | | -- | |
| ஏனையவை | 50,727 | | 44,314 | | 21,103 | | 1,328 | | -- | |
| **மொத்தம்** | **2,002,599** | **35** | **1,561,889** | **30** | **686,636** | **14** | **57,541** | **1** | **--** | |
| **முழு மொத்தம்** | **5,734,923** | **100** | **5,185,467** | **100** | **4,907,915** | **100** | **4,306,206** | **100** | **4,187,120** | **100** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருடாந்தம் கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் செயற்பாடுகளில் முன்னேற்றத்தைப் போல் மீள் கப்பலேற்றல் மற்றும் மீள் கையாளலிலும் முன்னேற்றம் காணப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதியில் துறைமுகங்கள் அதிகாரசபையின் கொள்கலன் செயற்பாடுகளின் எண்ணிக்கையானது முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2,252,323 இலிருந்து 2,100,117 வரை அதாவது 7 சதவீத்த்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறை கம்பனி (C.I.C.T) விரைவாக கொள்கலன்களைக் கையாள்வதன் மூலம் தனது சந்தைப் பங்கினை முன்னேற்றமடையச் செய்திருந்தது.

**விபரம் கீழே தரப்படுகின்றது.**

(i) மீளாய்வாண்டின் போது ஒட்டு மொத்த கொள்கலன் கையாளலின் முலம் அதகாரசபை 37 சதவீதத்தையும் தெற்காசிய நுழைவாயில் இறங்குதறை (SAGT) 28 சதவீதத்தையும் கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறைக் கம்பனி (C.I.C.T) 35 சதவீதத்தையும் ஆக சந்தைப்பங்களிப்பை உரிமையாக்கிக் கொண்டிருந்தன. கொழும்பு சர்வதேச இறங்குதுறைக் கம்பனியானது (C.I.C.T) மூன்று ஆண்டுகளான மிகக் குறுகிய காலத்திலேயே இப்பங்களிப்பை உரிமையாக்கிக் கொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

(ii) கொள்கலன் செயற்பாடுகளின் செயற்திறனை மதிப்பீடு செய்த போது துறைமுகங்கள் அதிகாரசபையின் ஒரு ஊழியருக்கு (செயற்பாட்டு பிரிவின் ஒரு ஊழியரை மாத்திரம் கவனத்திற்கு எடுத்துக்கொள்கையில்) 874கொள்கலன்கள் அளவில் இருக்கையில் கொழும்பு சர்வதேச இறங்கு துறையினால் (C.I.C.T) ஒரு ஊழியருக்கு 6,378 கொள்கலன்களாக இருந்தது. அது துறைமுக அதிகாரசபையை விட 7 மடங்கால் உயர்ந்த பெறுமதியைக் கொண்டுடிருந்தது.

(iii) அதிகாரசபையின் கொள்கலன் செயற்பாட்டு நடவடிக்கை சம்பந்தமான இறங்குதுறைப் பயன்பாட்டு விகிதத்தை (Terminal Occupancy Ratio) கவனத்தில் எடுத்துக் கொள்கையில் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை அது முறையே 78 சதவீதம் மற்றும் 63 சதவீதமாக

இருந்தன. அதற்கிணங்க அதிகாரசபையின் இறங்கு துறைப்பயன்பாட்டு விகிதமானது படிப்படியாக குறைவடைகின்றமை அவதானிக்கப்பட்டது.

(iv) செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டில் ரூபா 140 மில்லியன் மதிப்பீட்டின் கீழ் வேலையை பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த ஜய கொள்கலன் இறங்குதுறையின் III M.N.T மற்றும் IV T இலக்க ஒழுங்கைகளை பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் எதிர்பார்த்த வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பிரய்மூவர் வாகனம் பயணம் செய்யும் வழிகள் மெருதுவாக இல்லாமையின் காரணமாக கொள்கலன்களை எடுத்துசெல்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பிரய்மூவர் வாகனங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தலும் அவ்வாகனங்களின் டயர்களின் ஆயுட்காலம் குறையக்கூடியதாக இருப்பதுடன் அது கொள்கலன் செய்பாட்டு நடவடிக்கைகளின் விளைத்திறன் குறைவடைவதற்கு காரணமாக இருக்கலாம். என்பதனை புறக்கனிக்க முடியாதுள்ளது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்குச் சொந்தமான 2500 மெட்ரிக் கொள்ளளவைக் கொண்ட எரிபொருளை களஞ்சியப்படுத்தக்கூடிய 4 தாங்கிகள் 5 ஆண்டு காலமாக ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 150,000 வருடாந்த குத்தகைக்கு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அக்குத்தகைக்காலம் முடிவடைந்த பின்னர் மீண்டும் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டாலும் புதிய கேள்வி கோரப்படாமலும் முன்னைய குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு 5 சதவீதத்தையும் சேர்த்து டொலர் 157,500 வருடாந்த குத்தகைக்கு மீண்டும் அந்நிறுவனத்திற்கு 3 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) பிஎல்ஏ 0902 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தின் பிரிவாக ஹம்பாந்தோட்டை எரிபொருள் தாங்கித் தொகுதியை நிர்மாணிக்கப்பதற்காக ரூபா 9,872,233,068 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான கடன் தவணைப்பணமும் வட்டியும் பொதுத் திறைசெரியினால் செலுத்தப்பட்டிருந்தது. இக்கடன் பெறுமதி துறைமுக அதிகார சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ஒரு சொத்தாகவும் (Bunkering Facilities) செலுத்த வேண்டிய கடன் பணமாகவும் இனங்காணப்பட்டிருந்தபோதிலும் பொதுத் திறைசேரிக்கும் துறைமுக அதிகாரசபைக்கும் இடையே இதுவரை உபகடன் உடன்படிக்கை மூலமாக இக்கடன் பணத்தை துறைமுக அதிகாரசபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபை 2011 ஆம் ஆண்டின் 160 போது இலங்கைச் சுங்கத்திற்கு தெரிவிக்காது இறக்குமதி செய்யப்பட்ட 27 கிரேன்கள் சம்பந்தமாக மீளாய்வாண்டின் போது சுங்கத்தினால் சுங்க கட்டளைச்சட்டத்தின் 33,47 மற்றும் 107 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சுங்க புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 163 ஆம் பிரிவின் பிரகாரம் இக்கிரேன்களுக்காக ரூபா 1,580,000,000 இலகு சுங்கத் தண்டனை விதிக்கப்பட்டிருந்ததுடன் துறைமுக அதிகாரசபையினால் இந்த நிகழத்தக்க பொறுப்பிற்காக 2016 ஆம் ஆண்டிற்கான இறுதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,577,700,452 தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சுங்க கட்டளைச் சட்டத்தின் 165 ஆம் பிரிவின் பிரகாரம் சுங்க புலனாய்த் தீர்ப்பு கிடைத்து ஒரு மாதத்திற்குள் நிதி அமைச்சருக்கு மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டின் மூலம் உரிய தண்டனை திருத்தியமைக்கப்படலாம் என்ற போதிலும் அமைச்சருக்கு அவ்வாறான மேன்முறையீடு செய்து அதனை தீர்த்துவைத்துக்கொள்வது சம்பந்தமாக இது வரை முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**4.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எஸ்.ஏ.ஜீ.ரீ நிறுவனத்திற்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த தெற்காசிய நுழைவாயில் இறங்குதுறைக்காக (SAGT) 2016 ஆம் ஆண்டிற்கு மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 3,338,000 தொகையா வருடாந்த வீத வரி அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மீள் ஏற்றுமதி மற்றும் கொள்கலன் கையாளல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கப்பல் முகவர் நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளுக்கு இணங்கிய கொள்ளளவின் பிரகாரம் நிதி ஏற்பாடுகளை வழங்கும் போது 1979 இன் 51 ஆம் இலக்க துறைமுக அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 37 (1) ஆம் பிரிவின் கீழ் 2016 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட அறவீட்டு பதிவேட்டிற்கு முரணான வகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 338,382,368 நிதி ஏற்பாடு சச்சரவுத்தன்மையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபைக்குச் சொந்தமான ஒரு இணைந்த கம்பனியால் தனியார் நிறுவனம் ஒன்றுடன் செய்து கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை பின்னர் முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக அத்தனியார் நிறுவகத்தினால் இணைந்த கம்பனிக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கிற்காக மேற்கொள்ள வேண்டியிருந்த இழப்பீட்டு பணத்தைச் செலுத்துவதற்காக துறைமுக அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 75.4 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மானம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முதலாவது கட்டத்திற்காக ரூபா 73,833,638,533 தொகையும் இரண்டாவது கட்டத்திற்காக ரூபா 70,336,768,965 தொகையுமாக ரூபா 144,170,407,498 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 129,848,194,161 தொகையான வெளிநாட்டுக் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆரம்பத்திலிருந்து துறைமுகம் குறைவான பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்த காரணத்தால் தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு வரை வெளிநாட்டுக் கடன் அடிப்படையிலான நாணயப்பரிமாற்று நட்டமும் உள்ளடக்கபட்டு அடையப்பெற்ற திரண்ட நட்டம் ரூபா 46,699 ஆகும். அவ்வாறே மாகம்புற துறைமுக முகாமைத்துவ கம்பனியால் கப்பல் எரிபொருள் செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறுவத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக மேற்கூறிய மூலதனச் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 6,987,638,384 பெறுமதியான 9 எரிபொருள் தாங்கிகளுக்கு அதற்குரிய எடுத்துச் செல்லல் முறைமைகளும் 2015 ஆம் ஆண்டிலிருந்து குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(அ) அதிகாரசபைக்குச் சொந்தமான 6,400 மெட்ரிக் தொன் கொள்ளளவையுடைய 10 பழைய எரிபொருள் தாங்கிகளுக்கான குத்தகைகாலம் 2012/2013 ஆம் ஆண்டில் முடிவடைந்திருந்ததுடன் நாளாந்த அடிப்படையில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதும் 2015 ஒக்டோபர் 13 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. எந்த எரிபொருள் தாங்கி குத்தகை முறைமையின் கீழ் நாளாந்த அடிப்படையின் கீழ் வழங்கப்பட்டு அதிகாரசபை வருமானம் உழைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது இப்பழைய 10 எரிபொருள் தாங்கிகளுக்கு விளைவற்ற சொத்தாக காணப்பட்டன.

(இ) அதிகாரசபைக்குச் சொந்தமான ரூபா 25,712,000 பெறுமதியான 22 உத்தியோபூர்வ இல்லங்களும் நிலையான சொத்துக்கள் பதிவேண்டில் உள்ளடக்கப்படாத பெறுமதி இணங்காணப்படாத 33 உத்தியோகபூர்வ இல்லங்களும் மீளாய்வாண்டின் இறுதி வரை விளைவற்றுக் காணப்பட்டன.

(ஈ) டென்மார்க்கின் னோடியா வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட யூரோ 46.09 மில்லியன் கடனும் துறைமுக அதிகாரசபையின் ரூபா 531 மில்லியன் பணமும் செலவு செய்து ஒலுவில் கடல்சார் மற்றும் மீன்பிடி துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 09 மீற்றரான குறைந்த ஆழத்திலான துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டதன காரணமாக துறைமுகத்திற்கு மிகவும் சிறிய கப்பல்கள் மாத்திரம் வரக்கூடியதாக இருப்பதுடன் தற்பொழுது துறைமுகத்தின் தெற்கு கடற்கரையோரம் அரிப்பிற்கு உள்ளாகுதல்,தெற்கு அலைதாங்கியினுள் மணல் ஒன்று சேர்தல், மணல், சேறு என்பன துறைமுக முகப்பில் குவிதல் போன்ற காரணத்தால் மீன்பிடித்துறைமுகமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலை உருவாகியிருந்தது. இந்நிலைமையின் கீழ் 2013 ஆம் ஆண்டின்போது திறந்து வைக்கப்பட்டு தற்பொழுது 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை துறைமுகத்திற்கு எதுவித கப்பல்களும் வருகை தராமையினால் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமையின் காரணமாக விளைவற்ற சொத்தாக மாறியிருந்தது.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) துறைமுக அதிகாரசபைக்குத் தேவையான மேலதிகச் சேவைகளை நேரடியாக மேற்கொள்வதற்குப் பதிலாக இணைந்த கம்பனிகளினூடாக மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது தரகுப் பணமாக ரூபா 21,047,975 162 மேலதிகச் செலவு இடம்பெற்றிருந்தது.

(ஆ) ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் எரிபொருள் செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறுத்திய சந்தர்ப்பங்களிலிருந்து 2016 திசெம்பர் 31 வரை எதுவித வருமானமும் உழைக்கப்பட்டிருக்காததுடன் இருப்பு பெறுமதி குடைவடைதல், பராமரிப்புச் செலவு, கடன்வட்டி ஊழியர் சம்பளம் என்பனவாக ரூபா 821,150,819 மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

### 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்குத் தேவையான காணிகளை சவீகரிக்கும் போது காணிச் சொந்தக்காரர்களுக்கு இழப்பீடு செலுத்துவது தாமதித்ததன் காரணமாக அதிகாரசபையால் வட்டியாக ரூபா 801,994 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது கிரேன்களை திருத்தம் செய்வதற்குத் தேவையான துணைக் கருவிகளைக் கொள்வனவு செய்யும் போது பொறியியல் பிரிவின் விலைகோரல் சிபாரிசினைக் கருத்தில் கொள்ளாது கொள்வனவு செய்ததன் காரணமாக அதிகாரசபைக்கு ரூபா 4,708,166 நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 4.7 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

தென் பிராந்தியத்தை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் காலி துறைமுகத்தில் பல்செயற்பாட்டு இறங்கு துறையை நிர்மாணிப்பதற்காக 2006 மார்ச் 28 ஆந் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கிக்குமிடையே (JBIC) செய்து கொள்ளப்பட்ட SL – P -85 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் யென் 14,495 மில்லியன் தொகையை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கு இணங்கியிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2014 யூன் மாதமளவில் இச்செயற்திட்டத்தின் 162 வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் விபரமான திட்டத்தை தோற்றுவித்தல், கேள்விகளில் தொழில்நுட்ப மற்றும் நிதி மதிப்பாய்வுகளை உள்ளடக்கி செய்திட்டம் தொடர்பாக நிர்மாணத்திற்கு முன்னைய கட்டம் வரை அனைத்து சேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக

தனிப்பட்ட ஆலோசனைக் கம்பனிக்கு யென் 458.85 மில்லியனுக்கு சமனான ரூபா 549,025 ,990 செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக கடன் வட்டியாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி யென் 11,102,120 இற்குச் சமனான ரூபா 15,037,267 செலவு செய்யப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் அரசாங்கத்தின் துரித செயற்திட்டமாக இனங்காணப்பட்டிருந்தும் யுனெஸ்கோ (UNESCO) அமைப்பின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கடன் கால எல்லை நீடிக்கப்படாமையின் காரணமாக 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையும் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.8 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான (Operation) நேரடித் தொடர்பைக் கொண்டுள்ள பிரிவில் அதிகளவான ஊழியர் பற்றாக்குறை காணப்பட்டிருந்ததும் அப்பாற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்குப் பதிலாக அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுடன் நேரடித்தொடர்பைக் கொண்டிருக்காத ஏனைய சேவைப் பிரிவுகளுக்கு 345 நபர்களின் மிகைப் பதவியணியினர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஆ) செயற்பாட்டுப் பிரிவில் காணப்படுகின்ற ஊழியர் பற்றாக்குறையின் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 2,940,958,878 தொகையான மேலதிக நேர வேலைப்படிகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் இச்செலவுகளைக் குறைத்துக்கொள்வதற்கும் ஊழியர் பற்றாக்குறைக்கமான பரிகாரம் மிகை காணப்படுகின்ற பிரிவுகளிலுள்ள ஊழியர்களுக்கு செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிகளை வழங்கி அப்பிரிவிற்கு இணைத்துக் கொள்வது சம்பந்தமாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. மேலும் அதிகாரசபையின் பிரதான மனித வளங்கள் முகாமையாளர் பதவி 2016 யூலை 01 ஆந் திகதியிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மனித வளங்கள் முகாமைத்துவத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பிரசித்த விளம்பரங்களை வெளியிடாது 463 வேலை உதவியாளர்களும் (Work Assistants),113 காவலாளிகளும் (Security Guard), 24 முகாமைத்துவ உதவியாளர்களும் (கணக்குகள்), 07 தாதி உதவியாளர்களும் (Nursing Aids), 06 நிகழ்ச்சி நிரலாளர் - பயிலுனர்களும் (Trainee Programmer) என்ற வகையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் காரணமாக சச்சரவுத்தன்மையாக இருந்தது. இதன் காரணமாக அதிகார சபையின் ஆட்சேர்ப்பு முறைமையில் வெளிப்படைத்தன்மை காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 4.9 சந்தைப் பங்கு

2016 ஆம் ஆண்டிற்கான உலக துறைமுக செயற்பாடு தொடர்பாக வழங்கப்பட்ட அல்பா லயினர் அறிக்கையின் (Alpha Liner Report) பிரகாரம் கொழும்பு துறைமுகம் 5,734,923 இருபது சம அலகான செயற்பாடுகளை மேற்கொண்டு உலகத்தில் 23 ஆவது இடத்தில் இருப்பதுடன் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.6 சதவீத முன்னேற்றத்தை அடைந்திருந்தது. எவ்வாறாயினும் இலங்கை துறைமுக அதிகார சபையின் கொள்கலன் கையாளலானது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் 7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

கொழும்புத் துறைமுகத்திலுள்ள அதிகாரசபையின் கொள்கலன் செயற்பாட்டின் இயலளவு 2001 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலத்தில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 81 சதவீதத்திலிருந்து 37 சதவீதம் வரை தீவிரமாக வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் கொழும்பு துறைமுகத்தல் போட்டியாகச் செயற்படுகின்ற தனியார் கம்பனியாகிய SAGT நிறுவனம் அக்காலத்தில் 19

சதவீதத்திலிருந்து 28 சதவீதம் வரையும் மற்றும் CICT நிறுவனம் 01 சதவீதத்திலிருந்து 35 சதவீதம் வரையும் துரிதமாக முன்னேற்றமடைந்திருந்தன. விபரம் கீழே தரப்படுகின்றது.

| ஆண்டு | SLPA கொள்கலகளின் எண்ணிக்கை | சதவீதம் | SAGT கொள்கலகளின் எண்ணிக்கை | சதவீதம் | CICT கொள்கலகளின் எண்ணிக்கை | சதவீதம் | மொத்தம் கொள்கலகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 2001 | 1,396,946 | 81 | 229,670 | 19 | | | 1,726,616 |
| 2002 | 1,206,694 | 68 | 558,025 | 32 | | | 1,764,717 |
| 2003 | 1,334,900 | 68 | 624,439 | 32 | | | 1,959,339 |
| 2004 | 1,320,845 | 59 | 899,720 | 41 | | | 2,220,565 |
| 2005 | 1,523,794 | 62 | 931,526 | 38 | | | 2,455,300 |
| 2006 | 1,743,669 | 57 | 1,335,411 | 43 | | | 3,079,078 |
| 2007 | 1,834,734 | 54 | 1,546,497 | 46 | | | 3,381,231 |
| 2008 | 1,747,670 | 53 | 1,739,668 | 47 | | | 3,687,338 |
| 2009 | 1,714,488 | 49 | 1,749,809 | 51 | | | 3,464,297 |
| 2010 | 2,167,173 | 52 | 1,970,268 | 48 | | | 4,137,441 |
| 2011 | 2,299,446 | 54 | 1,963,441 | 46 | | | 4,262,887 |
| 2012 | 2,316,849 | 55 | 1,870,271 | 45 | | | 4,187,120 |
| 2013 | 2,501,863 | 58 | 1,746,802 | 41 | 57,541 | 1 | 4,306,206 |
| 2014 | 2,559,339 | 52 | 1,661,940 | 34 | 686,636 | 14 | 4,907,915 |
| 2015 | 2,252,323 | 44 | 1,371,245 | 26 | 1,561,899 | 30 | 5,185,467 |
| 2016 | 2,100,117 | 37 | 1,632,207 | 28 | 2,002,599 | 35 | 5,734,923 |

அதற்கிணங்க துறைமுகத்தின் பிரதான நடவடிக்கையாகிய கொள்கலன் செயற்பாட்டு நடவடிக்கையாகிய கொள்கலன் செயற்பாட்டு நடவடிக்கை அதிகாரச் சபைகளிடமிருந்து படிப்படியாக விலகி அது தனியார் நிறுவனத்தால் படிப்படியாக சொந்தமாக்கி கொண்டிருந்தமை அவதானிக்கப்படுகின்றது.

### 5. கணக்காளிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 கொள்வனவுத் திட்டம்

2006 அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகாரசபையானது ஒரு கொள்வனவுத் திட்டத்தையும் ஒரு கொள்வனவு கால கட்டமைப்பையும் தயாரித்திருக்கவில்லை.

### 5.2. உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு குழு ஆகக் குறைந்தது 03 மாதத்திற்கு ஒரு தடவை கூடி வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம், நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையும் உள்ள கணக்காய்வு அறிக்கையும் ,வெளியக கணக்காய்வு அறிக்கை முதலியவற்றை மீளாய்வு செய்தல வேண்டும். 2016 ஆம் அண்டின் போது வெளியக கணக்காய்வு அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்வாண்டின் போது அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட 166 கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.3 சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை இடம்பெறும் போது அப்புறப்படுத்தப்பட்ட கருங்கற்களும் மண்ணும் ஆங்காங்கே காணப்படுவதுடன் துறைமுக சூழலில் நீர் தேங்கி நிற்கும் வகையில் குழிகளும் உருவாகியிருந்தன. மேலும் துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளில் உடைத்து போடப்பட்ட எச்சப்பொருட்கள் குவிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தினால் 2017 பெப்ரவரி 08 ஆந் திகதி வழங்கப்பட்ட எச்டீஎஸ்/எல்என்டீ/12/எப்/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலையின் காரணமாக இக்காணி டெங்கு ஆபத்துள்ள வலயமாக வளர்ச்சியடைந்து காணப்படுகின்றதாக பொது சுகாதார பரிசோதகரினால் இனங்காணப்பட்டுள்ளதாகவும் இச்சிக்கல் நிலைமைக்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதேச செயலகத்தின் மூலம் துறைமுக அதிகாரசபைக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அதிகாரசபைக்கு முடியாதிருந்தது.

(ஆ) அதிகாரசபையினால் பாவனையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட டயர்களும் டியூப்களும் அழிவடைந்து நீண்டகாலமாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அதிக மழை பெய்யும் காலங்களில் டயர்களில் நீர் தேங்கியிருந்து நுளம்பு பெருகுவதனால் டெங்கு நோய் பரவும் ஆபத்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2016 ஆம் ஆண்டில் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட 193 டயர்களும் 1200 டியூப்களும் கணக்காய்வுத் திகதி வரை துறைமுக சுற்றாடலில் பாதுகாப்பின்றி குவித்து வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவுகளையும் உள்ளபடியான செலவுகளையும் ஒப்பீடு செய்த போது 18 செலவு விடயங்களில் 10 செலவு விடயங்கள் 47 சதவீதத்தால் 172 சதவீதம் வரையான குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் முறைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| முறைமை கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை |
| (ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | நீண்டகாலமாக அறவிடப்படாத கடன் மீதிகள் காணப்படல் |
| (இ) உள்ளகக் கட்டுப்பாடு | ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரிக்கப்படாமை. |
| (ஈ) இருப்புக் கட்டுப்பாடு | ஒரு இருப்பு விடயத்திற்காக இரண்டு குறியீடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தமை |



**எச்.எம்.காமினி விஜேசிங்ஹ**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

# அமைப்பு விதி தொடர்பான தகவல்கள்

**பெயர்**

இலங்கை துறைமுக அதிகாரசபை

**நிறுவனத்தின் நிலைமை**

1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டவிதிகளின் பிரகாரம் கொழும்பு துறைமுக ஆணைக்குழு துறைமுக கப்பல் சரக்கு கூட்டுச்சபை துறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைகள் கூட்டுத்தாபனம் என்பவற்றினை ஒன்றிணைத்து 1079 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி துறைமுக அதிகாரசபை நிறுவப்பட்டது.

**அமைப்பு விதியிலுள்ள அம்சங்கள்**

தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பினை வழங்கும் நிறுவனமாக இலங்கை துறைமுக அதிகாரசபை விளங்குகின்றது. வருமானத்தினை ஈட்டிக்கொள்ளல் மற்றும் சேவைகளை வழங்குதல் போன்ற செயல்பாடுகளில் முதன்மை நிலையிலுள்ள நிறுவனம் என்ற வகையில் அதிகாரசபை ஆற்றும் பணியின் மூலமாக உயர்நிலை சேவையில் பூரணமாக தனது பங்களிப்பினை அது செலுத்துகின்றது. பல்வேறு வகைகளில் அதனுடன் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்கள் மற்றும் துறைமுக பாவனையாளர்களுடன் காணப்படுகின்ற முனைப்பான தொடர்பு அதன் இயக்க வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக அமைகின்றது. இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய தொழிற்பாட்டு அம்சங்கள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- நிலைத்திருக்கும் தன்மை
- காலத்திற்கேற்றதும் பிழைகளற்றதும்
- சாதனைக்குரிய உத்தரவாதம்
- குழு உணர்வு
- அர்ப்பணிப்பு
- உற்பத்தித்திறனை அடையாளங் காணுதல்
- பூரணமான செயலாற்றுகை

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் அதிகாரசபையின் அனைத்து ஊழியர்கள் தொடர்பிலும் பராமரித்துச் செல்லல் பிரதான நிறைவேற்றுநராக முகாமைத்துவப் பணிப்பாளரினதும் சிரேட்ட முகாமைத்துவ ஆளணியினரினதும் பொறுப்பாகும்.

**தலைமை அலுவலகம்**

**கொழும்பு துறைமுகம்**

இல : 19, சைத்திய வீதி
கொழும்பு - 01
தொ.பே.இல : (+94 11) 2421201, 2421231
தொ . நகல் : (+94 11) 2440651

**காலி துறைமுகம்**

கிலொசன்பார்க் இறங்குதுறை
மாகாலி
காலி
தொ.பே.இல (+94 91) 2232213, 2234936

**திருகோணமலை துறைமுகம்**

புதிய நிர்வாக கட்டடம்
சீனக் குடா
திருகோணமலை
தொ.பே.இல : (+94 26) 2222460

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி (பிரதான வங்கி)
மக்கள் வங்கி
ஹற்றன் நஷனல் வங்கி

**கணக்காய்வாளர்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல:306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

**இணையத்தளம்**

**www.slpa.lk**